தமிழகத்தில் பிறமொழியினர்

ம.பொ.சிவஞானம்

தமிழகத்தில் பிறமொழியினர்

சிலம்புச்செல்வர்
ம.பொ.சிவஞானம்

பூங்கொடி பதிப்பகம்

மயிலாப்பூர், சென்னை-4.

முதற் பதிப்பு : 26–6–76
சிலம்புச் செல்வர் ம. பொ. சி.
அவர்களின் முத்துவிழா வெளியீடு

விலை ரூ. 10-00

அச்சிட்டோர் :
மூவேந்தர் அச்சகம்,
சென்னை–14.

முன்னுரை

தமிழகத்தின் அரை நூற்றாண்டு கால அரசியலிலே சாதி உணர்ச்சி தலைதூக்கி நின்றிருக்கிறது. ஜனநாயகப்படி நடந்த பொதுத் தேர்தல்களிலே, அரசியல் கட்சிகளின் வெற்றி—தோல்விகளை நிர்ணயிப்பதிலேயும் இந்த சாதி உணர்ச்சியே செல்வாக்கு செலுத்தியிருக்கிறது. இதனால், தமிழினத்தின் ஒற்றுமை பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த சாதி உணர்ச்சியானது தேசிய இயக்கத்தையும் ஊடுருவிய தெனலாம். தேசியத்தை மட்டுமல்ல; வர்க்க வழியில் தோன்றிய இயக்கங்களைக்கூட ஊடுருவியிருக்கிறது. இதனால், தமிழ் மொழியின் வளர்ச்சி தடைப்பட்டது; தமிழினத்தின் ஒற்றுமை குலைந்தது; தமிழ் நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டது.

துரதிர்ஷ்டம் என்னவென்றால், தமிழகத்து மக்கள் நான் மேலே எடுத்துக் காட்டிய உண்மைகளை அறிந்திருக்கவில்லை என்பதாகும். அவர்களுக்கு அந்த உண்மையை அறிவிப்பதற்குத்தான் இந்நூலை எழுதினேன்.

முன்னுரையில் சொல்ல வேண்டியவற்றை யெல்லாம் இந்நூலின் முடிவுரையிலே சொல்லியிருக்கிறேன். ஏனெனில் வாசகர்களில் பலர் ஆசிரியரின் முன்னுரையைப் படிப்பது வழக்கமில்லை. அதனாற்றான் முன்னுரையில் சொல்ல வேண்டியவற்றை முடிவுரையிலே சொல்லி யிருக்கிறேன்.

தமிழகத்தின் அரை நூற்றாண்டு கால அரசியல் வரலாறாக வெளிவந்துள்ள இந்நூலைத் தமிழ் மக்கள் வாங்கிப் படிக்க வேண்டும். கட்சிச் சார்பு. சாதிச் சார்பு, காரணமாக

இந்நூலில் நான் விஷயங்களை விமர்சித்திருக்கும் முறையை சாதி—கட்சிச் சார்புடையவாசகர்களில் சிலர் வெறுக்கலாம். அவர்கள்கூட, இந்நூலைப்படிக்கும் வரையிலேனும் சார்புகளி லிருந்து விடுபட்டு நடுவு நிலையிலிருந்து படிக்க வேண்டும். தமிழர் என்ற இனவுணர்வோடு படிக்க வேண்டும். தமிழினத் தின் வருங்கால வாழ்வில் அக்கறை கொண்டு படிக்க வேண்டும். அப்போது இந்நூலின் அவசியத்தை உணர் வார்கள்.

ஏற்கனவே எனது நூல்கள் பலவற்றை வெளியிட்டு என்னுடைய கொள்கைக்கு ஆதரவு திரட்டித் தந்த பூங்கொடிப் பதிப்பகத்தார் இந்நூலையும் சிறந்த முறையில் வெளியிட்டுள்ளனர். என்னுடைய 71-வது பிறந்த நாளிலே தமிழன்னைக்கு யான் செலுத்தும் காணிக் கையாக இந்நூல் வெளிவருகின்றது.

குறுகிய காலத்தில் இந்நூலை வெளியிட வேண்டி யிருந்தும் பூங்கொடி பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. வே. சுப்பையா முழுமூச்சுடன் உழைத்து என் பிறந்த நாளிலே இதனைக் கொண்டு வந்துள்ளார். அவரை மனதார வாழ்த்துகிறேன்.

சென்னை,
19—6—1976.

ம. பொ. சிவஞானம்.

1

எங்கெங்கும் இன எழுச்சி

இந்தியா பல்வேறு நாடுகளைக் கொண்ட ஒரு துணைக் கண்டமாகத் திகழ்கின்றது. நடுவு நிலைமையுடன் இந்தியா வின் அமைப்பையும், வரலாற்றையும் ஆராய்ந்தோர் அனைவரும் இந்த முடிவுக்கே வந்துள்ளனர். தட்ப—வெப்ப நிலை, மண்வளம், மக்களின் பழக்க வழக்கங்கள், பேசும் மொழிகள் முதலியன இந்தியாவிலுள்ள பல்வேறு நாடு களிலும் வெவ்வேறு விதமாக இருக்கின்றன. வடமொழியி லும், தமிழ் மொழியிலுமுள்ள புராண—இதிகாசங்களிலே 56 நாடுகளைக் கொண்டதாக இந்தியப் பெருநாடு வருணிக்கப் படுகிறது.

இந்தியாவிலுள்ள நாடுகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இனத்தினர் வாழ்கின்றனர். அந்த இனங்களிலே ஒவ்வொன் றுக்கும் தனித்தனி மொழி, நாகரிகம், வரலாறு இருந்து வருகின்றன. பிரிட்டிஷார் காலத்திலேதான் முதன்முதலாக இந்தியப் பெருநாடு ஒரே ஆட்சியின் கீழ் கொண்டு வரப் பட்டது. இந்தியா ஒரே நாடு என்ற எண்ணமும்

பிரிட்டிஷார் காலத்திலேதான் உருவாக்கப் பெற்றது. ஆயினும், அவர்கள் ஆட்சிக் காலத்திலேயும் இன வேறு பாடுகள் மறையவில்லை; மறைக்கவும் அவர்களால் முடிய வில்லை.

விடுதலைப் போராட்ட காலத்திலே இந்தியா முழுவதும் ஒரே நாடு என்ற எண்ணம் இயற்கையிலேயே ஏற்பட்டது. இந்திய நிலப்பரப்பு அன்னையின் வடிவத்தில் அமைந் திருப்பதுபோல் கற்பனை செய்யப்பட்டது. அந்த வடிவத்திற் குப் "பாரத மாதா" என்று பெயர் தரப் பெற்றது. "வந்தே மாதரம்" என்னும் மந்திரத்தின் மூலம் அந்த மாதாவுக்கு வழிபாடும் நடைபெற்றது. காந்தியடிகளின் ஒப்பற்ற தலைமை காரணமாக இந்திய சமுதாயத்திடையே மந்திர சக்தியால் விளைந்தது போன்ற தேசிய ஒருமைப்பாடு உரு வானது. இந்த ஒருமைப்பாட்டுணர்ச்சியின் விளைவாக 1947 ஆகஸ்டுப் பதினைந்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிடியி லிருந்து இந்தியத் துணைக்கண்டம் விடுதலை பெற்றது.

விடுதலைக்குப் பின்னர் மொழிவழி இனவேறுபாடு முன் னிலும் அதிகமாக வெளிப்பட்டது. முன்பே இந்திய தேசிய காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த மொழிவாரி மாநிலப் பிரிவினைக் கோரிக்கை தலைதூக்கியது. ஆங்காங்கே வன்முறைக் கிளர்ச்சிகளும் தோன்றலாயின. நாடு விடுதலை பெற்ற பின்னர், காங்கிரஸ் மகாசபையின் போக்கில் மாறுதல் ஏற்பட்டது. முன்னர் தான் ஏற்றுக் கொண்டிருந்த மொழிவாரி மாநிலப் பிரிவினைக் கோரிக்கையை காங்கிரஸ் மகாசபை கைவிடத் துணிந்தது. அதற்கு எதிராகவும் செயல்பட முனைந்தது. அதன் விளைவாக காங்கிரசுக் குள்ளேயே குமுறல்கள் ஏற்பட்டன. தவிர்க்க முடியாத வகையிலே, திரு. பசல்அலி என்பவர் தலைமையில் ஒரு தனிக் கமிஷனை அமைத்து, அந்தக் கமிஷன் தந்த பரிந்துரை காரண மாக 1956 நவம்பர் முதல் நாளிலே இந்திய மாநிலங்களை மொழிவாரி திருத்தியமைத்தது இந்திய அரசு.

இந்த நிகழ்ச்சியானது இந்திய தேசியத்தின் மீது மொழி வாரி இனவுணர்ச்சி அடைந்த முதல் வெற்றியாகும். இன எழுச்சியைப் புறங்காண முயன்று, அந்த முயற்சியிலே இந்தியத் தேசியம் படுதோல்வியடைந்த நிகழ்ச்சி என்றும் சொல்லலாம்.

மாநிலங்கள் மொழிவாரி திருத்தியமைக்கப்படவிருந்த நேரத்திலே மொழிவழித் தேசிய இனங்களிடையே மோதல் கள் ஏற்பட்டன. ஆம், ''எல்லைப் பிரச்னை'' என்னும் பெயரிலே! வடக்கே அசாமியருக்கும் வங்காளியருக்கு மிடையே பூசல் ஏற்பட்டது. மகாராஷ்டிரருக்கும் குஜராத் தியருக்குமிடையே மனக்கசப்பு உண்டானது. பெல்லாரி சம்பந்தமாக ஆந்திரருக்கும் கன்னடியருக்குமிடையே கலகம் நடந்தது. சென்னைநகர் சம்பந்தமாக ஆந்திரருக்கும் தமிழருக்குமிடையே கருத்துப் போர் நிகழ்ந்தது. குமரி மாவட்டம் காரணமாக கேரளருக்கும் தமிழருக்குமிடையே கிளர்ச்சி நிகழ்ந்தது.

இந்தக் கிளர்ச்சிகளிலே இங்குமங்குமாக வன்முறைகளும் கையாளப் பெற்றன. கிளர்ச்சிகளை ஒடுக்க சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் கடைப்பிடித்த நடைமுறை காரணமாக பலர் உயிரிழக்க நேர்ந்தது. கொள்ளை, கொள்ளி வைத்தல் போன்ற கொடுமைகளிலும் சமூக விரோதிகளில் சிலர் ஈடு பட்டனர். இவ்வளவையும் சமாளித்துத்தான் இந்திய மாநிலங்கள் மொழிவாரி திருத்தியமைக்கப்பட்டுப் புதிய பாரதம் படைக்கப் பெற்றது. பன்மையிலே ஒருமை காணும் முயற்சிக்கு முதல் வெற்றி கிடைத்தது. பன்மையை அழித்து ஒருமை காணும் முயற்சி படுதோல்வி கண்டது. இந்தியாவானது ஒரே நாடு அல்ல; மொழி வேறு பாடுடைய பல நாடுகளைக் கொண்ட ஒரு துணைக்கண்டம் என்ற உண்மையை விரும்பியோ, விரும்பாமலோ இந்திய அரசு ஏற்றுக்கொண்டது.

இந்திய மாநிலங்கள் மொழிவாரி திருத்தியமைக்கப் பட்ட பின்னர், இனப் பிரச்சினை புதிய வடிவத்தைப்

பெற்றது. ஆம்; மொழிவழி மாநிலம் ஒவ்வொன்றிலும் மொழிவழி சிறுபான்மையோர் பிரச்னை ஏற்பட்டுள்ளது. அரசுரிமை பெற்ற தேசிய இனம் ஒவ்வொன்றும் தன் தன் தாயகத்திலே பிற இனத்தினர் பெற்றுள்ள ஆதிக்கத்தை அகற்ற முயல்கின்றன. அந்த முயற்சி இன்னமும் முற்றுப் பெறவில்லை; நீடித்து வருகிறது.

தமிழ் நாட்டிலே பிற மொழியினர் — குறிப்பாக, மலையாளிகள் ஆதிக்கத்திற்கு எதிராக ஒரு கிளர்ச்சி தோன்றியுள்ளது. மகாராஷ்டிரத்திலே தென்னிந்தியருக்கு—குறிப்பாக மலையாளிகளுக்கு எதிராகச் சிலர் கிளர்ச்சி நடத்தி வருகின்றனர். அஸ்ஸாமில் வங்காளியர் ஆதிக்கத்திற்கு எதிராக அஸ்ஸாமிய மாணவர்கள் அண்மையில் பெருங் கலவரம் நிகழ்த்தியதனை நாடறியும்.

கன்னடத்திலும் ''தமிழர் ஆதிக்கத்''தை எதிர்ப்பதாகச் சொல்லிக் கொண்டு ஒரு கூட்டத்தார், 'கன்னடர் சேனை' நிறுவி பெங்களூரில் அடிக்கடி ஆர்ப்பாட்டம் நடத்தியதனைத் தமிழர் மறந்திருக்க முடியாது.

இதெல்லாம் இந்தியாவிலே இனப்பிரச்னை இருக்கிறது; அது இன்னமும் தீர்க்கப்படவில்லையென்பதையே காட்டுகின்றன. இந்த இனப் பிரச்னையானது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டதாகும். இனப்பிரச்னை வேறு; இனப் பூசல் வேறு. இனப்பிரச்னை தீர்க்கப்பட்டுவிட்டால் இனப் பூசலுக்கு இடமிருக்காது. ஆகவே, இனப்பூசலை வெறுப்போர் இனப்பிரச்னையைத் தீர்ப்பதிலே அவசரங் காட்ட வேண்டும்.

சிவசேனை, கன்னட சேனை, சக்தி சேனை, தமிழர் பாதுகாப்புப் படை என்பனவெல்லாம் ஆசாபங்கங்களின் விளைவுகள் என்றும் சொல்ல வேண்டும். நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருவதும் இனப் பூசலுக்கு ஒரு காரணமாகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநிலத்த

வர்க்கே வேலை கொடுக்க வேண்டுமென்ற கிளர்ச்சி தோன்றி, அது வலுத்தும் வருகிறது. அதன் விளைவாக, மேற்கு வங்கம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் "சொந்த மாநிலத் தவர்க்கே வேலை" என்ற சட்டம் தோன்றியிருக்கின்றது. அது போன்ற சட்டம் தமிழ் நாட்டிலும் வருமென்று முதல்வர் கலைஞர் கருணாநிதி அறிவித்திருப்பதும் கோரவடிவம் எடுத்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கான பரிகாரம் என்றே சொல்ல வேண்டும்.

இந்த வேலையில்லாத் திண்டாட்டம் இனி அதிகரிக்கத் தான் செய்யும். "சொந்த மாநிலத்தவர்க்கே வேலை" என்ற சட்ட திட்டங்களால் வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளித்துவிட முடியுமா?"—என்பது வேறு விஷயம். ஆனால், அதுவும் ஒரு பரிகாரமாக அமையுமென்பதில் ஐயமில்லை.

ஐரோப்பாவிலே யூத சமூகத்தினர் ஆதிக்கமானது தீராப் பிரச்னையாகி விட்டது. அதுபோல, இந்தியாவில்—குறிப் பாக, தமிழ் நாட்டில் மலையாளிகள் ஆதிக்கம் என்பதும் இது வரை தீர்க்கப்படாத—விரைவில் தீர்க்கப்பட்டாக வேண்டிய ஒரு பிரச்னையாக இருக்கிறது. தமிழ் நாட்டில் மலையாளிகள் ஆதிக்கம் என்பது தமிழினத்தாரின் வருங்காலத்தையே அச்சுறுத்தக் கூடிய அளவில் நாள்தொறும் அதிகரித்து வரு கிறதென்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. இதனைத் தவிர்ப்பது தமிழ் இனத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதாகும் என்பதை எவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இதனை மூடி மறைப்பதோ, முரட்டுத்தனமாக மறுத்து வாதாடுவதோ பிரச்னைக்குப் பரிகாரமாகாது. இந்தப் போக்கு, இனப் பிரச்னையானது இனப்பூசலாக மாறு வதற்கே துணைபுரியும். ஆகவே, இனவெறியை விரும்பாத தேசியவாதிகள்–வர்க்கப் புரட்சியாளர்கள், தமிழ் நாட்டில் தமிழரல்லாதார்–குறிப்பாக, கேரள இனத்தார் அளவுக்கு மீறி ஆதிக்கஞ் செலுத்தி வருகின்றனர்; அந்த ஆதிக்கம் நாளொரு மேனியாக வளர்ந்து கொண்டும் வருகின்றது என்பதனை மூடிமறைக்க முயல வேண்டாம்.

தமிழ் நாட்டில் தமிழரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதற்கு பிற மொழியினரின்–குறிப்பாக, மலையாளிகளின் ஆதிக்கமும் ஒரு காரணமென்பதனை ஒப்புக்கொண்டு, அதற்குப் பரிகாரம் காணத் தேசியவாதிகள் பொறுப்பேற்க வேண்டும். தோன்றிவரும் இனப் பூசலை முளையிலேயே கிள்ளி எறிவதற்கு இது ஒன்றுதான் வழி. தற்காப்புக்காகப் போராடும் தமிழரையோ, மகாராஷ்டிரரையோ "இன வெறியர்கள்" என்று பழித்து அறிக்கை விடுவதால் இனப்பூசலை முடித்துக்கட்டிவிட முடியாது.

தமிழ் நாட்டிலே பிறமொழியினர் அளவுக்கு மீறி ஆதிக்கம் பெற்று வருவதற்கு இங்குள்ள அகில இந்திய அரசியல் கட்சிகளும் காரணம் எனலாம். அந்தக் கட்சிகளிலேயே தமிழரல்லாதாரின் ஆதிக்கம் நீண்ட நெடுங்காலமாக இருந்துவரக் காண்கின்றோம். ஏற்பட்டுள்ள இன எழுச்சியைக் கண்டு இந்த அகில இந்தியக் கட்சிகள் அலறுவதற்கு இதுவும் ஒரு காரணம். "தமிழர்" என்ற இன உணர்ச்சி வலுத்து விடுமானால் போலித் தேசியம் பேசும் கட்சிகள் பலவீனமடையக் கூடிய நிலை இருந்து வருகிறது. தமிழ் நாட்டில் இனப்பூசல் வலுக்குமானால், அது, அகில இந்திய கட்சிகளின் தமிழ் நாட்டுக் கிளைகளில் உட்பூசலைத் தோற்றுவித்துவிடலாம்.

ஒன்றை மட்டும் நான் இங்கு உறுதியாகக் கூறிவிடக் கடமைப்பட்டிருக்கிறேன். பக்குவப்பட்ட ஒரு தலைமையின் கீழ் தோன்றாத ஆக்க வழிப்பட்ட வேலைத் திட்டம் எதனையும் பெற்றிராத திடீர் சேனை அல்லது திடீர் படை எதனாலும் தமிழரல்லாதாரின் ஆதிக்கத்தை அகற்றி, தமிழினத்தாரைப் பாதுகாத்துவிட முடியாது.

இது எப்படியாயினுஞ் சரி; பிற இனத்தவர் ஆதிக்கத்திலிருந்து தமிழ் நாட்டை விடுவிக்க வன்முறையல்லாத வழியில் முயல்வதனை மகிழ்ச்சியோடு வரவேற்பது தமிழர் நலனில் நாட்டமுடையோரின் கடமையாகிறது.

“கொள்கை புனிதமானதாக இருந்தால் மட்டும் போதாது; அதற்கான நடைமுறை வேலைத் திட்டமும் தூய்மையானதாக இருக்க வேண்டும்” என்றார் காந்தியடிகள். இதில் நம்பிக்கையுடையவர்கள் வெற்றியையன்றி வேறொன்றைக் காண்பது இல்லை. ஆகவே, ஒரு மொழிக்குரிய மாநிலத்தில் பிற மொழியினர் பெற்றுவிட்ட ஆதிக்கத்தை அகற்ற முயலுங்கால் வன்முறையிலான இனப்பூசலுக்கு இடந்தரக் கூடாது.

இனப்பிரச்னை தோன்றியதேன் ?

இந்தியாவில் தோன்றியுள்ள இனப் பிரச்னை பிரிட்டிஷ் ஆட்சியால் ஏற்பட்ட தீய விளைவுகளில் ஒன்ருகும். ''யுத்த பிற்காலப் பிரச்சினை'' என்பார்களே, அதுபோல, இன்று பரபரப்பை ஏற்படுத்திவரும் இனப் பிரச்சினையானது ''சுதந்தரப் பிற்காலப் பிரச்சினை'' எனலாம். சுதந்திரம் பெற்ற ஒவ்வொரு நாட்டிலும் இதுபோன்ற இனப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இந்திய உபகண்டம் சுதந்திரம் பெற இருந்தபோது இங்கு மதத்திற்கு ''இனம்'' என்ற மாற்றுப் பெயர் தரப்பட்டு, இருநாட்டுத் தத்துவம் பேசப்பட்டது. இந்துக் களும் இஸ்லாமியரும் தனித்தனித் தேசிய இனத்தினர் என்று வாதிக்கப்பட்டது. இது அப்பட்டமான திரிபு வாதம், இதன் விளைவாக, இந்திய உபகண்டமானது 'இந்தியா' –'பாகிஸ்தான்' என இரண்டாகத் துண்டாடப்பட்டது.

பின்பு, துண்டாடப்பட்ட பாகிஸ்தானிலும் இனப்பிரச் சினை தோன்றியது. கிழக்குப் பாகிஸ்தானியரானவங்காளியர் தங்களை தனித் தேசிய இனமாகப் பாவித்து சுயாட்சி கோரினர். உண்மையில் இதுதான் இனப் பிரச்னை. மதப்பிரச் சினையை இனப் பிரச்சினையாக்கித் தனிநாடு பெற்ற பாகிஸ் தானியர் வங்க தேசிய இனத்தாரின் உரிமைக் கிளர்ச்சியை ஒடுக்க முயன்றனர். அது முடியவில்லை. வங்க தேசம் சுதந்திரம் பெற்றது. இதனுல் பாகிஸ்தானிலே மதவழித் தேசியத்தை இனவழித் தேசியம் வெற்றி கண்டது.

சுதந்திரம் பெற்ற வங்க தேசத்திலும் இனப்பிரச்சினை தோன்றியுள்ளது. அங்குள்ள ''பீகாரி முஸ்லிம்''கள் எனப் படும் பீகாரி இனத்தவர் நிலை ''திரிசங்கு சுவர்க்கம்'' என்பார்

களே, அதுபோலாகி யிருக்கிறது. அவர்களை வங்க தேசம் தன்னுடைய குடிமக்களாக ஏற்க மறுக்கிறது. பாகிஸ்தானும் பீகாரி முஸ்லிம்களை அழைத்துக்கொள்ள மறுக்கிறது. இது, மொழிவழிச் சிறுபான்மையினர் பிரச்னையாகும்.

பீகாரி முஸ்லிம்கள் இனத்தால் வங்காளியரல்லர்; பீகாரிகள். அதனால், வங்க தேசத்தார் அவர்களை அன்னியராகக் கருதுகின்றனர். அதே காரணத்தால் மேற்குப் பாகிஸ்தானியரும் அவர்களைத் தங்களவர்களாக ஏற்க மறுக்கின்றனர். இந்த இனப்பிரச்சினை தீர்க்கப்படாதவரை பாகிஸ்தானுக்கும் வங்க தேசத்துக்கு மிடையில் நட்புறவு ஏற்படாது.

இந்திய உபகண்டம் மத அடிப்படையில் துண்டாடப் பட்டதன் விளைவாக, இந்தியாவிலுள்ள அஸ்ஸாமிலும் இனப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது என்று ஏற்கனவே கூறினேன். ஆம்; பெரிய வங்காளத்தை கிழக்கு மேற்காகத் துண்டாடி, கிழக்கு வங்காளத்தைப் பாகிஸ்தானிலும் மேற்கு வங்காளத்தை இந்தியாவிலும் சேர்த்ததன் விளைவாக, வங்க மொழி வழங்கும் சில்ஹட் ஜில்லாவை அஸ்ஸாமி மொழி மாநிலத்தில் இணைக்க வேண்டியதாயிற்று. அதனால், அந்த மாநிலத்தில் அஸ்ஸாமியர்–வங்காளியரிடையில் இனப்பூசல் ஏற்பட்டுள்ளது.

பிரிட்டிஷார் ஆங்கிலத்தை இந்தியாவில் ஆட்சிமொழி யாக்கியதாலும் சுதந்திர இந்தியாவில் இனப்பிரச்சினை தோன்றுவது தவிர்க்க முடியாததாகிவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இந்தியா முழுவதிலும் ஆங்கிலமொன்றே ஆட்சி மொழியாகவும், பல்கலைக் கழகப் பாடங்களுக்கான பயிற்சி மொழியாகவும் இருந்து வந்தது. ஆம்; ஒன்றரை நூற்றாண்டுக் காலமாக!

இதனால், இந்தியரிலே யாரும் அவர்தம் தாய்மொழி எது வாயினும் ஆங்கில மொழி ஒன்றை மட்டுமே படித்துத் தேர்வு பெற்றுவிட்டால், இந்தியாவின் எந்தப் பகுதியிலும்

உத்தியோகம் பார்க்கலாம் என்ற நிலே ஏற்பட்டது. குறிப்பாக, ஒரிசாவிலே தமிழ்நாட்டாரும் தமிழ் நாட்டிலே ஆந்திர நாட்டாரும் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகளாக வருவது சாத்தியமானது. தெளிவாகச் சொன்னல், ஒரு மாநிலத்தில் உத்தியோகம் பார்க்க அந்த மாநில மொழி தெரிந்திருக்க வேண்டுமென்ற அவசியமில்லாமல் இருந்தது. இந்த நிலே இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கு உதவி புரிந்ததாக சிலர் வாதிக்கலாம். அது தவறு.

"தேசிய ஒருமைப்பாடு" என்பது சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களிடமிருந்து உருவாவதாகும். அதுதான் உணர்ச்சிபூர்வமான ஒருமைப்பாடாகவும் இருக்க முடியும். இந்த ஒருமைப்பாடு அன்னிய மொழி ஒன்றன் மூலம் ஏற்படுவதற்கில்லே—ஏற்பட்டதாக உலக வரலாறு கூறவில்லே. கேவலம் உத்தியோக வேட்டைக்காக ஏற்படுத்தப்பட்ட அன்னிய மொழிக் கல்வியின் மூலம் உரிமை வாழ்வு அடிப்படையிலான ஒருமைப்பாடு ஏற்படுவது சாத்தியமில்லே. இது உறுதி.

பிரிட்டிஷார் இந்தியாவில் ஆங்கிலத்தைக் கல்வி மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் புகுத்தியது தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்க அல்ல. மத்தியிலும் மாநிலங்களிலும் உயர் உத்தியோகங்களே ஆங்கில சாதியாருக்கே உரிமையாக்கிக் கொள்வதற்காகத்தான். மற்றும், இந்தியரிடையில் பிரிட்டிஷாருக்கு விசுவாசமுள்ள ஒரு உத்தியோக சாதியைப் படைப்பதற்காகவும் ஆங்கிலம் கல்விமொழி யாக்கப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் மாநிலங்கள் மொழிவாரி அமைக்கப்படவில்லே. பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபின் முதல் ஒரு நூற்றுண்டுக் காலம் வரை இந்தியாவில் மூன்று மாநிலங்களே இருந்தன. அந்த மூன்றும் பன்மொழி மாநிலங்களாகும்.

கல்கத்தாவைத் தலைநகராகக் கொண்ட மாநிலத்திலே வங்காளம்-ஒரிஸா-பீகார்-அஸ்ஸாம்-உ. பி. ஆகிய பிரதேசங்கள் இணைக்கப்பட்டு, அவை, ஆங்கில மொழி மூலம் ஆளப்பட்டன.

பம்பாயைத் தலைநகராகக் கொண்ட மாநிலத்திலே சிந்து-பஞ்சாப்-மகாராஷ்டிரம்-குஜராத் ஆகிய மாநிலங்கள் இணைக்கப்பட்டு, அவையும் ஆங்கில மொழியின் மூலமே ஆளப்பட்டன.

சென்னையைத் தலைநகராகக் கொண்ட மாநிலத்திலே தமிழகம், ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய பிரதேசங்கள் இணைக்கப்பட்டு, அவையும் ஆங்கில மொழியால் ஆளப்பட்டன. இந்த நிலை காரணமாக, இந்தியாவில் மத்திய ஆட்சியிலும் மாநில ஆட்சிகளிலும் ஆங்கிலமொன்றே ஆதிக்கஞ் செலுத்தியது. ஆம்: எங்கும் எதிலும் ஆங்கிலம்! இதனால், தமிழறியாத பிற மொழியாளர் தாங்கள் பெற்ற ஆங்கில மொழிக் கல்வி மூலம் தமிழ்நாட்டில் உயர் உத்தியோகங்களைப் பெற முடிந்தது. ஒவ்வொரு மாநிலத்திலும் இதுதான் நிலை.

ஆங்கில ஆட்சியின்போது இன்னொரு அநீதியும் நிகழ்ந்தது-அதாவது, தமிழகத்தில் தமிழரே தமிழ் பயிலாதிருக்க பிரிட்டிஷ் ஆட்சியின் கல்வி முறை அனுமதித்தது.

தமிழகத்துப் பள்ளிகளிலே தமிழ் மொழி கட்டாய பாடமாக்கப்படவில்லை. இதுபோல, ஆந்திரத்தில் தெலுங்கும், வங்கத்தில் வங்காளியும் பள்ளிகளில் கட்டாய பாடமாக்கப்படவில்லை. அன்னிய மொழியான ஆங்கிலம் கட்டாய மொழியாக்கப்பட்டிருந்தது. அதுவும், முதல் மொழியாக! ஆங்கிலத்தைப் புறக்கணித்துக் கல்வி பயில முடியாத நிலை இருந்தது. ஆனால் மாநில மொழியைக் கைவிட்டு கல்வி பயில வாய்ப்பளிக்கப்பட்டது. சான்றாக, ஆங்கிலத்தைக் கட்டாய முதன் மொழியாகப் பயின்றாக வேண்டும். அடுத்து இந்திய மொழிகளில் ஏதேனும் ஒரு

மொழியைக் கட்டாயமாகப் பயின்ருல் போதும். தாய் மொழியைப் பயிலவேண்டுமென்ற கட்டாயமில்லை.

இதனுல், உத்தியோகம், தொழில், வாணிபம் காரண மாகத் தமிழகத்தில் குடியேறிய ஆந்திரர் தமிழ் படித்து தமிழரோடு தமிழராகக் கலக்க வாய்ப்பின்றி, இரண்டாவது மொழியாகத் தங்கள் வீட்டு மொழியான தெலுங்கைப் பயின்றனர். அப்படியே தமிழ்நாட்டு மலையாளிகள் பிரதேச மொழியான தமிழைப் புறக்கணித்து மலையாளம் பயின்றனர்.

இதுபோல, தமிழகத்திற்கு வெளியே பிற மாநிலங்களில் உத்தியோகமோ, வாணிபமோ, தொழிலோ புரிந்த தமிழர் களும் தங்களுக்கு வாழ்வளித்த மாநிலத்தின் மொழியைப் புறக்கணித்துத் தங்கள் வீட்டு மொழியான தமிழைப் பயின்றனர். இதனுல், ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில மொழி பயிலாத பிற மொழியினர் ''அன்னியர்'' என்ற நிலையில் வாழ அனுமதிக்கப்பட்டனர்.

இதைவிடவும் பயங்கரமான கேடு என்னவென்ருல், தமிழகத்தில் வாழும் தமிழரே தமிழைப் புறக்கணித்து அதற்குப் பதிலாக வேறுமொழி ஒன்றை இரண்டாவது மொழியாக எடுத்துப் படிக்க அனுமதிக்கப்பட்டதாகும். தமிழ்நாட்டிலே பிறப்பால் தமிழராக உள்ள அந்தணரில்பலர் ஆரம்பப் பள்ளியோடு தமிழ்க் கல்வியை முடித்துக்கொண்டு உயர்நிலைப் பள்ளியில் இரண்டாவது மொழியாக சமஸ் கிருதம் பயின்றனர். சான்ருக, டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர், நாவலர் எஸ். சத்தியமூர்த்தி, மகாகனம் சீனிவாச சாஸ்திரி போன்றவர்கள் உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் தங்கள் தாய் மொழியான தமிழைப் பயிலாமல் சம்ஸ்கிருதம் பயின்றனர். அப்படியே, தமிழ் நாட்டு முஸ்லிம்கள் – இனத் தால் தமிழரானேர் – இரண்டாவது மொழியாக உருது அல்லது அரபு மொழியைப் படித்தனர்-அதாவது, தங்கள் தாய்மொழியான தமிழைப் புறக்கணித்தனர்.

தங்கள் தாய்மொழியான தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தோடு சம்ஸ்கிருதம், உருது, அரபு ஆகிய வேற்று

மொழிகளில் ஒன்றை இரண்டாவது மொழியாக ஏற்றுக் கல்வி பயின்றோர் தங்கள் வாழ்நாள் முழுதும் தமிழை மூன்றாந்தரமான மொழியாகவே கருதலாயினர். வீட்டிலுள்ள பெண்களோடும் வேலைக்காரரோடும் பேசுவதற்கான அடுப்பங்கரை மொழியாகவே தமிழைக் கருதினர்.

இதனால், தமிழ் நாட்டில் இந்து-முஸ்லிம்களிடையேயும், தமிழர்-தமிழரல்லாதாரிடையேயும் பிரதேச மொழியான தமிழின் மூலம் ஒருமைப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. ஆங்கிலத்தின் மூலம் இந்திய சமுதாயத்தின் மேல் மட்டத்திலுள்ள படித்தவர்களிடையே ஓரளவு ஒருமைப்பாடு ஏற்பட்டதென்பது உண்மைதான், அது, தேசிய ஒருமைப்பாடு ஆகாது. உத்தியோக சாதியினரின் ஒருமைப்பாடே ஆகும்.

பிரதேச மொழிகளின் மூலம் அந்தந்தப் பிரதேச அளவிலேனும் இந்து – முஸ்லிம்களிடையேயும், தமிழர்-தமிழரல்லாதாரிடையேயும் ஒருமைப்பாடு ஏற்படுவதனைக் கடந்த இருநூறு ஆண்டு காலமாகத் தடுத்துக் கெடுத்து வந்த பாவம் ஆங்கில மொழியையே சாரும்.

இதனாற்றான், சுதந்திரம் பெற்ற இந்தியாவிலே மாநிலந்தோறும் இனப் பிரச்சினை தோன்றியுள்ளது.

திரும்பவும் சொல்கிறேன்; தமிழ் நாட்டில் மட்டுமின்றி, இந்திய உபகண்ட முழுவதிலும் தலையெடுத்து வரும் இனப் பூசலானது பிரிட்டிஷாருக்கு இந்தியா இரண்டு நூற்றாண்டு காலம் அடிமைப்பட்டிருந்ததன் தீய விளைவாகும். இதனாற்றான் நாடு விடுதலை பெற்றதுமே இனப் பிரச்சினை முன்னணிக்கு வந்திருக்கின்றது. மாநிலங்கள் மொழிவாரி திருத்தியமைக்கப் பட்டதன் காரணமாகவும் இனப் பிரச்சினையை நாம் சந்திக்க வேண்டியவர்களாகிறோம்.

''இனவெறி'' என்று பெயர் வைத்து இதனை எதிர்ப்பது அறியாமை; மாறாக, இது தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை என்பதனை ஒப்புக்கொள்வதே அறிவுடைமை.

அயல் நாடுகளில் இனப் பிரச்னே

இந்தியாவில்-குறிப்பாக, தமிழ் நாட்டில் தோன்றியுள்ள இனப் பிரச்னேயைப் புரிந்து கொள்ளவும், அதற்குப் பரிகாரம் காணவும் அயல் நாடுகளில் நிலவும் இனப் பிரச்னேயைப்புரிந்து கொள்வது அவசியமாகிறது-குறிப்பாக, தமிழர் குடியேறி வாழ்கின்ற இலங்கை, பர்மா, மலாசியா, பிஞங்கு ஆகிய தூரகிழக்கு நாடுகளில் இனப் பிரச்னே தோன்றிய விதத்தையும், அங்கெல்லாம் அது தீர்க்கப்பட்டு வரும் முறையையும் ஆராய்ந்தறிவது அவசியமாகிறது.

தொலே கிழக்கு நாடுகளில் வாழும் தமிழர்களில் பெரும் பாலோர் அங்கு குடியேறியது அந்த நாடுகள் பிரிட்டிஷ் ஆதிக்கத்தில் இருந்த காலத்திலாகும். அவர்களெல்லாம் ஆளுஞ் சாதியராக அங்கு செல்லவில்லே; அடிமைக் கூலி களாகவே சென்றனர். அவர்களாக விரும்பிச் செல்லவில்லே; தேயிலே, ரப்பர் தோட்டங்களின் வெள்ளே முதலாளிகள் கங்காணிகளே அமர்த்தி, ஆசை மொழிகளேக் கூறி அணியணி யாக அவர்களே அழைத்துச் சென்றனர்.

அந்த நாளில், இந்தியாவிலும் தொலே கிழக்கு நாடுகளி லும் பிரிட்டிஷ் ஆட்சியே நிலவியதால், அந் நாடுகளிலே ஒரு நாட்டிலிருந்து மற்ருரு நாட்டிற்குப் போய்வரவோ, அங்கு நிலேத்து வாழவோ, 'பாஸ்போர்ட்'டோ, 'விசா'வோ தேவைப்படவில்லே. ஒரே செலாவணி நிலவியதால் அந்நியச் செலாவணித் தொல்லேயும் இருக்கவில்லே.

தொழிலாளர்களாக தொலே கிழக்கு நாடுகளுக்குச் சென்ற தமிழரிலே சிலர் வணிகர்களாக மாறியிருத்தலும் கூடும். ஆனுல், மொத்தத்தில உழைத்துப் பிழைக்கும் தொழிலாளர்களாகத்தான் இந்தியத் தமிழர்கள் இலங்கை,

பர்மா, மலாசியா, பினுங்கு ஆகிய நாடுகளுக்குச் சென்றனர். அவர்களில் மிகப் பெரும்பாலோர் இன்றளவும் அந்த நிலேயில் தான் வாழ்ந்து வருகின்றனர்.

பர்மாவும் இலங்கையும் ஒரு கால கட்டத்தில் இந்தியாவுடன் இணைக்கப்பட்டு, பின்னர் ஒரு கட்டத்தில் பிரிக்கப்பட்டன. அப்படி இணைக்கப்பட்டிருந்த கால கட்டத்திலே அந்த நாடுகளுக்கு இந்தியத் தமிழர் குடியேறுவது அதிகமாகியிருக்கவும் கூடும்.

பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேறிய காலத்திலேயே மலாசியா-சிங்கப்பூர்-பர்மா–இலங்கை ஆகிய நாடுகளுக்கும் சுதந்திரம் வழங்கி, அங்கெல்லா மிருந்தும் அவர்கள் வெளியேறினர். அதன் பின்னர், மலாசியா, சிங்கப்பூர் தவிர, மற்ற நாடுகளில்-குறிப்பாக, பர்மாவிலும் இலங்கையிலும் இனப் பிரச்னே தோன்றியது. அது சில நேரங்களில் இனப் பூசலாகவும் மாறியது.

பர்மா, ஒரே மொழியினரின்-குறிப்பாக, ஒரே இனத்தவரின்-சிறப்பாக, ஒரே மதத்தவரின் தாய் நாடாகும். ஆம்: பர்மா, பர்மிய மொழியினரின்–புத்த மதத்தினரின்-பர்மிய இனத்தவரின் தாயகம். அங்கு அவர்களுக்கு அடுத்தபடியாகவுள்ள குடியேறிய இனத்தார் தமிழரேயாவர்.

இலங்கையின் நிலேமை பர்மாவி லிருந்து சிறிது வேறுபட்டதாகும். அது, தமிழர்-சிங்களர் ஆகிய இருவேறு இனத்தவரின் தாயகம். இலங்கையின் மக்கள் தொகையில் சுமார் நான்கில் ஒரு பங்கினர் தமிழர். அவர்களில் மிகப் பெரும்பாலோர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் சேர்ந்தாற்போல் வாழ்கின்றனர். இவர்கள் குடியேறியவர்களல்லர்; பூர்வ குடியினர். மற்ற பகுதிகளில் சிங்கள மொழி பேசும் இனத்தவரே பெரும்பாலோராக வாழ்கின்றனர். இதனுல், இலங்கையில் இனப்பிரச்னேயின் ஒரு வடிவம் பூர்வ குடிகளேப் பற்றியதாக இருக்கிறது.

மற்ளுெரு வகையான இனப் பிரச்னேயும் அங்கு தோன்றி யிருக்கிறது. அது பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அங்கு குடியமர்த்தப்பட்ட இந்தியத் தமிழர்களுக்கும் பூர்வ குடி யினரான சிங்களவர்களுக்கு மிடையில் தோற்றுவிக்கப் பட்டதாகும்.

ஒரு காலத்தில் இலங்கையிலுள்ள சிங்களவர்களேப் போன்று பூர்வ குடித் தமிழர்களும் அங்கு குடியமர்த்தப் பட்ட இந்தியத் தமிழர்களே ஆதிக்கம் செலுத்த வந்த அன்னி யர்களாகக் கருதியதுண்டு. இதனுல், பூர்வ குடித் தமிழருக் கும் இந்திய வம்சத்தில் வந்த தமிழருக்குமிடையே மனக் கசப்பு வளர்ந்ததுமுண்டு. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர், அந்த நாட்டின் பூர்வகுடியினரான தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையே உத்தியோகப் பங்கீடு காரண மாகவும், மொழியுரிமை காரணமாகவும் பூசல் தோன்றியது, அதன் விளேவாக, இலங்கையின் பூர்வ குடித் தமிழர்கள் குடியமர்த்தப்பட்ட தமிழர்களிடம் சிறிது அனுதாபத்துடன் நடந்து கொள்ள முற்பட்டனர். சிங்கள இனத்தவரை வெற்றி காணவும் இந்த மனமாற்றம் அவர்களுக்குத் தேவைப் பட்டது.

மலாசியாவிலும் சிங்கப்பூரிலும் அந்த நாடுகளின் பூர்வ குடியினரிடையே-மலாய்காரர், சீனர்களிடையே — இனப் பிரச்னே தோன்றியுள்ளது. பிரிட்டிஷார் வெளியேறிய பின்னர் ஒன்றிரு சந்தர்ப்பங்களில் மலாய் — சீன இனங் களிடையே பூசல் வளர்ந்து, உள்நாட்டுக் கலகமாகவும் மாறியது. இப்போது அமைதி நிலவுகிறதென்ருலும் இனப் பிரச்னே இன்னமும் இருந்துகொண்டுதான் இருக்கிறது. மலாய் — சீன இனத்தவரிடையே உருவாகியுள்ள இனப் போட்டியால் மூன்ருவது இனத்தவரான இந்தியத் தமிழர் பிரச்னேக்குரியவர்களாகக் கருதப்படவில்லே.

இலங்கையிலும் பர்மாவிலும் இந்தியத் தமிழர்கள் வெறுக்கப்படுகின்றனர். அந்த நாடுகளின் பூர்வ குடி

மக்களால் அவர்களுக்குக் குடியுரிமை மறுக்கப்படுகின்றது. இன்னும் என்னென்ன வகையில் எல்லாமோ தொல்லைகள் தரப்படுகின்றன. இலங்கை அரசு, அங்குள்ள இந்திய வமிசாவளியினரைக் 'கள்ளத் தோணிகள்' என்று பொய்க் காரணங் காட்டியும் விரட்டி வருகின்றது.

பர்மாவில் இராணுவ ஆட்சி இந்தியத் தமிழர்களின் சொத்துக்களைப் பறித்து, தொழில்களையும் வாணிபத்தையும் அரசுடைமையாக்கி, அவர்களாகவே இந்தியா திரும்பு வதற்கு வழி வகுத்தது.

இலங்கையின் பூர்வ குடிகளுக்கும் இந்திய வமிசாவளித் தமிழர்களுக்குமான இனப் பிரச்னையானது, இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தின் மூலம் தீர்க்கப்பட்டிருக்கிறது. அதற்கு, "சாஸ்திரி — பண்டார நாயகா உடன்படிக்கை" என்று பெயர். அதன்படி, இலங்கைவாழ் இந்தியத் தமிழர்களிலே நான்கிலொரு பங்கினருக்கு இலங்கை அரசு குடியுரிமை வழங்கும். மற்ற மூன்று பங்கினரை இந்தியா அழைத்துக் கொள்ள வேண்டும்.

இதுகாறும் தமிழர் குடியேறி வாழும் நாடுகளில் அவர்களுக்கும் அந்த நாடுகளின் பூர்வ குடிகளுக்குமிடையில் இனப்பிரச்னை தோன்றிய விதத்தையும், அது தீர்க்கப்பட்டு வரும் முறையையும் அறிந்தோம்.

இலங்கையில் சிங்களவரும், பர்மாவில் பர்மியரும் அந்த நாடுகளில் பிரிட்டிஷாரால் குடியமர்த்தப்பட்ட இந்தியத் தமிழர் விஷயத்தில் எத்தகைய வெறுப்பை, வெளிப்படுத்து கிறார்களோ, அத்தகைய வெறுப்பைத் தமிழ்நாட்டில் குடி புகுந்துள்ள அயல் மாநிலத்தாரிடம் தமிழர் காட்டுவதற் கில்லை.

இனப் பிரச்னையானது இந்தியத் தமிழகத்துக்கும் இலங்கை — பர்மா நாடுகளுக்கும் ஒன்றுபோலத்தான்.

இந்தப் பிரச்னே—அதாவது, ஒரு மொழிக்குரிய இனத்தவரின் நாட்டிலே இன்னெரு மொழிக்குரிய இனத்தவர் குடியேறி அரசியல், தொழில், வாணிபம் ஆகிய துறைகளில் ஆதிக்கஞ் செலுத்துவது பரஸ்பரம் துவேஷத்தையும் பகைமையையும் வளர்க்கக் கூடியதுதான். ஆனல், பர்மாவும் இலங்கையும் சுதந்திர நாடுகள். அதனல், அந்நாடுகளில் குடியேறிய தமிழர்களுக்குக் குடியுரிமை தர மறுப்பதன் வாயிலாக அவர் களாக வெளியேறும்படிச் செய்யவோ, சட்டப்படி வெளி யேற்றவோ அங்குள்ள அரசுகளால் முடிகின்றது. இந்தியாவி லுள்ள மாநிலங்கள் சுதந்திரமுடைய நாடுகளல்ல. இந்தியா முழுவதற்கும் ஒரே குடியுரிமை இருக்கிறது. ஆம்; இந்தியரிலே எவரும் — குமரிமுதல் இமயம்வரை பரந்து கிடக்கும் பாரத நாடு முழுவதிலும் — எங்கும் குடியேறி வாழலாம்; தொழில் புரியலாம்; வாணிபம் செய்யலாம்; வாய்ப்பு கிடைத்தால் உத்தியோகமும் பார்க்கலாம்; சொத்துக்கள் வாங்கலாம். ஆகவே இங்கு இனப்பிரச்னேயைத் தீர்ப்பது எளிதாக இல்லே. இந்தியா ஒரே நாடு—இந்தியர் யாவரும் ஒரே சமுதாயத்தினர் என்ற ஒருமைப்பாட்டுணர் வின் அடிப்படையில் தான் இங்கு இனப்பிரச்னே தீர்க்கப்பட வேண்டும்.

சாதிப்பிரச்னே தோன்றிய தெப்போது?

தமிழ் நாட்டிலே பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அரசு உத்தியோகத் துறையில் பிற மொழியினர் ஆதிக்கம் பெற்றனர் என்பதனை ஏற்கனவே அறிந்தோம். அதற்கு ஆங்கில மொழியின் ஆதிக்கமும் துணைபுரிந்ததென்பதனையும் தெரிந்து கொண்டோம்.

தமிழ் நாட்டில் உத்தியோகத்துறையில் இன அடிப்படையில் போட்டி ஏற்படுவதற்கு முன்பே சாதிரீதியில் போட்டி ஏற்பட்டதுண்டு. இன அடிப்படையிலான போட்டியானது தமிழ் மொழியினருக்கும் பிற மொழியினருக்கும் இடையே நிகழ்வதாகும். சாதி அடிப்படையிலான போட்டியானது தமிழ் இனத்தவரிடையிலேயே நிகழ்வதாகும். அது பிராமணத் தமிழருக்கும் பிராமணரல்லாத தமிழருக்கும் இடையிலான போட்டியாகும். தமிழ்நாட்டில் பிற மொழியினர் ஆதிக்கம் பெற்றதற்குத் தமிழினத்தார் பிராமணர் — பிராமணரல்லாதார் என்று சாதி அடிப்படையில் பிளவு பட்டதும் ஒரு காரணமாகும்.

''பிராமணரல்லாதார்'' என்ற பெயரில் தோன்றிய இயக்கமானது தமிழ் நாட்டைத் தமிழரல்லாதாரின் உத்தியோக வேட்டைக் களம் ஆக்கிவிட்டதென்பது ஆராய்ச்சியின் மூலம் யான் அறிந்த வைத்துள்ள முடிவாகும். நடுவு நிலையில் நின்று தமிழ் நாட்டின் கடந்த அரை நூற்றாண்டு வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும் எவரும் நான் கூறுவதிலுள்ள உண்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றியதற்குக் காரணமிருந்தது என்பதனை நான் மறுக்கவில்லை. ஆம்; உத்தியோகத் துறையில் பிராமணரல்லாத தமிழரைவிடவும் பிராமணத்

தமிழர் செல்வாக்கு செலுத்தியதால், அதற்கு எதிராக பிராமணரல்லாத தமிழர் தங்களுக்கெனத் தனி இயக்கங் கண்டனர். ஆனுல், அந்த இயக்கத்தால் அவர்கள் எதிர் பார்த்த பலன் கிடைத்ததா? 'இல்லே' என்பதே வாலாறு காட்டும் உண்மை.

உத்தியோகத்துறையில் பிராமணர் ஆதிக்கம் பெற்ற தற்கு வரலாற்று ரீதியான காரணங்கள் பலவாகும். அவற்றைச் சுருக்கமாகவேனும் இங்கு பார்ப்போம்.

தமிழ் நாடு சுதந்திரமாக இருந்த காலத்திலே பிராமணர்கள் மதத்தால் இந்துக்களான தமிழ் வேந்தர் களால் போஷிக்கப்பட்டு வந்தனர். அத்துடன், இந்துத் தமிழர்களிடையில் புரோகிதர்களாகவும் குருமார்களாகவும் தொழில் புரிந்து வாழ்ந்தனர். அன்றுடத் தேவைக்கு அதிகமாகப் பொருளே விரும்பாத ஆசாரத்தை அந்நாளேய பிராமணர்கள் கடைப்பிடித்ததாலும் அவர்கள் தங்கள் தேவைகளே எளிதில் பெற்று வாழ்வாங்கு வாழ முடிந்தது.

தமிழ் நாடு சுதந்திரமாக வாழ்ந்த காலத்திலே பிராமணர் அல்லாதார் எனப்படும் பிற சாதிகளேச் சார்ந்த மக்களும் வாணிபமும் தொழிலும் நடத்தி வாழ்வாங்கு வாழ்ந்து வந்த னர். பிராமணர்–பிராமணரல்லாதாரிடையே நிலவிய இந்த வாழ்க்கை முறையானது "வருணுசிரம ஏற்பாடு" என்று கருதப்படுகிறது. உண்மையில் இந்தத் தொழில்முறை சங்க காலத்திலேயே தமிழகத்தில் நடைமுறையிலிருந்ததாக பண்டைத் தமிழ் இலக்கியங்களால் அறிகிறும். தமிழ் நாடு மொகலாய ஆதிக்கத்திற்கு அடிமைப்படத் தொடங்கியதும் இங்கு நிலவி வந்த பழைய தொழில் ஏற்பாடு தொலேந்தது. குறிப்பாக, இந்து மன்னர்களால் போற்றப்பட்டு வந்த பிராமணர்கள் மதத்தால் வேறுபட்ட நவாபுகள் ஆட்சியால் புறக்கணிக்கப்பட்டனர்.

நவாபுகள் ஆட்சி மறைந்து 18-ஆம் நூற்ருண்டின் இறுதி லேயி தமிழ் நாட்டில் கிறித்தவர்களான பிரிட்டிஷார்

ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். அவர்களுடைய ஆட்சியும் பிராமண வருணத்தாரைப் புறக்கணித்தது. இதனுல், வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு இந்து அரசர்களால் போஷிக்கப்பட்டு வந்த அந்தணர்கள் புரோகிதத் தொழிலேயும், கோயில் வழிபாட்டையுமே நம்பி வாழவேண்டியவர்கள் ஆயினர். பிராமணர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக இந்தத் தொழில்கள் மட்டுமே அவர்களுக்குப் போதுமானவையாக இருக்கவில்லே.

இது ஒருபுறமிருக்க, இஸ்லாமிய-கிறித்துவ மதங்களின் வரவால் வடபுலத்திலுள்ள இந்துக்களிடையே சமயத் துறையில் புரட்சிகரமான மாறுதல்களேத் தோற்றுவிக்கும் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. அவற்றின் எதிரொலி தமிழ் நாட்டிலும் ஏற்பட்டதெனலாம். இதனுலும், தமிழ் நாட்டிலுள்ள குருமார்களும், புரோகிதர்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டனர். அவர்கள் அதுவரை தாங்கள் செய்து வந்த தொழில்களே மட்டுமே நம்பியிருப்பது சாத்தியமில்லே என்ற நிலே ஏற்பட்டது.

இதனுல் அறிவுப் பாரம்பரியத்தினரான அவர்கள் தங்களுடைய தகுதிக்கேற்ற புதிய தொழில் துறைகளேத் தேடலாயினர். இந்த நேரத்தில்தான் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியானது சிப்பந்தி வர்க்கத்தைத் தோற்றுவிப்பதற்கென்றே ஆங்கிலத்தின் மூலம் போதிக்கப்படும் மெக்காலே கல்வித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்தது.

இதற்கு முன்பே பிரிட்டிஷ் ஆட்சியில் துவிபாஷிகளாக இருந்து பணிபுரியும் வாய்ப்பினே அந்தணர்களிலே சிலர் பெற்று விட்டனர். பிராமண ரல்லாதாரிலேயும் முன்னணியிலிருந்த வேளாளர், முதலியார் எனப்படும் சாதியாரும் துவிபாஷிகளாக இருந்து கம்பெனி ஆட்சிக்குத் தொண்டு புரிவதிலே அந்தணர்களோடு போட்டியிட்டனர். இதிலிருந்து தான் பிரிட்டிஷ் ஆட்சியில் உத்தியோகம் பெறுவதிலே சாதி ரீதியான போட்டி தமிழருக்குள்ளேயே ஏற்படலானது.

மெகாலேயால் அன்னிய ஆட்சிக்குச் சேவை புரியும் சிப்பந்தி வர்க்கத்தைத் தயாரிப்பதற்கென்றே வகுக்கப்பட்ட கல்வியைப் பயின்று, பட்டங்கள் பெற்று, உயர் உத்தியோகங்களைப் பெறுவதில் முதலில் அந்தணர்களே அதிக அளவில் ஆர்வம் காட்டினர். அதற்காகத் தங்கள் வருணாசிரம நெறிகளையும் கைவிட்டனர். அந்தணர்களின் ஆசாரப்படி ஆங்கிலம் 'நீச மொழி'யாகும். அதைப் பயில்வது ஆசாரக் கேடு. அப்படியிருந்தும், ஆங்கிலத்தின் மூலம் ஆங்கிலேயரிடமே கல்வி பயில்வதற்கு அந்தணர்கள் தயங்கவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில்தான் கடுமையான உடல் உழைப்பின்றி மாத ஊதியம் பெறும் உத்தியோக வர்க்கம் என்பதாக ஒரு புதிய சாதி தோன்றியது. அந்தச் சாதியின் முதல் தலைமுறையினர்க்குப் பிற்காலத்தில் சமுதாயத்தில் தங்களுக்கு ஏற்படவிருக்கும் முதன்மையும் தகுதியும் எத்தகையதென்பது அப்போது தெரியாமல் இருந்திருக்கலாம். கல்விக்கொரு இலாகா, காவலுக்கு ஒரு இலாகா, நிதிக்கு ஒரு இலாகா, நீதிக்கு ஒரு இலாகா என்று இலாகாக்கள் அமைத்து; அவற்றிற்கெல்லாம் பல படித்தரங்களில் அதிகாரிகளும் சிப்பதிகளும் அமர்த்தி ஆட்சி நடத்தும் ''செக்ரடரியேட்'' முறை நம் நாட்டுக்குப் புதிதாகையால், அதன் பிற்கால வளர்ச்சியைத் தெரிந்துகொண்டு தீர்க்க தரிசனத்துடன் அந்நாளில் அந்தணர்கள் அதில் புகுந்தார்கள் என்று சொல்வதற்கில்லை.

அடுத்தடுத்து வந்த அன்னிய மதத்தாரின் ஆட்சிகளிலே வேலையில்லாத் திண்டாட்டத்தை முதலில் சந்தித்த சாதியார் என்பதாலேயே அந்தணர்கள் அன்னிய மொழியான ஆங்கிலம் பயின்று, அன்னியரான—நம் நாட்டை அடிமை கொண்டவர்களான—ஆங்கிலேயரின் கீழ்ச் சேவகம் செய்ய விரும்பியிருக்க வேண்டும். காரணம் எதுவாயினும் சரி; செக்ரடரியேட் உத்தியோக வர்க்கமானது இந்தியரைப் பொறுத்தவரையில் அந்தணர்களிட மிருந்துதான் தொடங்கியது. ஆயிரமாயிரம் ஆண்டு காலமாக ஓதல், ஓதுவித்தல்

ஆகிய அறிவுத் தொழிலில் ஈடுபட்டு வந்த அறிவுப் பாரம்பரி யத்தினராதலால், உடலுழைப்பல்லாத செக்ரடரியேட் தொழிலுக்குத் தங்களைப் பொருத்திக் கொள்வது தமிழர் களிலே மற்ற சாதியார்களை விடவும் அந்தண சாதியாருக்கு எளிதாக இருந்திருக்கலாம். ஆம்; தேவை காரணமாக மட்டு மல்லாமல், திறமை காரணமாகவும் அவர்கள் ஆங்கிலேயர் ஆட்சியில் சேவகம் புரிவதிலே முதலிடம் பெறுவது சாத்தியமாகியிருக்க வேண்டும்.

அந்நாளில் பிராமணரல்லாத சாதியினர் வாணிபத்தி லும் தொழில் துறைகளிலும் ஈடுபட்டு வாழ்வாங்கு வாழ்ந்து வந்தனராதலால் செக்ரடரியேட் சிப்பந்தி வர்க்கம் என்ற புதிய சாதியில் சேர்ந்து கொள்வதில் அவர்களில் பெரும் பாலோர் முதலில் ஆர்வங் காட்டாமல் இருந்திருக்கலாம். அது இயற்கை. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியாளர் இந்தியக் கைத் தொழில்களை அழித்து தங்கள் நாட்டில் உற்பத்தி செய்யப் படும் பொருள்களை விற்கும் சந்தையாக இந்தியாவைப் பயன் படுத்தத் தொடங்கி உள்நாட்டு—வெளிநாட்டு வாணிபத்தை யும் பழைய வணிக வருணத்தாரிடமிருந்து பறித்துக் கொண்டுவிட்டதால், காலப் போக்கில் பிராமணர் அல்லா தாரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு ஆளாயினர். அது காரணமாக, கொஞ்சம் காலந்தாழ்ந்து அவர்களும் செக்ர டரியேட் வர்க்கத்திலே சேர்ந்துகொள்ள முயன்றனர். அதற் காக, ஆங்கிலக் கல்வி கற்பதிலேயும் ஆர்வம் காட்டினர் ஆனால், அதற்குள் அரசு அலுவலகங்களிலே அந்தணர்கள் நிறைந்து விட்டனர். அதனால், அவர்களுடன் போட்டியிட்டுத் தான் 'அந்தணரல்லாதார்' என்போர் சிப்பந்தி வேலைகளைப் பெற வேண்டியிருந்தது. வேலைகளைப் பெற்றாலும், அறிவுப் பாரம்பர்யத்தினருக்கிருந்த திறமையோடு போட்டியிடுவது தொழில் வாணிபப் பாரம்பர்யத்தினருக்கு ஆரம்ப காலத்தில் சிறிது கஷ்டமாகவும் இருந்திருக்கக்கூடும்.

பிராம்மண ரல்லாதாரிலும் அறிவு ஆற்றலில் முன்னணி யில் இருந்தவர்களே அரசு அலுவல்களைப் பெறுவதிலே

அந்தணர்களோடு போட்டியிட்டிருக்கக்கூடும் என்பது நாம் புரிந்துகொள்ளக்கூடியதுதான்.

பிரிட்டிஷ் ஆட்சி தோன்றிய பின்னுள்ள முதல் ஒரு நூற்றுண்டு காலத்திலே அரசாங்கத்தில் சேவகம் புரிவது தான் சமுதாயத்தில் மதிப்பிற்குரிய—பெருவருவாய்க்குரிய—முதுமை வரும்வரை நீடிக்கும் என்ற உத்தரவாதமுடைய தொழிலாகக் கருதப்பட்டது. இதனுல், அரசிடம் உத்தியோகம் பெறுவதிலே போட்டி கடுமையானது. அந்தப் போராட்டத்திலே வெற்றி வாய்ப்பை மிகுதியாகப் பெற்றிருந்த சாதியார் மீது அதனைப் பெருத சாதியார் வெறுப்பு கொண்டனர். அதனுல், பழங்குடி உரிமை வாதமும் பிறந்தது. ஆம்; உத்தியோகம் பெறுவதில் தமிழரிலே அந்தணருக்கும் அந்தணரல்லாதாருக்கும் ஏற்பட்ட போட்டியானது, நாளடைவில் வகுப்புவாதப் போராட்டமாகவும் மாறியது. இதன் விளைவாகத் தோன்றியதுதான் ஜஸ்டிஸ் கட்சி—அதாவது, பிராம்மணரல்லாதார் இயக்கம்.

இந்தியா முழுவதிலுமே முதன் முதலாக ஏற்பட்ட தேசிய எழுச்சியானது அரசு உத்தியோகங்களைப் பெறுவதிலே ஆங்கிலேயருடன் படித்த இந்தியர்களுக்கு ஏற்பட்ட போட்டியின்—போராட்டத்தின் விளைவுதானே! இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையே படித்த இந்தியருக்கு வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபனமாகத்தானே ஹ்யூம் துரையால் தோற்றுவிக்கப்பட்டது! அதுபோல, தென்னுட்டில் படித்த பிராம்மணரல்லாதாருக்கு வேலை தேடித் தரும் ஸ்தாபனமாக ஜஸ்டிஸ் கட்சி தோற்றுவிக்கப்பெற்றது.

காங்கிரஸ் மகாசபை தோன்றுவதற்கு இந்தியரிடையில் ஏற்பட்ட தேசிய எழுச்சிதான் காரணமென்று ஒப்புக்கொள்ளுவதானுல், தென்னுட்டில் பிராம்மணரல்லாதா ரிடையில் தோன்றிய விழிப்புணர்ச்சிதான் ஜஸ்டிஸ் கட்சி தோன்றியதற்குக் காரணம் என்பதனையும் நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். ஒரு வேறுபாடு என்னவென்றுல், படித்த

இந்தியர்களுக்கு உத்தியோகந் தேடித்தரும் ஸ்தாபனமாகத் தோன்றிய காங்கிரஸ் மகாசபையானது, பிற்காலத்தில் சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாக ஏகாதிபத்திய எதிர்ப்பாளரின் பாசறையாக மாறியது. அதுபோல, ஜஸ்டிஸ் கட்சியும் மாறியிருக்க வேண்டும். ஆனால், அதனை நடத்தியவர்கள் இழைத்தத் தவறு காரணமாக அது வேறுவிதமாக நடந்து கொண்டது.

1916-ல் ஜஸ்டிஸ் கட்சி பிறந்தது. பழகு தமிழிலே "நீதிக் கட்சி" என்றும், "தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்" என்றும் அழைக்கப்பெற்றது.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றுவதற்கு முன்பு சென்னை மாநிலம் சம்பந்தப்பட்ட உயர் உத்தியோகங்களை வகித்த இந்தியர்களிலே அந்தணர்களே மிகுதியாக இருந்து வந்தனர். அந்த நிலையை மாற்றிப் பிராமணரல்லாதவர்களுக்கும் உயர் உத்தியோகங்களைத் தேடிக் கொடுக்கவே நீதிக் கட்சி பிறந்தது. மலையாளியான டாக்டர் டி. எம். நாயர், தமிழ் நாட்டுத் தெலுங்கரான சர். பி. டி. தியாகராச செட்டியார் ஆகிய இரு பேரறிஞர்களின் கூட்டு முயற்சியால்தான் இந்தப் புதிய கட்சி ஆரம்பிக்கப் பெற்றது.

1909-ல் பிரிட்டிஷ் ஆட்சி மிண்டோ—மார்லி சீர்திருத்தத்தை இந்தியாவில் அமுலுக்குக் கொண்டு வந்தது. அதற்கு முன்வரை உயர் உத்தியோகங்களெல்லாம் ஆங்கிலேயருக்கே உரிமையாக்கப் பெற்றிருந்தன. அவற்றை இந்தியருக்கும் வழங்க வேண்டுமென்று காங்கிரஸ் மகாசபையானது தான் தோன்றிய நாள்தொட்டு இடைவிடாமல் பெருங்கிளர்ச்சி நடத்தி வந்தது. இந்தக் கிளர்ச்சி காரணமாகத்தான் 1909 ல் மிண்டோ—மார்லி சீர்திருத்தம் பிரிட்டிஷ் அரசால் வழங்கப் பெற்றது.

பத்தாண்டுகள் கழித்து 1919-ல் "மாண்டேகு—செம்ஸ்போர்டு திட்டம்" என்ற பெயரில் மற்றொரு சீர்திருத்தம் வழங்கப் பெற்றது.

1909–ல் சென்னை மாநில சட்ட மன்றம் விரிவான முறையில் அமைக்கப் பெற்றது.

பின்னர் வந்த மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தில் சட்ட மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 விருந்து 135 ஆக அதிகப்படுத்தப் பெற்றது.

இந்தச் சட்டமன்றத்திற்கு 1920–ல் முதன் முதலாகப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதற்குக் காங்கிரஸ் மகா சபைதான் காரணமென்றுலும், அது பொதுத் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கி நின்றது. ஆட்சிப் பீடத்தில் ஏறுவதற்கென்றே பிறந்த ஜஸ்டிஸ் கட்சியானது ஒற்றைக் கட்சியாகத் தேர்தலில் புகுந்து பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றியது.

பின்னர் திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியார் என்பவா முதலமைச்சராகவும், பனகல் அரசர் பி. ராமராய நிங்கார், கே. வெங்கடரெட்டி நாயுடு ஆகிய இருவரும் அமைச்சர்களாகவும் பதவி ஏற்றனர். இந்த அமைச்சரவையில் தமிழர் ஒருவர்கூட இடம்பெறவில்லை.

முதல்வரான ஏழே திங்களில் முதலமைச்சர் திரு. சுப்பராயலு ரெட்டியார் நோய் காரணமாக பதவி விலகியதால் இரண்டாவது அமைச்சரான பனகல் அரசர் முதல் மந்திரியானுர். இதனுல் காலியான ஒரு இடத்திற்கு ஆந்திரரான திரு. ஏ. பி. பாத்ரோ நியமிக்கப் பெற்றுர். தொடர்ந்து தமிழர் புறக்கணிக்கப்பட்டனர்.

1923–ல் மாநில சட்ட மன்றத்திற்கு இரண்டாவது பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதிலேயும் காங்கிரஸ் கட்சி கலந்து கொள்ளாததால் ஜஸ்டிஸ் கட்சிக்கே வெற்றி கிடைத்தது. பொதுத் தேர்தலுக்குப் பின் பனகல் அரசரே திரும்பவும் முதலமைச்சரானுர், திரு. டி. என். சிவஞானம் பிள்ளை என்ற ஓய்வு பெற்ற அதிகாரி அமைச்சரானுர்.

ஜஸ்டிஸ் கட்சியில் முன்னணியிலிருந்த தமிழர்களில் ஒருவருக்குத் தராமல் துணைக் கலெக்டராக இருந்த ஓய்வு பெற்ற தமிழர் ஒருவருக்குக் தந்தது குறித்து ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்களிடையே குமுறல் இருந்தது.

1926-ல் மாநில சட்டமன்றத்திற்கு நடந்த மூன்றாவது பொதுத் தேர்தலிலே காங்கிரஸ் கட்சியின் பார்லிமெண்டரி கிளையாக விளங்கிய சுயராஜ்யக் கட்சி போட்டியிட்டது. ஆனால், அதற்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இந்த முறையும் ஜஸ்டிஸ் கட்சி முழு மூச்சுடன் போட்டியிட்ட தென்றாலும், அதற்கு முன்போலப் பெரும்பான்மை கிடைக்க வில்லை. இந்த இரு கட்சிகளிலே எந்த ஒன்றும் சுயேச்சைகளை இழுத்துக் கொண்டு கூட்டு அமைச்சரவை அமைக்க விரும்ப வில்லை. இந்தக் குழப்ப நிலையைப் பயன்படுத்திக் கொண்டு டாக்டர் சுப்பராயன் முதல் மந்திரி பொறுப்பை ஏற்க முன் வந்தார். அதற்காக ஒரு இரவிலே நீதிக் கட்சியிலிருந்து வெளியேறி சுயேச்சையாளரானார்.

"சென்னை மாகாண அரசியலிலே முதன் முதலாகக் கட்சி மாறியவர் டாக்டர் ப. சுப்பராயன்தான்" என்கிறார் பி. டி. ராசன்.

ஏ. அரங்கநாத முதலியார், ஆர். ஏ. ஆரோக்கியசாமி முதலியார் என்ற இருவரைச் சுயராஜ்யக் கட்சியிலிருந்து இழுத்துக் கொண்டு, அவர்களை அமைச்சர்களாக்கி டாக்டர் சுப்பராயன் ஆட்சி நடத்தினார். இந்த சுயேச்சையாளர் அமைச்சரவைக்குப் பக்கபலமாக இருந்தது சுயராஜ்யக் கட்சி. எதிர்க் கட்சியாகச் செயல்பட்டது ஜஸ்டிஸ் கட்சி.

பதினைந்து மாதங்களுக்குப் பிறகு சுயராஜ்யக் கட்சியின் விருப்பத்திற்கு மாறாக முதலமைச்சர் டாக்டர் சுப்பராயன் சைமன் கமிஷனை வரவேற்றார். அதனால் அவருடைய சக அமைச்சர்கள் இருவரும் அவருடன் கருத்து வேற்றுமை கொண்டு பதவி விலகினர். சுயராஜ்யக் கட்சி தனது ஒத்துழைப்பை வாபஸ் பெற்றது. ஆனால், டாக்டர்

சுப்பராயன் ஆட்சி கவிழவில்லை. ஜஸ்டிஸ் கட்சியின் ஆதர வாளர்களான திரு. என். ஆர். சேதுரத்தினம் அய்யர், திரு. எஸ். முத்தையா முதலியார் ஆகிய இருவரையும் அமைச்சர் களாக்கி ஆட்சியில் சுப்பராயன் நீடித்தார். அமைச்சரவை சுயேச்சையாகவே செயல்பட்டது. ஜஸ்டிஸ் கட்சியின் தார்மிக ஆதரவு அதற்கு இருந்தது.

1930-ல் தமிழரான டாக்டர் சுப்பராயனின் அமைச்ச ரவை கவிழ்ந்தது. ஆந்திரரான சித்தூர் வி. முனுசாமி நாயுடு முதலமைச்சரானுர். திரு. பி. டி. ராசன், திரு எஸ். குமாரசாமி ரெட்டியார் ஆகிய இருவரும் அமைச்சர் களாயினர். இது, அப்பட்டமான ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி.

1932-ல் திரும்பவும் அமைச்சரவை மாறியது. சுத்த ஆந்திரரான பொப்பிலி அரசர் முதலமைச்சரானுர். சர். பி. டி. ராசன், திரு. எஸ். குமாரசாமி ரெட்டி ஆகியோர் அமைச்சர் பதவியில் நீடித்தனர். பொப்பிலி அரசரின் ஆட்சி 1936 வரை நீடித்தது.

1937-ல் நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அதிகார பூர்வமாகக் கலந்து கொண்டு மகத்தான வெற்றியைக் கண்டது. ஜஸ்டிஸ் கட்சி படுதோல்வி அடைந்தது. ஆனுல், கவர்னருக்குள்ள ரத்து அதிகாரத்தை ஆட்சேபித்து ஆட்சிப் பொறுப்பை ஏற்க காங்கிரஸ் மறுத்த தால், ஆந்திரரான சர். கூர்ம வெங்கட ரெட்டி நாயுடு என்பவர் தலைமையில் ‘‘இடைக்கால மந்திரி சபை’’ ஏற் பட்டது. இதனை, ‘‘அற்பாயுள் அமைச்சரவை’’ என்று அழைத்தனர் காங்கிரஸ்காரர்கள்.

ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியிலே ஆந்திரர்களே அடுத் தடுத்து முதலமைச்சர்களாயினர். இருமுறை சர் பி. டி. ராசன் முதலமைச்சராக வரமுயன்றும் முடியவில்லை.

நான்கு மொழியினர் கலந்த மாநிலத்திலே ஆந்திரர் தலைமையின் கீழேயே ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி நடத்தியது.

தமிழரான டாக்டர் சுப்பராயன் தலைமையில் இயங்கிய தமிழர் ஆட்சியைக் கவிழ்த்த 'பெருமை' ஜஸ்டிஸ் கட்சிக்கு உண்டு. ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியிலே முதல்வர்களாக வந்த ஆந்திரர்களின் பெயர்களைப் பட்டியல் தொகுத்துப் பார்ப்போம்.

திரு. ஏ. சுப்பராயலு ரெட்டி
(7-12-20 முதல் 11-7-21 வரை)

பனகல் அரசர்
(19.12.23 முதல் 31.2.26 வரை)

திரு. பி. முனுசாமி நாயுடு
(27.10.30 முதல் 4.11.32 வரை)

பொப்பிலி அரசர்
(5.11.32 முதல் 1.4.37 வரை)

சர். கூர்ம வெங்கட ரெட்டி நாயுடு
(1.4.37 முதல் 14.7.37 வரை)

1916-ல் ஜஸ்டிஸ் கட்சி தோன்றியதிலிருந்து 1936ல் அந்தக் கட்சியின் ஆட்சி அஸ்தமித்தது வரையுள்ள 17 ஆண்டு காலத்திலே சுத்தத் தமிழர் எவரும் அந்தக் கட்சியின் தலைவர் பீடத்தில் ஏறியதில்லை. அது சட்ட மன்றத்தில் எதிர்க் கட்சியாக இருந்தபோதும் அதன் தலைமை ஆந்திரரிடமே இருந்தது.

பிராமணர் ஆதிக்கத்திலிருந்து பிராமணரல்லாதாரைக் காப்பதற்குப் பிறந்த ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியிலே அரிசனர் எவரும் அமைச்சராக்கப்படவில்லை யென்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும். திரு. இரட்டைமலை சீனிவாசன், திரு. எம். சி. ராசா, திரு. வி. ஐ. முனுசாமிப் பிள்ளை, திரு. தர்மலிங்கம் பிள்ளை, திரு. என். சிவராஜ் ஆகிய பட்டதாரிகளான அரிசனத் தலைவர்கள் ஜஸ்டிஸ் கட்சியில் முன்னணியில் இருந்தனர். அவர்களில் ஒருவரை அமைச்ச

ராக்கியிருக்கலாம். ஆனால், அப்படி ஒரு நீதியை அரிசன மக்களுக்கு வழங்கவில்லை 'நீதி'க் கட்சி. பிராமணர் ஆதிக்கத்தை அழிக்கப் பிறந்த நீதிக் கட்சியின் ஆதரவோடு திரு. என். ஆர். சேதுரத்தினம் அய்யர் கூட அமைச்சராக முடிந்தது. ஒரு அரிசனருக்கு அந்தப் பேறு கிடைக்கவில்லை.

மூன்றரை மாத காலமே பிழைத்திருந்த இடைக்கால ஆட்சியில்தான் திரு எம். சி. ராசா என்ற அரிசனர் அமைச்சர் பதவியைப் பெற்றார். அது ஆங்கிலேய கவர்னர் தயவால் நிகழ்ந்த அற்புதமாகும்.

1937–ல் அமைந்த காங்கிரஸ் ஆட்சியின்போதுதான் தமிழகத்தைத் தன்னுள் கொண்ட சென்னை மாநிலம் ஒரு தமிழரை முதல்வராகப் பெறும் பேற்றினை அடைந்தது. ஆம்; காங்கிரஸ் ஆட்சியிலே தமிழரான ராஜாஜி முதல்வர் பதவிக்கு போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். அகில இந்திய காங்கிரசில் அவருக்கிருந்த செல்வாக்கு காரண மாகத்தான் ஆந்திர காங்கிரஸ்காரர்கள் அவருக்கு வழி விட்டனர்.

1946–ல் காங்கிரஸ் ஆட்சி திரும்பவும் தோன்றியபோது முதலமைச்சர் பதவிக்குச் சட்டமன்ற காங்கிரஸ் கட்சியிலே திரு. டி. பிரகாசத்திற்கும் திரு சி. என். முத்துரங்க முதலியாருக்கும் போட்டி ஏற்பட்டது. திரு. பிரகாசம் வெற்றி பெற்றார்; திரு. முதலியார் தோல்வியுற்றார்.

சட்டமன்ற காங்கிரஸ் கட்சியில் தமிழ்நாட்டு எம். எல். ஏ.க்களும் எம். எல்.சிக்களுமே மிகுதியாக இருந்தனர். அவர்க ளெல்லாம் வாக்களித்திருந்தால் 1946-ல் திரு. சி. என். முத்து ரங்க முதலியார் முதல்வராகியிருப்பார். ஆனால், தமிழ் நாடு காங்கிரசைச் சார்ந்த இரு மொழியாளரான எம். எல். ஏ.க் களும், எம். எல்.சிக்களும் இரகசிய வாக்கெடுப்பிலே திரு. பிரகாசத்துக்கு வாக்களித்தனர். அதனாற்றான் அவர் வெற்றி பெற முடிந்தது.

மற்ருெரு முறை கொங்கு நாட்டுத் தமிழரான டாக்டர் ப. சுப்பராயன் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிட்டுப் படுதோல்வி கண்டார். பின்னர், ஆந்திரர்களுடைய போட்டியை முறியடித்து சுத்தத் தமிழர் ஒருவரை முதல்வராகக் கொண்டுவர முடியாது என்பதையுணர்ந்து திரு கு. காமராசர் 'புது வழி' கண்டார்.

திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார், திரு. பி. எஸ். குமாரசாமி ராசா ஆகிய தமிழ் நாட்டைச் சேர்ந்த தெலுங்கர் இருவரை அடுத்தடுத்து முதல்வர் பதவிக்கு நிற்க வைத்து 'வெற்றி' கண்டார். ஆம்; தமிழ் நாடு காங்கிரசைச் சேர்ந்த தெலுங்கர்களான எம். எல். ஏ க்களும், எம். எல்.சிக் களும் ரெட்டியாருக்கும் ராஜாவுக்கும் ஒழுங்காக ஓட்டுப் போட்டார்கள்.

1952–ல் தமிழரான ராஜாஜி அப்போதைய சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக வந்தார். 1952–ம் ஆண்டு பொதுத் தேர்தலிலே ஆந்திராவில் காங்கிரஸ் கட்சிக்குப் படுதோல்வி ஏற்பட்டது. சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியிலே ஆந்திரர்களின் எண்ணிக்கை மூன்றிலொரு பங்கிற்கும் குறைவாக இருந்தது. அதனுற்ருன் ராஜாஜி முதல்வராக வருவதைத் தடுக்க ஆந்திர காங்கிரசார் சக்தியற்றவராக இருந்தனர்.

அப்போதும் ராஜாஜி ஆட்சிக்கு ஆந்திரர் கொடுத்த தொல்லைகள் கொஞ்சமல்ல; தமிழ்நாடு காங்கிரசும் ராஜாஜிக்குத் தொல்லை கொடுத்த தென்ருலும், இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. தமிழ் நாடு காங்கிரஸ் தொல்லை கொடுத்ததற்குக் காரணம் பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற சாதிப் பிரச்னை. ஆந்திர காங்கிரஸ் தொல்லை கொடுத்ததற்குக் காரணம் தமிழர்—ஆந்திரர் என்ற இனப் பிரச்னை.

''அரவ ராஜாஜி சாவால; ஆந்திர ராஜ்யம் காவால'' என்று பொட்டி ஸ்ரீராமுலு பட்டினி கிடந்து செத்தபோது

ஆந்திராவிலே கோஷம் எழுந்தது.1953-ல் ஆந்திரம் பிரிந்து போன பின்னர், தமிழரான ராஜாஜியின் ஆட்சிக் கெதிராக இனப்பிரச்சினை இல்லை. ஆனால், சாதிப் பிரச்சினை 1954-ல் அவரது ஆட்சியைக் கவிழ்த்து விட்டது.

ஆந்திரம் பிரிந்து போனதன் விளைவாகத்தான் தமிழரான திரு. காமராசர் முதல்வர் பதவிக்கு வருவது பற்றி நினைக்க முடிந்தது; வரவும் முடிந்தது. அந்தப் பதவியிலே ஒன்பது ஆண்டுக் காலம் நிலைத்திருக்கவும் முடிந்தது. ஆம்; ஆந்திர மாநிலமும் தமிழ் மாநிலமும் ஒன்றாக இணைக்கப்பட்டு இருந்த ஆட்சியிலே தமிழர் தலைமை பெற முடியவில்லை. தமிழர்களிடையே கலந்திருந்த இரு மொழியினர் தாங்களும் தமிழர்தான் என்ற நினைப்பிலே ஊன்றி நிற்கவில்லை. மாநில முதலமைச்சர் பதவிக்காக அசல் ஆந்திரருக்கும் அப்பட்ட தமிழருக்குமிடையில் போட்டி நடந்தபோதெல்லாம் இரு மொழியாளர்—குறிப்பாக, தமிழ் நாடு காங்கிரசைச் சேர்ந்த தெலுங்கு மொழியாளர் ஆந்திரருக்கும் தமிழருக்குமாக ஊசலாட்டம் போட்டனர். தமிழரசுக் கழகத்தின் உழைப் பால் தமிழ்மொழி வழங்கும் பிரதேசம் தனி அரசு மாநிலம் ஆன பின்னர்தான்,

திரு. கு. காமராசர்,
திரு. மீ. பக்தவத்சலனார்,
அறிஞர் சி. என். அண்ணாதுரை,
கலைஞர் மு. கருணாநிதி

ஆகிய சுத்தத் தமிழர்கள் அடுத்தடுத்து முதல்வராக வர முடிந்திருக்கிறது.

தமிழக அரசியலிலே தொடர்ந்து பதினாறு ஆண்டுகாலம் ஜஸ்டிஸ் சார்பிலே ஆந்திர இனத்தார் ஆதிக்கம் செலுத்திய போது தமிழர்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை இனி கவனிப் போம்.

சட்ட மன்றத் தேர்தல்

1920–ல் நடைமுறைக்கு வந்த மாண்டேகு–செம்ஸ் போர்டு சீர்திருத்தப்படி ஓரளவு மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட லெஜிஸ்லேடிவ் கவுன்சில் சென்னை மாநிலத்தில் அமைந்தது. அதன் முதல் தலைவராக சர். பி. இராசகோபாலாச்சாரியார் என்ற தமிழ் நாட்டு அந்தணர் நியமிக்கப் பெற்றார்.

1920-லேயே ஆந்திரரை முதன் மந்திரியாகக் கொண்டு ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சி தோன்றிவிட்ட தென்றாலும், லெஜிஸ்லேடிவ் கவுன்சில் என்ற பெயர் கொண்ட சட்ட மன்றத்தின் முதல் தலைவர் மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெறவில்லை; ஆளுநரால் நியமிக்கப்பெற்றார். அதனால், தமிழர் ஒருவர் ஆந்திரர் போட்டியின்றி தலைவராக வர முடிந்தது ஆங்கிலேயர் தயவால், திரு. ஆச்சாரியார் மூன்றாண்டுகாலம் தலைவர் பதவியில் நீடித்தார்.

1923-ல்அமைந்த இரண்டாவது கவுன்சிலுக்கும் முதல் ஓராண்டுக் காலம் திரு. இராசகோபாலச்சாரியாரே தலைவராக இருந்தார். பின்னர், 1924–ல் கவுன்சில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு கிறித்துவத் தமிழரான திரு எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளை தலைவரானார். தமிழர்

ஒருவருக்குக் கிடைத்த இந்த வாழ்வு ஓராண்டுக்கு மேல் நீடிக்கவில்லை. 1925-ல் திரு. பிள்ளை காலமானார்.

அவருக்குப் பின் மற்றொரு கிறித்துவத் தமிழரான திரு. எம். இரத்தினசாமி தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஆனால், 1926-ல் சட்ட மன்றத்திற்கு நடந்த பொதுத் தேர்தலிலே இவர் தோற்று விட்டதால், மூன்றாவது கவுன்சிலுக்குத் திரு. சி. வி. எஸ். நரசிம்ம ராசு என்ற ஆந்திரர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தொடர்ந்து நான்காண்டு காலம் பதவி வகித்தார்.

1930-ல் கவுன்சில் தலைவர் பதவிக்கு நடைபெற்ற தேர்தலில் திரு. பி. இராமச்சந்திர ரெட்டி தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவர், 1937 வரை பதவி வகித்தார். இவரும் ஆந்திரரே.

ஜஸ்டிஸ் கட்சியானது ஆந்திரரின் செல்வாக்கில் சிக்கியிருந்தமையால் தமிழ்நாட்டளவில் கூட தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர் தலையெடுக்க இயலாத நிலை இருந்தது. ஒவ்வொரு துறையிலும் தமிழரல்லாதாரின் போட்டியைச் சமாளித்துத்தான் தமிழர் முன்னேற வேண்டியிருந்தது.

1920 லேயே இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் மாகாணக் கிளைகள் மொழிவாரி திருத்தியமைக்கப்பட்டு விட்டன. நாகபுரியில் திரு. சி. விசயராகவாச்சாரியார் தலைமையில் கூடிய காங்கிரஸ் மகாசபையிலே மாகாணக் கமிட்டிகளை மொழி அடிப்படையில் திருத்தியமைக்க வேண்டுமென்ற தீர்மானத்தைத் திலகர் முன்மொழிந்தார். காந்தியடிகள் வழிமொழிந்தார். மொழிவாரி இனங்களின் வளர்ச்சிக்கு வழிவகுப்பதிலே அந் நாளில் அகில இந்திய காங்கிரஸ் மகாசபை மிகுந்த அக்கரை காட்டியது.

நாகபுரி தீர்மானத்தின் விளைவாக அப்போதிருந்த சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டியானது மொழி

அடிப்படையில் திருத்தியமைக்கப் பெற்றது. தமிழ் நாட்டிற்குத் தனி மாகாண காங்கிரஸ் கமிட்டியும், ஆந்திரத்திற்கெனத் தனி மாகாண காங்கிரஸ் கமிட்டியும் அமைக்கப்பட்டன. இதனுல், காங்கிரசைப் பொறுத்தவரையில் ஆந்திரர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாக செயல்படுவதற்குத் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. காங்கிரஸ் காட்டிய இந்த நல் வழியைப் பின்பற்ற ஜஸ்டிஸ் கட்சி தவறிவிட்டது.

1916ல் ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய தென்பதனை ஏற்கனவே அறிந்தோம். அப்போதிருந்த—தமிழ், தெலுங்கு, மலையாள, கன்னட மொழிகள் வழங்குகின்ற—நான்கு மொழிப் பிரதேசங்கள் கொண்ட சென்னை ராஜ்யம் முழுவதற்குமாகத்தான் ஜஸ்டிஸ் கட்சி அமைக்கப் பெற்றது. தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத மலையாளியான டாக்டர் டி. எம். நாயரும், தமிழ் நாட்டுத் தெலுங்கரான சர். பி. டி. தியாகராய செட்டியாருந்தான் அந்தக் கட்சியை அமைத்தனரென்பதையும் முன்னரே அறிந்தோம். இதனுல், தமிழ் நாட்டளவிலும் ஜஸ்டிஸ் கட்சியிலே தமிழரல்லாதாரே—குறிப்பாக, தெலுங்கு பேசுவோரே செல்வாக்குப் பெறலாயினர்.

காங்கிரசைப் பின்பற்றி மொழிவாரி மாகாணக் கிளைகளை அமைக்க—குறிப்பாக, தமிழ்நாட்டுக்கெனத் தனியாக மாகாணக் கிளையொன்றை அமைக்க ஜஸ்டிஸ் கட்சியிலிருந்த தமிழர்கள் முயற்சித்ததாகத் தெரியவில்லை. 1937ல் நடந்த பொதுத்தேர்தலில் படுதோல்வியடையும் வரை அந்தக் கட்சியானது அப்போதைய சென்னை ராஜ்யம் முழுவதற்குமான அமைப்பாகவே இயங்கியது. ஆகவே, தமிழ்நாட்டளவில் கூட ஆந்திரர் செல்வாக்கிலிருந்து விடுபட்டு செயல்புரிய ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்களுக்கு வாய்ப்பிருக்கவில்லை. கட்சியின் மேலிடத் தலைமையில் ஆந்திரரே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வந்ததால் தமிழ் நாட்டிலுள்ள தெலுங்கர் ஆந்திரரின் ஆதரவோடும் தமிழைத் தாய் மொழியாகக்

கொண்ட தமிழர்களை விடவும் எல்லாத் துறையிலும் முன்னேறிக்கொண்டு வந்தனர்.

அந்நாளில் தமிழ்நாட்டில் இயங்கி வந்த ஜில்லா போர்டு களிலும், தாலுக்கா போர்டுகளிலும் தெலுங்கு பேசுவோரே அதிக அளவில் அடுத்தடுத்துத் தலைவர்களாக வந்தனர்.

லெஜிஸ்லேடிவ் கவுன்சில் உறுப்பினர்களாகவும் தங்கள் சதவிகிதத்திற்கு அதிகமாகவே தெலுங்கர்கள் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கமாக இருந்து வந்தது.

1919ல் வழங்கப்பட்ட மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர் திருத்தத்தின் விளைவாக சொத்து படைத்தோர் வாக்குரிமை பெற்றனர். கவுன்சில் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 132. முஸ்லிம்களுக்கெனவும், கிறித்தவர்க்கென வும் தனித் தொகுதிகள் அமைக்கப் பெற்றன. அந்தத் தொகுதிகளில் அந்தந்த வகுப்பார் மட்டுமே வாக்களித்து தங்கள் வகுப்புகளைச் சார்ந்தவர்களையே தேர்ந்தெடுத்து அனுப்ப உரிமை பெற்றிருந்தனர்.

மற்றும், நிலச்சுவான்தார்களுக்கெனவும், தோட்ட முதலாளிகளுக்கெனவும் தனித் தொகுதிகள் இருந்தன. அந் நாளில் தோட்ட முதலாளிகளில் பெரும்பாலோர் ஆங்கிலேய ராகவே இருந்தனர். அதனுல், தோட்ட முதலாளிகளுக்கென இருந்த தனித் தொகுதிகளிலே தமிழே அறியாத—தமிழரே அல்லாத ஆங்கிலேயர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்ற னர். வர்த்தகத் தொகுதிகளிலும் தமிழரல்லாதாரே தேர்ந் தெடுக்கப்பட்டனர். முஸ்லிம்களுக்கென ஒதுக்கப்பட்ட தனித் தொகுதிகளிலே பெரும்பாலானவற்றில் உருது முஸ்லிம்களே தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கமாக இருந்தது.

லெஜிஸ்லேடிவ் கவுன்சிலுக்குரிய 33 பொதுத் தொகுதி களில் 1920-ல் நடைபெற்ற பொதுத் தேர்தலிலே தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத பிறமொழியினர் 11 பேர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். ஆம்; மூன்றிலொரு பங்கினர்!

1923லும், 1926லும் சென்னை மாகாண லெஜிஸ்லேடிவ் கவுன்சிலுக்கு நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலேயும் தமிழ் நாட்டிற்குரிய 33 பொதுத் தொகுதிகளிலே மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாகவே தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இவர்களெல்லாம் தமிழ்நாட்டில் முன் எப்போதோ குடியேறியவர்களின் வாரிசுகள் தமிழ் நாட்டையே தங்கள் நிரந்தர இருப்பிடமாகக் கொண்டவர்கள் என்றாலும், தமிழகத்தின் மொத்த மக்கள் தொகையில் இவர்களுக்குரிய சத விகிதத்திற்கும் அதிகமாக சட்ட மன்றத்திலே இடம் பெற்றனர் என்பதனைத்தான் நான் இங்கு எடுத்துக் காட்டுகிறேன்.

உத்தியோகங்கள் இந்திய மயமாக்கப்படத் தொடங்கியதன் விளைவாக பிராமணர்கள் தங்கள் சத விகிதத்திற்கும் அதிகமாக உத்தியோகங்களைப் பெற்று வந்ததனை எதிர்க்கத்தான் ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது. அந்தந்த சாதிகளின் மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப உத்தியோகங்கள் வழங்கப்படுவதற்காகத்தான் வகுப்புவாரி விகிதாச்சாரம் என்னும் திட்டத்தைச் சட்டமாக்கியது ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி. பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்கு மிடையே நிலைநாட்டப் பெற்ற இந்த விகிதாசார நீதியை தமிழருக்கும் மொழிவழி சிறுபான்மையினருக்கு மிடையேயும் தமிழக அளவில் நிலைநாட்டவில்லையென்பதை எடுத்துக் காட்டுவது குற்றமாகாதல்லவா!

பிராமணரல்லாதார் என்ற வகுப்புவாதப் போர்க்களத்தில் பிறந்த பிறப்புவழி சாதி உணர்ச்சியின் காரணமாகத் தமிழர் என்னும் மொழிவழி இன உணர்ச்சி தமிழ் நாட்டில் மங்கி மங்கி வந்து, கடைசியில் மறைந்தே போய் விட்டது. ஆனால், ஆந்திரர், கன்னடர், மலையாளிகள் ஆகியோர் தங்கள் இன உணர்ச்சியை இழந்து விடவில்லை. பிராமணரல்லாதார் என்னும் வகுப்பு உணர்ச்சியினும் ஆந்திரர் — கேரளர் — கன்னடர் என்னும் இனவுணர்ச்சியே அவர்களிடத்தில் மேலோங்கி நின்றது.

ஆந்திரத்திலே தெலுங்கைத் தாய்மொழியாகக் கொள்ளாத தமிழரோ, கன்னடரோ, மலேயாளியோ ஒருவர் கூட சென்னை மாகாண சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் மட்டும் பொதுத் தொகுதிகளிலே மூன்றில் ஒரு பங்கினராக பிற மொழியினர் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். பிராமணர் அல்லாதார் இயக்கத்தால் தமிழர் அடைந்த அவலம் இது.

சென்னை நகரில் பிறமொழியினர்

சென்னை நகரில்தான் பிறமொழியினர் ஆதிக்கம் தலை தூக்கி நின்றது. இதற்கான காரணங்கள் பலவாகும். பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியார் வருவதற்கு முன்பு சென்னையானது மீனவரும் தாழ்த்தப்பட்டோரும் வாழும் சின்னஞ்சிறு கிராமமாகத்தான் இருந்தது. அந்த நிலையி லிருந்து தமிழகம், ஆந்திரம், கன்னடம், மலையாளம் ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்கள் கலந்த ராஜ்யத்தின் தலை நகராக சென்னையை பிரிட்டிஷார் மாற்றினர். இதனுல், தமிழரேயன்றி, ஆந்திரர்—கன்னடர்-மலையாளிகள் ஆகி யோரும் உத்தியோகம், வாணிபம் காரணமாக சென்னை நகரில் அணியணியாகக் குடியேறுவது சாத்தியமானது.

மாகாணத் தலைநகராவதற்கு முன்பே சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள திருமயிலை, திருவல்லிக் கேணி, திருவொற்றியூர், திருவான்மியூர் ஆகிய ஊர்களில் புராதனக் கோயில்கள் இருந்து வந்தன. இது காரணமாக வும் சென்னையானது தமிழ் நாட்டின் உட்பிரதேசமாதலா னும் தெலுங்கு-கன்னட-மலையாள மொழியினரைவிடவும் தமிழர் மிகுதியாகக் குடியேறுவதற்கு வாய்ப்பு இருந்தது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தமிழர் மிகுதியாகக் குடியேறினமையால்தான் சென்னை நகரின் மக்கட் தொகை

யில் ஆதிமுதலே தமிழர் மிகுதியாக இருந்து வருகின்றனர். கடந்த முன்னூறு ஆண்டு காலத்தில் சென்னை நகரில் தமிழரை விடவும் தமிழரல்லாதார் மிகுதியாக வாழும் நிலை ஏற்பட்டதேயில்லை. ஆயினும், சென்னை நகருக்கு அருகே ஆந்திரப் பிரதேசம் இருத்தலால், தமிழருக்கு அடுத்தபடியாக ஆந்திரரே சற்று கணிசமான எண்ணிக்கையில் குடியேறுவது சாத்தியமானது. சென்னை மாகாணத்தின் பகுதிகளாக இருந்த மலபார் மாவட்டமும் தென் கன்னடமும் சென்னைக்கு நெடுந் தொலைவில் இருத்தலால், அந்தப் பிரதேசங்களின் எளிய மக்கள் அதிக அளவில் சென்னையில் குடியேற இயலவில்லை.

சென்னையானது தமிழகத்தின் உட்பிரதேசமாகவும் தமிழர் மிகுதியாக வாழும் பகுதியாகவும் இருந்த தென்றாலும், கம்பெனி ஆட்சிக் காலத்திலே ஆங்கிலமே கல்வி மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருந்ததால் ஆந்திரர் — கன்னடர் — மலையாளிகள் ஆகியோரில் வசதி படைத்தவர்கள் ஆங்கிலத்தைக் கற்று, சென்னையிலே உத்தியோகம் புரிவதும், வாணிபம் செய்வதும், அரசியல் வாழ்வு நடத்துவதும் எளிதாக இருந்தது. தமிழருடைய விருந்தோம்பும் பண்பும் வந்தேறிகள் சென்னையில் நிலை பெறுவதற்கு வாய்ப்பாக இருந்தது எனலாம்.

எப்பொழுதுமே ஒரு பிரதேசத்திலிருந்து வெளியேறி மொழி வேறுபாடுடைய இன்னொரு பிரதேசத்தில் குடியேறுவோர் சிறுபான்மை உணர்வு காரணமாகத் தங்களிடையே கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது சாத்தியமாகிறது. இந்துக்கள் பெரும்பான்மையோராகவுள்ள இடங்களிலே சிறுபான்மையினராகவுள்ள முஸ்லிம்கள் கட்டுப்பாடாக ஒருமைப்பாட்டுடன் வாழ்க்கை நடத்துவதைக் காண்கின்றோமல்லவா!

அப்படியே, சென்னை நகரில் பெரும்பான்மையினரான தமிழர் மத்தியில் குடியமர்ந்து வாழத்தொடங்கிய தெலுங்கு மொழியினரான சிறுபான்மையினரும் ஆந்திரர் என்ற

இனவுணர்வோடு கட்டுப்பாடாக வாழக்கை நடத்தி எல்லாத் துறைகளிலும் முன்னேற ஆதிமுதலே முடிந்து வந்திருக் கிறது. பெரும்பான்மையினரான தமிழருக்கு அத்தகைய பாதுகாப்பு உணர்வு தேவைப்படாததால் அவர்களிடையே இனரீதியான ஒருமைப்பாடும் கட்டுப்பாடும் இருக்கவில்லை.

தமிழ் நாட்டு வணிகச் சமூகத்தினரான நாட்டுக் கோட்டை செட்டிமார்கள் ஆதிமுதலே கடலோடிகளாகத் தான் இருந்து வந்துள்ளனர். பிரிட்டிஷார் தமிழகத்தில் புகுந்து, சென்னையிலே கோட்டை கட்டிக்கொண்டு இங்கு வாணிபம் நடத்தத் தொடங்கிய பின்னரும் தமிழ் நாட்டுச் செட்டிமார்கள் கடல் கடந்த நாடுகளில் தங்கிப் பொருளீட்டு வதைக் கைவிடவில்லை. இதனுல், பிரிட்டிஷ் ஆட்சியானது சென்னையை ஒரு பெரிய ராஜ்யத்தின் தலைநகராக்கியபோது, இந்த நகரத்தில் புதிது புதிதாக வணிக நிறுவனங்களும்' தொழிற்சாலைகளும் வைப்பதற்கு தமிழ் வணிகர் எவரும் முன்வராத நிலை இருந்திருக்க வேண்டும். தமிழரிடமிருந்த இந்தக் குறைபாட்டைப் பயன்படுத்திக்கொண்டு ஆந்திர நாட்டு செல்வந்தர்கள் சென்னை நகரில் வாணிபத்தையும் தொழிலையும் தொடங்கினர்போலும்!

வர்த்தக, தொழில் துறைகளில் சென்னையில் ஆங்கிலேயர் மிகுதியாக ஆதிக்கம் பெற்றன ரென்ருலும், அவர்களுக்கு அடுத்த நிலையில்கூடத் தமிழர் இருக்கவில்லை; ஆந்திரரே இருந்தனர். ஆந்திரராலும் கைப்பற்ற முடியாமற்போன துறைகளை அவர்களைப் போலவே வந்தேறிகளான குஜராத்தி யரும் மார்வாரியரும் கைப்பற்றினர்.

அப்போது சென்னையில் ஆட்சி நடத்திய அன்னியர் தமிழ் நாட்டில் எல்லாத் துறைகளிலும் முதலிடம் பெற தமிழையே அனுமதிக்க வேண்டுமென்ற நியாயத் திற்குத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளாதவர்களாக இருந்தனர். இது இயற்கை. அவர்களே இங்கு உரிமையற்ற நிலையில் ஆதிக்கம் பெற்றவர்களாதலால், வந்தேறிகளான

ஆந்திர—மார்வாரி—குஜராத்திகளேயும் அவர்கள் பங்காளி களாகக் கொண்டது இயற்கைதானே! பர்மா, இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் தமிழ்நாட்டு வணிகர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் ஆதிக்கம் பெற்றதும் இப்படித் தானே! எந்த நாட்டிலுமே ஆதிக்கஞ் செலுத்தப் புகும் பரதேசிகள் அந்த நாட்டிலுள்ள சுதேசிகளே நம்புவதில்லே; தங்களேப் போன்ற பரதேசிகளேயே நம்புவர். பிரிட்டிஷார் புகுந்த எல்லா நாடுகளிலும் இப்படித்தான் அவர்கள் நடந்து கொண்டுள்ளனர்.

பிரிட்டிஷார் தமிழ் நாட்டில் புகுந்த பதினேழாம் நூற்ருண்டு தொடங்கித்தான் விஞ்ஞான ரீதியான தொழில் துறைகளும் வாணிபத்துறைகளும் உலகில் தோன்றலாயின. அதனுல் அந்தப் புதிய துறைகளிலே சென்னே நகரில் புகுந்த ஆங்கிலேயரும் பிறமொழியினரும் பரஸ்பரக் கூட்டுறவின் பேரில் ஆதிக்கம் பெறுவது சாத்தியமானது.

சென்னே நகரில் தொழில்—வாணிபத் துறைகளில் ஆங்கிலேயர் தயவால் ஆந்திரருக்கு ஏற்பட்ட செல்வாக்கு நாளடைவில் தமிழ் நாட்டின் உட்பிரதேசங்களுக்கும் விரிவடையலானது. புதிதாகத் தோன்றிய பஞ்சாலேத் தொழிலிலே தமிழ்நாடு முழுவதிலும் ஆங்கிலேயருக்கு அடுத்தபடியாக முதன் முதலில் ஆதிக்கம் பெற்றவர்கள் ஆந்திரர்களே! கொஞ்சம் தாமதப்பட்டே தமிழர் அத்துறை யில் ஈடுபட்டனர் எனலாம்.

சென்னே நகரில் தங்கம் வெள்ளிக் கடைகளேயும் துணிக் கடைகளேயும் முதலில் நிறுவியவர்கள் ஆந்திரர்களே. அவர்களே யடுத்து வட இந்தியர் அத்துறையில் புகுந்தனர். இவற்றிலும் தமிழர் தாமதித்தே கவனஞ் செலுத்தினர். அவர்கள் பெயரளவில் தங்கம்-வெள்ளி, துணிக்கடைகளே நிறுவினுலும், அவர்களுக்கு பெருவட்டிக்குப் பணம் கடன் கொடுத்தவர்கள் வட இந்தியர்களே ஆவர். அன்று மட்டு மல்ல; இன்றுங் கூடத்தான்! வாணிபத்திலும் தொழில்களி

லும் ஈடுபட்டுள்ள தமிழர்களில் பெரும்பாலோர் வட இந்தியர்களிடம் பெருவட்டிக்குக் கடன் வாங்குவோராகவே இருந்து வருகின்றனர். இதனுல், தாங்கள் ஈடுபட்டுள்ள தொழிலிலும் வாணிபத்திலும் கிடைக்கும் லாபத்தில் பெரும் பகுதியை வடஇந்திய லேவாதேவிக்காரர்களுக்கே வட்டி என்ற பெயரில் கொடுத்து விடுகின்றனர்.

பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தமிழ்நாட்டின் பூர்வகுடி வணிகர்களான செட்டிமார்களில் பலர் தங்கள் மூலதனத்துடன் தமிழ்நாடு திரும்பியபின்னர்ஓரளவு நிலைமை மாறியிருக்கிறது. ஆம்; சினிமா உள்ளிட்டு பல்வேறு தொழில் துறைகளிலே ஈடுபட்டுள்ள தமிழர்களுக்கு வட்டிக்குக் கடன் கொடுப்பதிலே தமிழரல்லாத வடஇந்தியருக்கும் தமிழரான செட்டிமார்களுக்கும் போட்டி ஏற்படலானது.

சென்னை நகருக்கு வணிகர்களாக மட்டுமின்றி தோட்டித் தொழிலாளராகவும், தமிழர் வீடுகளுக்குப் புரோகிதர்களாகவும், அரசு அலுவலர்களாகவும் ஆந்திரர்கள் நாள்தோறும் வருகைதரலாயினர். இந்த ஆக்கிரமிப்பு நாயக்க மன்னர்கள் ஆட்சிக் காலத்திலேயே தொடங்கி விட்டது.

இதன் விளைவாக, நகரில் பெத்து நாய்க்கன் பேட்டை, இராயப்பேட்டை, முத்தியாலுப் பேட்டை போன்ற பல பேட்டைகள் ஆந்திரர் பெயரால் தோன்றலாயின. ஏன், ராஜ்யத்தின் தலைநகருக்கிருந்த—பின்னர் ராஜ்யத்தின் பெயராகவும் மலர்ந்த—'சென்னை' என்பதும் 'சென்னப்ப நாய்க்கன்' என்ற ஆந்திர மன்னனின் பெயர்தான் என்று கூட ஆந்திரர் சமீப காலத்தில் பெருமிதத்துடன் பேசக் கேட்டோம்.

சென்னை நகருக்கு ஏற்பட்ட கதிதான் பம்பாய் நகருக்கும் ஏற்பட்டது என்பதனை இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆம்; சென்னை நகரைப்போலவே பம்பாய் நகரமும் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்

தில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டதாகும். அதனுல், பம்பாய் நகரம் மகாராஷ்டிரத்தின் உட்பிரதேசமாக இருந்தும், அங்கு வாணிப—தொழில் துறைகளில் அண்டை மாநிலத்தவரான குசராத்தியர் ஆதிக்கம் பெறுவது சாத்தியமானது. மகாராஷ்டிர, குஜராத் மாநிலங்கள் இணைந்த கூட்டு ராஜ்யத்தின் தலைநகராக இருந்ததாலும் பம்பாயில் குஜராத்திரியர் செல்வாக்கு பெறுவது சாத்தியமானது. சென்னை நகரில் தமிழகத்தின் அண்டை மாநிலத்தவரான ஆந்திரர் ஆதிக்கம் பெற்றதற்கு மேலே நான் சொன்ன காரணங்களெல்லாம் பம்பாய் நகரில் அண்டை மாநிலத்தவரான குசராத்தியர் செல்வாக்குப் பெற்றதற்கும் பொருந்துவனவாகும்.

சென்னை, பம்பாய் நகரங்களைப் போல் வங்காளத்தின் உட்பகுதியான கல்கத்தாவும் ஆங்கிலேயரால் புதிதாக படைக்கப்பட்ட நகரந்தான். ஒரிசா, அஸ்ஸாம், பீகார் பிரதேசங்களும் இணைந்த ராஜ்யத்தின் தலைநகராக அது இருந்தது. ஆயினும், சென்னைக்கும் பம்பாய்க்கும் ஏற்பட்ட ''விபத்து'' கல்கத்தா நகருக்கு ஏற்படவில்லை. ஆம்; சென்னை நகரிலே ஆந்திரரும், பம்பாய் நகரிலே குசராத்தியரும் தொழில்-வாணிப-உத்தியோகத் துறைகளிலே ஆதிக்கம் பெற்றதுபோல, கல்கத்தா நகரிலே வங்காளியரல்லாத பிற இனத்தார் (அஸ்ஸாமியர் – பீகாரியர்-ஒரியர்) ஆதிக்கம் பெற்றுவிட முடியவில்லை. ஏனெனில், வங்க மொழி மாநிலத்துடன் ஒப்பிடும்போது, பீகார் — அஸ்ஸாம் — ஒரிசா மொழி மாநிலங்கள் மிகவும் பின்னடைந்த பிரதேசங்களாக விளங்குகின்றன. மற்றும் வங்காளியரின் இன உணர்ச்சிக்கு உலகில் இன்னொரு இனத்தை இணைசொல்லமுடியாதல்லவா! அதனுல், வங்காளத்தின் உட்பகுதியான கல்கத்தா நகரிலே ஆதிக்கம் பெற பீகாரியராலோ, அஸ்ஸாமியராலோ, ஒரியராலோ இயலாத நிலை இருந்தது. ஆகவே, பம்பாயிலும் சென்னையிலும் ஏற்பட்டதுபோல் பிற இனத்தவர் ஆதிக்கம் கல்கத்தாவில் ஏற்படவில்லை.

1919–ல் வழங்கப் பெற்ற மாண்டேகு — செம்ஸ் போர்டு சீர்திருத்தமானது 1920ல் தொடங்கி நடைமுறை யில் இருந்தது. அதன்படித்தான் சென்னை ராஜ்ய சட்ட மன்றத்திற்கு மூன்றூண்டுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தல்களில் காங்கிரஸ் மகாசபை அதி கார பூர்வமாகக் கலந்து கொள்ளவில்லை யென்பதையும் இங்கு மீண்டும் நினைப்பூட்ட வேண்டும். ஜஸ்டிஸ் கட்சியைத் தேர்தல் களத்தில் சந்திக்க தமிழர் சார்பில் வேறு வலுவான கட்சி எதுவும் இல்லாததால், ஆந்திரர் தலைமையில் இயங்கிய ஜஸ்டிஸ் கட்சிக்கே அடுத்தடுத்து வெற்றி கிடைத்து வந்தது. அந்த வெற்றி, ஆந்திர இனத்தின் ஆதிக்கத்திற்குக் கிடைத்த வெற்றியாகவே இருந்து வந்தது.

சென்னை நகரம் முழுவதும் சட்டமன்றத்திற்கு நான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கூட்டுத் தொகுதி யாக இருந்தது. நகர வாக்காளர்களிலே ஒவ்வொருவருக்கும் நான்கு வாக்குகள் இருந்தன. அந்த வாக்காளர்கள் சொத்து வரியோ, வருமான வரியோ செலுத்துவோராக இருந்தனர். இதனல். நகரில் தொழில்—வாணிபம்—உயர் உத்தியோகம் ஆகியவற்றில் செல்வாக்கு பெற்றிருந்த தமிழரல்லாதார் குறிப்பாக, தெலுங்கர்கள் தேர்தல் களத்திலே ''தீர்ப்புச் சக்தி''யாக விளங்கினர்.

1923முதல் 1933வரை சென்னை ராஜ்ய சட்டமன்றத் திற்கு நடந்த ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும், சென்னைத் தொகுதிக் குரிய நான்கு பொது விடங்களுக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டோரில் மூவர் தமிழரல்லாதாராகவும், ஒருவர் தமிழராகவும் இருப்பது வழக்கமாகி வந்தது. அந்த ஒரு தமிழரும் சுய சாதிச் செல்வாக்கால் வெற்றிபெறும் முதலி யாராகவே இருந்து வந்தார். இந்த இடத்தில் சென்னை மாநகராட்சி பற்றியும் விளக்க வேண்டியது அவசியமாகும்.

சென்னை மாநகராட்சித் தலைவர் அல்லது மேயர் பத விக்கு தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத தெலுங்கு

கரே அடிக்கடி தேர்ந்தெடுக்கப்படுவ து வழக்கமாக இருந்தது. காரணம், சென்னை மாநகராட்சி உறுப்பினரிலே தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்கள் ஒரு கணிசமான அளவில் இருந்தனர் என்பதுதான்.

சென்னை ராஜ்யத்தில் தொடர்ந்து 16 ஆண்டு காலம் ஆந்திரர் தலைமையில் இயங்கிய ஜஸ்டிஸ் கட்சியே ஆட்சி செலுத்தி வந்ததால் சென்னை மாநகராட்சியின் கமிஷனர் பதவிக்கு தொடர்ந்து ஆந்திரரே நியமிக்கப்படுவது வழக்க மாக இருந்தது.

சென்னைக்குரிய தனியாட்சியாக விளங்கிய மாநகராட்சி யின் தலைமைப் பதவியையும், உயர் அதிகார(கமிஷனர்)ப் பதவியையும் அடுத்தடுத்து ஆந்திரரே அடைந்து வந்தமை யால், நகரின் பல்வேறு துறைகளிலும் ஆந்திரர் முன்னேறு வதும் தமிழர் பின்தங்கி நிற்பதும் இயற்கையாகிவிட்டது. தமிழரிடம் இனவுணர்ச்சி இல்லாததும் இதற்கு ஒரு காரண மாகும்.

ஆந்திரரின் எழுச்சி !

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய ஓராண்டுக்குள்—அதாவது, 1917ல் ஆந்திரப் பிரதேசத்தை சென்னை ராஜ்யத்திலிருந்து பிரித்துத் தனியரசு மாநிலமாக அமைக்க வேண்டுமென்ற கிளர்ச்சி தோன்றியது. சாதி, கட்சி வேற்றுமையின்றி நெல்லூரில் கொண்டா வெங்கடப்பையா தலைமையில் நடந்த ஆந்திர மகாசபையின் மாநாட்டில் ஆந்திர தேசத் தலைவர்கள் ஒன்றுகூடி தனி ஆந்திர ராஜ்யக் கோரிக்கையை எழுப்பினர்.

இயற்கையாகவே இனவுணர்ச்சியிலும், இந்திய தேசிய உணர்ச்சியிலும் சிறந்து விளங்கிய ஆந்திர நாட்டார், ஆந்திர ராஜ்யக் கோரிக்கை எழுந்த பின்னர், உலகமே வியக்கத்தக்க வகையில் எழுச்சி கொண்டனர். இன ரீதியில் எழுச்சி கொண்ட ஆந்திரரை இன உணர்ச்சியற்ற தமிழரோடு ஒப்பிட்டு பாரதியார் ''சுதேச மித்திரன்'' ஏட்டில் எழுதியது வருமாறு:

''தெலுங்கு தேசத்தார் தமிழரைக் காட்டிலும் ராஜாங்க வ்யவஹாரங்களில் தீவிர புத்தி செலுத்துகிறார்கள். ஆனால், நமக்குள் ஜாதி பேதமிருக்கிறது...தமிழ் நாட்டு ஜனங்கள் வீண் சண்டைகளில்

பொழுதுபோக்குகிறார்கள். தெலுங்கர் ஜனபிவிருத்திக்கு வழியாகிய நல்ல உபாயங்களிலே புத்தி செலுத்தி வருகிறார்கள். சுதேசிய விஷயத்தில் இப்போது தெலுங்கருக்குள் இருக்கும் பக்தி சிரத்தையிலே நாலிலொரு பங்குகூடத் தமிழ் ஜனங்களிடம் இல்லை.

''தெலுங்கருக்குத் தெலுங்கு பாஷையில் பிறந்திருக்கும் உண்மையான அபிமானம் தமிழருக்குத் தமிழினிடமில்லை.''

[பாரதி தமிழ்: பக்: 273–74]

தமிழ்ப்,பெரியார் திரு.வி. கல்யாணசுந்தரனார், ஆந்திர ராஜ்யக் கிளர்ச்சி தோன்றிய ஐந்தாண்டுகளுக்குப் பின்—அக் கிளர்ச்சி வலுப்பெற்றிருந்த நேரத்திலே—தமது ''நவசக்தி'' 27–1–22 வார இதழிலே அக்கிளர்ச்சி பற்றி 'ஆந்திர தேசம்' என்ற தலைப்பிட்டு எழுதிய நீண்ட தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

''தமிழ் நாட்டுக்கு அணித்தாயுள்ள தெலுங்கு நாடு இப்பொழுது உலகம் போற்றும் ஒரு நாடாக இலங்குதற்குக் காரணம் யாது? இந்தியாவில் கிளர்ச்சி மிகுந்ததேசம் வங்காளம் என்று சொல்லப் பட்டு வந்தது. இப்பொழுது தெலுங்கு வங்காளத்துக்கு வழிகாட்டுகிறது. வங்காளத்தையும் பின்னிடச் செய்யும் ஆற்றல் ஆந்திரத்துக்கு எவ்வாறு உண்டாயிற்று? ஆந்திர தேசத்தின் கிளர்ச்சி வேகம் வங்காளம், பாஞ்சாலம், மஹாராஷ்டிரம் முதலிய நாடுகளையும் கடந்து, விரைந்து ஓடுவதற்குக் காரணம் என்ன என்று ஆராய வேண்டுவது அணித்தாய்உள்ள தமிழ் மக்களின் கடமை.

''தெலுங்கர்க்கு இவ்வளவு வீரம், மனவுறுதி, அஞ்சாமை உண்டானதற்குக் காரணம் யாது?

“காரணம் என்னவோ என்னும் மலைவு தமிழ் மக்களுக்கு வேண்டாம். காரணம் மிகச் சிறியது. அது சிறியதாயினுஞ் செயலால் பெரியது. சிறிய தென்று அதைத் தள்ளுவது பெருமையாகாது.

“ஆந்திர தேசமும் பிற தேசங்களைப்போல் உறங்கிக் கொண்டே யிருந்தது. வங்காளம் எழுந்து வீரட்டகாசஞ் செய்தபோது தமிழ் நாடு காட்டிய எழுச்சி கூட தெலுங்கு நாடு காட்டவில்லை. அவ் வளவு உறக்கத்திலிருந்த ஆந்திரம், திடீரென உலகம் புகழும் ஒரு தேசமாக மாறி வீரங்கொண்டு நிற்பது போற்றத்தக்கதே.

“ஆந்திரர்கள் முதலாவது செய்த முயற்சி, காங்கிரஸ் வாயிலாகக் கிளர்ச்சி செய்து, தமிழ் நாட்டினின்றும் பிரிந்து தங்கட்கெனஓரெல்லை வகுத் துக் கொண்டமையே. அவர் தெலுங்கு நாடெனத் தனிமைப் படுத்திக் கொண்டதன் நோக்கம், தம்மொழியை ஓம்பி வளர்க்கும் பொருட்டென்று சொல்லப்பட்டது. ஆந்திர மக்கள் தங்கள் நாட் டைத் தனிமைப் படுத்திக் கொண்ட பின்னர்த் தங்கள் தெலுங்கு மொழியை வளர்க்கப் பெரு முயற்சி செய்தார்கள்; மொழி வளர்ச்சிக்கெனப் பல கழகங்கள் கண்டார்கள். பல அறிவு நூல்கள் தெலுங்கில் எழுதப்பட்டன. ஆந்திரர்கள் தங்கள் மொழியை உயிரினும் ஓம்பி வந்தார்கள். அவர்கள் சுதேசியத்திற்கு அடிப்படை சுதேச பாஷையென் பதை நன்கு உணர்ந்து நடந்தமை அவர்கட்கு இப் போது மாண்பு தேடிக் கொடுத்திருக்கிறது.

“தெலுங்கர்கட்கு இப்போது சிறப்பை அளித் தது, அவர்பாலுள்ள தாய் மொழிப் பற்றேயாகும். ஆந்திர மக்கள், தங்கள் வீடுகளில்—கழகங்களில்—

'தாய் மொழியையே பேசவேண்டு'மென விரதங் கொண்டார்கள். அவ்விரதம், இப்பொழுது ஆந்திரத்தை வீரம், உண்மை, உறுதி, ஒற்றுமை, அஞ்சாமை செறிந்த தேசமாக மாற்றி இருக்கிறது.

''தமிழ் நாடே! உனது சகோதர நாட்டைப் பார்! அங்கே என்னென்ன நிகழ்கின்றன? அத்தேசத்தின் ஒற்றுமையை நோக்கு! உறுதியைக் காண். உனக்கு அந்த ஒற்றுமையும் உறுதியும் என்று வரும்? உன் மக்கள் உன் மொழியில் பற்றுக் கொள்வதில்லை. அவர்கள் பொருமைக்கு இரையாகிருர்கள். பொறுமையும் மொழிப் பற்றும் உண்டாகும் வரை நீ ஆந்திர தேசம் போல் ஆக மாட்டாய். காங்கிரஸ் கூட்டங்களிலும் உன் மக்கள் உன் மொழியைப் பேச நாணுகிருர்கள். உன் பழம் பெருமைகளே உன்னைச் சிறப்பித்து வருகின்றன. உன்னைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக.''

1919ல் மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தம் வெளியானதன் எதிரொலியாகவே ஆந்திரம் விழித்தெழுந்தது எனலாம். ஒருபுறத்தில் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த ஆந்திரர்கள், புதிய சீர்திருத்தத்தின் மூலம் சென்னை ராஜ்யத்திற்குக் கிடைத்த அதிகாரங்களைக் கைப்பற்றி ஆந்திர இனத்திற்குப் புதுவாழ்வளிக்க முயன்றனர். மற்ருெரு புறத்தில் காங்கிரஸ்சார்புடைய ஆந்திரர்கள் ஆந்திரப் பிரதேசத்தைத் தனியரசு மாநிலமாக்கவும், அதை ஆங்கிலப் பேரரசின் பிடியிலிருந்து விடுவிக்கவும் உழைத்தனர்.

அந்நாளில், ஆந்திர தேசத்திலும் காங்கிரசுக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்குமிடையே பூசலும் போராட்டமும் இருந்து வந்தன. அதாவது, பிராம்மணர்—பிராம்மணர் அல்லாதார் என்ற வகுப்பு அடிப்படையில் ஆந்திரர் கட்சி பிரிந்து 'அரசியல்' நடத்தினர். ஆனால், அந்தப் பிரிவு ஆந்திர இனத்தைப் பிளவு படுத்தி விடாதபடி ஆந்திர

மகாசபை கண்ணுங் கருத்துமாகப் பாடுபட்டு வந்தது காங்கிரசையும் ஜஸ்டிஸ் கட்சியையும் சார்ந்த ஆந்திரர் அவ்வளவு பேரும் ஆந்திர மகாசபையின் நிழலிலே ஒன்று பட்டனர்.

அதுபோல, தமிழ் நாட்டிலும் ஒரு "தமிழர் மகா சபை" அந்த நாளில் தோன்றியிருப்பின் அதன் நிழலிலே தமிழரெலாம் ஒன்றுபட்டிருக்க முடியும். ஜஸ்டிஸ் கட்சியின் தோற்றத்தால் தமிழினத்தாரிடை ஏற்பட்ட பிளவை ஓரளவேனும் தவிர்த்திருக்க முடியும். ஆனால், அந்த அற்புதத்தைச் செய்ய தமிழர் தலைவர்களிலே எவரும் வெளிப்படவில்லை. ஆந்திரரிடை ஏற்பட்டு வரும் இன ரீதியான எழுச்சி காரணமாகத் தமிழினம் பாதிக்கப்படலா மென்பதைத் தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்திருந்த பாரதியாரும் திரு. வி.க.வும் கூட அந்தக் கேட்டிலிருந்து தமிழினத்தாரைக் காக்க ஒரு தமிழர் மகா சபை தோற்றுவிக்க முன்வரவில்லை. ஆந்திர இனத்தின் எழுச்சியைச் சுட்டிக் காட்டி தமிழினத்தை எச்சரித்து எழுதியதோடு அவர்கள் அமைதி கொண்டு விட்டார்கள்.

ஆந்திர நாட்டில் தெலுங்கு பேசுவோரிடையில் ஏற்பட்ட இன எழுச்சியானது ராஜ்யத் தலைநகரான சென்னையிலும் எதிரொலித்தது. அதுவரை தமிழர்—ஆந்திரர்—கன்னடர்—கேரளர் ஆகிய நால்வேறு இனங்களின் வணிகர்கள் கொண்ட கூட்டுச் சபையாக இயங்கி வந்த "தென்னிந்திய வர்த்தகர் சங்கத்திற்குப் புறம்பாக "ஆந்திர வர்த்தகர் சங்கம்" அமைத்தனர் ஆந்திர நாட்டார். இந்த சங்கத்திற்கு சென்னை மாநகராட்சிக் கவுன்சிலில் பிரதிநிதித்துவமும் பெற்றனர். அதன்படி, சென்னை மாநகராட்சிக்கு ஆந்திர வர்த்தகர் சங்கத்தின் சார்பில் ஒரு பிரதிநிதியை அனுப்புவது வழக்கமாகி வந்தது.

ஆந்திர வர்த்தகர் சங்கம் தோன்றி பல ஆண்டுகளுக்குப் பின்னர், தமிழ் வணிகர்களிலே இன உணர்ச்சியுள்ள சிலர் கூடி தமிழ் வர்த்தகர் சங்கம் அமைத்தனர். ஆனால், இது

ஆந்திர வர்த்தகர் சங்கம் போன்று வலுவுடன் அமைய வில்லை. தமிழ் வர்த்தகர் சங்கம் தானும் சென்னை மாநகராட் சிக்கு ஒரு பிரதிநிதியை அனுப்ப—ஆந்திர வர்த்தர் சங்கத் துடன் போட்டியிட்டு—அனுமதி கோரியது. இந்தக் கோரிக்கை அரசால் ஏற்கப்படவில்லை.

ஆந்திரர்கள், ஆந்திர மாகாண காங்கிரஸ் அலுவ வலகத்தை விசயவாடவிலிருந்து சென்னை நகருக்கு மாற் றினர். அத்துடனன்றி, தமிழ் மாகாண காங்கிரசின் கிளை யாக சென்னை ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஒன்று இருத் தல்போல, ஆந்திர மாகாண காங்கிரசின் கிளையாக சென்னை ஜில்லா ஆந்திர காங்கிரஸ் கமிட்டி அமைத்துக் கொள்ள காங்கிரஸ் மேலிடத்திடம் அனுமதி கோரினர். தமிழ் நாடு காங்கிரஸ் இதை விரும்பவில்லையென்றாலும், அதன் தலைவர்கள் எதிர்க்கவும் இல்லை. ஆகவே, காங்கிரஸ் மேலிடமானது ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டியின் கோரிக்கையை ஏற்றது.

அதன்படி அமைந்த சென்னை ஜில்லா ஆந்திர காங்கிரஸ் கமிட்டியிலே நகரிலுள்ள ஆந்திரரும் ஆரிய வைசியர் போன்ற தெலுங்கருமேயன்றி, குஜராத்தியர், மார்வாடியர் ஆகிய வட இந்தியரும் பெருவாரியாகச் சேர்ந்தனர். அதனால், சென்னை மாவட்ட ஆந்திர காங்கிரசானது தமிழரல்லாதாரின் முகாமாக இயங்கி வந்தது.

சென்னை நகர்மீது ஆந்திரர் உரிமை கொண்டாடுவதற்கு எப்போதும்—எந்தவிதமான நியாயமும் இருந்ததில்லை. ஆனால், தமிழ்நாடு காங்கிரசின் இன உணர்ச்சியற்ற போக்கின் காரணமாக, சென்னை நகரம் முழுவதையுமோ, அதன் வடபகுதியையோ ஆந்திரத்தில் சேர்த்துக் கொண்டு விட முடியுமென்று ஆந்திர மாகாண காங்கிரஸ் தலைவர்கள் நம்பலாயினர்.

"மதருஸ் மனதே" என்று ஆந்திர மாகாண காங்கிரஸ் குரல் கொடுக்கத் தொடங்கிய நேரத்திலே ஜஸ்டிஸ் கட்சியின்

வாழ்வு அநேகமாக முடிந்து போய் விட்டது. ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களாக விளங்கியவர்கள் சென்னை நகரப் பிரச்னையில் ஆந்திர மாகாண காங்கிரசுக்கு வெளிப்படையாக ஆதர வளித்தனர். இனம் இனத்தோடு சேருவது இயல்புதானே!

சென்னை நகரில் ஆந்திர ஜில்லா காங்கிரஸ் கமிட்டி இயங்குவதற்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இணங்கியதனை அதனுடைய பலவீனமென்று ஆந்திர காங்கிரஸ் தலைவர்கள் கருதினர். காங்கிரஸ் மேலிடத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த ராஜாஜி அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவ ராக இருந்தபோதுதான்—அவருடைய ஆதரவைப் பெற்றுத் தான்—சென்னை நகரில் ஆந்திர ஜில்லா காங்கிரஸ் கமிட்டி அமைக்க உரிமை பெற்றது ஆந்திர மாகாண காங்கிரஸ்.

ராஜாஜியினுடைய பலவீனமானது ஆந்திரத் தலைவர் களுக்கு உற்சாகத்தைத் தந்தது. அதனால், சென்னை நகருக் குரிய பொதுத் தொகுதிகள் நான்கிலே இரண்டு தொகுதி களில் தன்னுடைய வேட்பாளர்களை நிறுத்தி வைக்க உரிமை கோரியது ஆந்திர மாகாண காங்கிரஸ். அதற்கும் எதிர்ப் பின்றி இசைவு தெரிவித்தது தமிழ்நாடு காங்கிரஸ்.

சென்னை ராஜ்ய சட்டப் பேரவைக்கு 1937 லும் 1946 லும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் சென்னை நகருக்குரிய நான்கு பொதுத் தொகுதிகளிலே ஆந்திர காங்கிரஸ் சார்பி லும், தமிழ் நாடு காங்கிரஸ் சார்பிலும் நிறுத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் வருமாறு :

1937ல் த. ந. கா. சார்பில்: — பு. ம. ஆதிகேசவ நாயகர் (தமிழர்), என். எஸ். வரதாச்சாரி (ஆந்திரர்—சித்தூர்).

ஆந்திர காங்கிரஸ் சார்பில்:—கத்தே. ரங்கைய நாயுடு (ஆந்திரர்), டி. பிரகாசம் பந்துலு (ஆந்திரர்).

1946ல் த.நா.கா. சார்பில்:—ஜி. இராசமன்னார் நாயுடு (ஆந்திரர்), என். எஸ். வரதாச்சாரி (ஆந்திரர்).

ஆந்திர காங்கிரஸ் சார்பில்: டி. பிரகாசம் பந்துலு (ஆந்திரர்—கிருஷ்ணு), குண்டூர் நரசிம்ம ராவ் (ஆந்திரர்).

1937ல் நடந்த பொதுத் தேர்தலில் சென்னை நகருக்குரிய நான்கு பொதுத் தொகுதிகளில் ஒரு தொகுதியில்தான்—வடசென்னையில்தான் — தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட பு. ம. ஆதிகேசவ நாயகர் த. நா. கா. சார்பில் நிறுத்தப்பட்டார்.

அடுத்து, 1946ல் நடந்த பொதுத் தேர்தலிலே இந்த வடசென்னைத் தொகுதியையும் ஆந்திர மாகாண காங்கிரசுக்குக் கொடுத்து விட்டது தமிழ்நாடு காங்கிரஸ் இதனால் நகருக்குரிய நான்கு பொதுத் தொகுதிகளையும் ஆந்திரரே அடைந்தனர்.

சென்னை நகருக்குரிய ஒரே ஒரு பெண் தொகுதியிலே 1937லும், 1946லும் அப்பட்டமான ஆந்திரப் பெண்மணி யான ஸ்ரீமதி. ருக்மணி லட்சுமிபதி நிறுத்திவைக்கப்பட்டார் த. நா. கா. சார்பிலே!

இதற்கு முன்பு1935ல் சென்னை நகர பொதுத் தொகுதி யொன்றிற்கு—திரு. டி. சுந்தரராவ் நாயுடுவின் மரணத்தால் ஏற்பட்ட காலியிடத்திற்கு—நடந்த இடைத் தேர்தலிலும் இந்த ஆந்திரப் பெண்மணியே த. நா. கா. சார்பில் நிறுத்தப் பெற்று வெற்றி பெற்றுர் என்பதை இங்கு நான் நினைவூட்ட வேண்டும்.

சென்னை நகர பொதுத் தொகுதிகள் இரண்டில் ஆந்திர மாகாண காங்கிரஸ் வேட்பாளர்கள் நிறுத்தப் பெற்றுலும், அவர்கள் வெற்றிபெறக் காரணமாக இருந்தது தமிழ் நாடு காங்கிரஸ்தான். சென்னை நகர வாக்காளர்களில் மிகப் பெரும்பாலோர் தமிழரேயாதலால், ஆந்திர வேட்பாளர் களின் வெற்றிக்குத் தமிழ் நாடு காங்கிரசின் ஒத்துழைப்பு தேவைப்பட்டது.

இரண்டு பொதுத் தேர்தல்களில் சென்னை நகரத் தொகுதிகளிலே தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட

வர்களே வெற்றி பெற்றதன் காரணமாக, சென்னை நகரில் தெலுங்கு பேசுவோரே மிகுதியாக வாழ்கின்றனர் என்று ஆந்திர காங்கிரஸ்காரர்கள் பிரசாரம் செய்யத் தொடங்கினர்.

பொதுவாக, சென்னை ராஜ்யத்திலே தொடர்ந்து பதினாறாண்டு காலம் ஆந்திரரின் செல்வாக்கிலிருந்த ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி நடைபெற்றதும்; சென்னை மாநகராட்சியிலேயும் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்களே செல்வாக்குப் பெற்றிருந்ததும்; சென்னை நகரப் பிரச்னையிலே ஆந்திர மாகாண காங்கிரசின் ஆதிக்கவெறிக்கு தமிழ் நாடு காங்கிரஸ் பணிந்து கொடுத்து வந்ததும் சென்னை நகரத்தின் மீது ஆந்திரர் உரிமை கொண்டாடி வந்ததனை வலுப்படுத்தி விட்டன.

193 தொடங்கி 195. வரை சென்னை மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தல்களிலெல்லாம் காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதிலே ஆந்திர மாகாண காங்கிரசும் சம பங்காளியாகக் கருதப்பட்டது. வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழக—ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டிகள் கூட்டாகச் செயல் புரிந்தன.

1919ல் வழங்கப்பட்ட மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி டில்லி சட்ட சபைக்கு சென்னை நகரம் ஒரு தொகுதியாக இருந்தது. அதிலிருந்து, ஜஸ்டிஸ் கட்சிக் காலத்தில் கூடத் தமிழர் ஒருவரே தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டு வந்தார்.

காங்கிரஸ் கட்சி தேர்தலில் ஈடுபட்ட பின்னரும் 1936ல் நடந்த தேர்தலில் அக்கட்சியின் சார்பில் தமிழரான திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அவர் காலமான பின்னர் நடந்த இடைத் தேர்தலிலே ஆந்திர மாகாண காங்கிரசின் வற்புறுத்தல் பேரில் கத்தே

ரங்கைய நாயுடு என்ற ஆந்திரர் த. நா. கா. ஆதரவுடன் நிறுத்தப்பட்டு, வெற்றி பெற்ருர்.

அவர் காலமானதால் வந்த இடைத்தேர்தலில் மற்ருெரு ஆந்திரரான குண்டூர் நரசிம்மராவ் த. நா. கா. வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் மீது பல புகார்கள் காங்கிரஸ் மேலிடத்துக்கு அனுப்பப்பட்டமை யால், அவர் கைவிடப்பட்டு, மலையாளியான ஸ்ரீமதி. அம்முசுவாமிநாதன் த. நா. கா. சார்பில் நிறுத்தப்பெற்ருர். ஜஸ்டிஸ் கட்சி வேட்பாளராக திரு. பி. பாலசுப்பிரமணிய முதலியார் போட்டியிட்டார். தேர்தல் முடிவில் தமிழரான திரு. பி. பா. தோற்ருர்; மலையாளியான திருமதி. அம்மு வெற்றி பெற்ருர்.

இப்படி, ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக் காலத்திலும், பின்னர் காங்கிரஸ் கட்சிக்கு செல்வாக்கு ஏற்பட்ட காலத்திலும் தமிழரல்லாதார் சென்னை நகரில் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெற்று வந்ததற்கு தமிழர் சார்பில் யாரும் எதிர்ப்பு காட்டவில்லை. ஆம்; ஜஸ்டிஸ் கட்சியின் பெயரால் ஆந்திரர் ஆதிக்கம் பெற்று வந்தபோது காங்கிரஸ் கட்சித் தமிழர்கள் எதிர்ப்பு காட்டியிருக்கலாம்—காட்டவில்லை. அவர்களை, ''தேசியம்'' என்ற மாயை பிடித்திருந்தது.

அப்படியே, காங்கிரஸ் கட்சியின் பெயரால் ஆந்திரர் ஆதிக்கம் பெற்று வந்த காலத்திலே ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்களோ, சுயமரியாதை இயக்கத்தாரோ, பின்னர் வந்த திராவிடர் கழகத்தாரோ தமிழர் சார்பில் எதிர்ப்புக்குரல் கொடுத்திருக்கலாம். ஆனல், அப்படி ஒன்றும் நடக்கவில்லை. காரணம், அவர்களை, ''திராவிடர்'' அல்லது ''பிராம்மண ரல்லாதார்'' என்ற மாயை பிடித்திருந்ததுதான். அவர்கள், தமிழர்—ஆந்திரர் என்று பிரித்துப் பேசுவது திராவிட இனத்தைப் பிளவுபடுத்தும் செயல் என்றுகூட வருணித்தனர். அப்படிப் பேசும் தமிழர்களை ''பிராம்மமணர்களின் (அவர்கள் கணிப்புப்படி ஆரியர்களின்) கைக்கூலிகள்'' என்று கூட வருணித்தனர்.

உண்மையில், "பிராம்மணர் அல்லாதார்" என்பது ஒரு சாதியோ, இனமோ, வருணமோ அல்ல என்பது ஜஸ்டிஸ் கட்சியினருக்கும் தெரிந்தே இருந்தது. அது, பிராமண எதிர்ப்புப் 'போர்க்களத்'தில் பிறந்த புதுப்பெயர்தான். ஆனால், பிராம்மண சாதியார் மீது கொண்ட கோபத்தால் பிராம்மணரல்லாதார் என்ற மாயைக்கு உத்தியோக விரும்பிகளான படித்த தமிழர்கள் அடிமைப்பட்டிருந்தனர். அது காரணமாக, பிராம்மணர் அல்லாதார் என்ற பெயரால் தமிழரல்லாதார் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்று வருவதனை ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்களோ, அதன் பின் தோன்றிய சுயமரியாதை இயக்கத்தினரோ, அதன் பின்னர் பிறந்த திராவிடர் கழகத்தினரோ உணரவில்லை. அவர்களால் பின்னுக்குத் தள்ளப்படும் பிராம்மணர்கள் தமிழர்களாக வும் முன்னுக்கு வருவோரெல்லாம் தமிழரல்லாதாராகவும் இருப்பதனையும் அவர்கள் உணரவில்லை.

"திராவிடர்" பிறந்த வரலாறு

திராவிடர் என்பது மொழி அல்லது இன ஆராய்ச்சி யாளர் தென்னிந்தியரைக் குறிப்பிடும் பொதுச் சொல் லாகவே பயன்படுத்தப்பட்டு வந்தது. அத்துறையிலும் முதன் முதலாக அந்தச் சொல்லைப் பயன்படுத்தியோர் அந்நியரான ஆங்கிலேயராகவே இருந்தனர். அவர்களும், 'ஆரியர்', 'திராவிடர்' என்ற இனப்பாகுபாடு இன்று நாட்டில் நடை முறையில் இல்லையென்பதை எடுத்துக் காட்டி தென்னிந்தி யரை எச்சரிக்கத் தவறவில்லை.

> "சென்னை மாகாணத்தில் உள்ளவர்கள் எல் லாம் திராவிடர்கள் என்றோ, அன்றி, வங்காளத்தில் உள்ளவர்களெல்லாம் மங்கோலியத் திராவிடர்கள் என்றோ நூல் பிடித்ததுபோல் பிரித்துக் கூறிவிடத் துணிதல் அறியாமையேயாகும்.
>
> "ஆரியர், திராவிடர் என்பன போன்ற இனப் பிரிவு வகை ஆராய்ச்சிக் கருவியாகக் கொண்ட பொதுவான அளவு கோலேயாகும்."

இது, கிரீயர்ஸன் என்ற ஆராய்ச்சி வல்லுநர் "மொழி ஆராய்ச்சி" என்ற தமது நூலில் கூறியிருப்பதாகும். இவ்வாறு அறிஞர்களெல்லாம் எச்சரித்தும், திராவிடர்

என்னுஞ் சொல் தமிழர் என்னும் இனப்பெயருக்கு எதிராகத் திட்டமிட்டுப் பயன்படுத்தப்பட்டது! இந்தத் திராவிட மாயை தமிழரைத்தான் அதிகமாகப் பிடித்திருந் தது. ஆந்திரத்திலோ, மலையாளத்திலோ, கன்னடத்திலோ எந்த ஒரு அமைப்பும் திராவிடர் என்ற பெயரைத் தாங்கிக் கொள்ளவில்லை.

ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதித் திராவிடர்கள் எனப்பட்டனர். துரதிர்ஷ்ட வசமாக, சுத்தத் தமிழர்களான அவர்களிடந்தான் அந்தப் பெயர் நிலைத்துவிட்டது. ஆனால், ஆந்திராவிலுள்ள தாழ்த்தப்பட்டோர் நிலை வேறு. அவர்கள் ஆதி ஆந்திரர் என்றே அழைக்கப்படுகின்றனர். ஆம்; ஆந்திரர் என்ற இனப் பெயருக்கு எதிராக அவர்கள் 'திராவிடர்' என்ற சொல்லை ஏற்கவில்லை. தமிழ் நாட்டில் 'திராவிடர்' என்ற சொல்லை நீண்ட நெடுங்காலமாக வற்புறுத்தி வந்தவர்களே பின்னர் அதைச் சந்தடியின்றிக் கைவிட்டனர். தற்போது, தமிழர்—மலையாளி என்ற இனப்பிரிவுகளைப் போர்க் கருவி களாகப் பயன்படுத்தவும் முன்வந்து விட்டனர். ஆனால், சுமார் அரை நூற்றாண்டு காலம் திராவிடர் அல்லது பிராம்மணர் அல்லாதார் என்ற சொற்களைத் தமிழர் என்ற பெயருக்கு மாற்றாகப் பயன்படுத்தியதால் தமிழினத் தாருக்கு ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டுவது அவ்வளவு எளிதாக இல்லை என்பதைப் பார்க்கிறோம்.

1916ல் ஜஸ்டிஸ் கட்சி பிறந்தபோது, அத்துடன் சேர்ந்து தமிழ்—தெலுங்கு–ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி களிலும் தனித்தனியே மூன்று நாளிதழ்கள் பிறந்தன. அவற்றின் பெயர்களைப் பார்ப்போம்:

தமிழ்—'திராவிடன்'

தெலுங்கு—'ஆந்திர பிரகாசிகா

ஆங்கிலம்—'ஜஸ்டிஸ்'

இந்த மூன்று நாளேடுகளிலே தெலுங்கு மொழி ஏடு 'ஆந்திர' என்ற இனப்பெயரைப் பெற்றிருக்க, தமிழ் ஏடு மட்டும்தமிழ்-தமிழர்–தமிழகம் என்ற பெயர்களை மறைக்கும் திரையாகத் 'திராவிடன்' என்ற பெயரைப் பெற்றதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இதே காலத்தில் ஆந்திர காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து பிறந்த மற்றொரு தெலுங்கு நாளேடுகூட 'ஆந்திர பத்திரிகா' என்று பெயர் பெற்றது. வேறு தேசியப் பெயர் எதனையும் பெறவில்லை. எங்கிருந்தாலும் ஆந்திரர் ஆந்திரர்தானே!

அன்று சென்னை மாகாணத்தின் ஒரு மாவட்டமாக இருந்து, பின்னர் 1956–ல் கேரளத்தில் இணைக்கப்பட்ட மலபார் மாவட்டத்திலிருந்து வெளி வந்த பத்திரிகைகள் "கேரள சஞ்சாரி", "கேரளோதயம்", "மலையாளி" என்ற பெயர்களைப் பெற்றிருந்தன. ஆம்; கேரளப் பிரதேசத்தில் வாழும் மலையாள மொழியினர் "திராவிடர்" என்ற பெயரை ஏற்காமல், தங்கள் மாநிலத்தின் பெயராலும், மொழியின் பெயராலும் பத்திரிகைகளை நடத்தினர் என்பது இதனால் புலப்படுகின்றது.

இலக்கிய வட்டாரத்தினரால் மட்டுமே பயன்படுத்தப் பட்டு வந்த "திராவிடர்" என்னும் சொல்லுக்கு அரசியல் வண்ணம் பூசப்பட்ட வரலாற்றை இங்கு சுருக்கமாகவேனும் விவரிக்க வேண்டியது அவசியமாகிறது.

தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் கருதி 1890–ல் தமிழ் நாட்டளவில் "பறையர் மகாஜன சபா" என்னும் பெயரில் ஒரு அமைப்பு நிறுவப் பெற்றது. "பறையர்" என்னும் சொல் தமிழ் நாட்டில் மிகவும் இழிந்த பொருளைக் கொண்டுவிட்டதால், 1910–ஆம் ஆண்டுக்குப் பின்னர் "பறையர் மகாஜன சபை"யின் பெயர் "ஆதித்திராவிடர் மகாஜன சபை"என்று மாற்றப் பெற்றது. "திராவிடர்" என்னும் சொல் தென்னிந்தியர் அனைவரையுமே குறிக்கும் பொதுப் பெயராக இன ஆராய்ச்சியாளர் பயன்படுத்தி வந்ததால், தென்னிந்தி

யாவின் பழங்குடி மக்கள் என்பதனைக் குறிக்கும் வகையில் "ஆதி" என்னும் அடைமொழியும் திராவிடர் என்பதற்கு முன் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

இந்த மகாசபை 1918-ல் சென்னை மாகாண அரசுக்குக் கொடுத்த கோரிக்கையிலே, மக்கள் கணக்கெடுப்பிலும் மற்றும் அரசு தஸ்தாவேஜுகளிலும் "பறையர்"— "பஞ்சமர்" என்னும் பெயர்களுக்குப் பதிலாக "ஆதித் திராவிடர்" என்னும் பெயர் சேர்க்கப்படவேண்டுமென்று வற்புறுத்தப் பெற்றது. ஆனல், அப்போதைய சென்சஸ் அதிகாரி திரு. ஈட்ஸ் என்பார் இதனை ஏற்கவில்லை. ஆந்திரத்திலும் கன்னடத்திலும் "ஆதித் திராவிடர்" என்னும் பெயரை ஏற்க தாழ்த்தப்பட்டோரில் எவரும் முன்வராத நிலையை இந்த அதிகாரி சுட்டிக் காட்டினர். ஆனல், ஆதித் திராவிடர் மகாசபை, பெயர் மாற்றக் கோரிக்கையிலே பிடிவாதம் காட்டியது. தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் மத்தியிலே பொதுக் கூட்டங்கள் போட்டு, தனது கோரிக்கைக்கு அவர்களுடைய ஆதரவைத் திரட்டியது. ஜஸ்டிஸ் கட்சியினரும் அந்த மகா சபைக்கு உதவியாக இருந்தனர்.

அக்கட்சியின் பெருந்தலைவர்களில் ஒருவரான டாக்டர் சி. நடேச முதலியார் ஆதித் திராவிட மகாஜன சபையின் கோரிக்கையை ஏற்குமாறு அரசினருக்குப் பரிந்துரை வழங்கும் தீர்மானம் ஒன்றை சென்னை மாநகராட்சிக் கூட்டம் ஒன்றிலே முன் மொழிந்து, அது நிறைவேறுமாறு செய்தார். 1921—ம் ஆண்டுக்குரிய சென்சஸ் தயாரிக்கப்பட்டபோது, தமிழ் நாட்டளவில் பரவலாக சுமார் 15,025 பேர் தங்களை ஆதித் திராவிடர்கள் என்று சொல்லிக் கொண்டு, அது குடி மதிப்பீட்டுக் கணக்கேட்டில் ஏறும்படிச் செய்தனர். 1921-ஆம் ஆண்டு குடிமதிப்புக் கணக்கெடுப்பின்படி, சென்னை மாகாணத்தில் தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கை 63,72,074 ஆகும். இவர்களில் சுமார் பதினையாயிரம் பேர் தான் ஆதித் திராவிடர் என்று பதிவு செய்து கொள்ள முன் வந்தனர் இது, தமிழக தாழ்த்தப்பட்டோரும் திராவிடர்

என்னும் பெயரை விரும்பவில்லையென்பதைப் புலப்படுத்து கின்றது. சென்னை மாகாணத்தின் இதர பகுதிகளில் தங்களை ஆதித் திராவிடர் என்று பதிவு செய்து கொள்ள எவரும் முன்வரவில்லை.

1922–ல் சென்னை மாகாண சட்ட மன்றத்தில் ஆதித் திராவிடர் என்னும் பெயரை அதிகாரப் பூர்வமாக ஏற்கு மாறு அரசுக்குப் பரிந்துரை செய்யும் தீர்மானம் ஒன்று ஜஸ்டிஸ் கட்சியினரால் பிரேரேபிக்கப்பட்டு நிறைவேற்றி வைக்கப்பட்டது. அதே ஆண்டில் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு 'பஞ்சமர்', அல்லது 'பறையர்' என்பதற்குப் பதிலாக ''ஆதித் திராவிடர்'' என்னும் பெயர் அங்கீகரிக்கப் பட்டுள்ளதாக அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால், இந்தப் பெயர் மாற்றம் தமிழ் மாவட்டங்களில்தான் அமுலில் இருக்குமென்றும் அரசு தெளிவுபடுத்தியது. மற்றபடி, தெலுங்கு மாவட்டங்களில் ''ஆதி ஆந்திரர்'' என்றும், கன்னட மாவட்டங்களில் ''ஆதி கன்னடர்'' என்றும் வழங்கி வரும் என்பதாகவும் அரசு உறுதி கூறியது. ஆம்; அந்தப் பிர தேசங்களில் மொழிப் பற்றும் இனப்பற்றும் உடைய தாழ்த் தப்பட்ட மக்கள் ''திராவிடர்'' என்னும் பொதுப் பெயரை ஏற்க உறுதியாக மறுத்து விட்டனர். இந்த இனப்பற்றும் மொழிப்பற்றும் தமிழ் நாட்டினருக்கும் இருந்திருக்குமானால் இங்குள்ள தாழ்த்தப்பட்டோருக்கு ''ஆதித் தமிழர்'' என்ற பெயர் அன்றே தரப்பட்டிருக்கும்.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய நாள் தொட்டே தமிழர் என் னும் தன்மானப்பெயரை மறைக்கும் திரையாக-இல்லை, அழிக் கும் செயலாகவே 'திராவிடர்' என்னும் போலிப் பெயரைப் பயன்படுத்தி வந்தனர் தமிழரிலே ஒரு சாரார். நல்ல வேளை யாக, அவர்களும் 1966–க்குப் பின் மனமாற்றமடைந்து தமிழ் வழங்கும் நிலப்பரப்பின்மீது 'திராவிட நாடு' என்னும் பெய ரைத் திணிக்க முயலாமல் ''தமிழ் நாடு'' என்னும் பெயரைப் பெறும் முயற்சியிலே மனநிறைவோடு பங்கு கொண்டனர்.

தமிழர் என்பதனை மறைக்கும் திரையாக-மறுக்கும் சொல்லாகத் திராவிடம் என்பது 1916 முதல் 1965 வரை சரியாக அரை நூற்றாண்டுக் காலம் பயன்படுத்தப்பட்டு வந்தது. இன்னமும் தமிழரிடையே செல்வாக்குப் பெற்றுள்ள இருவேறு கழகங்களின் பெயரிலே திராவிடம் ஒட்டிக் கொண்டிருக்கக் காண்கின்றோம்.

திராவிடர் என்பது தென்னிந்தியர் — அவர்களிலும் பிராம்மணரல்லாதார் அனைவருக்குமான பொதுப் பெயர் என்று சொல்லப்பட்டாலும், உண்மையில் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றுவிட்ட பிறமொழியினருக்கும் சுத்தத் தமிழருக்குமான பொதுப் பெயராகவே அது பயன்படுத்தப் பட்டு வந்தது அதனாற்றான், தமிழரல்லாதார் தமிழகத்தில் எல்லாத் துறைகளிலும் தலைமை பெற முடிந்தது.

வடக்கெல்லையிலே ஆக்கிரமிப்பு!

சென்னை நகரம் ஆந்திரத்தையும் தன்னுட் கொண்ட சென்னை ராஜ்யத்தின் தலைநகராக இருந்ததால் அதனை அடுத்துள்ள பிரதேசங்களில் ஆந்திரர் குடியேறி அங்கெல்லாம் அவர்கள் நிலைபெறுவது சாத்தியமானது. இதன் விளைவாக, தமிழகத்தின் வடக்கெல்லை பறிபோகும் சூழ்நிலை உருவானது.

தொல்காப்பியர் காலந்தொட்டு பாரதியார் காலம் வரை தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமலைதான் என்பது உறுதி செய்யப்பட்டு வந்திருக்கிறது.

உத்தியோகமும் வாணிபமும் செய்வதற்கென ஆந்திர நாட்டை விட்டுப் பெயர்ந்தோரில் பலர்தமிழ்நாட்டின் வடக்கெல்லைப் பிரதேசங்களில் பரவி வாழலாயினர். இதனுல், ஆந்திர நாட்டெல்லையை அடுத்துள்ள செங்கற்பட்டு, வடாற்காடு மாவட்டங்களிலே தெலுங்கு பேசும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்தது. இதற்கு, பிரிட்டிஷார் வருவதற்கு முன் தமிழகத்தில் தமிழரல்லாதார் நீண்ட நெடுங்காலம் ஆட்சிபுரிந்து வந்ததும் மற்றொரு காரணமாகும். தொல்காப்பியப் பாயிரத்தில்,

"வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்"

என்கிறார் ஆசிரியர் பனம்பாரனார். நன்னூல் படைத்த பவணந்தியாரும்,

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும் நான்கு எல்லை"

என்கிறார் சிகண்டி முனிவர்.

"வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம்
என்றிந் நான்கெல்லை தமிழது வழக்கே"

என்று பாடுகிறார். இலக்கணப் புலவரேயன்றி, வழிவழி தோன்றிவந்த இலக்கியப் புலவர்களும் "தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமே" என்று வற்புறுத்தி வந்தனர். சிலப்பதிகாரத்தில்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமுந்
தமிழ்வரம் பறுத்த தண்புனல் நன்னாடு"

(8: 1–12)

என்று இளங்கோவடிகள் பாடியுள்ளார்.

இளங்கோவுக்குப் பின் தோன்றிய புலவர் பெருமக்கள் பலரும் தத்தம் நூல்களிலே வேங்கட மலை தமிழுக்கும் தெலுங்குக்கும் வரம்பு என்று கூறியுள்ளனர். கம்பர், "வடசொற்கும் தென் சொற்கும் வரம்பு ஆகிய...வேங்கடம்..." என்கிறார். கம்பர் 'வடசொல்' என்பதனை தெலுங்கு என்ற பொருளிலேயே பயன்படுத்தியுள்ளார்.

தமிழ் இலக்கியங்களிலும் பல்லவர்—தமிழர் ஆட்சிகளிலும் இன்றுள்ள சென்னை, செங்கற்பட்டு, வடாற்காடு ஆகிய மாவட்டங்கள் கொண்ட பிரதேசம் தொண்டை நாடு என்று வழங்கப்பட்டது. திருப்பதி மலை அந்தத் தொண்டை நாட்டிற்கும் வடக்கெல்லையாக இருந்து வந்தது.

தெலுங்கு நாயக்கர்கள் தமிழ் நாட்டை ஆண்ட காலத்திலும் திருப்பதி தமிழ் நாட்டைச் சார்ந்ததாகவே இருந்தது. கிருஷ்ணதேவராயர் என்ற நாயக்க மன்னரின் முதல் அமைச்சரா்க இருந்த அம்பி அறம் வளர்த்தான் என்பவர் தொண்டை நாட்டுக் கோட்டங்கள் இருபத்து நான்கு என வகுத்தார். அவற்றுள் திருப்பதியும் அடங்கியுள்ளது.

தமிழ்த்தொண்டை நாட்டிலுள்ள சிவன் கோயில்கள் 32, அவற்றுள் இன்று காளஹஸ்தி என்று ஆந்திரரால் அழைக்கப்படும் திருக்காளத்தியும் ஒன்றாகும். அப்படியே, தொண்டை நாட்டு வைணவக் கோயில்கள் 24 என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றுள் திருப்பதியும் ஒன்று.

திருப்பதியிலுள்ள கல்வெட்டுகள் 38. அவற்றுள் தெலுங்கு 4, தமிழ் 25. மற்றவை கன்னடமும் கிரந்தமுமாகும். திருப்பதியைச் சார்ந்த திருச்சானூரிலுள்ள கல்வெட்டுகள் 5. அவையனைத்தும் தமிழே. திருக்காளத்தியிலுள்ள கல்வெட்டுகள் 80. அவற்றுள் தமிழ் 9. தெலுங்கு ஒன்றே. இப்படி, தமிழ் இலக்கணம், இலக்கியம், கல்வெட்டு ஆகியவற்றால் தமிழகத்தின் வடக்கெல்லை திருப்பதி மலைதான் என்பது உறுதிப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

திருப்பதி என்று தெய்வ பக்தர்களால் அழைக்கப்படும் திருவேங்கடம் பாடல் பெற்ற தலமாகும். கி.பி. 2–ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கூறப்படும் சிலப்பதிகாரத்திலும் மாங்காட்டு மறையவன் மூலம் திருவேங்கடவர் திருக்கோலத்தை வருணிக்கிறார் இளங்கோ. வைணவ ஆழ்வார்கள் தமிழில் இயற்றியுள்ள பக்திப் பாடல்களிலேயும் திருப்பதி மலையும் வேங்கடவர் கோயிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் பாடியுள்ள அஷ்டப் பிரபந்தத்திலுள்ள திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி ஆகிய பிரபந்தங்கள் திருப்பதியைப் பற்றியவையாகும். இம்மாதிரி திருப்பதி கோயிலைப் பற்றித் தெலுங்கு மொழியில் பக்தி இலக்கியம் எதுவும் கிடையாது

பழைய சென்னை ராஜ்யத்தில் 1911 ஏப்ரல் வரை சித்தூர் மாவட்டம் என்பதாக ஒன்று கிடையாது. முதன் முதலாக 1-4-1911-ல்தான் வடாற்காடு மாவட்டத்திலிருந்து திருத்தணிகை, புத்தூர், சித்தூர், திருப்பதி, திருக்காளத்தி, புத்தூர், பல்லவனேரி ஆகிய ஆறு தாலுக்காக்களைப் பிரித்தெடுத்து அவற்றுடன் ஆந்திர மாவட்டமான கடப்பையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட மதனபள்ளி, வாயல்பாடி ஆகிய இரண்டு தாலுக்காக்களையும் சேர்த்துப் புதிதாக சித்தூர் மாவட்டம் படைக்கப்பட்டது. வடாற்காடு மாவட்டம் எளிதில் நிர்வகிக்க இயலாதபடி அளவில் பெரிதாக இருப்பதால் அதைத் துண்டாடி புதிய மாவட்டத்தைப் படைப்பதாக ஆங்கிலேயர் காரணம் காட்டினர்.

இது, போலிக் காரணம். உண்மையில், ஆங்கிலேயருடைய பிறவிக்குணமான பிரித்தாளும் தந்திரப்படி தமிழகத்திற்கும் ஆந்திரத்திற்கு மிடையே எல்லைத் தகராறை ஏற்படுத்துவதற்காகவே வடாற்காடு-கடப்பை மாவட்டங்களைத் துண்டாடி, தமிழக—ஆந்திர எல்லைப் பிரதேசத்திலே இரு மொழி மாவட்டம் ஒன்றைப் படைத்தனர்.

அப்போதே அதற்குத் தமிழரிடமிருந்து எதிர்ப்பு ஏற்பட்டதாகவும், சென்னை ராஜ்யம் மொழிவாரித் திருத்தியமைக்கப்படுங்கால் வடாற்காடு மாவட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தமிழ்த் தாலுக்காக்கள் திரும்பவும் தமிழகத்திற்குத் தரப்படுமென்றும் அரசின் சார்பில் உறுதி கூறப்பட்டதாகத் தெரிகிறது. சித்தூர் மாவட்டமானது படைப்பில் இருமொழி மாவட்டமாக இருப்பினும், அரசாங்க நிர்வாகத்தில் தமிழ் மாவட்டமாகவே கருதப்பட்டு வந்தது.

சென்னை ராஜ்ய மாவட்டங்களைப் பல தொகுதிகளாக அரசு வகுத்தபோது, “மத்திய மாவட்டங்கள்” என்ற தொகுதியில்தான்—அதாவது, மதுரை, திருச்சி, நீலகிரி, கோயம்புத்தூர், வடாற்காடு ஆகிய தமிழ் மாவட்டங்கள் அடங்கிய தொகுதியில்தான் சித்தூர் மாவட்டம் சேர்க்கப்

பட்டது. இன்றும் தமிழர் பெரும்பாலோராக வாழும் சித்தூர் நகரமே புதிய (சித்தூர்) மாவட்டத்தின் தலைநகர மாக்கப்பட்டது.

சித்தூர் மாவட்டமானது தமிழ்த் தாலுக்காக்களையும் தெலுங்கு தாலுக்காக்களையும் கொண்ட இருமொழிப் பிரதேசமாகப் படைக்கப்பட்டிருப்பினும், நில அமைப்பிலே அதன் தமிழ்த் தாலுக்காக்கள் தனிப் பிரிவாகவே அமைந் துள்ளன. ஆம், சித்தூர் மாவட்டத்தில் தமிழ் வழங்கும் தெற்குப் பகுதி விரிந்த நிலப்பரப்பாகவும், தெலுங்கு வழங் கும் வடக்குப் பகுதி தொடர்ந்த மலைத் தொடராகவும் அமைந்துள்ளன.

இவ்வளவிருந்தும் பல்லவர், ஆந்திரர், மொகலாயர், ஆங்கிலேயர் ஆகிய பிறமொழியினரான அயல் நாட்டினர். அடுத்தடுத்து பல நூற்றூண்டுகாலம் தமிழகத்தை-குறிப்பாக, தொண்டை நாட்டை ஆண்ட காலத்திலே வடக்கெல்லைப் பிரதேசம் ஆந்திரரின் ஆக்கிரமிப்பு ஏற்படாதபடி அரசியல் ரீதியில் பாதுகாக்கப் படவில்லை. அதனால், தொண்டை நாட்டில் திருப்பதிக்கு தெற்கேயும் பிறமொழியினர் ஆதிக்கம் ஏற்பட்டு, அது வளர்பிறையாகி வந்தது.

தமிழரல்லாத பல்லவர்கள் தொண்டை மண்டலத்திலே தமிழ் இனத்தவருக்கே உரிய தனிப் பண்பாட்டை வளர்ப் பதிலே அக்கரை காட்டவில்லை. சமண—சனாதனத் தொடர் புடைய மதவழிக் கலாச்சாரத்தை வளர்ப்பதிலேயே மிகுந்த அக்கரை காட்டினர். விஜய நகரத்தவர் ஆட்சிக் காலத்தி லும் அதுவே நடந்தது. மற்றும் வடமொழியும் தெலுங்கு மொழியும் செல்வாக்குப் பெற்றன. பின்னர் மொகலாயர் ஆட்சிக் காலத்தில் உருது, அரபு மொழிகள் தொண்டை நாட்டில் செல்வாக்குப் பெறலாயின.

ஆந்திராவில் மொகலாயர் புகுந்தபோது அங்கு ஏற் பட்ட குழப்பத்திற்கஞ்சி பல்லாயிரக்கணக்கான ஆந்திரக் குடும்பங்கள் தமிழகத்தில் குடியேறின. அவர்கள் பொட்டற்

காடாகக் கிடந்த திருப்பதி மலைக்குத் தெற்கேயுள்ள பிர தேசத்தில் குடியிருப்புகள் ஏற்படுத்தியிருக்க வேண்டும். அப்படிக் குடியமர்ந்த ஆந்திரர்களில் சிலர் ஆர்க்காடு நவாப் ஆட்சியிலும், அடுத்துத் தோன்றிய ஆங்கிலேயர் ஆட்சியிலும் ஜமீன்தார்கள் ஆக்கப்பட்டனர். சித்தூர் மாவட்டத்தின் சில தாலுக்காக்கள் ஆந்திர ஜமீன்களின் நிர்வாகத்திலிருந் தன. அதனால், அங்கெல்லாம் தெலுங்கு மொழி ஒன்று மட்டுமே கல்வி மொழியாக்கப்பட்டது ஜமீன்தாரர்களால்!

பாண்டி நாட்டில் குடியமர்ந்து புது வாழ்வு பெற்ற தெலுங்கரும் பாளையக்காரர்கள் (சிற்றரசர் போல) ஆக்கப் பட்டனர் நாயக்க (தெலுங்கு) மன்னர்களால்!

1920 தொடங்கி 1936 வரை சென்னை ராஜ்யத்தில் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்த ஆந்திரர்களின் ஆட்சி நடந்த தால் சித்தூர் மாவட்டம் ஆந்திர மாவட்டமாக்கப்பட்டது. அங்கு வாழும் செங்குந்தர், வன்னியர், தாழ்த்தப்பட்டோர் ஆகிய தமிழ் சாதியினர் தெலுங்கு படிக்குமாறு கட்டாயப் படுத்தப் பட்டனர். பழக்க வழக்கங்களிலும் தெலுங்கர் களாக மாற்றப் பெற்று வந்தனர். ஆம்; நாயக்கர் முதலியார் என்ற தமிழ் சாதிப் பெயர்கள் மறைந்து ரெட்டி, நாயுடு என்ற தெலுங்கு சாதிப் பெயர்களைத் தமிழர் ஏற்க லாயினர். அத்துடனன்றி, தங்களைத் தெலுங்கராகவே கருதி, தமிழகத்தையும் தமிழினத்தையும் தமிழையும் மறக்கலாயினர்.

சித்தூர் மாவட்டத்தின் மீது தமிழகத்திற்கு இருந்து வந்த கலாசாரப் பிடிப்பு வலுவானது. சைவத் தமிழர் போற் றும் (நீர், நெருப்பு, மண் காற்று, வான்) பஞ்ச பூதத் தலங் களிலே வடக்கெல்லைப் பகுதியிலுள்ள காளத்தி வாயுத் தல மாகும்.

தமிழ்த் தெய்வமான முருகனுக்குரிய அறுபடை வீடு. களிலே ஒரு படை வீடாகத் திருத்தணிகை கருதப்படுகிறது

சைவ நாயன்மார் அறுபத்து மூவரில் கண்ணப்பருக்குத் திருக்காளத்தியோடும், காரைக்காலம்மையாருக்குத் திருவாலங்காடு தலத்தோடும் உள்ள தொடர்பு பிரிக்க முடியாதது தாகும். தணிகை புராணம் இயற்றிய கச்சியப்ப முனிவர், விசாகப்பெருமாளையர், சரவணப்பெருமாளையர், கந்தப்பய்யர் ஆகிய பெரும் புலவர்களைத் தந்த பெருமை தணிகைப்பதிக்கு உண்டு. வள்ளிமலை என்ற தலமும் வடக்கெல்லையில்தான் உள்ளது. வைணவத் தமிழர் போற்றும் திருவேங்கடவர் கோயில் கொண்டுள்ள திருப்பதியும் வடக்கெல்லையில்தான் உள்ளதென்பதை மீண்டும் நினைவில் கொள்வோமாக! இவ்வளவும் பொய்யாய்க் கனவாய்ப் பழங்கதையாய்ப் போய்விட்டன இருபதாம் நூற்றுண்டின் முற்பாதியிலே!

தமிழ்ப் புலவர்களைத் தந்ததால் ‘தொண்டை நன்னுடு சான்றேருடைத்து’ என்று புகழ் பெற்ற வடக்கெல்லைப் பிரதேசத்திலே தமிழின் வாழ்வு தேய்ப்பிறையானது. ஆம்; பூர்வ குடித் தமிழர் வாழ்வு ஒடுங்கி வந்தேறிகள் புது வாழ்வு பெறலாயினர்.

ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியிலே அடுத்தடுத்து முதலமைச்சர்களாகப் பதவி வகித்த பானகல் அரசரும், திரு. பி. முனுசாமி நாயுடுவும், பொப்பிலி அரசரும், காங்கிரஸ் காலத்திலே சென்னை ராஜ்ய சட்ட மேலவைத் தலைவராக வந்த திரு. ராமகிருஷ்ணராசும், டில்லி நாடாளுமன்றத் தலைவர் பதவியிலமர்ந்த சித்தூர் அனந்த சயனம் ஐயங்காரும், பாரதத்தின் ஜனாதிபதி பதவியைப் பெற்ற டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனும் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த தெலுங்கர்களாவர்.

பூர்வகுடி தாழ்ந்து புகுந்தகுடி வாழ்வு பெற்றதற்குக் காரணம் என்ன? தமிழகத்திலே தமிழரல்லாதார் ஆட்சி நீண்ட நெடுங்காலம் நடந்ததுதான்! இருபதாம் நூற்றுண்டின் முற்பாதியில் தென்னகத்தார் மத்தியிலே ஜஸ்டிஸ்

கட்சியும் காங்கிரஸ் மகாசபையும் செல்வாக்கு அடைந்த போது ஆந்திரர் இன உணர்ச்சி பெற்றதும், தமிழர் இன வுணர்ச்சி யற்றவர்களாக இருந்ததும் கூடக் காரணமாகும்.

பண்டைக்கால — இடைக்காலத் தமிழ்ச் சான்ருேர் தமிழகத்தின் வடக்கெல்லேப் பகுதிகளேக் காப்பதிலே மிகுந்த அக்கரையுடையவர்களாக இருந்திருக்க வேண்டும்.

அதனுற்ருன் ஆடி, தை மாதங்களில் வரும் கிருத்திகை களிலே தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்து சைவத் தமிழர்கள் காவடிகள் எடுத்துக் கொண்டு திருத்தணிகைக்குச் செல்லும் வழக்கத்தை ஏற்படுத்தினர் போலும். தமிழர் ஆண்டுக்கிருமுறை காவடிகள் கொண்டு செல்லும் வழக்கம் இருந்தில்லேயேல், தணிகைப்பதி தமிழகத்தோடு தொடர் பற்றுப் போயிருக்கும். அதனே மீட்டிருக்கவே முடியாது.

திருப்பதிக்குப் புரட்டாசிதோறும் பாத யாத்திரை போகும் வழக்கத்தை வைணவத் தமிழ்ச்சான்ருேர் ஏற்படுத்தி யதும் வடவேங்கடத்தோடு தமிழகத்திற்கிருந்த தொடர் பைக் காக்கத்தான் போலும்!

சித்தூர் மாவட்டத்தின் பெரும்பகுதி வடாற்காட்டி லிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தமிழ் வழங்கும் பகுதியாக இருந்தும், அந்த மாவட்ட அளவில் நியமிக்கப்பட்டு வந்த அரசாங்க உயர்தர உத்தியோகஸ்தர்கள்—மாவட்ட கல்வி அதிகாரி, மாவட்ட போலீஸ் அதிகாரி போன்றவர்கள்— ஆந்திரர்களாகவே இருந்து வந்தனர். இது, ஜஸ்டிஸ் கட்சி யின் பெயரால் தொடர்ந்து 16 ஆண்டுக் காலம் ஆந்திரர்கள் சென்னே ராஜ்யத்தை ஆண்டு வந்ததன் விளேவாகும்.

மாவட்ட உயர்தர அதிகாரிகள் ஆந்திரர்களாக இருந் தமையால், அவர்களுக்குக் கீழுள்ள படிகளிலிருந்த அரசு அலுவல்களுக்கும் பெரும்பாலும் ஆந்திரர்களே நியமிக்கப் பட்டு வந்தனர். இதனுல், அந்த மாவட்டம் ஆந்திரர் மயமாக்கப்பட்டு வந்தது. இது, ஒருவிதமான ஆக்கிர

மிப்பே! இந்த ஆக்கிரமிப்பை எதிர்த்து சித்தூர் மாவட்டத் தமிழர்கள் கிளர்ச்சி செய்ததாகத் தெரியவில்லை. இது நாம் புரிந்து கொள்ளக் கூடியதே. அவர்கள் அனைவருமே மிகவும் பிற்பட்ட சாதியினராக இருந்தனர் அல்லவா! தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகளோ, தலைவர்களோ கூட சித்தூர் மாவட்டம் அமைதியான முறையில் ஆந்திர மயமாக்கப்படுவது குறித்து எதிர்ப்பு காட்ட முன்வந்ததாகத் தெரியவில்லை.

1920-ல் காங்கிரஸ் மாநிலங்களை மொழிவாரியாகத் திருத்தியமைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது! அப்போது, இருமொழி (தமிழ்—தெலுங்கு) மாவட்டமாகவும், ஆந்திரத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் எல்லைப் பிரதேசமாகவும் உள்ள சித்தூர் மாவட்டத்தை ஆந்திர மாகாண காங்கிரசில் சேர்ப்பதா தமிழ் மகாண காங்கிரசில் இணைப்பதா?—என்ற பிரச்சினை எழுந்தது. ஆந்திர மாகாண காங்கிரஸ்காரார்கள், சித்தூர் மாவட்டம் முழுவதையும் ஆந்திர காங்கிரசில்தான் சேர்க்க வேண்டுமென்று பிடிவாதமாக வற்புறுத்தினர். தமிழ்நாடு காங்கிரசிலே திரு. சத்தியமூர்த்தி அய்யர் போன்ற ஒரு சிலர்—ஆம்; எல்லோருமல்லர்—சித்தூர் மாவட்டத்தில் தமிழர் பெருவாரியாகவுள்ள தாலுக்காக்களை மட்டும் தமிழ் மாகாண காங்கிரசில் சேர்க்க வேண்டுமென்று கூறினர். இது பற்றி முடிவு செய்ய ஆந்திர—தமிழக காங்கிரஸ் தலைவர் சிலர் கொண்ட தனிக் குழு ஒன்று நியமிக்கப் பெற்றது. அந்தக் குழு சித்தூர் மாவட்டத்திற்கே சென்று விசாரணை நடத்தியது. ஆனால் ஒருமித்த முடிவுக்கு வர அந்தக் குழுவால் முடியவில்லை. அந்தக்குழுவிலிருந்த திரு. சத்தியமூர்த்தி அய்யர் திருத்தணி தாலூகாவையேனும் தமிழ் மாகாண காங்கிரசில் சேர்க்க வேண்டுமென்று தனிக்குறிப்பு எழுதினர். ஆம்; அவரும் அதற்கு மேல் கேட்கவில்லை. ஆந்திரர்கள் அதைக்கூட ஒப்புக் கொள்ளவில்லை. முடிவில் ஆந்திர காங்கிரசின் பிடிவாதத்திற்கே வெற்றி கிடைத்தது

சித்தூர் மாவட்டம் முழுவதையும் எந்தவித நிபந்தனையுமில்லாமல் ஆந்திர காங்கிரசில் சேர்த்தது காங்கிரஸ் மேலிடம். பின்னர் தோன்றிய காங்கிரசல்லாத அகில இந்தியக் கட்சிகளும், தொழிற் சங்கங்களும் காங்கிரசையே பின்பற்றின. ஆம்; சித்தூர் மாவட்டத்தை ஆந்திர மாகாணக் கிளையுடன் சேர்ப்பது வழக்கமாகி வந்தது.

இப்படி, சித்தூர் மாவட்டம் அரசாங்க நிர்வாகத்திலும் அரசியல் கட்சிகளின் அமைப்பிலும் ஆந்திர மாவட்டமாகக் கருதப்பட்டு வந்ததால், அங்குள்ள படித்தவர்கள் தங்கள் முன்னேற்றம் கருதி ஆந்திரத் தலைவர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளலாயினர். சட்டமன்றம், ஜில்லா போர்டு, தாலூகா போர்டுகள் ஆகியவற்றிற்கு நடைபெறும் தேர்தல்களிலே சித்தூர் மாவட்டத்தில் வேட்பாளர்களை நிறுத்தி வைக்கும் பொறுப்பு அகில இந்திய அரசியல் கட்சிகளின் ஆந்திர மகாணக் கிளைகளுக்கே ஏகபோகமாகி விட்டது. அதனால், தமிழ் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் சித்தூர் மாவட்டத்தின் பக்கம் தலைகாட்டக்கூடவில்லை.

சித்தூர் மாவட்டத்தின் இருமொழியாளரான தெலுங்கர்கள், பெண் கொடுக்கல் வாங்கல் போன்ற குடும்ப விஷயங்களில்கூட நாளுக்கு நாள் தமிழ்நாட்டிலிருந்து விலகி ஆந்திரத்தோடு நெருங்கிக் கொண்டிருந்தனர். இதன் மூலம் அவர்களில் பலர் முன்னேற்றமும் கண்டனர்.

வியப்பு என்னவென்றால், திருப்பதி, திருத்தணி, திருக்காளத்தி, திருவாலங்காடு, வள்ளிமலை ஆகிய தமிழ் இலக்கியங்களிலே போற்றப்படும் தெய்வத் தலங்கள் சித்தூர் மாவட்டத்தில் இருந்தும் தமிழ்நாட்டின் தமிழ்ப்புலவர்களிலே எவரும் அந்த மாவட்டத்திலுள்ள தமிழர்களோடு இலக்கிய—கலாசார ரீதியில்கூட தொடர்பு கொள்ளத் தவறியதாகும். தமிழிலே பற்றும் பயிற்சியும் உடையவர்களிலேயும் 'தமிழர்' என்ற இனவுணர்வற்றவர்கள் உண்டு போலும்!

திருப்பதியானது வைணவத் தலமாக இருந்தமையால் சைவம் தழைக்கும் தமிழ் நாட்டாரை விடவும், வைணவம் செல்வாக்கு பெற்றுள்ள ஆந்திர மாநிலம் உள்ளிட்ட வட புலத்து வைணவ மக்கள் அந்தப்பதியை முற்றுகையிட்டுத் தங்களுடையதாக்கிக் கொண்டு விட்டனர். 'வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபனை'ப் பெற்ற தமிழ் நாட்டு வைண வர்கள்கூடத் திருப்பதியிலே கருத்து செலுத்தத் தவறி விட்டனர்.

திருப்பதியிலே தமிழரல்லாதாரே அடுத்தடுத்து மகந்துக் களாக வரலாயினர். அந்த மகந்துக்களின் மகத்துவ மும் திருப்பதி தெலுங்கர் மயமானதற்கு மற்ெறாரு காரண மாகும்.

திருப்பதி—திருமலை தேவஸ்தான போர்டு தோன்றிய காலந்தொட்டு, தமிழர்–ஆந்திரர் ஆகிய இருசாராரும் அதில் இடம் பெறலாயினர். போர்டின் தலைவர் பதவியை அநேக மாக தமிழ் நாட்டவரே அடைவது வழக்கமாக இருந்து வந்தது. அவர்கள் முயன்றிருந்தால் திருப்பதியில் ஆந்திரர் ஆதிக்கம் பெறுவதைத் தவிர்த்திருக்கலாம். இல்லையேல், குறைத்தேனும் இருக்கலாம். ஆனால், அவர்கள் முயலவில்லை.

தமிழகத்தின் வடக்கெல்லை வட பெண்ணையாறு என்று தமிழ் இலக்கியங்களால் அறிகிறோம். அந்த வடபெண்ணை யாற்றின் தென் பகுதியை நினைப்பதற்குக் கூட வாய்ப் பில்லாமல் அது ஆந்திரப் பகுதியாக மாற்றப்பட்டுவிட்டது. காரணம், அங்கெல்லாம் ஆந்திரர் குடியேறியதுதான். இது, தமிழகத்தின் வடக்கெல்லை பறிபோன வரலாறு ஆகும்.

தமிழ் நாடானது ஆந்திரம், கன்னடம், கேரளம் ஆகிய வேற்று மொழிப் பிரதேசங்களைத் தனது எல்லையிலே கொண்டிருந்தும், தமிழ் நாட்டுக் குடிமக்கள்—தமிழையே தாய் மொழியாகக் கொண்டவர்கள்–எல்லையைத் தாண்டிப் போய் கன்னடக் கிராமங்களில் குடியேறிக் குடியேறி அவற்றைத் தமிழ்க் கிராமங்களாக மாற்றினர் என்ற நிலை

ஏற்படவில்லை. அப்படியே, தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர் தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்துபோய் மலையாள மொழி வழங்கும் கிராமங்களில் குடியேறிக் குடியேறி அவற்றைத் தமிழ் கிராமங்களாக மாற்றினர் என்று சொல்வதற்கில்லை. தமிழ் நாட்டின் எல்லையோரக் கிராமங்களிலேயுள்ள தமிழர்கள் தங்கள் தாயகத்தைக் கடந்து போய் தெலுங்கு கிராமங்களில் குடியேறிக் குடியேறி அவற்றைத் தமிழர் மயமாக்கினர் என்ற நிலையும் ஏற்பட்டதே இல்லை. இதனுல், தமிழ் நாட்டு மக்கள் வேறு மொழி வழங்கும் நாடடில் குடியேருமல், தங்கள் நாட்டி லேயே நிரந்தரமாகத் தங்கி வாழ்வாங்கு வாழ்ந்தார்கள் என்றும் கருதுவதற்கில்லை. இலங்கை, மலாசியா, பர்மா, தென்னுப்பிரிக்கா, ஜாவா, சுமத்திரா போன்ற அயல் நாடு களில் தமிழர் அணியணியாகக் குடியேறி அங்கெல்லாம் ‘‘தமிழ்க் குடியிருப்பு’’களை ஏற்படுத்தியிருக்கின்றனர் என் பதனைப் பார்க்கிருேம்.

தமிழர் நிலை இதுவாகத், தமிழகத்தின் எல்லையோரங் களிலுள்ள ஆந்திர கிராமங்களில் வாழும் தெலுங்கர்கள் தங்கள் நாட்டின் எல்லைகளைக் கடந்து வந்து தமிழ் நாட்டுக் கிராமங்களில் குடியேறிக் குடியேறி, அவற்றைத் தெலுங்கர் மயமாக்கி யிருக்கின்றனர். அப்படிச் செய்ததன் விளைவாக ‘‘விசாலாந்திர’’ கோரிக்கை எழுந்தபோது ஆந்திரத்தின் எல்லையோரத்தில் தமிழ் மாவட்டங்கள் எத்தனையுண்டோ அத்தனையிலுமுள்ள பல பகுதிகளை ஆந்திரத்தில் சேர்க்க வேண்டுமென்று ஆந்திரர் கோரினர். ஆம்; செங்கற்பட்டு மாவட்டத்திலே பொன்னேரி, திருவள்ளூர் ஆகிய தாலுக் காக்களிருந்து சில பிர்க்காக்களையும், பல கிராமங்களையும் தெலுங்கர் மிகுதியாக வாழும் பிரதேசங்கள் என்று காரணங்காட்டி ஆந்திரத்தோடு சேர்க்க வேண்டுமென்று கோரிக்கை விட்டனர். வ. ஆ. மாவட்டத்திலே அரக் கோணம், குடியாத்தம் ஆகிய தாலூக்காக்களிலிருந்து தெலுங்கர் குடியேறி ஆக்கிரமித்துக் கொண்ட பகுதிகள்

என்ற காரணத்தால்—சில கிராமங்களை ஆந்திரத்தோடு சேர்க்க வேண்டுமென்று கோரினர்.

இப்படியே, சேலம் மாவட்டத்திலுள்ள ஒசூர், கிருஷ்ணகிரி தாலுகாக்களையும் வேறு சில கிராமங்களையும் ஆந்திரர் கோரினர்.

ஆம்; அந்த அளவுக்கு தமிழ் நாட்டின் எல்லையோரக் கிராமங்களிலே ஆந்திரர்களின் குடியேற்றம் அதிகரித்து வந்திருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

இதுபோலவே, தமிழ் நாட்டின் எல்லையோரத்திலுள்ள கர்நாடக ராஜ்யத்திலிருந்து கன்னடத்தைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் தங்கள் மொழிவழித் தாயகத்தின் எல்லையைக் கடந்து தமிழ் நாட்டுக் கிராமங்களிலே குடியேறி குடியேறி, அவற்றைக் கன்னட மயமாக்கி வந்திருக்கின்றனர். அந்த வகையிலே நீலகிரி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களின் எல்லையோரப் பகுதிகளில் கன்னடக் குடியேற்றங்கள் ஏற்பட்டுவிட்டன என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இந்த ஆக்கிரமிப்பையே நியாயமாக்கிக் கொண்டு, கன்னட மாகாண காங்கிரசும் தமிழ் நாட்டின் எல்லையோரத்திலுள்ள ஒன்றிரண்டு தாலுகாக்கள், சில பிர்க்காக்கள், சில கிராமங்கள் மீது உரிமை கொண்டாடியது.

கேரளத்திலுள்ளவர்கள்—மலையாள மொழியை தாய்மொழியாகக் கொண்டவர்கள்—தமிழ் நாட்டு எல்லையோரக் கிராமங்களில் குடியேறிக் குடியேறி, அவற்றை மலையாளிகள் மயமாக்கினர். பின்னர் அதனையே நியாயமாகக் காட்டி, அந்தப் பிரதேசங்களைக் கேரளத்தோடு சேர்க்குமாறு கிளர்ச்சி நடத்தினர். நீலகிரி மாவட்டத்திலுள்ள கூடலூர் தாலுகாவைக் கேரளத்துடன் சேர்க்கவேண்டுமென்ற கிளர்ச்சி ஒன்றே சான்று.

கோவை நகரிலும், அதன் சுற்றுப்புறத்திலும் மலையாளிகளின் குடியேற்றம் அதிகரித்துக்கொண்டே வந்தது. இந்தக்

காரணங்களால் ராஜ்ய புனரமைப்புப் பிரச்சினை எழுந்த போது கேரளத்தின் எல்லையிலுள்ள திருநெல்வேலி, கோயம் புத்தூர், நீலகிரி ஆகிய மூன்று மாவட்டங்களையும் கேரளத் துடன் சேர்த்து ''ஐக்கிய கேரளம்'' அமைக்க வேண்டு மென்று கேரள காங்கிரஸ்காரர்கள் கிளர்ச்சி செய்தனர்.

தமிழகம் இப்படி அண்டை மாநிலங்களால் ஆக்கிர மிக்கப்பட்டு வருவதற்கான பல காரணங்களில் ஒன்று தமிழ் நாட்டில் தமிழரல்லாதார் உயர் உத்தியோகங்களில் தொடர்ந்து இருந்து வருவதாகும். இனி பிராமணரல்லாதார் என்ற பெயரில் தமிழரல்லாதார் தமிழ் நாட்டில் உத்யோகங் களில் ஆதிக்கம் பெற்று வந்ததனை ஆராய்வோம்.

எங்கும் எதிலும் தமிழரல்லாதார்!

ஒரு இனத்தின் முன்னேற்றம் அரசாங்க உயர் பதவிகளில் அது பெறும் பங்கையே பொறுத்தது என்று சொல்வதற்கில்லை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, நாடு அடிமைப்பட்டிருந்த காலத்திலே, தொழில்—வாணிபத் துறைகளெல்லாம் அன்னியருக்கே உரிமையாக்கப் பட்டிருந்தமையால் அரசு உத்தியோகத்துறை ஒன்றுதான் அடிமைப்பட்ட இனத்தவர் முன்னேறுவதற்கான ஒரே புகலிடமாக இருந்தது. ஆரம்ப காலத்தில் ஆளுஞ் சாதியாரான ஆங்கிலேயரே உயர் உத்தியோகங்களில் ஆதிக்கம் பெற்றிருந்தனர். ஆனால், ஒன்றன்பின் ஒன்றாக அமுல் நடத்தப் பெற்ற அரசியல் சீர் திருத்தங்களின் மூலம் உயர் உத்தியோகங்கள் கொஞ்சங் கொஞ்சமாக இந்திய மயமாக்கப்பட்டு வந்தன. குறிப்பாக, 1919ல் வழங்கப்பட்ட மாண்டேகு—செம்ஸ் போர்டு சீர் திருத்தம், 1935ஆம் ஆண்டு அரசியல் சட்டம் ஆகியவற்றின் மூலம்–நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே உயர் உத்தியோகங்கள் இந்திய மயமாக்கப்பட்டு வந்தன.

இந்த நேரங்களிலே இந்திய மயமாக்கப்பட்டு வந்த உயர் உத்தியோகங்கள் பிராம்மண மயமாகி விடாமல் செய்ய ஜஸ்டிஸ் கட்சியினர் மிகுந்த விழிப்புடன் பாடுபட்டு வந்தனர். ஆனால், அவர்கள் ஒரு விஷயத்தில் எச்சரிக்கை காட்டத்

தவறி விட்டனர். மொழிவழி நோக்குமிடத்து, அப்போதைய சென்னை மாகாணம் தமிழகம் — ஆந்திரம் — மலையாளம் (மலபார் மாவட்டம்) — கன்னடம் (தென் கன்னட மாவட்டம்) ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்கள் கொண்டதாக இருந்தது. அதனால், இந்திய மயமாக்கப்பட்டு வந்த உயர் உத்தியோகங்களைப் பெறுவதிலே மொழி வழி இனங்களிடையே போட்டி யெழுந்திருக்க வேண்டியதுதான் நியாயமாகும். அதற்கு மாறாக, பிராம்மணர் — பிராம்மணரல்லாதார் என்ற சாதிகளிடையே போட்டியை உருவாக்கியது ஜஸ்டிஸ் கட்சி. இதனால், ஒரு உயர் உத்தியோகத்தைப் பெறுவோர் பிராம்மண சாதியாரா, பிராம்மணரல்லாத சாதியாரா? என்று மட்டுமே பார்க்கப்பட்டது. தமிழரா, தமிழரல்லாதாரா? என்று பார்க்கப்படவில்லை.

பிராம்மணர் ஒருவர் உயர் உத்தியோகத்திற்கு நியமிக்கப்படும் போதெல்லாம் அது பிராம்மணரல்லாதாருக்கு இழைக்கப்படும் அநியாயம் என்று பிராம்மணரல்லாத தலைவர்களும், பிராம்மணரல்லாதார் நியமிக்கப்படும் போதெல்லாம் தகுதியும் திறமையும் புறக்கணிக்கப் படுவதாகப் பிராம்மணத் தலைவர்களும் பத்திரிகைகளும் கூக்குரல் எழுப்புவது வழக்கமாகி வந்தது. இதனால், ஆந்திரர் தமிழர் என்ற இன வழிப்பட்ட போட்டி எழுதுவதற்கு இடமில்லாமல் ஜஸ்டிஸ் கட்சி செய்து விட்டது. பிராம்மணரல்லாதார் உயர் உத்தியோகங்களுக்கு நியமிக்கப்படும் போதெல்லாம் அவர் தமிழரா, தமிழரல்லாதாரா? என்று பார்க்கத் தவறியதோடன்றி, பிராம்மணரல்லாதார் என்ற பெயரில் தமிழரல்லாதார்—குறிப்பாக, ஆந்திரர் உயர் பதவிகளைக் பெற்று வந்தபோது, அதற்காக ஜஸ்டிஸ் கட்சித் தமிழர் முணுமுணுத்ததாகக் கூடத் தெரியவில்லை. பிராம்மணத் துவேஷம் அவர்கள் கண்களைக் குருடாக்கி விட்டது.

உயர் பதவியொன்றுக்கு பிராமணர் நியமிக்கப்படும் போது அவர் தமிழராக இருப்பினும் ஜஸ்டிஸ் கட்சித் தமிழர் ஆத்திரங் கொண்டு எதிர்த்தனர். பிராம்மணரல்லாதாராக

இருந்தால் — அவர் தமிழரல்லாதாராக இருப்பினும்— அவரை 'நம்மவர்' என்று கருதி மகிழ்ச்சியடைந்தனர். அதனைத் தங்கள் கட்சிக்குக் கிடைத்த வெற்றியாகவும் வருணித்தனர். அது தமிழினத்தின் இழப்பாக அமைந்து விட்டதனை அவர்கள் உணரவில்லை. இதனால், உயர் உத்தி யோகங்கள் இந்திய மயமாக்கப்பட்டு வந்தபோது, தமிழர் புறக்கணிக்கப்பட்டனர். தமிழரல்லாதாரே அவற்றைப் பெற்று முன்னேறி வந்தனர்.

நாடு சுதந்திரம் பெறும்வரை சென்னை மாகாண ஆளுநர் பதவிக்கு ஆங்கிலேயரே நியமிக்கப்பட்டு வந்தனர். இந்த நியதிக்கு மாறாக இரு வேறு சந்தர்ப்பங்களில் தென்னிந்தியர் இருவர் தற்காலிகமாகக் கவர்னர் பதவிக்கு நியமிக்கப் பெற்றனர். அந்த இருவருமே தமிழர் அல்லாதாராவர். அவர்கள் பெயர்கள் வருமாறு:

சர். முகம்மது ஊஸ்மான் (உருது)

சர். கே. வி. ரெட்டி நாயுடு (ஆந்திரர்)

1919க்குப் பின் தோன்றிய இரட்டை யாட்சியிலே சட்ட மன்றத்திற்குப் பொறுப்புள்ள அமைச்சர்களென்றும், அப் படிப்பட்ட பொறுப்பில்லாத அமைச்சர்களென்றும் இரு வகை அமைச்சர் குழாத்தினர் சென்னை மாகாண அரசில் இயங்கி வந்தனர். சட்டமன்றத்திற்குப் பொறுப்பில்லாத அமைச்சர்கள் கவர்னர் கவுன்சில் உறுப்பினர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

சட்டமன்றத்திற்குப் பொறுப்புள்ள அமைச்சர்களாக அடுத்தடுத்து ஜஸ்டிஸ் கட்சியினர் வந்த காலத்திலே திரு. டி. என். சிவஞானம்பிள்ளை, திரு. பி. டி. ராசன் தவிர மற்றவர்களெல்லாம் தமிழரல்லாதாராகவே — குறிப்பாக, ஆந்திரராகவே இருந்தனர் என்பதனை முன்னமே எடுத்துக் காட்டியுள்ளேன். ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் முதலமைச்சர் களாக வந்த நால்வரும் அசல் ஆந்திரர்களே என்பதனையும் முன்னரே அறிந்தோம்.

கவர்னர் கவுன்சில் உறுப்பினர் (நியமன அமைச்சர்) களாக வந்த பிராமண ரல்லாதார் அவ்வளவு பேரும் தமிழர் அல்லாதாராகவே இருந்தனர் என்பதும் நினைவில் கொள்ளத் தக்கதாகும். அவர்கள் பெயர்கள் வருமாறு:

வாசுதேவ ராஜா (ஆந்திரர்)

முகம்மது அபிபுல்லா (உருது)

முகம்மது ஊஸ்மான் (உருது)

எம். கிருஷ்ணன் நாயர் (மலையாளி)

சென்னை மாகாண உயர்நீதி மன்ற நீதிபதிப் பதவிக்கு முதன் முதலாக பிராமணரல்லாத தென் இந்தியர் நியமிக்கப்படத் தொடங்கியது 1908ல் ஆகும். அது தொடங்கி 1949 வரை — அதாவது, தொடர்ந்து 41 ஆண்டுகாலம் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டு வந்த பிராமணரல்லாதார் அனைவரும் தமிழர் அல்லாதாராகவே இருந்தனர். அவர்கள் பெயர்கள் வருமாறு:

சி. சங்கரன் நாயர் (மலையாளி)
அப்துல் ரகீம் (உருது)
சி. கிருஷ்ணன் (ஆந்திரர்)
எம். வெங்கடசுப்பா ராவ் (ஆந்திரர்)
சி. மாதவன் நாயர் (மலையாளி)
ராவ்பகதூர் பண்டாலே (மகாராஷ்டிரர்)
கே. சுந்தரம் செட்டி (ஆந்திரர்)
வி. பாண்டுரங்க ராவ் (ஆந்திரர்)
பி. வெங்கடரமணராவ் நாயுடு (ஆந்திரர்)
கே. பி. லட்சுமணன் (ஆந்திரர்)
முகம்மது அப்துல் ரகுமான் (உருது)
பி. சோமையா (ஆந்திரர்)
சி. குன்ஹிராமன் (மலையாளி)

பி. வி. இராசமன்னார் (ஆந்திரர்)

முகம்மது சாகிப்—உத்—தீன்—(உருது)

யாகியா அலி சாகிப் (உருது)

பி. சத்தியநாராயண ராவ் (ஆந்திரர்)

பி. கோவிந்த மேனன் (மலையாளி)

கே. சுப்பா ராவ் (ஆந்திரர்)

உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி, அரசு தலைமை அலுவலகத் தலைமைச் செயலாளர், சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர், பல்கலைக்கழகப்பதிவாளர், ரெவின்யூ போர்டு உறுப்பினர் ஆகிய பதவிகளுக்கு முதன் முதலாகத் தென்னிந்தியர் நியமிக்கப்பட்ட போதெல்லாம் அவர்களிலே பிராமணர் அல்லாதாராக வந்தவர்கள் அவ்வளவு பேரும் தமிழர் அல்லாதாராகவே இருந்தனர்.

ஆங்கிலேயருக்கே உரித்தாயிருந்த அந்தப் பதவிகளில் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ முதன் முதலில் நியமிக்கப் பெற்ற பிராமணரல்லாதார் பெயர்ப் பட்டியல் வருமாறு:

பதவி	பெற்றவர்
பல்கலைக்கழகத் துணைவேந்தர்:	வெங்கடரத்தின நாயுடு (தெலுங்கர்)
பல்கலைக்கழக ரிஜிஸ்திரார்:	கே. ராமுண்ணி மேனன் (மலையாளி)
உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி:	பி. வி.ராசமன்னார் (ஆந்திரர்)
பிரதம மாகாணமாஜிஸ்திரேட்:	டாக்டர் பண்டாலே (மலையாளி)
சென்னை மாநகராட்சி ஆணையர்:	ஜே. வெங்கட்நாராயணு (ஆந்திரர்)
தலைமை அலுவலக தலைமைச் செயலர்	எஸ். வி. இராமமூர்த்தி (ஆந்திரர்)

மற்ற துறைகளின் உயர் அதிகாரிகள்

ரெவின்யூ :	வி. எஸ். ஹெச்மாடி (கன்னடர்)
நிதி:	சி. கே. விசயராகவன் (மலையாளி)
போலீஸ் ஐ. ஜி. :	சி. கே. விசயராகவன் (மலையாளி)
சென்னை போலீஸ் கமிஷனர்:	ஏ. வி. பாத்ரோ (ஆந்திரர்)
கல்வித் துறை இயக்குநர்:	டாக்டர் பி. பி. டே (வங்காளி)
அரசாங்க சர்ஜன் ஜெனரல்:	டாக்டர் பி. வி. செரியன் (மலையாளி)
விவசாயத் துறை இயக்குநர்:	டி. ஆனந்த ராவ்
தொழில் துறை இயக்குநர் :	முகமது பஸ்லுல்லா சாகிப் (உருது)
கூட்டுறவு சங்க ரிஜிஸ்திரார்:	எம். கிரியப்பா (கன்னடர்)
தொழிலாளர் நல கமிஷனர்	சி. கே. விசயராகவன் (மலை)
சிறைச்சாலை ஐ. ஜி. :	முகம்மது மூசாகான் (உருது)
ரிஜிஸ்திரார் ஐ. ஜி. :	வி. எஸ். அரிராவ் நாயுடு (ஆந்திரர்)
இயக்குநர், மிருக மருத்துவத் துறை :	கே. எஸ். நாயர் (மலையாளி)

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே சென்னை மாகாண அரசில் வருவாய்த் துறை (ரெவின்யூ போர்டு) என்பது அரசாங்கத்தின் உயிர்நாடியாக இருந்து வந்தது. அதனால், நாடு விடுதலை பெறும்வரை அந்தப் போர்டின் உறுப்பினர்களாக ஆங்கிலேயரே நியமிக்கப்பட்டு வந்தனர். நாடு சுதந்திரம் பெற்ற நாளிலே அந்தப் போர்டு இந்தியர் மயமாக்கப் பெற்றது. அப்போது நியமிக்கப் பெற்ற இந்திய உறுப்பினர்

இருவரில் ஒருவர் பிராமணரல்லாதார். அவர், மலையாளி யான திரு. சி. கே. விசயராகவன் ஆவார். அவரையடுத்து ஐந்தாவது உறுப்பினராக நியமிக்கப்பட்டவரும் மலை யாளியே. அவர் பெயர் கே. ராமுண்ணி மேனன்.

மேலே தந்துள்ள பட்டியல் உயர் உத்தியோகங்கள் இந்தியர் மயமாக்கப்பட்ட ஆரம்பத்தில் முதன் முதலாக அப்பதவிகளைப் பெற்ற பிராமணரல்லாதார் பெயர்களைக் கொண்டதாகும் என்பதை மீண்டுமொருமுறை நினைப்பூட்டு கிறேன். பட்டியலில் தமிழர் ஒருவர்கூட இல்லையென்பதும் திரும்பவும் நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

இந்தத் துறைகளில் முதலில் வந்தவர் மட்டுமின்றி அடுத்தடுத்து வந்தவர்களும் தமிழரல்லாதாராக இருந்தனர். விரிவஞ்சி அந்தப் பட்டியலை இங்கு தரவில்லை.

1920 ஜனவரி தொடங்கி 1937 சூலை வரையுள்ள கால கட்டத்தில்-அதாவது, ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சி நடந்த காலத்தில் உயர் உத்தியோகங்கள் பல இந்தியர் கைக்கு மாற்றப்பட்டன. அப்போது, ஆங்கிலேயர்க்குப் பதிலாக முதன் முதலில் பிராமணரல்லாதார் அடைந்த உயர் உத்தியோகங்களும், அவற்றை அடைந்தவர்கள் பெயர்களும் அடைந்த ஆண்டும் வருமாறு:

உத்தியோகம்	பெற்றவர்	ஆண்டு
பல்கலைக் கழகப் பதிவாளர் :	கே. ராமுண்ணி மேனன் (மலையாளி)	1920—21
பல்கலைக் கழகத் துணைவேந்தர் :	கே. ராமுண்ணி மேனன் (மலையாளி)	1925—28, 1928—34.
தொழில் துறை இயக்குநர் :	முகம்மது பஸ்லுல்லா (உருது)	செப். 1926
விவசாயத் துறை இயக்குநர் :	டி. அனந்த ராவ் (ஆந்திரர்)	14—5—31

உத்தியோகம்	பெற்றவர்	ஆண்டு
பதிவுத்துறை ஐ. ஜி. :	பி. வி. அரிராவ் நாயுடு (ஆந்திரர்)	21—2—31
மீனளத்துறை இயக்குநர் :	டாக்டர் பி. சுந்தரராஜ் (தெலுங்கர்)	7—8—23
டவுன் பிளானிங் இயக்குநர் :	ஆர். டி. என். சிம்மன் (ஆந்திரர்)	மார்ச் 1931
அபிவிருத்தித் துறை	வி. பாண்டுரங்க ராவ் (கன்ன)	1926
உள்ளாட்சி :	எஸ். ஜி. செங்கோடையன் (தமிழ்)	1931
சிறைச்சாலே:	ஐ. ஜி. முகம்மது மூசாகான்(உருது)	6—3—34
பிரதம மாகாண மாஜிஸ்திரேட்	டாக்டர் பண்டாலே (கன்னடர்)	1925—28

மேற்கண்ட 11 பேர்களில் உள்ளாட்சித் துறைச் செயலர் எஸ். ஜி. செங்கோடையன் ஒருவர்தான் பிராம்மணரல்லாத தமிழர். மற்றவரெல்லாம் தமிழரல்லாதரே!

1937 சூலே முதல் 1939அக்டோபர் வரை—28மாத காலம் காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றது. அந்தக் காலத்திலும் ஆங்லேயர் வகித்த உயர் பதவிகள் சில இந்தியர் கைக்கு மாற்றப்பட்டன. அவற்றைப் பெற்றவர்களியே பிராமணரல் லாதார் பெயர்கள் வருமாறு:

உத்தியோகம்	பெற்றவர்	ஆண்டு
நிதித்துறைச் செயலர்	சி. கே. விசயராகவன் (மலேயாளி)	1938
கூட்டுறவு சங்கப் பதிவாளர்	எம். கிரியப்பா (கன்னடர்)	20—9—38

காங்கிரஸ் கட்சி ஆட்சி புரிந்த 28 மாத காலத்திலே ஆங்கிலேயர் வகித்து வந்த உயர் உத்தியோகங்கள் அதிக அளவில் இந்தியர் கைக்கு மாற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

1939 அக்டோபர் இறுதியில் காங்கிரஸ் கட்சி அதிகாரத்திலிருந்து வெளியேறியதிலிருந்து 1946 ஜனவரி வரை ஆங்கில கவர்னர் தலைமையில் ஆங்கிலேய "ஆலோசகர் ஆட்சி" நடைபெற்றது. அந்தக் காலத்தில் ஆங்கிலேயரிடமிருந்து இந்தியர் கைக்கு மாற்றப் பெற்ற உயர் உத்தியோகங்களை முதன்முதலாகப் பெற்ற பிராமணரல்லாதார் பெயர்கள் வருமாறு:

உத்தியோகம்	பெற்றவர்	ஆண்டு
பிரதம செயலாளர்: (பொது)	எஸ். வி. ராமமூர்த்தி (ஆந்திரர்)	1942
கல்வித்துறை இயக்குநர்:	டாக்டர் பி.பி.டே (வங்காளி)	8—1—45
ரெவின்யூதுறை செயலர்:	வி.எஸ். ஹெச்மாடி (கன்னடர்)	1943
தொழிலாளர் நல கமிஷனர்:	சி.கே. விசயராகவன் (மலை)	1—6—44
ரெவின்யூ போர்டு அங்கத்தினர்;	கே. ராமுண்ணி மேனன் (மலையாளி)	21—12—45
தபால், ஸ்டேஷனரி, பிரின்டிங் சூபரின்டெண்டு:	எம். கரீம்துல்லா (உருது)	ஜனவரி 1946

மேற்கண்ட அறுவரில் ஒருவர் கூடத் தமிழரல்ல என்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

1946 தொடங்கி 1947 ஆகஸ்டுப் பதினைந்து வரை—அதாவது, நாடு சுதந்திரம் பெறும்வரை 14 மாத காலம்

சென்னை மாகாணத்தில் நடைபெற்ற காங்கிரஸ் ஆட்சியிலே முதலில் ஆந்திரரான டி. பிரகாசமும், பின்னர் தெலுங்கரான ஓ.பி.ராமசாமி ரெட்டியாரும் முதல்வர்களாக இருந்தனர். அந்தக் காலத்தில் ஆங்கிலேயரிடமிருந்து இந்தியர் கைக்கு மாற்றப்பெற்ற உயர் உத்தியோகங்களை முதன் முதலாகப் பெற்ற பிராம்மணரல்லாதார் பெயர்கள் வருமாறு:

உத்தியோகம்	பெற்றவர்	ஆண்டு
நிதித்துறைச் செயலர்:	பி. வி. சுப்பா ராவ் (ஆந்திரர்)	1946
பொது சுகாதார இயக்குநர்:	டாக்டர் ஆர். எம். மாத்யூ (மலையாளி)	15—5—46
பிர்க்கா அபிவிருத்தி துறைச் செயலர்:	எம். எஸ். செகந்நாயகலு நாயுடு (ஆந்திரர்)	1947
சென்னை நகர: போலீஸ் கமிஷனர்:	ஏ. வி. பாத்ரோ (ஆந்திரர்)	1947
போலீஸ் ஐ. ஜி:	சி. கே. விசயராகவன் (மலை)	1947
சர்ஜன் ஜெனரல்:	டாக்டர் பி. வி. செரியன் (மலையாளி)	—1—3—47
ரெவியின்யூ போர்டு:	சி. கே. விசயராகவன் (மலையாளி)	15—8—47

பொதுவாக, ஆங்கிலேயர் கையிலிருந்து இந்தியர் கைக்கு உயர் உத்தியோகங்கள் மாற்றப் பெற்றபோது அவற்றை முதன் முதலாகப் பெற்ற பிராமணரல்லாதார்—ஒருவர் தவிர—அனைவருமே தமிழரல்லாதார் என்பதனை மேலே தந்துள்ள பட்டியலால் அறியலாம்.

சென்னை மாகாண உயர்நீதிமன்றம் 1801-ல் ஏற்பட்டது. அந்தக் காலந் தொடங்கி 1948–ஆம் ஆண்டு வரை—அதாவது, ஒன்றரை நூற்றாண்டு காலம் வரை தலைமை நீதிபதிப் பதவிக்கு ஆங்கிலேயரே நியமிக்கப்பட்டு வந்தனர். நாடு விடுதலை பெற்ற பின்னர் முதன் முதலாக 1948-ல்தான் தலைமை நீதிபதிப் பதவி ஆங்கிலேயரிடமிருந்து இந்தியருக்கு மாற்றப்பட்டது. அதனை முதன் முதலில் பெற்றவர் பிராமணரல்லாதாரே! ஆனால், அவர் தமிழரல்லர்: ஆந்திரரான பி. வி. ராசமன்னார்! இந்தப் பதவிக்கு தமிழ் அந்தணர் ஒருவர் சீனியாரிட்டி முறைப்படி நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். மத்திய அரசு அவரைத்தான் விரும்பியது. ஆனால் சென்னை மாநிலத்திலிருந்த ஓமந்தூரார் மந்திரிசபை காட்டிய எதிர்ப்பின் பேரில் அந்தணத் தமிழர் விடப்பட்டு அந்தணரல்லாத ஆந்திரர் நியமிக்கப்பட்டார். வகுப்புணர்வால் இனத்திற்கு ஏற்பட்ட இழப்பு இது.

1801 விருந்து 1947 வரையுள்ள ஒன்றரை நூற்றாண்டு காலத்தில் தென்னிந்தியர் எழுவர் பல்வேறு சந்தர்ப்பங்களில் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதிப் பதவிக்குத் தற்காலிகம் (ஆக்டிங்) ஆக நியமிக்கப் பெற்றனர். அவர்களில் நால்வர் பிராமணரல்லாதார். அவர்கள் பெயர்களும் பதவி வகித்த ஆண்டுகளும் வருமாறு :

அப்துர் ரகிம் (உருது)	1716, 1919.
வேப்பா ராமேசம் (ஆந்திரர்)	1931, 1933, 1935.
எம். வெங்கடசுப்பா ராவ் (ஆந்திரர்)	1935, 1936.
சி. மாதவன் நாயர் (மலையாளி)	1935, 1948.

1801–ல் சென்னை மாகாணத்தில் உயர்நீதி மன்றம் ஏற்பட்டிருந்தும், 1877 வரை ஆங்கிலேயரே நீதிபதிகளாக நியமிக்கப்பட்டு வந்தனர். பின்னர், 1878ல்தான் முதன் முதலாக தென்னிந்தியர் ஒருவர் நீதிபதியானார். அது தொடங்கி 1919வரை—அதாவது, ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிப்

பொறுப்பை ஏற்கும் வரை தென்னிந்தியர் 10 பேர் நீதிபதி களாக நியமனம் பெற்றனர். அவர்களில் பிராம்மணர் அல்லாதார் 2 பேர். அவ்விருவர் பெயரும் அவர்கள் பதவி வகித்த காலமும் வருமாறு!

சி. சங்கரன் நாயர் (மலையாளி)	1908—15
அப்துர் ரகீம் (உருது)	1908—21

ஜஸ்டிஸ் கட்சியானது 1920-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது. அது தொடங்கி, நாடு விடுதலை பெற்ற 1947 வரை நீதிபதிகளாக நியமனம் பெற்ற பிராமணரல்லாதார் பெயர்களும் அவர்கள் பதவி வகித்த காலமும் வருமாறு:

சி. கிருஷ்ணன் (மலையாளி)	1920—27
வேபா ராமேசம் (ஆந்திரர்)	1920—35
எம். டேவிட் தேவதாஸ் (தமிழர்)	1921—28
எம். வெங்கடசுப்பா ராவ் (ஆந்திரர்)	1921—38
சி. மாதவன் நாயர் (மலையாளி)	1924—39
கே. பண்டாலே (மலையாளி)	1934—38
கே. சுந்தரம் செட்டி (தமிழர்)	1930—35
வி. பாண்டுரங்க ராவ் (கன்னடர்)	1934—41
பி. வெங்கடரமண ராவ் நாயுடு (ஆந்திரர்)	1935—42
கே. பி. லட்சுமண ராவ் (கன்னடர்)	1934—47
முகம்மது அப்துர் ரகிமான் (உருது)	1937—43
பி. சோமையா (ஆந்திரர்)	1939—46
சி. குன்ஹிராமன் (மலையாளி)	1942—48
பி. வி. ராசமன்னார் (ஆந்திரர்)	1945—48
முகம்மது சகாப்புத்தீன் (உருது)	1945—47

மேற்கண்ட பதினைந்து பேரில் திரு. எம். டேவிட் தேவதாஸ், திரு. கே. சுந்தரம் செட்டி என்ற இருவர்தான் தமிழர். மற்ற பதின்மூவரும் தமிழரல்லாதாரே!

ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பிலிருந்த காலத்தில் சென்னை மாகாணத்தில் இரட்டையாட்சி நடைமுறையிலிருந்து வந்ததால் சட்ட இலாகா ஜஸ்டிஸ் கட்சி அமைச்சரிடம் இருக்கவில்லை.

அத்துடன், உள்துறை—நிதி முதலிய வேறு பல துறைகளும் ஜஸ்டிஸ் கட்சி அமைச்சர்களிடம் இருக்கவில்லை. அவர்களிடம் இருந்தவை, கல்வி—பொது சுகாதாரம்—அபிவிருத்தி—உள்ளாட்சி ஆகியவையேயாகும். மற்ற துறைகள் அனைத்தும் சட்ட மன்றத்துக்குப் பொறுப்பில்லாத கவர்னர் கவுன்சில் உறுப்பினர்(நியமன மந்திரி)களிடம் இருந்தன.

ஆகவே, நீதித் துறை உள்பட நியமன மந்திரிகளிடமிருந்த துறைகளைச் சார்ந்த உயர் உத்தியோகங்களில் பிராமணரல்லாத தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு ஜஸ்டிஸ் கட்சியைப் பொறுப்பாக்குவதற்கில்லை என்பதனை நான் அறிவேன். ஆயினும், அந்தத் துறைகளில் பிராமணர் நியமிக்கப்பட்ட போதெல்லாம்—அவர்கள் தமிழராயிருப்பினும்—எதிர்ப்பு காட்டி வந்த ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்கள், பிராமணரல்லாத 'தமிழர் புறக்கணிக்கப்பட்டதற்கு எதிர்ப்புக் காட்டத் தவறி விட்டனர் என்பதையே நான் இங்கு எடுத்துக் காட்டுகிறேன்.

ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்கள் பிராமணர்களிடம் கொண்டிருந்த துவேஷம் காரணமாகத் தமிழர் மீது தமிழரல்லாதார் ஆதிக்கம் செலுத்தி வந்ததனைச் சகித்துக் கொண்டனர் போலும்!

ஜஸ்டிஸ் கட்சிக் காலத்தில் உத்தியோகத் துறையில் தமிழர் புறக்கணிக்கப்படுவதனை, தமிழரல்லாதாரே—குறிப்பாக, ஆந்திரரே ஆக்கிரமிப்பதனை எதிர்த்துக் காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து குரல் கிளம்பியதாகத் தெரிகிறது. ஆனல், ஜஸ்டிஸ் கட்சியினர் அந்த எதிர்ப்புக்கு மதிப்பளிக்கவில்லையென்று அறிகிறோம். எதிர்ப்புக் காட்டிய தமிழர்கள்

பிராமணர்களாகவே இருந்தனராதலால், அதனைத் தமிழருடைய எதிர்ப்பாக அல்லாமல், பிராமண சாதியாருடைய எதிர்ப்பாக வருணித்துச் சமாளித்து விட்டனர் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள்.

1920ல் முதன் முதலாக அமைந்த ஜஸ்டிஸ் கட்சி அமைச்சரவையில் தமிழர் ஒருவர்கூட சேர்த்துக் கொள்ளப்படாததனை, அமைச்சரவையிலிருந்த முதல் அமைச்சர் உள்ளிட்ட மூவரும் ஆந்திரராகவே இருந்ததனைக் குறைகூறி 'சுதேசமித்திரனி'ல் எழுதினர் பராதியார். அது வருமாறு:

"புதிதாகச் சென்னை நிர்வாஹ ஸபையில் சேர்ந்த பிராமணரும் பஞ்சமரும், ஐரோப்பியருமாகிய பிறரும் அல்லாதார் வகுப்பைச் சேர்ந்த மந்திரிகள் தமிழர்களும் அல்லாதார் என்று ஒருவர் என்னிடம் வந்து முறையிட்டார். ஹூம்! இந்த பாஷை சரிப்படாது. நடந்த விஷயத்தை நல்ல தமிழில் சொல்லுகிறேன். தமிழ் வேளாளரொருவர் இப்போது மந்திரிகளாகச் சேர்ந்திருக்கும் ரெட்டியாரும், நாயுடுவும், ஸ்ரீராமராயனிங்காரும் தெலுங்கர்களென்றும், தமிழ் நாட்டிற்குப் பிரதிநிதியாக இவருள் எவருமில்லாமை வருந்தத்தக்க செய்தியென்றும் என்னிடம் வந்து முறையிட்டார்-"

(பாரதி தமிழ் : பக். 403)

ஜஸ்டிஸ் கட்சி அமைச்சர் அவையிலே தமிழர் ஒருவர் கூடச் சேர்த்துக் கொள்ளப்படாததனைக் கண்டித்தது 'இந்து'ப் பத்திரிகை. அதற்குப் பொறுப்பற்ற முறையில் பதிலளித்தது "ஜஸ்டிஸ்" பத்திரிகை.

இப்படி, "இந்து"—"ஜஸ்டிஸ்" பத்திரிகைகளிடையில் நடந்த வாதம் பற்றிப் பாரதியார் 'சுதேச மித்திரனி'ல் எழுதியது வருமாறு:

"ஜஸ்டிஸ்" பத்திராதிபர் "ஹிந்து" பத்திராதிபருக்குப் பல பல ஞானோபதேசங்கள் செய்திருக்கிறார். அவற்றின் மொத்தக் குறிப்பு யாதென்றால், ஆங்கிலேய அதிகாரிகளின் ஆட்சியை இந்த க்ஷணமே பஹிஷ்காரம் செய்துவிட வேண்டு மென்ற "காங்கிரஸ்" கக்ஷியைச் சேர்ந்த பத்திராதிபர் யார் மந்திரியாக வந்தாலும் கவனிக்கக் கூடாதென்பது; அவர் களிடமுள்ள குணதோஷங்களை எடுத்துக் கூறவும், அந்த ஸ்தானத்துக்கு பிறரை சிபார்சு செய்யவும் "ஹிந்து" வுக்குத் தகுதி கிடையா தென்பது.

"ஏன் தகுதி கிடையாது? அதைக் குறித்துத் தர்க்க மெப்படி?...இந்த ராஜாங்கத்தை மாற்றி இதைக் காட்டிலும் தர்மமான ராஜாங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று நாங்கள் முயற்சி செய்கிறோம். இதனிடையே இந்த அதிகாரிகள் எங்கள் வீடுகளில் தீயைக் கொளுத்தினால் நாங்கள் ஒன்றும் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டுமென்று "ஜஸ்டிஸ்" பத்திராதிபரின் தர்க்க சாஸ்திரம் போதிக் கிறதா?

"நாங்கள் ராஜங்கத்தைப் புதுப்பிக்க விரும்புவது பற்றி இவர்களுக்கு உதவி செய்வதை நிறுத்துவோம். இவர்கள் செய்யும் தவறுகளைக் கண்டனம் செய்து கொண்டிருப்போம். ஜனங்களுக்கெடுத்துக் காட்டி, அந்த உபாயத்தின் மூலமாக, இவர்கள் தங்கள் தவறுகளை நீக்கிக் கொள்ளும்படி வற் புறுத்துவோம். ஜன கோபத்துக்கு இவர்கள் எப்போதும் அஞ்சித் தீர வேண்டுமென்பதை நாம் அறிவோம். எனவே, இவர்களுக்கும் நமக்குமிடையே நிகழ்ச்சி பெற்று வரும் தர்ம யுத்தத்தில் அந்த அறிவைப் பயன்படுத்தாமல் விடமாட் டோம். எங்களுடைய தர்க்கம் "ஜஸ்டிஸ்" பத்திரிகைக்குத் தெளிவுபடுகிறதென்று நினைக்கிறோம்."

('பாரதி தமிழ்', பக். 404-405)

அந்தணரெல்லாம் தமிழரே!

இந்தியர் கைக்கு மாற்றப் பெற்ற உயர் உத்தியோகங்களை முதன் முதலாகப் பெற்ற பிராம்மணர்களும் உண்டு. அந்நாளில் சென்னை மாகாணத்தின் ஒரே பல்கலைக் கழகமாக விளங்கிய சென்னைப் பல்கலைக் கழகம் தோன்றிய 1857 தொட்டு 1904 வரை ஆங்கிலேயரே அதன் துணைவேந்தராக அடுத்தடுத்து வந்து கொண்டிருந்தனர். முதன் முதலாக 1904ல்தான் இந்தியர் ஒருவர் துணைவேந்தராக நியமிக்கப் பெற்றார். அதன்பின், 1928 வரை ஆங்கிலேயரும் இந்தியருமாக மாறி மாறி நியமிக்கப்பட்டு வந்தனர். அவர்களில் இந்தியரானோர் அனைவரும் தமிழ் அந்தணர்களாவர்.

அரசுத் துறைகளிலேயும் பல துறைகளின் தலைமை அதிகாரிகளாக ஆங்கிலேயருக்கு அடுத்தபடியாக முதன் முதலில் பொறுப்பேற்றவர்களிலேயும் பிராம்மணர்களுண்டு.

இவர்களன்றி, உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதிப் பதவியானது ஆங்கிலேயர்க்கே உரித்தாயிருந்த காலத்தில் தற்காலிகமாக இந்தியர் சிலர் அவ்வப்போது நியமிக்கப் பட்டதுண்டு. இந்த நியமனம் 1926ல் ஒரு முறையும் 1929ல் ஒரு முறையும் பிராம்மணருக்குக் கிடைத்தது.

மற்றும், உயர் நீதி மன்ற நீதிபதிகளாக 1920 முதல் 1949 வரை ஆங்கிலேயரும் இந்தியருமாக பலர் நியமிக்கப்படலாயினர். அப்படி நியமனம் பெற்ற 21 இந்தியர்களிலே 6 பேர் பிராம்மணர்களாவர்.

இப்படி, 1920 முதல் 1947-வரை உயர் உத்தியோகங்களைப் பெற்ற பிராமணர்களின் பெயர்களையும் அவர்கள் உத்தியோகத்திலிருந்த காலத்தையும் இன அடிப்படையில் பட்டியல் தொகுத்துப் பார்ப்போம்:

பல்கலைக் கழகத் துணைவேந்தர்

கனம் கே. சீனிவாச ஐயங்கார் (தமிழர்)	1920 – 23
ஆர். வெங்கடராமன் (தமிழர்)	1925—28

தற்காலிகத் தலைமை நீதிபதி

சி. வி. குமாரசாமி சாஸ்திரி (தமிழர்)

உயர்நீதிமன்ற நீதிபதிகள்

சி. வி. அனந்த கிருஷ்ண ஐயர் (மலையாளி)	1928—34
எஸ். வரதாச்சாரியார் (தமிழர்)	1934—39
கே. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் (தமிழர்)	1938—44
எம். பதஞ்சலி சாஸ்திரி (தமிழர்)	1939—47
என். சந்திரசேகர ஐயர் (மலையாளி)	1943—48
வி. கோவிந்தராசாச்சாரி (ஆந்திரர்)	1946—48

அடிஷனல் நீதிபதி

சி. கிருஷ்ணசாமி ராவ் (தமிழர்)	1921
வி. வி. சீனிவாச ஐயங்கார் (தமிழர்)	1924—28
சி. வி. விசுவநாத சாஸ்திரி (தமிழர்)	1925
சி. ஆர். திருவேங்கடாச்சாரியார் (தமிழர்)	1927, 28, 29
வி. பாஷ்யம் ஐயங்கார் (தமிழர்)	1930
சி. என். குப்புசாமி ஐயர் (தமிழர்)	1941, 42, 47

தலைமைப் பொறியாளர் (மின்சாரம்)

ஜி. சுந்தரம் (தமிழர்) 10—9—44

தலைமைப் பொறியாளர் (நீர்ப்பாசனம்)

எல். வெங்கடகிருஷ்ண ஐயர் (தமிழர்) நவ. 1940

அறநிலையக் குழுத் தலைவர்

சர். டி. சதாசிவ ஐயர் (தமிழர்)

மேலே தந்துள்ள உயர் உத்தியோகம் பெற்ற அந்தணர்கள் 18 பேர்களிலே, தமிழர் 15; ஆந்திரர் 1; மலையாளி 2.

பார்லிமெண்டரித் துறையிலேயும் அந்தணர் பலர் உயர் பதவிகள் பெற்றனர். 1909 முதல் 1919 வரையுள்ள மிண்டோ—மார்லி சீர்திருத்தம் நடைமுறையிலிருந்த காலத்திலே மாகாண சட்டமன்றத் தலைமைப் பதவியை மாகாண கவர்னரே வகித்து வந்தார்.

1919ல் மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்தபோதுதான் சட்டமன்றத் தலைவர் பதவிக்கு இந்தியர் வருவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. 1920ல் நடந்த பொதுத் தேர்தலுக்குப் பின் அமைந்த முதல் சட்டமன்றத்தின் தலைவர் அதன் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் ஆளுநரால் நியமிக்கப் பெற்ருர். அவர் ஒரு பிராம்மணராகவே இருந்தார்.

மாண்டேகு — செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி சட்டமன்றத்திற்குப் பொறுப்பில்லாத அமைச்சர்கள் ஆளுநரால் நியமிக்கப் பெற்றனர். அவர்களில் ஆங்கிலேயரும் இருந்தனர் இந்தியரும் இருந்தனர். அவர்களிடம் சட்டம், நீதி, உள்துறை, வருவாய்த்துறை, நிதி ஆகிய முக்கியத் துறைகள் ஒப்புவிக்கப் பெற்றன. ஆளுநரால் நியமிக்கப் பெற்ற—சட்டமன்றத்திற்குப் பொறுப்பில்லாத—இந்திய அமைச்சர்களிலே அந்தணர்களும் இருந்தனர்.

இப்படி, பார்லிமெண்டரித் துறையிலே உயர் பதவிகளுக்கு ஆளுநரால் நியமிக்கப்பட்டவர்களின் இனவாரிப் பெயர்கள் வருமாறு:

சட்டமன்றத் தலைவர்:

பி. ராசகோபாலாச்சாரி (தமிழர்) 1920—23.

நியமன அமைச்சர்கள்:

சர். சி. பி. ராமசாமி ஐயர் (தமிழர்), டி. ஆர். வேங்கட ராம சாஸ்திரியார் (தமிழர்).

அந்நாளில் நீதியும் நிர்வாகமும் பிரிக்கப்படாமலிருந்த தாலும் அரசாங்க சட்டத் துறையானது சட்ட மன்றத்திற்குப் பொறுப்பில்லாத அமைச்சரிடம் இருந்ததாலும், உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியும், மாவட்ட நீதிபதிகளும், கலெக்டர்களும் அந்நாளில் ஆங்கிலேயர்களாக இருந்த தாலும், தேசபக்தியுடைய இந்தியர் பார்வையிலே அட்வகேட் ஜெனரல் பதவிக்கு அதிக முக்கியத்துவம் இருந்த தெனலாம்.

அந்தப் பதவிக்கு அடுத்தடுத்து வந்தவர்கள்—1920 முதல் 1947 வரை — அந்தணர்களாகவே இருந்தனர் அவர்கள் பெயர்கள் வருமாறு:

திரு. கே. சீனிவாச ஐயங்கார் (தமிழர்)
திரு. எஸ். சீனிவாச ஐயங்கார் (தமிழர்)
சர். சி. பி. ராமசாமி ஐயர் (தமிழர்)
திரு. டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார் (தமிழர்)
திரு. சி. வி. அனந்தகிருஷ்ண ஐயர் (மலையாளி)
திரு. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் (தெலுங்கர்)

பிராம்மணரல்லாதாரின் நலன்களைக் காப்பதற்கென்றே பிறந்த ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியிலிருந்த கால கட்டத்திலே ஏராளமான அந்தணர்கள் உயர் பதவிகளுக்கு ஆங்கிலேய

ரால் நியமிக்கப்பெற்றனர் என்ற உண்மை, மேலே மூன்றிடங்களில் நாம் எடுத்துக் காட்டிய பெயர்ப் பட்டியலால் விளங்கும்.

பொதுவாக, ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே உயர் பதவிகளுக்கு நியமனம் பெற்ற பிராமணரல்லாதாரெல்லாம் அநேகமாக தமிழரல்லாதாராகவும், பிராம்மணர்களெல்லாம் அநேகமாகத் தமிழராகவும் இருக்கக் கண்டோம்.

ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சி மறைந்து 40 ஆண்டு காலமாகிறது. இன்று அந்தக் கட்சியும் இல்லை. ஆகவே, அதன் ஆட்சிக் காலத்தில் தமிழ் இனத்தாருக்கு ஏற்பட்ட நன்மை தீமைகளை விருப்பு வெறுப்பின்றி நடுவு நிலையுடன் மதிப்பிடக் கூடிய நிலையில் நாம் இருக்கிறோம். அப்படிப் பார்த்தால், ஜஸ்டிஸ் கட்சியால் தமிழருக்கு விளைந்த நன்மை சொற்பமென்பதும், தீமை அதிகமென்பதும் விளங்கும்.

தமிழ்நாட்டில் பிராமணர்கள் உத்தியோகத் துறையில் பெற்று வந்த ஆதிக்கத்தைத் தகர்ப்பதற்காகவே ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது. அதற்கு ஆங்கிலேய ஆட்சியின் ஆதரவும் இருந்தது. அப்படியிருந்தும், ஜஸ்டிஸ் ஆட்சிக் காலத்தில் பிராமணர்களும் உயர் உத்தியோகங்களில் ஆங்கிலேயரால் நியமிக்கப்பட்டு வந்தனர். அவர்களில் ஒன்றிருவர் தவிர மற்றவர்களெல்லாம் தமிழர்களாகவே இருந்தனர். இதனால், இருவேறு முனைகளிலும் ஜஸ்டிஸ் கட்சி தமிழ் நாட்டில் தோல்வியடைந்ததென்பது விளங்கும். ஆம்; தமிழ் நாட்டில் பிராமணர் ஆதிக்கத்தைத் தகர்ப்பதும் அதற்கு சாத்தியமாகவில்லை. பிராமணரல்லாத தமிழர்களுக்கு உயர் உத்தியோகங்களைத் தேடித் தருவதும் அடியோடு அதனால் இயலாமற் போய்விட்டது.

1920 முதல் 1947 வரை முதல்வர் பதவிக்கு வந்த ஐவரில் நால்வர் ஆந்திரர்; ஒருவர் தமிழர். அவர், டாக்டர்

சுப்பராயன். அவரும் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து வெளியேறி—அதாவது, கட்சிக் கட்டுப்பாட்டை மீறி—கட்சி விசுவாசத்தைக் கொன்று சட்டசபையிலிருந்த காங்கிரஸ் உறுப்பினர்களின் தயவால்தான் முதல்வராக வந்தார். அந்தத் திரிசங்கு சொர்க்கத்தில் ஓராண்டு காலம் இருந்தார். கட்சிமாறியில்லையானுல், அந்த ஒரு தமிழரும் முதன் மந்திரியாக வந்திருக்க முடியாது ஜஸ்டிஸ் ஆட்சிக் காலத்திலே!

அதுபோல, ஜஸ்டிஸ் ஆட்சியின் காலத்திலே ஆங்கிலேயரால் உயர் பதவிகளுக்கு அந்தணர் சிலரேனும் நியமிக்கப்பட்டில்லையானுல், சென்னை மாகாண ஆட்சியிலே தமிழர் நிலை சூன்யமாகத்தான் இருந்திருக்கும். இத்தனைக்கும் சென்னை மாகாண மக்கள் தொகையிலே தமிழ் நாட்டவர் தொகைதான் அதிகம். சென்னை மாகாண சட்டமன்றத்திலேயும் தமிழ் நாட்டு உறுப்பினர்தான் அதிகம்.

சாதியால் அல்லது வருணத்தால் பிராமணர்களாக இருப்பவர்கள் தமிழை வீட்டு மொழியாகக் கொண்டிருப்பார்களானுல், இனத்தால் அவரெல்லாம் தமிழரேயென்பது பொதுக்கருத்தாகும். இது விவாதத்திற்குரியதாக ஆக்கப்பட்டுவிட்டது என்பதனையும் நான் இங்கு மறந்துவிடவில்லை.

பிராமணர் தமிழரல்லர் என்ற வாதத்தை ஏற்பதானுல் ஜஸ்டிஸ் கட்சிக் காலத்தில் தமிழரின் நிலை இன்னமும் படுமோசமாகத்தான் நமக்குக் காட்சியளிக்கும்.

சென்னை மாகாணத்தின் உயர் உத்தியோகங்களிலே தமிழினத்தார் சார்பில் பிராமணர்களே நியமனம் பெற்றதற்கு ஆங்கிலேயர் காரணமென்ருலும், அவர்களை யாரும் குறை சொல்வதற்கில்லை. அவர்கள் தங்கள் ஆட்சி திறம்பட நடைபெற வேண்டுமென்பதிலே அதிக அக்கறையுடையவர்களாக இருந்தனர். அதனுல் திறமையிலே முன்னணியிலிருந்த தமிழ்ப் பிராமணர்களைப் பயன்படுத்திக் கொள்வதிலே அவர்

கள் ஆர்வங் காட்டியது நாம் புரிந்துகொள்ளக் கூடியது தான். அத்துடன், ஆந்திரர் தமிழ் நாட்டின் மீது பெற்று விட்ட ஆதிக்கத்திலிருந்து தமிழினத்திற்குச் சிறி தேனும் பரிகாரம் தேடும் பொருட்டும் ஆங்கிலேயர் பிராமணத் தமிழர்களை உயர் உத்தியோகங்களில் நியமித் திருக்கலாம். அதே காரணத்தால்தான் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் அதனை சகித்துக் கொண்டிருக்க வேண்டும்.

புதிய ஜாதியின் 'ஒற்றுமை'

1920ல் பொதுத் தேர்தல் முடிந்தபின் சட்டமன்றத்திற்குள் வந்துவிட்ட—நிர்வாகக் கவுன்சில் உறுப்பினராகிவிட்ட—செக்ரடேரியட்டில் உயர் பதவிகள் பெற்றுவிட்ட பிராமணர்களும் பிராமணரல்லாதாரும் பரஸ்பரம் ஒத்துழைத்து பிரிட்டிஷ் ஆட்சி நீடிக்க உதவி புரிந்தார்கள். இதுபற்றித் தமிழ் நாட்டில் தமது கடைசி மூச்சு உள்ளவரை ஜஸ்டிஸ் கட்சிக்காரராக இருந்த 'தமிழவேள்' பி. டி.ராசன் அவர்கள் கூறுவதைப் பார்ப்போம்:

"நாட்டில் பிராமணர், பிராமணரல்லாதார் என்ற வேற்றுமை உணர்ச்சி அதிகமாக இருந்தும், சட்டமன்றத்திற்குப் பதினாறு பிராமணர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தனர். அவர்கள் அனைவரும் சென்னையையும் வெளியூர்களையும் சேர்ந்த சிறந்த வழக்கறிஞர்கள்.

"உறுப்பினர்களிடையே சாதியிலும் கொள்கையிலும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஒருவருக்கொருவர் மிக சுமுகமாகப் பழகி வந்தனர்.

"வயதில் மூத்தவர்களும் உணவு அறையிலே ஒருவருக்கொருவர் அளவளாவி உரையாடிக் கொண்டிருப்பர். சாதியோ, கட்சியோ, கொள்கையோ, வயதோ அவர்கள்

உறவை ஒருநாளும் பாதிக்கவில்லை. அம்முதற் சட்டமன்றம் ஓர் இணைந்த குடும்பம்போல் விளங்கிற்று.''

[ஜஸ்டிஸ் கட்சிப் பொன் விழா மலரிலிருந்து]

இது, மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி அமைந்த முதல் சட்டமன்றம் பற்றி திரு. பி. டி. ராசன் வெளியிட்டுள்ள கருத்தாகும். பிராமணர் — பிராமணரல்லாதாரிடையே நிலவிய சுமுகமான உறவைக் குறிக்குமிடத்து, சட்டமன்ற உணவுச் சாலையை எடுத்துக் காட்டாக பி. டி. ஆர். தந்திருப்பது பொருள் பொதிந்ததாகும். ஆம்; பிராமண அரசியல் வாதிகள் அந்நாளில் உணவில் வைதிகர்களாக இருந்தனர்.

உணவு கொள்ளும் இடத்திலே தீண்டாமையை மட்டுமின்றி, பாராமையையும் கடைப்பிடித்தனர். இது காங்கிரஸ் மகாசபை கூடுமிடங்களிலும் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளிடையே காணப்பட்டதாகக் காந்தியடிகள் குறிப்பிடுகிருர். ஆனால், சென்னை சட்டமன்ற உணவு அறையிலே அப்படிப்பட்ட தீண்டாமையோ, பாராமையோ இல்லாமல் பிராமணர் — பிராமணரல்லாத உறுப்பினர்களும், அதிகாரிகளும் ஒரு குடும்பம்போல் இரண்டறக் கலந்திருந்தனராம்! இந்த அளவுக்கு அவர்களை ஒற்றுமைப்படுத்திய சக்திகள் யாவை?

அந்நாளில் சட்டமன்றத்தில் அமைச்சர்களாகவும், கவர்னர் நிர்வாகக் கவுன்சில் உறுப்பினர் (நியமன அமைச்சர்) களாகவும், வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்களாகவும் இருந்தவர்களில் மிகப் பெரும்பாலோர் பல்கலைக் கழகப் பட்டதாரிகளாகவும், பெரிய மிராசுதாரர்கள்—ஜமீன்தார்களாகவும் இருந்தனர். இவர்கள் அனைவருமே ஆங்கில மொழியிடமும் ஆங்கிலேயரிடமும் பற்றும் பாசமும் வைத்திருந்தனர். பொதுவாக, ஐரோப்பிய நாகரிகத்திற்கு அடிமைப்பட்டவர்களாக இருந்தனர். சொத்துரிமையுடைய வாக்காளர்களால் தேர்ந்

தெடுக்கப்பட்டசுகஜீவிகளுமாவர். இவர்கள் ஏழை மக்களின் நாகரிகத்தைப் பிரதிபலிப்பவர்களாக இருக்க முடியாது தானே! தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளாக சட்ட மன்றத்திற்கு நியமனம் பெற்றவர்கள் கூட இதற்கு விலக்கானவர்களாக இல்லை. அவர்களெல்லாம் ஆங்கிலக் கல்வி முறையால் படைக்கப்பட்ட புதிய சாதியினராக இருந்தனர். அதனாற்றான், திரு. பி. டி. ஆர். கூறுவதுபோல ஒரு குடும்பம் போல் உறவாட அவர்களால் முடிந்தது. அவர்கள் அவ்வளவு பேரும் (அந்தணராயினும் அல்லாதாரான்னும்) பிரிட்டிஷ் விசுவாசிகள்!

சட்டமன்றத் தலைவராக நியமனம் பெற்றுவிட்ட திரு. பி. இராசகோபாலாச்சாரியாரின் திறமை பற்றி திரு. பி. டி. ஆர். பாராட்டுரை தருகிறார். அதையும் பார்போம் :

“அம்முதற் சட்டமன்றத்தில்......பாராளுமன்ற நடைமுறைகளும், பழக்க வழக்கங்களும் நல்ல முறையில் உருவாக்கப் பெற்றன. மன்றங்களில் குழப்பங்கள் ஏற்படுவதும், உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்வதும் அன்று கேட்டறியாத செய்திகளாகும். நாட்டிலுள்ள எல்லா மாநிலச் சட்டமன்றங்களிலும் சென்னை மன்றந்தான் சிறந்த முறையில் நடைபெறுகின்றது என்று எல்லோராலும் புகழப்பெற்றது.

“இத்தகைய புகழைச் சென்னை சட்ட மன்றத்திற்குத் தேடித்தந்த பெருமை அதன் தலைவர் சர். பி. ராசகோபாலாச்சாரியாரையே சாரும். அவர் அரசாங்க உயர் அதிகாரியாக இருந்தாலும், சட்டமன்றத் தலைமைப் பதவிக்குத் தன்னைத் தானே வெகு விரைவில் தகுதியாக்கிக் கொண்டது வியப்பேயாகும்.”

தாங்கள் புதிதாக ஏற்கும் எந்தப் பொறுப்புக்கும் தங்களைத் தகுதியாக்கிக் கொள்ளுவதிலே பிராமணர்களுக்குள்ள திறமையை பிராமணரல்லாதார் இயக்கத் தலைவர்

ஒளிவு மறைவின்றி ஒப்புக் கொண்டதும் வியப்பிற்குரியது தானே!

அரசாங்க உயர் உத்தியோகங்களுக்குப் பிராமணர்களை நியமிப்பதிலே ஆங்கிலேயர் மட்டுமல்லாமல் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகளும் அக்கரை காட்டினர். அவர்கள் தங்கள் வச மிருந்த துறைகளிலும் அந்தணர்களை உயர் பதவிகளுக்கு நியமித்தனர். இதோ, திரு. பி. டி. ஆர். கூறுகிறார்:

"1926ல் இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதாவிற்குக் கடுமையான எதிர்ப்புகள் இருந்தன.

"அத்தகைய எதிர்ப்புகளுக்கிடையே இம் மசோதாவைக் கொண்டு வரும் பொறுப்பைப் பனகல் ராசா ஏற்றுக் கொண்டார்.

"சட்ட மன்றத்தில் அவருக்குத் துணை புரியத் திரு. என். கோபால்சாமி அய்யங்கார் சிறப்பு உறுப்பினராக நியமிக்கப் பெற்றார்.

"1926–ல் அறநிலைய மசோதா நிறைவேறிச் சட்ட மாயிற்று. அற நிலையக் குழுவிற்கு முதல் தலைவராக நீதிபதி சர். டி. சதாசிவ அய்யர் நியமிக்கப் பெற்றார்."

[ஜஸ்டிஸ் கட்சியின் பொன் விழா மலரிலிருந்து]

ஆம்; பிராமணரல்லாத இந்துக்களுக்காகத் தோன்றிய ஜஸ்டிஸ் கட்சியின் ஆட்சியிலே இந்து அற நிலைய மசோதா வைச் சட்டமாக்கியது, இந்துக் கோயில்களை—குறிப்பாக, தமிழ் நாட்டுக் கோயில்களை (இங்குதானே கோயில்கள் அதிகம்) பிராம்மணர் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கத்தான். ஆனால், அந்தச் சட்டப்படி முதன்முதலில் நியமிக்கப் பெற்ற இந்து அறநிலையக் குழுவின் தலைமைப் பதவிக்கு பிராமண ரல்லாத இந்துத் தமிழர்களின் மத குருக்கள் வட்டாரமான வேளாளரிலிருந்து ஒருவர் நியமிக்கப்படவில்லை. ஆம்; அந்த வகையில் கூட ஒரு உயர் பதவியை பிராமணரல்லாத தமிழர் பெற ஆந்திரரான பனகல் அரசர் அவர்களிடம் 'கருணை' காட்டவில்லை,

ஆந்திரப் பல்கலைக் கழகம்

ஜஸ்டிஸ் கட்சியானது சென்னை மாகாண அரசியலில் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் புதிய சட்டங்கள் பல நிறைவேற்றப் பெற்றன. அவை, ஆந்திரப் பல்கலைக் கழக அமைப்புச் சட்டம், அண்ணுமலைப் பல்கலைக்கழக அமைப்புச் சட்டம், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை — அதாவது, கம்யூனல் ஜி. ஒ., இந்து அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் ஆகியனவாகும்.

ஜஸ்டிஸ் கட்சியின் குறிக்கோள்களில் ஒன்று, தென்னிந்திய பிராமணரல்லாத மக்களை — அதாவது, திராவிடப் பெருங்குடி மக்களை ஓரினமாய் ஒன்றுபடுத்துவதாகும். இந்தக் குறிக்கோள் காரணமாகவே ஜஸ்டிஸ் கட்சிக்குத் 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்' என்ற மற்ருெரு பெயரும் ஏற்பட்டது. ஆனுல், இந்தத் திராவிட ஒருமைப்பாட்டிலே தங்களை மறைத்துக் கொள்ள அல்லது கரைத்துக் கொள்ள ஆந்திரர் விரும்பவில்லை. அதனுல், சென்னை மாகாணம் முழுவதற்குமாக ஒரே பல்கலைக் கழகம் இருப்பதனை விரும்பாமல் ஆந்திர நாட்டிற்கெனத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் அமைத்துக் கொள்ள முயன்றனர்.

ஏற்கனவே இனவழியில் ஆந்திர மக்களை—சாதி, மத, கட்சி வேறுபாடின்றி - ஒன்றுபடுத்த ஆந்திர மகாசபையை

அமைத்துக் கொண்டதனை அறிந்தோம். சென்னை மாகாண வணிகர்கள் அனைவருக்குமாக தென்னிந்திய வர்த்தகர் சங்கம் இருந்தும், அதிலே தமிழரல்லாதாரே — குறிப்பாக, ஆந்திரரே அடுத்தடுத்துத் தலைமைப் பதவிக்கு வந்தும், அதிலே மன நிறைவு பெருமல், 'ஆந்திர வர்த்தகர் சங்கம்' அமைத்துக் கொண்டனர் என்பதனையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

மற்ருெரு பக்கம் ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி தனி ஆந்திர ராஜ்யம் கோரிக் கிளர்ச்சி செய்து கொண்டிருந்த சூழ்நிலையில்தான் ஆந்திர நாட்டிற்கெனத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் தோற்றுவிப்பதற்கு பானகல் அரசர் தலைமையிலிருந்த ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி தனியாக ஒரு மசோதா கொண்டுவந்து, அதனைச் சட்டமாக்கியது.

ஆந்திரப் பல்கலைக் கழகம் அமைந்தது யதேச்சையாக நிகழ்ந்தது அல்ல; சென்னைப் பல்கலைக் கழகம் பெரியதாக இருந்தது என்ற காரணத்தாலும் அல்ல; தாங்கள் தனி இனத்தவர்—தனி நாட்டவர் என்று ஆந்திரர் கொண்டிருந்த உணர்ச்சியின் விளைவாகத்தான்—அவர்கள் கட்டுப்பாடாக விடுத்த கோரிக்கையின் காரணமாகத்தான் ஆந்திரப் பல்கலைக் கழகச் சட்டம் பிறந்தது. இதனைத் தடுத்துத் திராவிட ஒருமைப்பாட்டைக் காக்க ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்கள் முயலவில்லை.

ஆந்திராவுக்கெனத் தனியாகப் பல்கலைக் கழகம் அமைந்த பின்னரும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆந்திரருக்குப் பிடிப்பு இருந்துகொண்டுதான் இருந்தது. ஆந்திரம் தனியரசு மாநிலம் ஆகும்வரை சென்னைப் பல்கலைக் கழக நிர்வாகத்திலே ஆந்திரர்களுக்கும் பங்கு இருந்தது. ஆந்திர மாணவர்கள் எப்போதும்போல இடம் பெற்று வந்தனர். ஆந்திரப் பல்கலைக்கழகம் அமைந்த பின்னரும் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு விசாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆந்திரரான திவான்பகதூர் சர். ஆர். வெங்கடரத்

தினம் என்பவர் 1925 முதல் 1928 வரை துணைவேந்தராக இருந்தார். தமிழ் நாடு பொதுச் சத்திரம்போலாகிவிட்டது! ஆந்திரப் பல்கலைக் கழகத்துக்கு அதன் வரலாற்றிலே ஒரு தமிழர்துணைவேந்தராக வந்ததில்லை யென்பதனை இங்கு நினைவில்கொள்ள வேண்டும்.

ஆந்திரப் பல்கலைக் கழகம் 1926ல் அமைந்தது. அப்போதே, சென்னைப் பல்கலைக் கழகம் 'தமிழ் நாடு பல்கலைக் கழகம்' என்று பெயர் மாற்றம் பெற்றிருக்க வேண்டும். தென் கன்னடம் — மலபார் ஆகிய மாவட்டங்களின் கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைந்திருந்தது இந்தப் பெயர் மாற்றத்துக்குத் தடையாக இருக்க நியாயமில்லை.

1956ல் தென் கன்னட மாவட்டமும், மலபார் மாவட்டமும் எஞ்சிய சென்னை ராஜ்யத்திலிருந்து பிரிந்து போயின. அது தொடங்கி 1966 வரை தொடர்ந்து பத்தாண்டு காலம் தமிழ் நாடு முழுவதற்குமான ஒரே பல்கலைக் கழகமாக சென்னைப் பல்கலைக் கழகமே இயங்கி வந்தது. அப்போது கூட, அதன் பெயர் 'தமிழ் நாடு பல்கலைக் கழகம்' என்று மாற்றப் பெறவில்லை.

கேரளத்தின் ஒரு பகுதியான திருவிதாங்கூர் சமஸ்தானத்திற்கு மட்டுமே உரியதாகத் திருவனந்தபுரத்தில் 1937ல் நிறுவப்பெற்ற பல்கலைக் கழகமானது 'கேரளப் பல்கலைக் கழகம்' என்று பெயர் பெற்றது.

முழு கன்னடத்தின் ஒரு பகுதியும் பம்பாய் ராஜ்யத்தின் ஒரு மாவட்டமுமான வட கன்னடத்திற்கென்றே 1949ல் தார்வாரில் நிறுவப் பெற்ற பல்கலைக் கழகம் 'கன்னடப் பல்கலைக் கழகம்' என்று பெயர் பெற்றது.

ஆந்திரம், கன்னடம், கேரளம், குஜராத், மகாராஷ்டிரம், ஒரிசா, காஷ்மீர், பீகார், பஞ்சாப், ராஜஸ்தான்

ஆகிய மாநிலங்களிலே ஒவ்வொன்றும் தன்தன் பெயரால் தனித் தனிப் பல்கலைக் கழகத்தைப் பெற்றுள்ளன. தனி ராஜ்யமாக இல்லாத செளராஷ்டிரம், உத்கல் ஆகிய உப மாநிலங்கள்கூடத் தன்தன் பெயரால் தனிப் பல்கலைக் கழகங்களைப் பெற்றுள்ளன.

தமிழினத்தார் தங்கள் தாயகத்தின் பெயரைப் போற்றிக் காப்பதிலே கூட அக்கரையற்றவர்களாக இருந்து வந்தன ரென்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

ஆந்திரப் பல்கலைக் கழகம் அமைந்த மூன்றாண்டுகளுக்குப் பின்னர்—அதாவது, 1929ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைக்கச் சட்டஞ் செய்தது டாக்டர் சுப்பராயன் ஆட்சி. ஆந்திர நாட்டுக்கு ஆந்திரப் பல்கலைக் கழகம் அமைந்தது போலத் தமிழ் நாட்டுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அமைந்ததென ஜஸ்டிஸ் கட்சித் தமிழரிலே சிலர் போலிச் சமாதானம் கூறி, மக்களை மயக்கினர்.

இதுபற்றித் 'தமிழவேள்' பி. டி. ராசன் தரும் தகவல் வருமாறு:

"ஆந்திரப் பல்கலைக் கழகம் உருவானவுடன் தமிழ் நாட்டிற்கும் ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று பலர் விரும்பினர். அது தமிழ் மாவட்டங்களுக்குரிய பல்கலைக் கழகமாக இருக்க வேண்டுமா அல்லது தமிழ் மொழி வளர்ச்சிக்கென்றே தனிப் பல்கலைக் கழகமாக இருக்க வேண்டுமா என்ற கேள்வி எழுந்தது."

"அதுபற்றி ஆராய்ந்து முடிவு கூற ஒரு குழு அமைக்கப் பெற்றது. இராமநாதபுரம் ராசா அதன் தலைவராகவும், நான் செயலாளராகவும் பணியாற்றினோம். அக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பின்னர் டாக்டர் சுப்பராயன் பல சிக்கல்களையும் களைந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சட்டத்தை நிறைவேற்றினர்."

[ஜஸ்டிஸ் கட்சிப் பொன் விழா மலரிலிருந்து]

தமிழ் நாட்டிற்கெனத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதுபற்றி ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்கள் ஆலோசித்தார்கள் என்பதே பெரிய காரியந்தானே! அந்த ஆலோசனையின் முடிவில் குழு தந்த பரிந்துரை என்ன? 'தமிழ் நாட்டுக்கெனத் தனிப் பல்கலைக் கழகம் வேண்டாம்' என்பதுதானே! அதனைத் திரு. பி. டி. ஆர். வெளிப்படையாகச் சொல்லாமல் மழுப்பி, ''அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டம் நிறைவேற்றப்பட்டது'' என்கிறார்.

உண்மையென்னவென்றால், தமிழ் நாட்டுக்கெனத் தனியாக ஒரு பல்கலைக் கழகம் வேண்டுமென்று தமிழ் மக்கள் ஜஸ்டிஸ் கட்சி ஆட்சியைக் கட்டாயப்படுத்தவில்லை என்பதுதான்.

ஆந்திரப் பல்கலைக் கழகம் தோன்றியதால், உயர் கல்வித் துறையிலே ஆந்திர நாடு சென்னை மாகாணத்திலிருந்து பிரிந்துபோனது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தோன்றியதால் அத்தகைய பிரிவினை எதுவும் ஏற்படவில்லை. அது, தமிழகப் பல்கலைக் கழகமும் அல்ல. அதிலே, தமிழ் முதன்மை பெறவும் இல்லை. ஆங்கிலமே அதில் எங்கும் எதிலும் அன்றும் இன்றும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

டாக்டர் சுப்பராயன் தலைமையிலிருந்த சுயேச்சை அமைச்சரவைதான் உத்தியோகங்களை விநியோகிப்பதில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஏற்படுத்தியதென்றாலும், அதிலே ஜஸ்டிஸ் கட்சிக்காரரான அமைச்சர் எஸ். முத்தையா முதலியார்தான் மிகுந்த அக்கரை காட்டினார் என்று சொல்லப்படுகிறது.

அரசாங்க உத்தியோகங்களை பிராமணர்கள் தங்கள் சதவிகிதத்திற்கும் அதிகமாகப் பெற்று வந்ததனைத் தவிர்ப்பதற்காகவே "கம்யூனல் ஜி. ஓ." என்பதாக ஒரு ஆணை அமுல் நடத்தப்பட்டது. சாதிகளிடையே நீதியையும் சமத்துவத்தையும் விரும்பும் எவரும் இதனை ஆதரிப்பது இயற்கை. அப்படித்தான் தமிழரிலே பிராமணரல்லாதார் இதனை ஆதரித்திருக்க வேண்டும்.

தமிழகம் — ஆந்திரம் — கன்னடம் — மலையாளம் ஆகிய நான்கு மொழிப் பிரதேசங்கள் அடங்கிய சென்னை ராஜ்யத்தின் உத்தியோகங்களிலே தமிழினத்தார் தங்கள் சதவிகிதத்திற்கேற்ப உத்தியோகங்களைப் பெற முடியாத நிலை இருந்து வந்தது. இது, இயற்கையாக ஏற்பட்ட நிலையன்று. ஜஸ்

டிஸ் கட்சியானது ஆந்திர ஜமீன்தார்களின் செல்வாக்கிலே சிக்கியிருந்ததால் ஏற்பட்ட தீய விளைவாகும்.

இந்தக் கேட்டிலிருந்து தமிழினத்தின் உத்தியோக நலன்களைக் காப்பாற்றிட மொழிவாரி இனங்களிடையே—அந்த இனங்களின் சத விகிதத்திற்கேற்ப—உத்தியோகங்களைப் பிரித்து வழங்குவதற்காகத் தனியாக 'இனவாரி ஜி.ஓ.' ஏற்படுத்தியிருக்க வேண்டும். இப்படி, இன அடிப்படையில் அல்லாமல் வகுப்பு அடிப்படையில் ஜி.ஓ. பிறப்பித்ததானது, உயர் உத்தியோகங்களைத் தமிழரல்லாதாரே ஆக்கிரமித்து வந்த நிலை நீடிப்பதற்கே உதவிகரமாக அமைந்தது. தமிழரிலே பிராமணர்களேனும் ஓரளவு உயர் உத்தியோகங்களைப் பெற்று வந்தார்களே, அதனையும் கெடுத்துவிட கம்யூனல் ஜி. ஓ. உதவியாக அமைந்தது. ஆனால், இதுபற்றி அந்நாளில் தமிழரில் யாரும் சிந்தித்ததாகக்கூட வரலாற்றிலே செய்தி இல்லை.

ஒவ்வொரு துறையிலும் உயர் அலுவல்களுக்கு நேரடியாக நியமனம் செய்தபோது தமிழருக்கு நியாயம் கிடைக்கவில்லை. அதிலும், தமிழரல்லாதாரே வாழ்வு பெற்றனர். அதற்குச் சான்றாக நீதித் துறையிலிருந்து ஒரு சான்று காட்டுகிறேன்.

1921–லிருந்து 1926 வரை மாவட்ட நீதிபதிகளாக நால்வர் பதவி உயர்வு மூலமாக அல்லாமல் நேரடியாக நியமிக்கப் பெற்றனர். அந்த நால்வருமே தமிழரல்லாதார். அவர்கள் பெயர்கள் வருமாறு:

கே. பி. லட்சுமண ராவ் (1921) — (கன்னட பிராமணர்)

கே. எஸ். மேனன் (1921) — (மலையாளி)

பி. சி. லோபோ (1926) — (கன்னடர்)

வி. கோவிந்த மேனன் (1926) — மலையாளி.

கம்யூனல் ஜி. ஓ. வால் நீதிக் கட்சித் தமிழர் எதிர்பார்த்த பலன் தமிழ் நாட்டிற்குக் கிடைக்கவில்லை:

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறைக்கு சென்னை மாகாண அரசு ஆணை பிறப்பிக்கு முன்னதாகவே அதற்குக் காங்கிரஸ் வட்டாரத்திலேயும் ஆதரவு இருந்தது.

தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாணசுந்தரனார் தலைமையில் 1925-நவம்பர் 21, 22 தேதிகளில் காஞ்சியில் தமிழ்மாகாண காங்கிரஸ் மாநாடு கூடியது. விஷயாலோசனைக் குழுவிலே திரு. எஸ். இராமநாதன் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கோரும் தீர்மானமொன்றை முன்மொழிந்தார். அந்நாளில் 'நாயக்கர்' என்ற சாதிப் பெயரை சிறப்புப் பெயராகப் பெற்றிருந்த ஈ. வே. ரா. அவர்கள் வழிமொழிந்தார். இதுபற்றித் திரு. வி. கலியாணசுந்தரனார் கூறக் கேட்போம்:

"வகுப்புரிமைத் தீர்மானம் விஷயாலோசனைக் கூட்டத்தில் திரு. நாயக்கர் சார்பிலே திரு. எஸ். இராமநாதனால் கொணரப்பட்டது. சிறிது நேரங்கடந்து அவண் போந்த நண்பர் நாயக்கர் அதை ஆதரித்தார். அவ்வேளையில் திரு. கிருஷ்ணசாமிப் பாவலர் 'நூற்றுக்குத் தொண்ணூறு பேர் பிராமணரல்லாதாராயிருத்தல் வேண்டும்' என்றொரு துண்டு ஒட்ட வைத்தார்.

"அதே நேரத்தில் கும்பகோணம் திரு. சுப்பிரமணியப் பிள்ளை ஒரு தீர்மானம் கொணர்ந்து என்பால் சேர்த்தார். அதன்கண் 'நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் பிராமணரல்லாதாராயிருத்தல் வேண்டும்' என்பது கண்டிருந்தது. அதன் வரலாற்றை ஆராய்ந்ததில், அது ஒரு சத்திரத்தில் திரு. கோவை இராமலிங்கஞ் செட்டியார் தலைமையின் கீழ்க்கூடிய பிராமணரல்லாதார் கூட்டத்தில் நிறைவேற்றப் பெற்றது என்று தெரிய வந்தது.

"முடிவில் திரு. இராமநாதன் தீர்மானம் வாக்குக்கு விடப்பட்டது. அது தோல்வியுற்றது. பின்னர் அதை மாநாட்டில் வலியுறுத்தப் போவதாகத் திரு. இராம நாதன் அறிவித்தார். அவ்வறிப்பு ஏற்றுக் கொள்ளப் பட்டது.

"பின்னை மாநாடு கூடியதும், விஷயாலோசனைக் கூட்டத்தில் வகுப்புரிமைத் தீர்மானம் தோல்வி யுற்றமையால், அதை மாநாட்டில் கொணர்தற்கு இருபத்தைந்து பிரதிநிதிகள் கையெழுத்து வேண் டற்பாலன என்று அறிக்கை செய்யப்பட்டது. அவ் வாறே கையெழுத்துகள் வாங்கப்பட்டன.

"பின்னே, பாடலிபுர முடிவின்படி முதல் தீர்மானம் (சட்ட சபை நுழைவு கூடாதென்பது) நிறைவேறப் பெற்றமையானும், சட்ட சபை நுழைவில்லாதபோது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இடம் பெறுதாக லானும், சட்ட சபைத் தேர்தல் முதலியன சுயராஜ்யக் கட்சியைப் பொறுத்து நிற்றலானும், (அதுபோழ்து சட்ட சபை நுழைவை ஆதரியாத) காங்கிரஸ் சார்பிலே கூட்டப் பெற்ற இம்மாநாடு வகுப்புரிமைத் தீர் மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டுவதே அநாவசி யம் என்று எண்ணி, அத்தீர்மானத்தை ஒழுங்கீனமென யான் தள்ளிவிட்டேன்."

['நவசக்தி' 18—12—25]

வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கோரிக்கை பற்றித் திரு. வி. க. வின் கருத்து வருமாறு:

"வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஆதரித்து இது காறும் எவ்வவைக்களத்திலும் பேசியதுமில்லை; எழுதி யதுமில்லை. அதனால் விளையுந் தீமைகளைப்பற்றிப் பல இடங்களில் பேசியிருக்கிறேன்; எழுதியுமிருக்கிறேன்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் நாட்டுக்கு நலன் விளையாதென்பது எனது உள்ளக் கிடக்கை.''

['நவசக்தி', 18—12—25; தமிழ்ச் சோலை, பக். 332]

திரு. வி. க., தமிழ் மொழிப் பற்றும், தமிழர் என்ற இனப்பற்று முடையவர். அப்படியிருந்தும், அவர்கூடப் பொதுவாகத் தமிழருக்கு—குறிப்பாக, பிராமணரல்லாத தமிழருக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை நலன் தராது; பிராமணரல்லாதாரினும் தமிழரல்லாதாருக்கே நலன் தரும் என்பதை உணர்ந்து அதனை எதிர்க்கவில்லை. இந்திய விடுதலை இயக்கத்திற்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் தீங்கிழைக்கும் என்ற ஒரே காரணத்தாலேயே திரு. வி. க. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை எதிர்த்தார். இதனை, காஞ்சிபுரம் மாநாட்டில் தாம் நிகழ்த்திய தலைமை முடிவுரையிலேயே அவர் கூறியுள்ளார்.

''பிராமண—பிராமணரல்லாதார் வேற்றுமை அதிகமாயிருக்கிறது. இவ்வேற்றுமையை இன்னும் வளரவிட்டால் நாம் சுயராஜ்யம் பெறப் போவதில்லை. சாதி வேற்றுமை உணர்ச்சியைக் கடலில் அழுத்திவிட்டு எல்லோரும் இந்நாட்டு மக்கள், இந்தியர் என்ற உணர்ச்சியை வளர்ப்போமாக.''

[திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்; பக். 365.]

காஞ்சி மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தை முன் மொழிந்தும் வழிமொழிந்தும் திருத்தம் தந்தும் பேசிய திரு. எஸ். இராமநாதன், பெரியார் ஈ. வே. ரா., தெ. பொ. கிருஷ்ணசாமி பாவலர் ஆகியோரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் தமிழ் நாட்டவரைவிட தமிழரல்லாதாரே அதிக அளவில் பலன் துய்ப்பார்கள் என்பதனை அறிந்திருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. மாருக, பிராமணர் ஆதிக்கத்தை அழிப்ப தொன்றையே அவர்கள் தங்கள் முதலும் முடிவுமான குறிக்கோளாகக் கொண்டனர்.

காஞ்சி மாநாட்டிலே வகுப்புவாரி, பிரதிநிதித்துவம் பற்றிப் போராட்டம் எழுந்ததும், அது காரணமாக ஈ. வே. ராவும், எஸ். இராமனுதனும் காங்கிரஸிலிருந்து விலகியதும் 1925 நவம்பரில் நிகழ்ந்தவையாகும். டாக்டர் சுப்பராயன் ஆட்சிதான் 'கம்யூனல் ஜி. ஓ.' பிறப்பித்தது. அவரது அமைச்சரவையிலே திரு. என். ஆர். சேதுரத்தினம் ஐயர் என்ற அந்தணரும் இருந்தார் என்பதனை இங்கு நினைவூட்டுவது அவசியமாகும். முதலமைச்சர் டாக்டர் சுப்பராயன் அவர்களே, பிராமணப் பெண்மணியை மணந்தவர். ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுத்திய பிராமண எதிர்ப்புணர்ச்சியானது காங்கிரசையும் ஊடுருவியது என்பதற்குக் காஞ்சி மாநாடு சிறந்த சான்ருகும்.

கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனுர் ஸ்தாபன ரீதியில் தம் வாழ்நாள் முழுவதும் ஜஸ்டிஸ் கட்சியை வெறுத்தார். ஆம்; அது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை ஆதரித்த போக்குப் பிடிக்காததால்! ஆனுல் அவர்கூட அக்கட்சியினரின் வகுப்புப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை ஆதரித்தார். 1927-ம் ஆண்டில் சேலம் மாவட்ட காங்கிரஸ் மாநாட்டின் தலைமையுரையிலேயே வகுப்புரிமைக் கோரிக்கையைக் காங்கிரஸ் ஏற்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். அதனை, 'எனது அரசியல் பெருஞ்சொல்' என்ற அவரது நூலில் காணலாம். தூய தமிழரான வ.உ.சியும் கம்யூனல் ஜி. ஒ. வானது தமிழரல்லாதாருக்கே நன்மை பயப்பதாக இருந்து வந்ததனை நினைவில் கொள்ளத் தவறி விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

பிராமணத் தமிழரிலே மொழிப்பற்றும் இனப்பற்றுமுடைய சிலர் ஜஸ்டிஸ் கட்சியின் போக்கு கண்டு வருந்தியதுண்டு. அவர்களிலே புரட்சி வீரர் வ. வே. சு. ஐயர், தேசியக்கவி சுப்பிரமணிய பாரதி ஆகியோர் முக்கியமானவர்கள். சுப்பிரமணிய பாரதியார் முதன் முதலாக அமைந்த ஜஸ்டிஸ் கட்சி அமைச்சரவையிலே தமிழருக்கு இடமில்லை என்று பிராமணரல்லாத தமிழர்களிலே முன்னணியிலுள்ள

வேளாளருக்கு குறையிருக்கிற தென்பதனை "சுதேச மித்திரன்" பத்திரிகையில் சூசகமாகக் குறிப்பிட்டதனை முன்பே எடுத்துக்காட்டி இருக்கிறேன்.

வ.வே.சு. ஐயர், 'ஜஸ்டிஸ் கட்சியானது ஆந்திரரும் மலையாளியும் சேர்ந்து உண்டாக்கியது' என்று தமது 'பாலபாரதி' (மே-1925) இதழிலே எழுதினர். ஆனால், அவர்கூட ஜஸ்டிஸ் கட்சியால் தமிழினத்துக்கு ஏற்பட்டு வரும் கேடுகளை எடுத்துக்கூற முற்படவில்லை. இந்திய தேசிய கோணத்திலிருந்து தான் ஜஸ்டிஸ் கட்சியை அய்யர் குறைகூறினர்.

ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்றுவித்த சர். பி.டி. தியாகராய செட்டியார் அமரரானபோது அதற்கு வருந்தி வீரர் வ.வே.சு. ஐயர் தமது 'பாலபாரதி'யில் (மே-1925) எழுதியது வருமாறு:

> "மாண்டேகு — செம்ஸ்போர்டின் சீர்திருத்தங்கள் யோசனையிலிருந்தபோது ஸர். பி.டி. தியாகராய செட்டியாரும் திரு. மாதவ நாயரும் சேர்ந்து செய்த பிராமணரல்லாதார் கிளர்ச்சி எதிரிகளுக்குத்தான் அனுகூலமாயிற்று என்று நாம் குறிப்பிடாமலிருக்க முடியாது.
>
> "நமக்கு பிரிவினைகளை எவ்வாறு உண்டாக்கி வளர்க்கலாம் என்று ஆய்ந்து கொண்டிருந்த அதிகாரிகளுக்குத் தமிழ்நாட்டில் ஆந்திரரும் மலையாளியும் சேர்ந்து உண்டாக்கிய பிளவுகள் புதையல் கண்டெடுத்த தனம் போலாகி விட்டன.
>
> "தமிழ் ராஜ தந்திர உலகத்தில் பரஸ்பர துவேஷமும் அவநம்பிக்கையும் தோன்றி ஓர் ஐந்தாறு வருஷ காலத்துக்கு நமது ராஜிய வளர்ச்சியைத் தடைப்படுத்தி இருப்பதல்லாமல் இப்போது புதிதாகக் கிளைத்திருக்கிற வகுப்புத் துவேஷத்துக்கு விதை போட்டு வைத்து விட்டன.

"ஸ்ரீமான் செட்டியார் தமது அபாரமான உத்ய மத்தையும் செல்வாக்கையும் ஜாதீய வளர்ச்சிக்குச் சாதக மாகப் பிரயோகித்து உதவி மறுத்தல் தர்மத்தைக் கைக் கொண்டிருந்தாரானல், இன்று நாம் சுதந்திரத்தைப் பெறும் நாள் மிகவும் நெருங்கி இருக்கும் என்பதில் சந்தேக மில்லை.

"இருப்பினும், தென்னுட்டுப் பிராமணரல்லாதார் மனதில் தன்னம்பிக்கையை வளரச் செய்து வைத்தது இவரது புகழாகும். அதனேடு சேர்ந்து வந்திருக்கும் உத்தி யோகப் பற்றும் வகுப்புத் துவேஷமும் மறைந்து விட்டத ஞல், இத் தன்னம்பிக்கை ஜாதியின் உன்னதிக்குப் பெரிதும் பயன்படுமாதலால், தென்னுடு அவருக்குக் கடப்பாடுடைய தாகவே இருக்கிறது.

"தவிர பழுத்த வயதில் மரணப் படுக்கையில் படுக்கிற வரையில் தனக்குச் சரி என்று தோன்றிய வழிகளில் ஜன ஊழியம் செய்வதற்குப் பின் வாங்காமலிருந்து ஸ்ரீ செட்டி யார் பிற்காலத்தவருக்குச் சிறந்ததோர் வழிகாட்டியாகவும் விளங்குகிருர். அவரது ஆத்மா சாந்தத்தைப் பெறுக. அவரது குடும்பத்தினருக்கு நமது அனுதாபத்தைத் தெரி வித்துக் கொள்ளுகிருேம்."

('பால பாரதி', பக்கம் 130. மே 1625)

பொதுவாக, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் 'தமிழர்' என்ற இனவுணர்வுடையவர்களாலும் ஆதரிக்கத் தக்கதே என்பதில் ஐயமில்லை. அதற்கு ஜஸ்டிஸ் கட்சிக்காரரா கவோ, பிராமணத் துவேஷியாகவோ இருந்தாக வேண்டு மென்ற அவசியமில்லை. இந்த உண்மையை உணர்ந்துதான் வகுப்புரிமைக் கோரிக்கையை காங்கிரஸின் கொள்கையாக்கி விட பெரியார் ஈ. வே. ரா. காஞ்சி மாநாட்டில் முயன்றிருக்க வேண்டும். ஆனுல், அவரது முயற்சி வெற்றி பெருததோடு, அவர் காங்கிரசிலிருந்து வெளியேறிய துரதிர்ஷ்டமான சம் பவமும் காஞ்சி மாநாட்டிலேதான்—வகுப்புரிமைத் தீர்மானம்

திரு. வி. க. வால் நிராகரிக்கப்பட்டதன் காரணமாகத் தான்—நிகழ்ந்தது. அது நிகழ்ந்து அரை நூற்றுண்டு கடந்த பின்னர், இன்று உணர்கிறேம், வகுப்புவாரிப் பிரதி நிதித்துவ முறையால் தமிழினத்தாருக்கு நன்மையை விடவும் தீமையே அதிகம் விளைந்தது என்பதனை.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய 1917 ஆம் ஆண்டிலே பிராமணருக்கு எதிராக வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையைக் கோரக் கூடிய சூழ்நிலை சென்னை மாகாணத்தில் இருந்ததென்னவோ உண்மைதான். ஆனல், ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி தோன்றிய ஐந்தாண்டுகளுக்குப் பின் அந்தச் சூழ்நிலை மாறிவிட்டது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்குப் பதி லாக, இனவாரிப் பிரதிநிதித்துவம் கேட்டாக வேண்டிய சூழ்நிலையில் தமிழர் இருந்தனர். ஆனல், அது தமிழ ராலேயே புறக்கணிக்கப்பட்டது. இந்தத் தவறுக்கு ஜஸ்டிஸ் கட்சித் தமிழர் மட்டுமின்றி, காங்கிரஸ் கட்சித் தமிழரும் காரணமாவர் என்பதனை இங்கு ஒளிவு மறைவின்றி நான் சொல்லியாக வேண்டும்.

கொள்கைப் பிரகடனம்

பிராமணரல்லாதார் இயக்கமானது பயன் தருவதிலே தமிழரல்லாதார் இயக்கமாகத்தான் இருந்தது என்பதனை இதுகாறும் எடுத்துக் காட்டினேன். இனி, பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றியபோதிருந்த சூழ்நிலையையும், அது தோன்றுவதற்குத் தூண்டுதலாக இருந்த சக்திகளையும் பற்றி ஆராய்வோம்.

சர். அலெக்சாண்டர் கார்டியூ என்ற ஆங்கிலேயர் (இவர், 1915–ல் கவர்னர் நிர்வாகக் கவுன்சில் உறுப்பினரானார்) இந்திய பப்ளிக் சர்விஸ் கமிஷன் முன்பு 1913–ல் சாட்சியமளித்தார். அதிலே, சென்னை மாகாண அரசாங்க சர்வீசுகளிலே பிராமணருக்குள்ள ஆதிக்கத்தைப் புலப்படுத்தும் புள்ளி விவரங்களை வெளியிட்டார். அது வருமாறு:

> ''இந்தியன் சிவில் சர்வீசுக்கென இங்கிலாந்திலும் இந்தியாவிலும் ஒரே சமயத்தில் வைக்கப்படும் தேர்வுகளில் பிராமணர்களே முழுதும் வெற்றி பெறுகின்றனர்.
>
> ''1892 முதல் 1904 வரை நடைபெற்ற போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்ற 16 பேர்களில் 15 பேர் பிராமணர்கள். அது, 100க்கு 95 என்ற சதவிகிதமாகும்,

"சென்னை மாகாணத்தில் உதவிப் பொறியாளர் வேலைக்கு நபர்கள் எடுக்கப்பட்டபோது, 20 ஆண்டு காலத்தில், பிராமணர் 17 பேராகவும் பிராமணர் அல்லாதார் 4 பேராகவும் எடுக்கப்பட்டனர்.

"கணக்குத் தணிக்கைத் துறையில் நடைபெற்ற தேர்வுகளிலும் இதேமாதிரி முடிவே இருந்தது.

"சென்னை மாகாணத்தில் உதவி கலெக்டர் பதவிக்கான 140 இடங்களில் பிராமணர்க்கு 77 இடங்கள்; பிராமணரல்லாதாருக்கு 30 இடங்கள்; ஏனைய முகமதியர், இந்திய கிறித்துவர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் முதலானவர்க்குக் கிடைத்தன.

"1913ல் மாவட்ட நடுவர்களுக்குரிய 128 நிலையான இடங்களிலே பிராமணர்கள் 93 இடங்களுக்கும், பிராமணரல்லாதார் 25 இடங்களுக்கும், இந்திய கிறித்துவர், ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் எஞ்சிய இடங்களுக்கும் நியமிக்கப்பட்டனர்."

[இது, சர். பி. தியாகராயர் 1916ல் வெளியிட்ட 'பிராமணரல்லாதார் கொள்கைப் பிரகடனம்' என்ற பிரசுரத்தில் எடுத்துக் காட்டாகத் தரப்பட்டுள்ளது.]

சர். அலெக்சாண்டர் தந்துள்ள தகவல்கள் உண்மையானவையாகவே இருக்கலாம். ஆனால், அவர் அதைத் தந்ததற்கு உள்நோக்கம் உண்டு.

உதவிப் பொறியாளர் வேலைக்கு எடுக்கப்பட்டவர்களின் சாதிவாரிக் கணக்கைத் தரும் சர். அலெக்சாண்டர், தலைமைப் பொறியாளர்கள் நியமனம் பற்றி மௌனம் சாதிக்கிறார். அப்படியே, உதவிக் கலெக்டர்கள் நியமனத்திலே பிராமணர்–பிராமணரல்லதார் கணக்கைப் பிரித்துக் கூறும் அலெக்சாண்டர், மாவட்டக் கலெக்டர் பதவிகள் பற்றிய விவரத்தைக் கூறாமல் விட்டிருக்கிறார்.

இதற்கெல்லாம் காரணம், அவர் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன் சாட்சியமளித்த 1913ஆம் ஆண்டிலே தலைமைப் பொறியாளர், மாவட்ட கலெக்டர் பதவிகள் ஆங்கிலே யருக்கே உரிமையாக்கப்பட்டிருந்ததுதான். பதவி உயர்வு மூலமாகக் கூட இந்தியரில் எந்த சாதியாரும் தலைமைப் பொறியாளராகவோ, மாவட்டக் கலெக்டராகவோ வருவ தற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை. தேசபக்தியும் சமூக நீதி யிலே ஆர்வமும் உடைய இந்தியர்களுக்கு ஆங்கிலேயர், பிராமணர் ஆகிய இரு வகுப்பாரின் ஆதிக்கமும் நியாய மற்றவை, நீடிக்கக் கூடாதவையென்றே தோன்றும்.

முதல்தரமான உத்தியோகங்களில் அந்நியரான ஆங்கி லேயர் பெற்றிருந்த ஆதிக்கத்தை—அநியாயத்தை நியாய மாக்கிவிடும் உள்நோக்குடன்தான் சர். அலெக்சாண்டர் இரண்டாந்தரமான உத்தியோகங்களிலே பிராமணர் பெற் றிருந்த செல்வாக்கினை எடுத்துக் காட்டி பிராமணரல்லா தாருக்குவிழிப்பூட்டினுர் என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

சுருங்கச் சொன்னுல், இந்திய மயமாக்கப்படும் உத்தியோ கங்களெல்லாம் எப்படி பிராமணமயமாகி வருகின்றன என் பதனை சர். அலெக்சாண்டர் பிராமணரல்லாதாருக்கு எடுத்துக் காட்டினுர் என்று கொள்ளலாம். இதன் மூலம் உயர் உத்தியோகங்களை இந்திய மயமாக்கக் கோரி அந் நாளில் காங்கிரஸ் மகாசபை செய்து வந்த கிளர்ச்சியால் தங்களுக்கு நன்மை விளையாது என்பதனை பிராமணரல்லா தார்க்கு உணர்த்துவதே அலெக்சாண்டரின் உள் நோக்க மாகும்.

உயர் பதவிகளெலாம் ஆங்கிலேயர்க்கே உரிமையாக்கப் பட்டிருந்ததற்கு அன்று ஆங்கிலேயர் கூறிய ஒரே சமா தானம் அந்தப் பதவிகளை அடைவதற்கான தகுதியும் திறமை யும் உடையவர்கள் இந்தியர்களிலே யாரும் இல்லை என்ப தாகும். இதைத்தான் பிராமணர்களும் கூறுகிருர்கள் என்பது அலெக்சாண்டர் கார்டியூவுக்குத் தெரியும்.

எப்படியோ, தமது சாட்சியத்திலே சர். அலெக்சாண்டர் தந்த தகவல்கள் பிராமணரல்லாதாரிடையிலிருந்த படித்த மக்களைப் பெரிதும் கவர்ந்தது அதனால், பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றுவதற்கு சர். அலெக்சாண்டர் வித்தூன்றி விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்றுவித்த இருவரில் ஒருவரான சர். பி. தியாகராய செட்டியார், தாம் வெளியிட்ட "பிராமணரல்லாதார் கொள்கைப் பிரகடனத்"திலே சர். அலெக்சாண்டரைப் பின்பற்றி பிராமண ஆதிக்கம் குறித்து மேலும் சில தகவல்களைத் தந்திருக்கிறார். அது வருமாறு:

"இந்தியர்களுக்குக் கொடுக்கப்படும் மிக உயர்ந்த பதவிகள் எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன என்பதை நாம் இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.

"ஆளுநரின் ஆட்சிக்குழுவிற்கு இந்தியர்களும் நியமிக்கப்படலாம் என்று முடிவு செய்தபின் மூன்று பேர்கள் அடுத்தடுத்து நியமிக்கப் பெற்றனர். அவர்களில் கடைசி இருவர் பிராமண வழக்கறிஞர்கள்.

"ஐந்து இந்திய உயர்நீதி மன்ற நீதிபதிகளில் நால்வர்—அதாவது, இந்துக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம்—பிராமணர்களே நியமிக்கப் பெற்றனர்.

"1914ல் அரசாங்கத்திற்கு ஒரு புதிய செயலாளர் பதவியைத் தோற்றுவித்து அதில் ஒரு பிராமணரை நியமித்தனர்.

"ரெவின்யூ போர்டின் இந்தியச் செயலாளர் ஒரு பிராமணர்.

"அரசாங்க அலுவல்களிலிருந்து மாவட்டக் கலெக்டர்களாக இருவர் நியமிக்கப்பட்ட பொழுது பிராமணர்களே நியமிக்கப் பெற்றனர்."

சர். அலெக்சாண்டருஞ் சரி; சர். பி. தியாகராயருஞ் சரி; தாங்கள் எடுத்துக் காட்டும் நியமனங்களுக்கு ஆங்கிலேயர் தான் பொறுப்பு என்பதனை மறந்தோ, மறைத்தோ வழக்காடினர். ஆங்கிலேயக் கவர்னரோ, மாகாண அரசின் தலைமை அலுவலகச் செயலாளரோ, அரசாங்கத் துறை தோறும் தலைமை பெற்றிருந்த ஆங்கிலேய உயர் அதிகாரிகளோ விரும்பியிருந்தால் பிராமணர்கள் அதிக அளவில் உயர் பதவிகள் பெறுவதைத் தவிர்த்திருக்கக் கூடும். அதைச் செய்யாமல், அவர்களே பிராமண ஆதிக்கத்திற்கு வழிவிட்டு, அதையே பயன்படுத்தி பிராமண—பிராமணரல்லாதாரிடையே வகுப்புப் பூசலை வளர்க்கவும் முன் வந்தனர்.

பிராமணர் ஆதிக்கத்தால் பாதிக்கப்படாத வகையில் இந்தியக் கிறித்துவர், ஆங்கிலோ இந்தியர், ஐரோப்பியர், முஸ்லிம்கள் ஆகியோருக்கு மட்டும் தனியாக சட்ட திட்டங்கள் வகுத்து, அவர்களுக்கு உயர் உத்தியோகங்களை அளித்து வந்தனர்—அதுபோல, பிராமணரல்லாத இந்துக்களுக்கும் உயர் உத்தியோகங்கள் கிடைக்க வழிவகை செய்திருந்தால் அதை பிராமணர்கள் தடுத்திருக்க முடியாது.

பிராமணரல்லாதார் உயர் உத்தியோகங்களுக்கு நியமிக்கப்படவேண்டுமானால், அவர்கள் பிராமணருக்கு எதிராகவும், பிரிட்டிஷாருக்கு ஆதரவாகவும் ஓர் அரசியல் அணியாக அமைய வேண்டும் என்று ஆங்கிலேயர் எதிர் பார்த்தனர். ஆம்; இந்த 'விலை'யைப் பெறுமல் பிராமணரல்லாருக்கு நீதி வழங்க ஆங்கிலேயர் தயாராக இல்லை. அவர்கள், பாலுக்கும் காவல்; பூனைக்கும் தோழன் என்ற நிலையில் செயல்பட்டனர்.

சென்னை மாகாண உயர் உத்தியோகங்களில் பிராமணர்களே நியமிக்கப் பெற்று வந்தனர் என்று சர். பி. அலெக்சாண்டரும், சர். பி. தியாகராயரும் பொதுப்படக் கூறினரென்றாலும், அந்தப் பிராமணர்களெல்லாம் அநேகமாக தமிழர்களாகத்தான் இருந்தனர்.

சர். பி. தியாகராயர் பிராமணரல்லாதார் கொள்கைப் பிரகடனம் வெளியிட்ட நாள்வரை சென்னை உயர்நீதி மன்றத்திலே நீதிபதி பதவிகளைப் பெற்று வந்த இந்தியர்கள் பெயர்கள் வருமாறு:

சர். பி. முத்துசாமி ஐயர்	1878—95.
சர். எஸ். சுப்பிரமணிய ஐயர்	1895—1907.
வி. பாஷ்யம் ஐயங்கார்	1901—1904.
சி. சங்கரன் நாயர்	1908—1915
வி. கிருஷ்ணசாமி ஐயர்	1909—1911
பி. ஆர். சுந்தரம் ஐயர்	1911—1913.
டி. ஏ. சதாசிவ ஐயர்	1912—1921.
டி. வி. சேஷகிரி ஐயர்	1914—1920
சி. வி. குமாரசாமி சாஸ்திரி	1914—1930.

இந்தப் பட்டியலிலுள்ள ஒன்பதின்மரிலே எண்மர் பிராமணத் தமிழர்; ஒருவர் பிராமணரல்லாத மலையாளி. சர். பி. தியாகராயர், 'உயர் நீதிமன்ற நீதிபதி பதவிகள் பெற்ற இந்துக்களிலே ஒருவர்தான் பிராமணரல்லாதார்' என்று கூறி, மலையாளியான அவரது நியமனத்தில் உடன்பாடு தெரிவிக்கிறார். மற்றுள்ளவர்கள் இனத்தால் தமிழர்களாக இருப்பதனை நினைவில் கொள்ள மறுத்து, அவர்கள் பிராணமர்கள் என்ற காரணத்திற்காக, அவர்களுடைய நியமனங்களைக் கண்டிக்கிறார். சர். பி. டி., மொழியால் தெலுங்கராயினும், வாழும் பிரதேசத்தால் தமிழ் நாட்டவராவார். அப்படியிருந்தும், தமிழ் நாட்டின் நலனை நினைவில் கொள்ளத் தவறினார்.

டாக்டர் நாயர் முதலில் தமிழரல்லாதார் இயக்கமொன்றைத் தொடங்கவே திட்டமிட்டாரென்றும், அதுபற்றி, அப்போது சென்னை மாநில கவர்னராக இருந்த லார்டு வில்லிங்டனிடம் கலந்து ஆலோசித்தபோது, பிராமணத் தமிழர் வளர்ச்சியில் பிராமணரல்லாத தமிழருக்கும்

அதிருப்தி நிலவுவதால், சென்னை மாகாணம் முழுவதற்கு மாகப் பிராமணரல்லாதார் இயக்கம் ஒன்றைத் தொடங்கு வதே நல்லதென்று கவர்னர் கூறியதாகவும், அதன் பின்னர், சர். பி தியாகராச செட்டியாரைக் கலந்தாலோசித்து இருவரு மாகச் சேர்ந்து பிராமணரல்லாதார் இயக்கத்தைத் தொடங்கியதாகவும் பல பெரியவர்கள் சொல்லிக் கேட் டிருக்கிறேன்.

உண்மையில், உத்தியோகத் துறையில் பிராமணர் ஆதிக்க மென்பது, கேரள—ஆந்திர இனத்தவர் பார்வை யிலே அன்று தமிழர் ஆதிக்கமாகத்தான்பட்டது. அதனுல் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் உயர் கல்வி கற்றவர்களிலே முன்னணியிலிருந்த மலையாளிகளே யென்பதில் ஐயமில்லை. அதனை நினைவில் கொண்டு பார்க்கும்போது, டி. எம். நாயர்–கவர்னர் வில்லிங்டன் சந்திப்புபற்றிக் கூறப்படும் செய்தியை நம்பவேண்டி யிருக்கிறது.

டாக்டர் டி. எம். நாயர், நீதிக் கட்சியைத் தோற்று விப்பதற்கு முன்பு, காங்கிரஸ் மகாசபையிலே சேர்ந்திருந் தார். 1898ல் சென்னையிலே கூடிய காங்கிரஸ் மகாசபையில் கலந்து கொண்டு, இந்திய மருத்துவ சர்வீசிலுள்ள இந்தியர் களின் துயர்துடைக்கும் தீர்மானமொன்றை முன்மொழிந்து, அதனை நிறைவேற்றி வைத்தார். 1904 ஆம் ஆண்டில் சித்தூர் நகரில் நடைபெற்ற வடாற்காடு மாவட்ட காங் கிரஸ் மாநாட்டில் தலைமை வகித்தார்.

1904ல் பிராமண வாக்காளர் நிறைந்த திருவல்லிக் கேணித் தொகுதியிலிருந்து அவர் சென்னை மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பின்னரும் தொடர்ந்து மும்முறை அந்தத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே தொகுதியில் நான்காவது முறை தமிழ் வாக்காளரால் தோற்கடிக்கப் பெற்ருர். சிலருக்குப் பதிலாக தேச விடுதலைப் போரில் கலந்திருந்த தமிழர் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இதைப்பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் திரு எஸ். ஜி. மணவாள ராமானுஜம் அவர்கள் கூறுவது வருமாறு:

"டாக்டர் நாயர் சென்னை மாநகராட்சித் தேர்தலில் பிராமணர் செல்வாக்குப் பெற்றுள்ள திருவல்லிக்கேணி தொகுதியில்— திரு. எஸ். சத்தியமூர்த்தியிடமோ, திரு. பாஷ்யம் அவர்களிடமோ, எனக்குச் சரியாக நினைவில்லை— போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். இந்தத் தோல்வி யானது பிராமணரல்லாதார் இயக்கத்தில் சேரக்கூடிய துணிவை டாக்டர் நாயருக்கு அளித்தது."

[ஜஸ்டிஸ் கட்சி பொன்விழா மலரிலிருந்து]

டாக்டர் நாயர், 1916ல் சென்னை சட்டமன்றத் தொகுதி யில் இந்திய சட்டசபைக்குப் போட்டியிட்டுத் தோல்வி யடைந்தார். இந்தத் தோல்விக்கு சட்ட மன்ற பிராமண உறுப்பினர் செய்த நம்பிக்கைத் துரோகமே காரணமென்று டாக்டர் நாயர் கருதினார். இதுவும் டாக்டர் நாயர் பிராமண எதிர்ப்புணர்ச்சி கொள்ளக் காரணமாயிற்றென்று திரு. ஏ. ஏ. நாயர் என்பவர் கூறுகின்றார். அது வருமாறு:

"1916ல் சென்னை மேல் சபையிலிருந்து டில்லி சட்ட சபைக்கு நடந்த தேர்தலில் போட்டியிட்டுத் தாம் தோல்வி யடைந்ததை எண்ணி டாக்டர் நாயர் சிறிது கவலைப்பட் டார். பலர் அத்தேர்தலில் போட்டியிடும்படித் தூண்டி, தாங்கள் ஆதரிப்பதாகக் கூறினர். ஆனால், உண்மையில் சாதிப்பற்று காரணமாக நாயரைத் தோற்றடிக்க வேண்டு மென்று திட்டமிட்டு இரகசிய வாக்கெடுப்பில் தங்கள் இனத் தைச் சார்ந்தவரையே ஆதரித்தனர்.

"இந்நிகழ்ச்சி அவருடைய கருத்தை உறுதிப்படுத்தியது —அதாவது, ஜனநாயக முறையை நம் நாட்டினரால் பின் பற்ற முடிந்தாலும், அது, சாதி வேற்றுமை ஒழியும்வரை உறுதியற்றதாகவே இருக்கும் என்பதாகும்."

[ஜஸ்டிஸ் கட்சி பொன்விழா மலரிலிருந்து]

தமிழர் நிறைந்த திருவல்லிக்கேணித் தொகுதியிலே மும்முறை தேர்ந்தெடுக்கப்பட்ட மலேயாளி நான்காவது முறை தோற்கடிக்கப்பட்டதற்கு புதுமை விருப்பம் காரண மாக இருக்கலாம். அதை விடவும் தமிழரிடையே தோன்றிய இன உணர்வும் காரணமாக இருக்கலாம். ஆனல், டாக்டர் நாயரால் சாதி ரீதியாகத்தான் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஏனெனில், அதுதான் அவருக்குப் பயன் தருவதாக இருந்தது.

சர். பி. டி. தியாகராயர், சென்னே தண்டையார்பேட்டை யில் வாழ்ந்தார். பெருஞ் செல்வந்தர். அவரது மாளிகை அரசரது அரண்மனே போன்றது. காண்போரைக் கவரும் தோற்றமுடையவர். தன்னலமில்லாதவர். தாம் தொழிலில் ஈட்டிய பெரும் பொருளே நாட்டின் நலனுக்காகச் செலவழிப் பதிலே அந்நாளில் காங்கிரசிலிருந்த தேசபந்து தாசரைப் போன்றவர் ஜஸ்டிஸ் கட்சியிலே சர். பி. தியாகராயர். கட்சியின் பெயரால் எதையும் அடைய ஆசையில்லாதவராக வாழ்ந்தார். ஆம்; தமது பெயருக்கேற்ப தியாக ராசராகவே அரசியலில் காட்சியளித்தார்.

மலேயாளியான டாக்டர் நாயரும் தெலுங்கரான சர். பி. தியாகராயரும் சேர்ந்து 1916 நவம்பரில் ஜஸ்டிஸ் கட்சியைத் துவக்கினர். சென்னே நகரில்தான் தொடக்க விழா நடைபெற்றது. பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றுவதற்கு பிரிட்டிஷார் திரை மறைவிலிருந்து தூண்டி விட்டதும் ஒரு காரணமாகும்.

1914 முதல் 1918 வரை முதலாவது உலகப் பெரும்போர் நடந்தது. அந்தப் போர் முடியவிருந்த தருணத்தில்— அதாவது, 1916ல் இந்தியாவில் விடுதலேக் கிளர்ச்சியானது வீறிட்டெழுந்தது.

அன்னிபெசண்ட் அம்மையாரின் அகில இந்திய ஹோம்ரூல் லீக் சென்னேயில் ஆரம்பிக்கப் பெற்றது. திலகர், காந்தியடிகள் ஆகிய பெருந்தலேவர்கள் லீகை ஆதரித்தனர். ஐரிஷ் பெண்மணியான பெசண்ட் அம்மையாரின் செல்

வாக்கு அகில இந்தியாவிலும் கொடி கட்டிப் பறந்தது. இதே நேரத்தில் இந்திய சட்டசபை உறுப்பினர் 19 பேர் கையொப்பமிட்டு வெளியிட்ட கூட்டறிக்கையானது இந்தியாவுக்கு பிரிட்டிஷ் பேரரசுக்கு உட்பட்ட பூரண சுயாட்சி கோரியது. இந்தக் கூட்டறிக்கை தேசத்தில் மகத்தான எழுச்சியையும், பிரிட்டிஷாருக்கு அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது.

பொதுவாக, நாட்டின் அரசியல் சூழ்நிலை பிரிட்டிஷாருக்கு அச்சந்தருவதாக இருந்தது. அதனைச் சமாளிக்க, இந்தியாவுக்கு அரசியல் சீர்திருத்தம் வழங்கப் போவதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. அந்தச் சீர்திருத்தம் காங்கிரஸ் கைக்குப் போய் விடாதபடி தடுப்பதிலேயும் பிரிட்டிஷார் அக்கரை காட்டினர். 1916ஆம் ஆண்டிலே இந்திய அரசியலில் காங்கிரசை விடவும் அன்னி பெசண்ட் நடத்தி வந்த ஹோம்ரூல் லீகுக்கே அதிக செல்வாக்கு இருந்தது.

வடக்கே காங்கிரசும் முஸ்லிம் லீகும் ஒன்றுபட்டு சுதந்திரம் கோரின. 1916ல் ஒரே இடத்தில் இரண்டு மகா சபைகளும் நடைபெற்றன. முஸ்லிம்களின் உரிமைகள் சம்பந்தமாக காங்கிரசுக்கும் முஸ்லிம் லீகுக்கு மிடையே லட்சுமணபுரியில் ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. ஆம்; பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரம் வடக்கே இந்து—முஸ்லிம்கள் விஷயத்தில் செல்லுபடியாகவில்லை, அந்த நேரத்தில்தான் தெற்கே சென்னை மாகாணத்தில் பிராமணர்—பிராமணரல்லாதார் இடையில் பூசலை வளர்க்க பிரிட்டிஷார் முற்பட்டனர்.

சென்னை மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஹோம்ரூல் லீகானது பிராமணர் செல்வாக்கிலிருப்பதால் பிரிட்டிஷார் வழங்கும் அரசியல் சீர்திருத்தம் ஹோம் ரூல் லீக் மூலமாக பிராமணர் கையில் சிக்கிவிடக் கூடும் என்ற அச்சத்தை டாக்டர் டி. எம். நாயர் போன்ற பிராமணரல்லாத தலைவர்ளுக்கு ஏற்படுத்தினர் கவர்னர் வில்லிங்டன். பொதுவாகக,

பிரிட்டிஷார், சென்னை மாகாணத்தில் பிராமணரல்லாதாரில் படித்தவர்களுக்கிருந்த அதிருப்தியைப் பயன்படுத்தி தேச விடுதலைப் போருக்கு விரோதமான ஒரு பாசறையைத் தோற்றுவிப்பதிலே வெற்றி கண்டனர். இது பற்றி யூஜின் எப். இர்ஷிக் என்ற கலிபோர்னியா பல்கலைக் கழக அறிஞர் கூறுவதாவது:

"சென்னை ராஜிய அரசாங்க நிர்வாகத்திலிருந்த பிரிட்டிஷ் ஐ. சி. எஸ். அதிகாரிகள் கொண்டிருந்த பிராமண எதிர்ப்புணர்ச்சி ஜஸ்டிஸ் கட்சியின் தோற்றத்திற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்தது. ஏனென்றால், பிராமணர்களுடைய தலைமை நிர்வாக யந்திரத்திலும் சமுதாய மட்டத்திலும் பிரதிபலித்ததனை ஆங்கிலேயர்கள் மிகுந்த அச்சத்தோடு பார்த்தார்கள். அதனால், தென்னிந்திய அரசியல்—சமுதாய வாழ்வில் ஒரு சம நிலையை உருவாக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு நீதிக் கட்சிக்கு ஆதரவு தரலானார்கள்.

"அன்னிபெசண்டால் ஆரம்பிக்கப்பட்ட ஹோம் ரூல் இயக்கமானது நீதிக் கட்சியின் தோற்றத்திற்கு மற்றொரு காரணமாகும்.

"நீதிக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான டாக்டர் டி. எம். நாயர், ஹோம்ரூல் இயக்கமும் பிரம்ம ஞான சங்க நடவடிக்கைகளும் பிராமணர்கள் பெற்றிருந்த சமூக—அரசியல் செல்வாக்கை நிலைநாட்டக் கூடியவை என்ற கருத்தை பிராமணரல்லாத மக்களிடம் பரப்பினார்.

"இந்த நேரத்தில் இந்தியா மந்திரி ஹெட்வின் மாண்டேகு இந்தியாவுக்கு வந்தார். அவர் வந்த பிறகு ஏற்பட்ட விழிப்புணர்ச்சியும், அவர் கொடுத்த அரசியல் உறுதி மொழிகளும் நீதிக் கட்சியை வலுவடையச் செய்தன."

[ஜஸ்டிஸ் கட்சியின் பொன் விழா மலரில் வெளியாகியுள்ள ஆங்கிலக் கட்டுரையின் மொழி பெயர்ப்பு.]

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய ஆரம்பத்திலேயே அதன் தலைவர் சர். பி. தியாகராயர், கட்சியின் கொள்கைப் பிரகடனம் ஒன்றை வெளியிட்டார். அது, பிரிட்டிஷாரிடமிருந்து அதிகாரங்கள் இந்தியர் கைக்கு ஒரேயடியாக மாற்றப்படக் கூடாதென்று கோரியதுடன், டில்லி சட்டசபை உறுப்பினர் 19 பேர் வெளியிட்ட இந்திய சுயாட்சிக் கோரிக்கையையும் கண்டித்தது. கொள்கைப் பிரகடனத்தின் பிரதான பகுதிகள் வருமாறு:

"இந்திய சுய ஆட்சி (ஹோம் ரூல்) இயக்கத்தைப் பொறுத்தமட்டில் சென்னை மாகாணத்திலுள்ள முக்கியமான பல பிராமணரல்லாத வகுப்பினரின் கொள்கை என்ன என்பதைத் தெளிவாக வரையறுத்து அறிவிக்க வேண்டிய நிலை இப்போது தோன்றியுள்ளது. மேலும் தற்காலம் அரசியலில் இவர்களுக்குள்ள நிலை என்ன என்பதனையும் குறிப்பிட வேண்டியது இன்றியமையாததாகிவிட்டது. இம்மாநிலத்தின் மக்கள் தொகை நாலரை கோடி ஆகும். அதில் நான்கு கோடிக்குக் குறையாதவர்கள் பிராமணரல்லாதவர்களாவர். வரி செலுத்துவோர்களில் பெரும்பான்மையோரும் அவர்களேயாவர். மேலும், குறுநில மன்னர்கள், பெருநிலக் கிழார்கள், விவசாயிகள் ஆகியோரும் பிராமணரல்லாதவரேயாவர்.

"சென்னையில் அரசியல் என்ற பெயரால் நடைபெறும் இயக்கங்களில் பங்குகொள்ள உரிமை இருந்தும் அவர்கள் அதில் பங்கு கொள்ளவில்லை. மக்களிடையே தங்களுக்குள்ள செல்வாக்கை நாட்டின் முன்னேற்றத்திற்காக அவர்கள் ஒரு சிறிதும் பயன்படுத்தவில்லை. எல்லாம் கட்டுப்பாடாக நடைபெறும் இக்காலத்தில் தங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளவோ,

அரசியலைத் தொழிலாகக் கொண்டவர்கள் தங்கள் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்வதைத் தடுக்கவோ அவர்கள் ஒன்றும் செய்யவில்லை.''

ஜஸ்டிஸ் கட்சிக் கொள்கைப் பிரகடனத்தின் முன்னுரை இது. இதையடுத்து, பிராமணரல்லாதாருக்கு விழிப் பூட்டிய சர். அலெக்சாண்டர் என்ற ஆங்கிலேயரின் சாட்சியத்தையும் நன்றி யுணர்வோடு குறிப்பிடுகிறது அறிக்கை. அந்தப் பகுதி வருமாறு:

> ''சென்னை எக்சிகியூடிவ் கவுன்சிலின் உறுப்பினராக இருக்கும் மாண்புமிகு சர். அலெக்சாண்டர் கார்டியூ 1913ல் அகில இந்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முன் சில சான்றுகளை அளிக்குங்கால், இந்த மாகாணத்தில் பிராமணர், பிராமணர் அல்லாதாரின் நிலை எவ்வாறுள்ளதென்பதை விளக்கமாகக் கூறியுள்ளார். பிராமணரல்லாதாருக்குப் பரிந்து பேசவேண்டுமென்று அவர் அப்படிக் கூறவில்லை. இருந்த நிலையை விளக்கினார்.''

பிராமணரல்லாதாரின் கொள்கைப் பிரகடனம் காங்கிரஸ் மகாசபை புரட்சிப் பாதைக்குத் திரும்பியதைக்கூடக் குறை கூறுகிறது. இதோ சான்று :

> ''இந்திய தேசிய காங்கிரஸ் ஆரம்ப காலத்தில் உண்மையான தேசிய இயக்கமாக இருந்தது. பழைய கொள்கையில் சிலவற்றை இன்றும் அது பின்பற்றுகிறது. ஆனால், அது என்ன நோக்கத்துடன் தோற்றுவிக்கப் பட்டது, என்ன முறையில் நடைபெற்றது, இன்று அது யாரால் எப்படி நடத்தப்படுகின்றது என்பதைப் பார்த்தால், இம்மாநிலத்தில் சுயமரியாதையுள்ள எந்த பிராணரல்லாதாரும் அதை ஆதரிக்க மாட்டார். சமூகப் பிற்போக்குவாதிகளும், நிலைமையை உணராத பொறுமையற்ற அரசியல் வாதிகளும் இன்று காங்கிரசைக் கைப்பற்றியுள்ளனர்.

"ஜனநாயக அடிப்படையில் அதன் அமைப்பு இருந்தாலும் பொறுப்பற்ற சிலர் ஆதிக்கத்தில் அது இருந்து வருகிறது. நாட்டையும் மக்களையும் அறிந்து, தங்கள் கடமையினை உணர்ந்து, பொறுமையும் அனுபவமும் வாய்ந்த அரசியல் வாதிகள் விரைவில் காங்கிரசில் ஆதிக்கம் பெற்று, நாட்டு நிலைக்கு ஏற்ற வழியைக் காட்டவேண்டுமென்று நாங்கள் உண்மையாக விரும்புகிறோம்."

கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. போன்றவர்களின் வீரப் புரட்சியையும் விழுமிய தியாகத்தையும் பிற்போக்காளர்களின் பொறுப்பற்றவர்களின் செயல்களாக, சுயமரியாதையுள்ள பிராமணரல்லாதாரால் ஆதரிக்க இயலாத போக்காக சர். பி. தியாகராயர் வருணிக்கிறார்.

அரச வாழ்த்து பாடிக் கொண்டு ஹ்யூம், வில்லியம் வெட்டர்பென், ஜார்ஜ் யூல் போன்ற ஆங்கிலேயர்களும், பிரோஸிஷா மேதா போன்ற ஆலை முதலாளிகளும் காட்டிய வழியில் காங்கிரஸ் மகாசபை நடை போட்ட காலம் மீண்டும் திரும்ப வேண்டும், அதற்காக சுய மரியாதையுள்ள பிராமணரல்லாதார் உழைக்க வேண்டும் என்கிறது ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கைப் பிரகடனம்.

இறுதியாக, தனது அரசியல் குறிக்கோளையும் பிரகடனம் வெளியிடுகின்றது. அது வருமாறு:

"படிப்படியாக அரசியல் உரிமைகள் பெற வேண்டுமே தவிர, அதிகார உரிமையற்ற அரசியல் அமைப்பை உருவாக்க வேண்டியதில்லை. தீவிர அரசியல் வாதிகள் இப்போது பெற்றுள்ள அரசியல் உரிமைகளால் திருப்தியடையவில்லை. சூழ்நிலையைக் கவனிக்காது மேலும் ஏதேனும் உரிமைகளைக் கோருவதில் அவர்களுக்கு ஒரு திருப்தி. அம்முறையில் அவர்கள் இப்பொழுது சுயாட்சி கேட்கின்றனர். முன் அனுபவங்களைக் கொண்டு பார்த்தால், நம்முடைய கருத்தைச் சரியான நேரத்தில் தெரிவிக்கவில்லையென்றால், அகில

இந்தியாவும் அவர்கள் கோரிக்கையை ஆதரிப்பதாகக் கருதப் படும்.

"அளவுக்கு மிஞ்சிய சுயாட்சித் திட்டத்தைப் பற்றியோ அல்லது டில்லி இம்பீரியல் சட்டமன்ற உறுப்பினர்கள் 19 பேர் வைசிராயிடம் கொடுத்த திட்டத்தைப் பற்றியோ இங்கு நாம் விரிவாகக் கூறவேண்டியதில்லை.

"ஆங்கிலேயர் ஆட்சியின் செல்வாக்கைக் குறைக்கும் எந்தத் திட்டத்தையும் நாங்கள் விரும்பவில்லை.

"இன்று நாடு இருக்கும் நிலையில் வெவ்வேறு சாதியினர் —வகுப்பினர்களுக்கு நீதி கிடைக்கவும், அவர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தவும், தேசிய ஒருமைப்பாட்டை உண்டாக்கவும் கூடியவர்கள் ஆங்கிலேயர்கள்தான். தவறினால் நாட்டில் தேசபக்தி இன்றி ஒற்றுமையின்றி ஒரு வருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டு சீரழிய நேரிடும்.

"யாதொரு தகுதியுமற்ற அரசியல் அமைப்பைத் தயார் செய்வதைச் சில அரசியல் வாதிகள் பொழுது போக்காகக் கொண்டுள்ளனர். அத்தகைய அரசியல் அமைப்பை நாங்கள் விரும்பவில்லை."

தமிழினத்துக்கு விபத்து!

ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் அதன் ஒப்பற்ற தலைவர் சர். பி. தியாகராயர் வெளியிட்ட பிராமண ரல்லதார் கொள்கைப் பிரகடனத்திலுள்ள விடுதலை இயக்கத்திற்கு விரோதமான கருத்துக்கள் பற்றி இங்கு நான் விமர்சிக்கப் போவதில்லை. நான் ஆராய எடுத்துக்கொண்ட பொருளுக்கு அது தேவைப்படவுமில்லை. பிரகடனத்தில் சேர்க்காமல் விடப்பட்டுவிட்ட இரண்டு விஷயங்களைப் பற்றி மட்டும் இங்கு ஆராய்வது அவசியமாகும்.

''பிராமண ரல்லாதாரின் மாக்னகார்டா'' என்று அந்நாளில் ஜஸ்டிஸ் கட்சி அறிஞர்களால் வருணிக்கப்பட்ட பிராமணரல்லாதாரின் கொள்கைப் பிரகடனத்திலே தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய பிரதேச மொழிகளின்—அம்மொழிகளைப் பேசும் இனங்களின் உரிமைகள் பற்றி ஜஸ்டிஸ் கட்சியின் கொள்கை என்னவென்பது குறித்து மறைமுகமாகக் கூடக் குறிப்பு எதுவுமில்லை. மொழி வேறுபாடுடைய மக்களை இணைக்கும் எந்த ஒரு கட்சியும் இதுபற்றித் தனது கொள்கைப் பிரகடனத்திலே தெளிவு படுத்த வேண்டியது அவசியமாகிறது.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றுவதற்கு முன்பு அன்னிபெசண்ட் அம்மையாரால் சென்னையில் தொடங்கப்பெற்ற 'ஹோம் ரூல் லீக்'கின் கொள்கைப் பிரகடனத்திலே மொழிவாரி மாநிலக் கோரிக்கைக்கு ஆதரவாக உறுதி கூறப்பட்டிருந்தது. விடுதலை வீரர்களின்—ஏகாதிபத்திய எதிரிகளின்-பாசறையாக விளங்கிய காங்கிரஸ் மகாசபை கூடப் பிரதேச மொழிகளின் வளர்ச்சி பற்றித் தனது நிலையைத் தெளிவு படுத்தி யிருந்ததோடு, காங்கிரசின் மாகாணக் கிளைகளை மொழிவாரித் திருத்தி அமைக்கத் திட்டமிட்டது. பிராமண ரல்லாதாரின் பார்லிமெண்டரி அமைப்பாகப் பிறந்த ஜஸ்டிஸ் கட்சியானது, தென்னிந்தியாவிலுள்ள பிரதேச மொழிகளின்-அம் மொழிகளைப் பேசும் இனங்களின் உரிமைகள் பற்றி மௌனம் சாதித்தது. சாதாரண மக்களுடைய உரிமை உணர்ச்சியை மதிக்காத—அதற்கு எதிராகவும் செயல்படத் துணிந்துவிட்ட எந்த ஒரு கட்சியும் இப்படித் தான் நடந்து கொள்ளும்போலும்!

ஜஸ்டிஸ் கட்சியானது சென்னை மாகாணத்திலுள்ள பிராமணரல்லாதாரின் கட்சியாகத்தான் தோன்றியதென்றாலும், நடைமுறையில் அது பிராமணரல்லாத சாதி இந்துக்களின் கட்சியாகத்தான் செயல்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியும் அதனை அப்படித்தான் அங்கீகரித்தது.

1909-ஆம் ஆண்டிலேயே முஸ்லிம்களுக்கெனத் தனித் தொகுதிகள் வழங்கப்பட்டிருந்தன. இரண்டாவது உலகப் பெரும் போருக்குப் பின் வழங்கப்படவிருக்கும் சீர்திருத்தத்தில் கிறிஸ்தவர்களுக்கும், ஆங்கிலோ இந்தியர்களுக்கும் கூடத் தனித்தொகுதிகள் வழங்கப்படுமென்று அறிவிக்கப் பட்டிருந்தது.

தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்குத் தனித் தொகுதிகள் வழங்கப்படவில்லை. காரணம், அவர்களுக்கு வாக்குரிமை இல்லாததுதான். சொத்துரிமை உள்ளவர்களுக்கே வாக்குரிமை இருந்த அந்த நாளில், தாழ்த்தப்பட்டவர்களில் வாக்குரிமை பெற்றிருந்தவர்கள் விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய அள

வில்தான் இருந்தனர். ஆயினும் தாழ்த்தப்பட்டோர் தலைவர் சிலர் கவர்னர் நியமனத்தின் மூலம் சட்ட சபையில் இடம் பெற்றனர்.

கல்வி—உத்தியோகத்துறைகளில் இஸ்லாமிய, கிறித்துவ, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சில விசேஷ சலுகைகள் அளிக்கப்பட்டு வந்தன. ஆகவே, முஸ்லிம், கிறித்துவ, தாழ்த்தப்பட்ட மக்களை பிராமணர்களின் ஆதிக்கத்திலிருந்து காப்பதற்காக ஜஸ்டிஸ் கட்சி தேவைப்படவில்லை. அவர்கள் பிராமண இந்துக்களிடமேயன்றி, பிராமணரல்லாத சாதி இந்துக்களிடமும் நம்பிக்கையற்றவர்களாக இருந்தனர். மற்றும், இஸ்லாமிய கிறித்துவ மக்களுக்காக மத ரீதியான அமைப்புகள் ஏற்பட்டு, இயங்கி வந்தன. ஆகவே, பிராமணரல்லாத சாதி இந்துக்கள் கட்சியாகவே ஜஸ்டிஸ் கட்சி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது. பிரித்தாளும் தந்திரத்தில் பெயர்போன பிரிட்டிஷார் தமிழினத்தை வகுப்புக் கோடரி கொண்டு வெட்டிப் பிளந்து விட்டனர்.

தமிழினத்தாரிலே இஸ்லாமியரும் கிறித்துவரும் மத அடிப்படையில் தனித்தனி முகாம்கள் அமைத்து விட்டனர். அத்துடன், ஜஸ்டிஸ் கட்சியின் தோற்றத்தால் இந்து தமிழர்களும் பிராமணர் என்றும், பிராமணர் அல்லாதார் என்றும் இருகூறுகி விட்டனர். ஆந்திரர் நிலையும் இதுவாகத்தான் இருந்தது. ஆயினும், புத்திசாலிகளான ஆந்திரர்கள் ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய ஆண்டிலேயே ''ஆந்திர மகாசபை'' எனத் தனி அமைப்பு கண்டு, அதன் மூலம் தகுந்த முறையில் இன ஒருமைப்பாட்டைக் கட்டி வளர்க்கப் பாடுபட்டனராதலால், பிரிட்டிஷாரின் பிரித்தாளும் தந்திரத்தாலும், ஜஸ்டிஸ் கட்சியின் பிளவு மனப்பான்மையாலும் ஆந்திரர்களின் ஒருமைப்பாடு அதிகமாகப் பாதிக்கப்படவில்லை.

கன்னடர்களில் பெரும்பாலோர் மைசூர்—ஐதராபாத் சமஸ்தானங்களையும் பம்பாய் ராஜ்யத்தையும் சேர்ந்தவர்களாக இருந்தனராதலால், அவர்களுடைய இன ஒருமைப்

பாடும் ஜஸ்டிஸ் கட்சியின் வரவால் பாதிக்கப்பட வாய்ப்பில்லாமல் போய் விட்டது. ஜஸ்டிஸ் கட்சியானது சமஸ்தானங்களில் நுழையவில்லை. சென்னை மாகாணத்தில் மட்டுமே இயங்கியது.

கேரள இனத்தாரில் பெரும்பாலோர் திருவிதாங்கூர், கொச்சி சமஸ்தானங்களைச் சார்ந்தவர்களாகி விட்டனராதலால், அவர்களுடைய இன ஒருமைப்பாட்டை உடைப்பதற்கு ஜஸ்டிஸ் கட்சிக்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டது. கேரளரிடையே இன உணர்ச்சியை வளர்க்க கேரள சமாஜம் இருந்து வந்தது.

தமிழினத்தார் நிலைதான் பரிதாபகரமானதாக இருந்தது. தமிழர் அனைவருமே சென்னை மாகாணத்தில்தான் இருந்தனராதலால், ஜஸ்டிஸ் கட்சியின் வரவானதுதமிழருக்கு நேர்ந்த விபத்தாக அமைந்தது. அந்நாளில், உயர்கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை தமிழரிலே நூற்றுக்கு ஒரு சதவிகிதமாகக் கூட இருக்கவில்லை. அவர்களுடைய உத்தியோக நலனைக் காப்பதற்காகத் தமிழ் இனத்தை மதவழியும் சாதிவழியும் பிளவு படுத்த முனைந்தனர் ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்கள்.

ஆந்திரரிடையே ஆந்திர மகாசபையும் கேரளரிடையே கேரள சமாஜமும் இருந்தாற்போல, தமிழரையெலாம் இன வழியில் ஒன்றுபடுத்த—ஜஸ்டிஸ் கட்சியால் ஏற்படவிருக்கும் பிளவிலிருந்து தமிழினத்தின் ஒருமைப்பாட்டைக் காக்க—தமிழர் மகாசபை ஒன்று இருக்கவில்லை என்பதோடு, ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய பிறகுங்கூட, அப்படிப்பட்ட இன வழி அமைப்பை உருவாக்க தமிழ்ச் சான்றோரில் எவரும் முன் வரவில்லை.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய சில திங்களுக்குள்ளாக 'சென்னை மாகாணச் சங்கம்' என்ற பெயரில் தமிழ் நாட்டில் ஒரு அமைப்பு தோற்றுவிக்கப் பெற்றது. பெயர் "சென்னை மாகாண சங்கம்" என்று இருப்பினும், அதைத் தொடங்கியவர்கள் தமிழ் நாட்டார்தான். அதன் நிர்வாகிகளும் தமிழர்

தான். ஆந்திர நாட்டில் அது செயல்படவில்லை. ஆந்திரரில் எவரும் அதன் நிர்வாகிகளாக இல்லை.

சென்னை மாகாணச் சங்கம் பிறந்தது தமிழினத்தின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற அல்ல. ஜஸ்டிஸ் கட்சியின் தோற்றத்தால் தமிழ் நாட்டில் காங்கிரசுக்கு ஏற்பட்ட அபாயத்திலிருந்து அந்த மகாசபையைக் காப்பாற்றத்தான். அந்தச் சங்கத்தின் நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: திவான்பகதூர் கேசவப் பிள்ளை.

துணைத் தலைவர்கள்: லாட் கோவிந்த தாஸ், சல்லா குருசாமி செட்டியார், ஈ. வே. இராமசாமி நாயகர், நாகை பக்கிரிசாமிப் பிள்ளை, சீர்காழி சிதம்பரநாத முதலியார், தஞ்சை சீனிவாசப் பிள்ளை, ஜார்ஜ் ஜோசப்.

செயலாளர்கள் : தி. வி. கோபாலசாமி முதலியார், குருசாமி நாயுடு, டாக்டர் பி. வரதராாசுலு நாயுடு, சக்கரைச் செட்டியார், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார்.

சென்னை மகாண சங்கம் இரண்டாண்டு காலமே இயங்கியது. தமிழ் நாட்டில் மட்டுமே மாவட்ட மட்டத்தில் 3 மாநாடுகள்மூவேறு மாவட்டங்களில் நடத்தப்பெற்றன. சென்னையில் 22–12–17-ல் சீர்காழி சிதம்பரநாத முதலியார் தலைமையிலும், தஞ்சையில் 20, 21–4–1918-ல் 'இந்தியன் பேட்ரியட்' ஆசிரியர் கருணைகர மேனன் தலைமையிலும், ஈரோடில் 11, 12-10-1919ல் லாட் கோவிந்ததாஸ் தலைமையிலும் மாநாடுகள் நடத்தியதோடு அந்தச் சங்கம் தனது வாழ்வை முடித்துக் கொண்டு விட்டது. வாழ்ந்த சொற்ப காலத்திலேயும் அந்தச் சங்கம் தமிழினத்திற்காகப் பரிந்து, தமிழினத்தின் ஒற்றுமையைக் காக்க, ஜஸ்டிஸ் கட்சியின் மூலம் உருவாகி வந்த ஆந்திர ஆதிக்கத்தை முறியடிக்க எதுவும் செய்யவில்லை. பிராமணர்களால் தூண்டப்பட்டே திரு. வி. க., ஈ. வே. ரா , டாக்டர் நாயுடு போன்ற பிராமணரல்லாத தேசிய வாதிகள் அந்தச் சங்கத்தைத் தொடங்கியதாக ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்களால்

பிரசாரம் செய்யப்பட்டது. அந்தப் பிரசாரத்தின் காரண மாகவே சென்னை மாகாணச் சங்கம் அற்பாயுளில் மறைந்து போய்விட்டது.

பிராமணரல்லாதார் என்ற வகுப்புணர்வானது ஆந்தி ரர்—கேரளர்—கன்னடர் ஆகிய வேற்றினத்தவரையும் தம்மவ ராகக் கருதும் மயக்கத்தைத் தமிழினத்தாருக்குத் தந்தது. தமிழ் நாட்டுப் பிராமணர்களும் தமிழரல்லாத பிராமணர் களைத் தம்மவராகக் கருதும் வழக்கத்தைக் கடைப்பிடிக்கலா யினர்.

எதிர் எதிரான இந்தப் போட்டி உணர்ச்சிதான் தமிழ கத்தைத் தமிழரல்லாத ஆந்திர, கேரள, கன்னட இனங்களின் உத்தியோக வேட்டைக் காடாக்கிவிட்டது எனலாம். இந்தக் கேட்டிலிருந்து தமிழ்நாடு இன்னமும் மீளவில்லை யென்றே சொல்ல வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய சில திங்களுக்குள்—அதா வது, 17—3—1917-ல்ஆந்திர மாநிலத்திற்கென மொழி அடிப் படையில் தனி மாகாண காங்கிரஸ் கமிட்டி அமைக்கப் பட்டது. அதுவும், பிராமணரல்லாதார் இயக்கத்தால் ஆந் திர இனத்தின் ஒருமைப்பாடோ, உரிமைப்பாடோ பாதிக்கப் படாமல் காப்பதிலே கருத்து செலுத்தியது.

''தமிழ்நாடு காங்கிரஸ்'' என்பதாக ஒரு அமைப்பு இங்கு ஏற்பட்ட தென்றாலும், அது தமிழரிடையே இனவழி ஒருமைப்பாட்டை வளர்க்க முன் வரவில்லை.

ஆந்திர மாகாண காங்கிரசை அசல் ஆந்திரர்தான் நடத் தினர். தமிழ்நாடு காங்கிரசின் நிலை வேறாக இருந்தது. அந் நாளில், தமிழல்லாத வேற்று மொழியை வீட்டு மொழி யாகக் கொண்டிருந்தவர்களும் தமிழ்நாடு காங்கிரசிலே முன் னணித் தலைவர்களாக விளங்கினர். அவர்களில் முக்கிய மானவர்கள் பெயர்கள் வருமாறு:

அன்னிபெசண்ட் (ஐரிஷ்)

டாக்டர் ஜி. எஸ். அருண்டேல் (ஐரிஷ்)

லாட் கோவிந்ததாஸ் (இந்தி)

பி.பி. வாடியா (பார்ஸி)

சுப்பராய காமத் (மராத்தி)

ருக்மணி லட்சுமிபதி (ஆந்திரர்)

எம்.கே. ரெட்டி (ஆந்திரர்)

சுரேந்திரநாத் ஆர்யா (ஆந்திரர்)

டாக்டர் பி. வரதராசுலு நாயுடு (தெலுங்கு)

ஈ.வே. ராமசாமி (கன்னடம்)

அப்துல் அமீத்கான் (உருது)

யாகூப் ஹாசன் சேட் (உருது)

அந்த நாளில் காங்கிரஸ் மகாசபையானது பார்லி மெண்டரிக் கட்சியாக அல்லாமல் தியாகப் பாதையில் நடை போடும் போராட்டப் பாசறையாகவே விளங்கியது. தமிழ் நாடு காங்கிரசிலே பிறமொழியினர் அளவுக்கு மீறிச் செல் வாக்கு பெற்றிருந்ததால் தமிழருக்கு பார்லிமெண்டரித் துறையிலே இழப்பு எதுவும் ஏற்படவில்லை.

பொதுவாக, தமிழினத்தின் தனி நலன்களைக் காக்கும் வகையில் செயல்படுவதற்கான சூழ்நிலை அன்று தமிழ்நாடு காங்கிரசுக்கு இருக்கவில்லை யென்பதை வரலாறு காட்டு கின்றது. அது, ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்தது இந்திய தேசிய ஒருமைப்பாட்டினைக் காக்கத்தான். தமிழ் மாகாண மட்டத் திலிருந்த இந்தக் கலப்படச் சூழ்நிலைதான் மாவட்ட மட்டங் களிலேயும் நிலவிய தெனலாம்.

ஜஸ்டிஸ் கட்சியின் வெற்றி

பிராமணரல்லாதார் இயக்கத்தின் வளர்ச்சி தமிழ் நாட்டில் வரலாறு காணாத நிகழ்ச்சியாக இருந்திருக்கிறது—குறிப்பாக, பிராமணர் அல்லாதாரில் படித்தவர்களிடையே அதற்கு நல்ல வரவேற்பிருந்தது. அவர்களிடையிலும் சைவப் பிள்ளைமார், முதலியார் எனப்படும் முன்னணிச் சாதியினர் தங்களுக்கு விமோசனமளிக்க வந்த இயக்கமாகக் கருதினர். மலையாளியான டாக்டர் டி. எம் நாயர் அவர்களின் பேச்சாற்றலும், தெலுங்கரான சர். பி. தியாகராசரின் திறமை மிக்க தலைமையும் பிராமணரல்லாதார் இயக்கத்தின் வளர்ச்சிக்கான முக்கிய காரணங்களாகும்.

''பிராமணரல்லாதார் இயக்கம், அது தோற்றுவிக்கப் பெற்ற 22 மாதங்களுக்குள் விசேஷ வலிமை பெற்று விளங்கியது'' என்று, ''காங்கிரஸ் மகாசபை வரலாறு'' (பக். 122) என்ற தமது நூலில் பட்டாபி சீதாராமய்யா அவர்களே வியந்து கூறுகின்றார்.

1917 ஆகஸ்டு 20ல் இந்தியா மந்திரி மாண்டேகு என்பார், இந்தியாவுக்குப் புதிய அரசியல் சீர்திருத்தம் வழங்கப்படுமென்று உறுதி கூறி அறிக்கை வெளியிட்டார். அதனையொட்டி அவர் இந்தியாவுக்கு வருகை தந்து,

ஜஸ்டிஸ் கட்சி உட்பட இந்திய அரசியல் கட்சிகளின் தலைவர்களையெல்லாம் நேரில் சந்தித்துப் பேசி, பிரிட்டிஷார் வழங்கவிருக்கும் சீர்திருத்தம் பற்றி அவர்கள் கருத்துக்களை அறிந்து சென்றார்.

பின்னர், 1918 சூன் திங்களில் இந்தியா மந்திரி மாண்டேகு, இந்திய வைசிராய் செம்ஸ்போர்டு ஆகிய இருவரின் பெயராலும் "மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர் திருத்தம்" என்ற ஒரு திட்டம் பிரிட்டிஷ் அரசால் வெளி யிடப்பட்டது. ஆம்; எதை எதிர்பார்த்து பிராமண ரல்லாதார் இயக்கம் பிறந்ததோ, அது அதற்குக் கிடைத்து விட்டது.

காங்கிரஸ்—லீக் உடன்படிக்கையும், இந்திய சட்ட சபை உறுப்பினர் 19 பேர் கூட்டாகக் கையொப்பமிட்டு வைசிராய்க்கு அனுப்பிய விண்ணப்பமும் எத்தகைய சீர் திருத்தத்தைக் கோரினவோ, அத்தகைய முற்போக்கான சீர் திருத்தமாக மாண்டேகு—செம்ஸ்போர்டு திட்டம் அமைந் திருக்கவில்லை.

அரசாங்க இலாக்காக்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து, அவற்றுள் ஒரு பிரிவு இலாக்காக்களை—குறிப்பாக, சட்டம், நிதி, உள்துறை (போலீஸ்), வருவாய் (ரெவின்யூ) ஆகியவற்றை- "மக்களுக்குக் கொடுக்கப்படாத பிரிவு" என்றும்; உள்ளாட்சி, சுகாதாரம், அபிவிருத்தி, கல்வி ஆகிய வற்றை "மக்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரிவு" என்றும் அறிவிக்கப்பட்டது.

மக்களுக்குக் கொடுக்கப்படாத இலாகாக்களை நிர்வகிக்க கவர்னர் நிர்வாகக் கவுன்சிலும், மக்களுக்குக் கொடுக்கப் பட்ட இலாகாக்களை நிர்வகிக்க மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அமைச்சர் குழுவும் இருக்கு மென்று மாண்டேகு—செம்ஸ்போர்டு திட்டம் அறிவித்தது. இது, "இரட்டையாட்சி முறை" என்று கூறப் பெற்றது.

காங்கிரசிலே ஒரு சாரார் இந்த சீர்திருத்தத்தை ஏற்கத் தயாராயினர். அவர்களில் தமிழ் நாட்டைச் சார்ந்த அன்னி பெசண்ட், சர். சி. பி. ராமசாமி ஐயர், மகாகனம் சீனிவாச சாஸ்திரியார், எஸ். சீனிவாச ஐயங்கார், வ. உ. சிதம்பரம் பிள்ளை ஆகியோர் முக்கியமானவர்களாவர். இவர்கள், புதிய சீர்திருத்தப்படி அமையவிருக்கும் சென்னை மாகாண சட்ட சபையும் மாகாண ஆட்சியும் பிரிட்டிஷ் விசுவாசி களான ஜஸ்டிஸ் கட்சியினர் கையில் போவதைத் தடுக்க வேண்டு மென்பதற்காகவே மாண்டேகு — செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை ஏற்க முன்வந்தனர்.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு சீர்திருத்தம் வழங்குவதை எதிர்பார்த்து—அதிலே, ஆந்திர மாநிலம் அமைவதற்கு வழி காணும்பொருட்டு, 1917ல் ஆந்திர மகாசபை நெல் லூரில் கூடி, தனி மாநிலக் கோரிக்கையை ஆதரிக்கும் தீர்மானமொன்றை நிறைவேற்றி, இந்தியா மந்திரிக்கும் இந்திய வைசிராய்க்கும் அனுப்பியது. ஆனல், அது பலன் தரவில்லை. புதிய சீர்திருத்தம் மொழிவாரி மாநிலக் கோரிக் கையைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது. அதுபற்றி அறிக்கை கூறுவது வருமாறு:

''மொழிவாரி ஆட்சி அல்லது இனவாரி அரசாங்க யூனிட்டுகள் சட்ட நிருபண அலுவலை அந்தந்தப் பிரதேச மொழியில் நடத்துவது சாத்தியமாகும்படிச் செய்வதன்மூலம் ஆங்கிலந் தெரியாத மக்கள் பொது அலுவல்களில் பங்கெடுத் துக்கொள்ள முடியுமென்பது மொழிவாரி அல்லது இனவாரி அரசாங்க யூனிட்டுகளுக்கு ஆதரவாகச் சொல்லப்படும் ஒரு சிறந்த வாதமாகும்.''

[1918ஆம் ஆண்டு இந்திய அரசியல் சீர்திருத்தம் பற்றிய அறிக்கை; 246வது பாரா]

கொள்கையளவில் மொழிவாரி மாநிலக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்த மானது, வேறு ஏதேதோ சாக்குப் போக்குகள் சொல்லி அதனை நடைமுறைக்குக் கொண்டுவர மறுத்துவிட்டது.

தென்னிந்தியாவை—குறிப்பாக, சென்னை மாகாணத்தை மொழிவாரி ராஜ்யங்களாகப் பிரிப்பதிலே பிரிட்டிஷாருக்கு அக்கரை யிருக்கவில்லை. அவர்கள், தமிழர்—ஆந்திரர்—கேரளர்—கன்னடர் ஆகிய தென்னிந்திய தேசிய இனங்களை பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற வகுப்பு அடிப் படையில் பிளவுபடுத்துவதிலேயே அதிக அக்கறை காட்டினர். இந்த எண்ணம் ஜஸ்டிஸ் கட்சியின் தோற்றத் தால் கைகூடி வந்த நேரமாதலால், மாண்டேகு—செம்ஸ் போர்டு அறிக்கை ஆந்திர மாநிலக் கோரிக்கையை ஏற்காதது நாம் புரிந்துக்கொள்ளக் கூடியதுதான்.

ஆந்திர மக்கள் ஆந்திர மகாசபையின் மூலம் தனி ஆந்திர மாநிலக் கோரிக்கையை ஒருமனப்பட்டு வற்புறுத் தியதுபோல, தமிழின மக்களும் தமிழ் மாநிலக் கோரிக் கையை ஒருமனப்பட்டு அப்போதே வற்புறுத்தியிருப்பார் களானல், மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் மூலமே தமிழ் வழங்கும் பிரதேசம் தனியரசு மாநிலம் ஆகியிருக்க முடியும். அதற்குப் பின்னுள்ள அரை நூற்றுண்டுக் காலத்திலே ஆங்கில ஆதிக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்து தமிழ் மொழி வளர்ச்சி பெற்றிருக்கும். என்ன செய்வது? விதி விளையாடிவிட்டது!

புதிய அரசியல் சீர்திருத்தத்திலே முஸ்லிம்களைப் பொறுத்த வரையில் ஏற்கனவே நடைமுறையி லிருந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் அங்கீகரிக்கப்பட்டதோடு, கிறித்துவருக்கும் தனித்தொகுதி அடிப்படையில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் உண்டென்று உறுதி கூறப்பட்டது.

ஜஸ்டிஸ் கட்சி சென்னை மாகாணத்திலுள்ள பிராமண ரல்லாத இந்துக்களுக்கும் சட்டசபையிலே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோரியது. முஸ்லிம்களும் கிறித்துவர் களும் மத வழியில் சிறுபான்மையினராகையால், பெரும் பான்மையினரான இந்துக்களின் ஆதிக்கத்திலிருந்து தங் களைப் பாதுகாத்துக் கொள்ள அவர்கள் தனிப் பிரதிநிதித்

துவம் பெற்றனர். பிராமணரல்லாத இந்துக்கள் நிலை அது வல்ல. அவர்கள் பிராமணரோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து சிறுபான்மையினர் அல்லர்; சென்னை மாகாண மக்கள் தொகையில் 100க்கு 90 சதவிகிதத்தினராவர். சமுதாயத்தில் அவர்களின் பொருளாதார அந்தஸ்துபற்றி பிராமணரல்லாதார் கொள்கைப் பிரகடனம் கூறுவதாவது:

"இம்மாநிலத்தின் மக்கள் தொகை நாலரைக் கோடி ஆகும். அதில் நாலு கோடிக்குக் குறையாதவர்கள் பிராமணரல்லாதவராவர். வரி செலுத்துவோரில் பெரும்பான்மையோரும் அவர்களேயாவர்.

"மேலும் குறுநில மன்னர்கள், பெரு நிலக்கிழார்கள், விவசாயிகள் ஆகியோரும் பிராமணரல்லாதாரே யாவர்."

பொருளாதாரத்திலே பிராமணர்களை விடவும் மேம்பாடு உடைய பிராமணரல்லாதார் அரசியலில் பிராமணர்களை முன்னேறவிட்டுப் பின்தங்கிவிட்டதற்குப் பிரகடனம் கூறும் காரணம் வருமாறு:

"சென்னையில் அரசியல் பெயரால் நடைபெறும் இயக்கங்களில் பங்கு கொள்ள உரிமை இருந்தும் அவர்கள் அதில் பங்கு கொள்ளவில்லை. மக்களிடையே அவர்களுக்குள்ள செல்வாக்கை நாட்டின் முன்னேற்றத்திற்காக ஒரு சிறிதும் பயன்படுத்தவில்லை.

"எல்லாம் கட்டுப்பாடாக நடக்கும் இக்காலத்தில் தங்களுடைய உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளவோ, அரசியலைத் தொழிலாகக் கொண்டவர் தங்கள் பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்வதைத் தடுக்கவோ அவர்கள் ஒன்றும் செய்யவில்லை.

"15 லட்சம் பேர்களே உள்ள பிராமணர்களின் நிலையைக் கவனிக்கும்போது, இவர்களுடைய அரசியல் வாழ்க்கை எந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும்."

பிராமணரல்லாதார் எனப்படுவோர் ஒரே சாதியின ரல்லர்; பலநூறு சாதியினர். சாதிக்குள் சாதி வேறு. பிராமணருள்ளேயும் உபசாதி வேறுபாடும், குல—கோத் திரப் பாகுபாடும் இருப்பினும், சமுதாய வாழ்விலே அவர்கள் ஒருமனப்பட்டு செயல்புரிந்து முன்னேற்றமடைய ஆர்வ முள்ளவர்கள்; ஒரு விஷயத்தில் கூட்டாக ஈடுபட்டு, அதிலே வெற்றி காணும் ஆற்றலுடையவர்கள்; நாட்டில் அவ்வப் போது தோன்றும் அரசியல், சமய, சமூக, பொருளாதார முற்போக்குக் கிளர்ச்சிகளிலே பங்கு கொண்டு அந்தந்தத் துறைகளிலே தங்கள் முத்திரையைப் பதிய வைக்கும் திற னுடையவர்கள்; பிராமணரல்லாதார் எனப்படுவோரிடம் இவை வெளிப்படவில்லையென்று பிராமணரல்லாதார் பிர கடனம் சொல்லாமல் சொல்லுகின்றது.

உண்மையில் ஜமீன்தாரர் மிராசுதாரர்—பெருவணிகர் என்போர், சாதாரணப் பொது மக்களோடு தொடர்பு கொண்டு, அவர்கள் நலன் கருதிப் பாடுபடுவதில்லை. பிரா மணரல்லாதாரிலே புதிதாக முளைத்த ஆங்கிலம் படித்த சாதியினரும் சாதாரணப் பொது மக்களோடு நெருங்கிப் பழகுவதில்லை.

இந்தக் குறைபாடுகள்தான் பிராமணரல்லாதார் பிராமணரோடு போட்டியிட்டு முன்னேற முடியாமற் போனதற்குக் காரணம் என்பதைப் பிரடனம் வெளிப் படையாக ஒப்புக் கொள்ளுகிற தென்றாலும், அதற்குப் பரிகாரம் காண்பதிலே—அதாவது, பிராமணரல்லாதார் ஒன்றுபட்டு முன்னேறுவதற்கான வழியைக் கூறுவதிலே தவறுசெய்து விட்டது.

விடுதலை இயக்கத்தைப் பிராமணர்களிடமே விட்டு விட்டு, விடுதலைக் கிளர்ச்சிக்கு விரோதமாகவும் செயல்பட்டு, அதற்குச் சன்மானமாக பிரிட்டிஷார் தயவில் உயர் உத்தியோகங்கள் பெறுவதுதான் பிராமணரல்லாதாருக்கு

நலன் தரும் என்ற முடிவுக்கு ஜஸ்டிஸ் கட்சியினரான ஜமீன்தாரர்களும், மிராசுதாரர்களும், பட்டதாரிகளும் வந்தனர். இதனை அரை நூற்றுண்டிற்குப் பின்னர் இப்போது பிராமணரல்லாதார் என்ற உணர்வோடு நினைத்தாலும் எரிச்சலைத் தருகிறது.

எப்படியோ, பிராமணரல்லாதார் இயக்கத் தலைவர்களின் வாதம் சமுதாயத்தின் மேல்தளத்து மக்களிடையே எடுபட்டது. ஆகவே, வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கைக்கும் அவர்களுடைய ஆதரவு கிடைத்தது. வியப்பென்னவென்றுல், ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்கப் பிறந்த சென்னை மாகாணச் சங்கமும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை ஆதரித்து, அதற்கு வெற்றி தேட ஜஸ்டிஸ் கட்சியுடன் கூட்டு சேர்ந்து செயல்பட்டதாகும்.

பிரிட்டிஷ் அரசு ஜஸ்டிஸ் கட்சியின் வகுப்புரிமைக் கோரிக்கையை முதலில் ஏற்க மறுத்தது. சிறுபான்மையினரிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பெரும்பான்மையினர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கேட்பதை இந்திய அரசால் புரிந்துகொள்ள முடியவில்லை. பிராமணரல்லாதார் என்பது, உத்தியோகத்திற்காகவும், அரசியல் பதவிகளுக்காகவும் தோன்றிய திடீர் சாதி — இல்லை, திடீர் பாசறை! ஆகவே, அதன் வகுப்புரிமைக் கோரிக்கை பிரிட்டிஷாரால் முதலில் மறுக்கப்பட்டது.

மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி சென்னை மாகாண சட்டசபையின் உறுப்பினர் எண்ணிக்கை 47லிருந்து 132ஆக உயர்த்தப் பெற்றது. மாநில சட்ட மன்றங்களின் தொகுதிகளை நிர்ணயிக்க சௌத்பரோ என்ற ஆங்கிலேயர் தலைமையில் ஒரு குழு லண்டனிலிருந்து இந்தியா வந்தது. அதன் உறுப்பினரிலே இருவர் இந்தியர்; மற்றவர் ஆங்கிலேயர். இந்தியரிலே, ஒருவர் வங்காளப் பிராமணர்; மற்றொருவர் தமிழ்நாட்டுப் பிராமணர். அவர், மகாகனம் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியாவார்.

ஜஸ்டிஸ் கட்சியின் வகுப்புரிமைக் கோரிக்கையை பிராமணரிருவரை உறுப்பினராகக் கொண்ட சௌத் பரோ கமிட்டி ஏற்காதென்று ஜஸ்டிஸ் கட்சியினர் ஐயுற்றனர். அதனுல், கமிஷனைப் பகிஷ்கரிக்க முடிவு செய்தனர். சென்னை மாகாணமெங்கும் மாநாடுகளும், கூட்டங்களும் நடத்திக் கிளர்ச்சி செய்தனர். பிராமணரல்லாதாரில் யாரும் சௌத்பரோ குழுவின் முன்பு சாட்சியமளிக்கச் செல்ல வேண்டாமென்றும் வேண்டுகோள் விடப்பட்டது. எதிர்பார்த்தபடி, சௌத்பரோ குழு வகுப்புரிமைக் கோரிக்கையை நிராகரித்தது. பின்னர், பிரிட்டிஷாரிடம் முறையிட்டுக்கொள்ள டாக்டர் டி. எம். நாயர் லண்டன் சென்ருர். துரதிர்ஷ்டவசமாக, அங்கு அவர் கடுமையாக நோயுற்ருர். 17-7-1919ல் அவர் காலமானுர். லண்டனிலேயே அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இறுதியாக, ஜஸ்டிஸ் கட்சி செய்த தீவிரக் கிளர்ச்சி, சென்னை மாகாண சங்கத்தின் ஆதரவு, சென்னை கவர்னர் லார்டு வில்லிங்டனின் பரிந்துரை ஆகியவை காரணமாக சில மாறுதல்களுடன் ஜஸ்டிஸ் கட்சியின் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை பிரிட்டிஷ் அரசு அங்கீகரித்தது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கையிலே ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றி கிடைத்ததற்கு மகாராஷ்டிரத்திலும் பிராமணரல்லாதார் எனப்படுவோர் அதே கோரிக்கையை எழுப்பியதும் ஒரு காரணமாகும். அவர்கள் காட்டிய உறுதி தெற்கே ஜஸ்டிஸ் கட்சியின் வெற்றிக்கு வாய்ப்பாக அமைந்தது. சென்னை மாகாண சட்டசபைக்குரிய 65 இடங்களில்–அதாவது, முஸ்லிமல்லாதார் தொகுதிகளில் 24 தொகுதிகளே பிராமணரல்லாத இந்துக்களுக்காக ஒதுக்க முடிவானது.

வேதனையென்ன வென்ருல், தமிழ் நாட்டிலே பிராமணரல்லாதார்க்குள்ள இடங்களில் பிராமணரல்லாத தமிழர்

தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற நியதியின்றி, பிராமணரல்லாதார் என்ற பெயரில் தமிழரல்லாதாரும் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்பளித்ததாகும்.

மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தத் திட்டம் 1919ஆம் ஆண்டில் சட்டமாக்கப்பட்டது. அதன்படி, 1920ல் சென்னை மாகாண சட்டசபைக்குப் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

மக்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை அனுபவிக்க ஜஸ்டிஸ் கட்சி தேர்தல் களத்தில் புகுந்தது. காங்கிரஸ் மகா சபை, கொடுக்கப்படாத அதிகாரங்களைப் பெறுவதற்காகத் தேர்தலை பகிஷ்கரித்துப் போர்க்களம் புகுந்தது! இன்னொரு வகையில் சொல்வதானால், பிரிட்டிஷ் ஆட்சியோடு ஒத்துழைப்பதற்காக ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் சட்டமன்றம் புகுந்தனர் ; தேசியவாதிகள், பிரிட்டிஷ் ஆட்சியோடு ஒத்துழையாமைப் போர் நடத்தி சிறைச்சாலை சென்றனர். இந்த ஒத்துழைப்பும் ஒத்துழையாமையும் 1920 லேயே நிகழ்ந்தன.

பொதுத் தேர்தலிலே ஜஸ்டிஸ் கட்சி பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றியது. தமிழ் நாட்டில் முஸ்லிமல்லாத தொகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலே சரியாக மூன்றில் ஒரு பங்கினர் தமிழரல்லாதார்! சென்னை நகரத்திற்கு உரிய நான்கு இடங்களிலே இரண்டிற்கு ஒரு ஆந்திரரும், ஒரு கன்னடரும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

சென்னை மாகாண சட்ட மன்றத்தை அப்போது பிரிட்டிஷ் பேரரசின் இளவரசராக இருந்த கானாட்டுக் கோமகன் வந்து திறந்து வைத்து, இரட்டையாட்சி வெற்றி பெற வாழ்த்துக் கூறிப் பேசினார். 1919 ஆம் ஆண்டு அரசியல் சட்டம் இந்திய மாநிலங்களில் ஒரே காலத்தில்தான் அமுலுக்கு வந்தது. ஆயினும், அதனைத் தொடங்கி வைக்கும் சடங்குக்கு சென்னை மாநிலத்தைத்தான் தேர்ந்தெடுத்தது பிரிட்டிஷ் ஆட்சி. இது ஜஸ்டிஸ் கட்சியின் பிரிட்டிஷ்

விசுவாசத்தால் சென்னை மாகாணத்துக்குக் கிடைத்த "பெருமை" போலும்!

பிராமணரல்லாதாருக்கு தனிப் பிரதிநிதித்துவம் தேவையில்லையென்பதைத் தேர்தல்முடிவு காட்டிவிட்டது. இதோ, பி. டி. ஆர். கூறுகிறார்:

> "தேர்தலில் போட்டியிட்ட தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றியது. பிராமணரல்லாத இந்துக்களுக்கு சட்டமன்றத்தில் தனியாக இடங்கள் ஒதுக்கப் பட்டிருந்தன. தேர்தல் முடிவைப் பார்த்தபோது பெரும் கிளர்ச்சியின் பயனைப் பெற்ற சலுகை தேவையற்றதாகத் தோன்றியது. அரசாங்கப் பிரதி நிதிகள், நியமனம் பெற்ற உறுப்பினர்கள் ஆகியோர் உதவி யில்லாமலேயே அமைச்சரவை அமைக்கும் அளவிற்கு நலவுரிமைச் சங்கம் பெரும்பான்மை பெற்றிருந்தது."
>
> (ஜஸ்டிஸ் கட்சி பொன்விழா மலரிலிருந்து)

மக்களின் உணர்ச்சியை சரியாக மதிப்பிட ஜஸ்டிஸ் கட்சியினர் தவறிவிட்டனர். பிராமண ரல்லாதார்க்கென அவர்கள் தனித் தொகுதிகள் கோரியது பொதுத் தொகுதிகளில் பிராமணர்களே அதிகப்படியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டு விடுவார்கள் என்ற அச்சத்தின் பேரில்தானே!

சர். பி. தியாகராயருடைய அரசியல் கொள்கையை ஏற்காதவர்கள் கூட அவரை மதித்துப் போற்றத்தக்க அளவுக்கு அவர் கண்ணியவானவார். ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர் சர். பி. தியாகராயர் சென்னை நகரத் தொகுதியில் தமது கட்சியின் சார்பில் போட்டியிட்டு மிகப் பெரும்பாலான வாக்குகளைப் பெற்று வென்றார். வெற்றி பெற்ற கட்சியின் தலைவர் என்ற முறையில் அமைச்சரவை அமைக்க சர். தியாகராயரை கவர்னர் வில்லிங்டன் அழைத்தார். ஆனல், தியாகராயர், முதலமைச்சராக வர மறுத்துவிட்டார்.

அவரது வாழ்நாளில் மூன்று முறை சென்னை மாகாண முதல்வராக வர அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆயினும் அதைப்பயன்படுத்திக் கொள்ள அவர் பிடிவாதமாக மறுத்தார். இத்தகைய மகானைத் தனது குடிமகனுகப் பெற்றிருந்த தனை நினைத்துத் தமிழகம் என்றென்றும் பெருமையடையலாம்.

சர். பி. தியாகரராயரின் பரிந்துரைப்படித் திரு. ஏ. சுப்பராயலு ரெட்டியாரை முதலமைச்சராகவும், பனகல் அரசரை இரண்டாவது அமைச்சராகவும், சர். கே. வி. ரெட்டியாரை மூன்ருவது அமைச்சராகவும் கொண்ட ஒரு அமைச்சர் குழு சென்னை மாகாணத்துக்கென அமைக்கப் பட்டது. இவர்கள் மூவருமே ஆந்திரர்கள். ஆனுல், தமிழகத்தில் ஏழு ஆண்டுக்காலம் மிகுந்த செல்வாக்குடன் —திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் — முதலமைச்சர் பதவிவகித்த கலைஞர் மு. கருணுநிதி அவர்கள், ''இதுதான் சென்னையில் முதன் முதலில் தோன்றிய தமிழர்களின் மந்திரி சபை'' (நெஞ்சுக்கு நீதி — பக் 35) என்று கூறுகின்ருர். அந்நாளில் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்த தமிழர்கள் கூட இப்படிச் சொல்லவில்லை. இனப் பிரச்சினையிலே திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இன்னும் தெளிவு ஏற்படவில்லை என்பதற்கு இது மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பிராமணர் செய்த பெருந்தவறு

ஜஸ்டிஸ் கட்சியானது பிராமண ரல்லாதாரில் படித்த வர்களுக்கு அரசியலிலே பதவிகளும் அரசாங்கத்திலே உத்தி யோகங்களும் தேடித் தரும் அமைப்பாகத்தான் செயல் பட்டு வந்தது. மற்றும், பிராமணரல்லாதாரின் கல்வி நலனி லும் கருத்து செலுத்தி யிருக்கிறது. மற்றபடி, பிராமணர் —பிராமணரல்லாதாரிடையே பூசலேயோ, போராட் டத்தையோ வளர்க்க அது முயலவில்லே யென்பது உறுதி யாகத் தெரிகிறது.

இதுபற்றித் 'தமிழவேள்' பி. டி. ராசன் கூறுவது வருமாறு :

> ''எல்லா வகுப்பினரையும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தத் தகுதியுடையவர்களாக ஆக்கவேண்டும் என்ற சீரிய நோக்கமே கட்சியைத் தோற்றுவித்த தற்கு அடிப்படைக் காரணமாகும். இந் நோக்கத் துடனேயே எல்லா வகுப்பினருக்கும் ஆட்சியில் நியாயமான பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட வேண்டு மென்று கோரப்பட்டது. பின்தங்கிய வகுப்பினருக்கு அதிகச் சலுகை காட்ட வேண்டுமென்றும் கூறப் பட்டது. இதனுல் மேலுள்ளவர்களேக் கீழே இறக்க வேண்டுமென்பதல்ல நோக்கம். அதற்கு மாறுகத் தாழ்த்தப்பட்டவர்களே மேலே உயர்த்த வேண்டும் என்பதே நோக்கம்.

"உரிமையுடன் உயர் நிலையிலிருந்து வந்த பிராமணர்களைப் பொது வாழ்விலிருந்தும், அரசாங்க அலுவல்களிலிருந்தும் அறவே அகற்றிவிட வேண்டுமென்று கட்சியைத் தோற்றுவித்த பெரியார்கள் எண்ணியது கிடையாது. அவர்களுக்குப் பின் கட்சிப் பொறுப்பை ஏற்றவர்களுக்கும் அத்தகைய எண்ணம் இருந்ததில்லை."

[ஜஸ்டிஸ் கட்சியின் பொன்
விழா மலரிலிருந்து]

ஜஸ்டிஸ் கட்சி ஆட்சி பீடத்திலிருந்தபோது பிராமணர் பால் அது நல்லெண்ணம் காட்டியதென்றும் திரு. பி. டி. ஆர். கூறுகிறார் :

"பிராமண வெறுப்பின் அடிப்படையில் ஜஸ்டிஸ் கட்சி அமைக்கப் பெற்றது என்று கூறப்பட்டது. அது உண்மையல்ல. அறநிலைய மசோதாவை சட்டசபையில் நிறைவேற்றுவதற்குப் பனகல் ராசாவிற்குத் துணை புரிய ஒரு தனி உறுப்பினர் தேவைப்பட்டார். அதற்காகத் திரு. என். கோபால்சாமி ஐயங்காரைச் சிறப்பு உறுப்பினராக நியமனம் செய்தோம்.

"1926ல் அறநிலைய மசோதா நிறைவேறிச் சட்டமாயிற்று. அறநிலையக் குழுவிற்கு முதல் தலைவராக ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சர். டி. சதாசிவ அய்யர் நியமிக்கப் பெற்றார்.

"பின்னர், திரு. என். கோபால்சாமி ஐயங்காரும், திரு. இராமமூர்த்தியும் என்னுடைய செயலாளர்களாக இருந்தனர். இவர்கள் இருவரும் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

"எங்கள் விருப்பப்படி திரு. எம். ஆர். சேதுரத்தினம் ஐயர் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப் பட்டார். அமைச்சரவையில் பிராமணர் ஒருவரும்

இல்லையே என்ற குறையை நீக்குவதற்காகக் கட்சிக்கு வேண்டியவரான திரு. சேதுரத்தினம் ஐயர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.''

[1968ல் சென்னை கலைவாணர் அரங்கில் நடந்த ஜஸ்டிஸ் கட்சியின் வெள்ளி விழாவில் திரு. பி. டி. ராசன் நிகழ்த்திய வரவேற்புரை.]

ஜஸ்டிஸ் கட்சியைத் தோற்றுவித்த இருவரில் ஒருவரான டாக்டர் டி. எம். நாயர் அவர்கள் பிராமணரிடத்தில் வெறுப்புடையவரல்ல என்று திரு. கே. கே. நாயர் என்பவர் கூறுகிறார்:

''தனிப்பட்ட பிராமணர்கள் மேல் அவருக்கு எத்தகைய வெறுப்பும் கிடையாது. மிதவாதக் கொள்கையுடைய பல பிராமணர்கள் அவருடைய நண்பர்களாக இருந்தனர்.. அவருடைய செயலாளர் ஒரு பிராமணர். ;பாலக்காட்டிலுள்ள அவர் குடும்பச் சொத்தை மேற்பார்த்து வந்தவர் ஒரு பிராமணர். ஆனால், பிராமணர் மற்றவர்களின் மேல் ஆதிக்கம் செலுத்துவதை ஒழிக்க வேண்டுமென்பதே அவர் கொள்கை.''

[ஜஸ்டிஸ் கட்சியின் பொன்
விழா மலர் ; பக். 58.]

பிராமணரல்லாத இந்துக்கள் மீது வருணசிரம ரீதியில் பிராமணர்களுக்கிருந்த தலைமையை ஒழிப்பது ஜஸ்டிஸ் கட்சியாரின் நோக்கமாக இருக்கவில்லை. அது நீடிக்கவேண்டுமென்பதும் அவர்களில் பலருடைய விருப்பமாகவும் இருந்திருக்கிறது. இருதரப்பினரும் மேட்டுக்குடியினர்தானே!

ஜஸ்டிஸ் கட்சியினை வளர்த்த செவிலித் தாயான சர். பி. தியாகராயர், தமது அரண்மனையில் பிராமண இளைஞர்கள் வேதாகமங்களில் பயிற்சி பெறுவதற்குப் பள்ளி நடத்தி வந்தார். ஆண்டுக்கு ஒரு முறை நூற்றுக்கணக்கான ஏழைப்

பிராமணர்களுக்குத் தமது சொந்தச் செலவில் திருமணங்கள் நடத்தி வைப்பதைத் தம் வாழ்நாள் முழுவதும் வழக்க மாகக் கொண்டிருந்தார்.

பிராமணர்கள் விரும்பினுல் அரசியல் துறையிலே பிராமணரல்லாதாருக்கு விட்டுக் கொடுத்து வகுப்புப் பூசலைத் தவிர்க்கலா மென்பதும், அப்படிக்கின்றி, அத்துறை யில் தங்களுக்குள்ள ஆதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள் ளவே அவர்கள் முயல்கின்றனரென்பதும் பிராமணரல்லாத வர்களின் குறைபாடாகும். சர். பி. தியாகராயர் கூறுகிருர்:

"அரசாங்க அலுவல்களில் காணப்பட்ட நிலையே நகரவை, மாவட்டக் கழகம் முதலிய நிறுவனங்களிலும் இருந்து வந்தது. பிராமண வாக்காளர்கள் அதிகமாக இருந்த தொகுதிகளில் பிராமணரல்லாதார் போட்டி யிட்டு வெற்றி பெற முடியாது. பிராமணரல்லாத வாக்காளர்கள் எல்லோரும் ஒற்றுமையாய் ஒருவரை ஆதரிப்பது கிடையாது. ஆனல், பிராமணர்கள், யார் போட்டியிட்டாலும் பிராமணர்களையே ஆதரிப் பார்கள்.

"சென்னைப் பல்கலைக் கழக இந்திய உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் பிராமணர்களாயிருந்தபடியால், பல்லைக் கழகத்திலிருந்து சட்ட மன்றத்திற்கு உறுப் பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் பிராமணரல்லாதார் எப்போதும் வெற்றி பெறுவதில்லை. இதனல் எத்துணைத் தகுதியுடையோரா யிருப்பினும் பிராமணரல்லாதார் இத்தேர்வில் கலந்து கொள்ள விரும்பவில்லை. போட்டி யிட நேர்ந்தால், ஆங்கிலேய உறுப்பினர்களின் ஆதரவு கொண்டே வெற்றிபெற முடியும்.

"திரு. குன்ஹிராமன் நாயர் கேள்விக்குச் 'சென்னைப் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் 650 பேர்களில், பிராமணர்கள் 452 பேர்; பிராமணரல்

லாத இந்துக்கள் 12 பேர்; பிற மதத்தினர் 74 பேர்' என்று பதில் கூறப்பட்டது.

"1907லிருந்து பதிவு பெற்ற பட்டதாரிகள் சார்பில் 12 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரைத் தவிர அனைவரும் பிராமணர்களே. 1907லுஞ் சரி; அல்லது சட்டசபையில் பதில் கூறிய 1914லுஞ் சரி; எப்பொழுதும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பிராமணர்களே பெரும்பான்மையோராக இருந்தமையால் எத்துணைத் தகுதி பெற்றவராயிருப்பினும், பிராமணரல்லாதார் தேர்வுகளில் வெற்றி பெற்றதே கிடையாது.

"இந்தத் தேர்தல்களை' நடத்துவதில் ஒரு தனிச்சாதியினர் எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றிருந்ததன் பயனாய் டில்லி சட்ட சபையிலாயினும் சரி; சென்னை சட்ட மன்றத்திலாயினும் சரி; நகர மன்றத்திலாயினும் சரி; பிராமணரல்லாதார் நிலை அவ்வாறே இருந்து வந்தது."

[பிராமணரல்லாதார்
கொள்கைப் பிரகடனம்]

திரு. பி.டி. ராசன் உறவினர் திரு. எம். டி. சுப்பிரமணிய முதலியார், 13—11—1918ல் நடந்த மதுரை மாவட்ட பிராமணரல்லாதார் மாநாட்டில் நிகழ்த்திய வரவேற்புரையில் அரசியலில் பிராமணர்களுக்கிருந்த ஆதிக்கம்பற்றிக் கூறியது வருமாறு;

"நமது சென்னை ராஜதானியில் ஏற்பட்டுள்ள 413 லட்சம் ஜனங்களில், பிராமணரல்லாதவர்கள் 400ம் பிராமணர்கள் 13ம் ஆகவே இருந்தும், பெரும்பான்மையான பிராமணரல்லாதவர்கள் தங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளாமையாலோ, அல்லது பிராமணர்களுடைய செல்வாக்கினாலோ தற்சமயம் சட்டசபையில் 10 பிராமணர்களையும், 1 பிராமணரல்லாதவரையுமே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்

பிராமணரல்லாதவருடைய சுதந்திரத்தை நிலைநிறுத்துவதற்குப் பிராமணரல்லாதோர்கள் தற்காலத்தில் செல்வாக்கற்றிருப்பதால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே மேற்படி சுதந்திரங்களை தவறாது சுவைக்கிறதற்கு இன்றியமையாததாகும்.''

[ஜஸ்டிஸ் கட்சிப் பொன்
விழா மலரிலிருந்து]

மிண்டோ மார்லி சீர்திருத்தம் நடைமுறையிலிருந்த காலத்தில் இந்திய சட்ட சபைக்கு சென்னை மாகாண சட்ட மன்றத்திற்கு நடைபெற்ற பொதுத் தேர்தல்களில்—குறிப்பாக, பொதுத் தொகுதிகளிலே பிராமணர்களே மிகுதியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட பிராமணர்களிலே பெரும்பாலோர் வக்கீல்கள் என்பதனையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். ஜனநாயக அரசியல் நடைமுறைக்கு வந்த ஆரம்ப காலத்திலே வக்கீல்களே மிகுதியும் செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது வரலாறுதரும் செய்தியாகும். ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய பின்னர் சென்னை மாகாண சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிராமணரல்லாதாரிலும் பெரும்பாலோர் வக்கீல்கள் என்பது இன்றைய மக்களின் நினைவுக்கு வராத உண்மையாகும். 1924ஆம் ஆண்டிற்கென சென்னை மாகாண அரசு வெளியிட்ட தகவல் நூலிலே, தமிழ் நாட்டில் பிராதன நகரங்களிலிருந்த வக்கீல் சங்கங்களில் உறுப்பினர்களாக இருந்தவர்களின் பெயர் பட்டியல் தரப்பட்டிருக்கிறது அதிலே, 100க்கு 99 சதவிகிதம்வக்கீல்கள் பிராமணத் தமிழர்களாக இருக்கக் காண்கின்றோம்.

1924ஆம் ஆண்டின் நிலைமை இதுவென்றால், மிண்டோ—மார்லி சீர்திருத்தம் நடைமுறையிலிருந்த—1909 முதல்1919 வரையிலுள்ள—கால கட்டத்திலே தமிழ் நாட்டு வக்கீல்களில் 100க்கு 95 சதவிகிதம் பிராமணராக இருந்திருக்கக் கூடுமென்று யூகித்துக் கொள்ளலாந்தானே!

இந்த நிலையில் 1909 முதல் 1919 வரை பட்டதாரிகள் தொகுதியிலிருந்து சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த 12 பேரில் 11 பேர் பிராமணராக இருந்தது நாம் புரிந்து கொள்ளக் கூடியதுதானே!

பொதுவாக, பிராமணரல்லாதார் இயக்கம் தோன்றிய தற்கான நியாயத்தை உணர்ந்து அந்த இயக்கத்தின் முன்ன ணித் தலைவர்களோடு பிராமணத் தலைவர்கள் சமரசம் பேசி யிருப்பார்களானல், அரை நூற்ருண்டுக் காலமாக தமி ழினத்தை அலைக்கழித்துவரும் வகுப்புவாதப்பூசலை ஆரம்ப காலத்திலேயே அழித்து முடித்திருக்கலாம். 1923 ஆம் ஆண்டில் சென்னை மாகாண சட்டமன்றத்திற்கு இரண் டாவது தேர்தல் நடைபெற்றது. அப்போதும் காங்கிரஸ் மகாசபை போட்டியிடாமல் ஒதுங்கி நின்றது. ஆனல் திரு. எஸ். சத்தியமூர்த்தி ஐயர் போன்ற காங்கிரஸ் காரர்களில் சிலர் சுயேச்சையாளராகப் பேட்டியிட்டு வெற்றி பெற்றனர். ஆயினும், கட்சி ரீதியில் ஜஸ்டிஸ் கட்சியே வெற்றிபெற்று, ஆட்சிக்கு வந்தது.

1926 ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில் காங் கிரஸ் ஆதரவோடு சுயராஜ்யக் கட்சி போட்டியிடவே ஜஸ்டிஸ் கட்சி தோல்வியுற்றது. சுயராஜ்யக் கட்சியின் ஆதரவோடு டாக்டர் ப. சுப்பராயன் தலைமையில் சுயேச் சையாளரின் அமைச்சரவை தோன்றியது. இந்த மாறுதலை எடுத்துக் காட்டி ஜஸ்டிஸ் கட்சியாருக்குப் புத்தி புகட்டினர் திரு. வி. க. அது வருமாறு:

“மாண்டேகு—செம்ஸ்பர்ட் சீர்திருத்தப்படி அமைந்த சட்டசபைத் தொடர்பாக மூன்று முறை தேர்தல்கள் நிகழ்ந் தன. முன்னிரண்டில் காங்கிரஸ் கலந்து கொள்ளவில்லை. அஃது ஒத்துழையாமையில் நின்றது. காங்கிரஸ் ஒத்துழை யாமை ஜஸ்டிஸ் கட்சிக்கு ஆக்கந் தேடியது. காங்கிரஸ் தேர்தலில் தலைப்பட்டிருந்தால் ‘ஜஸ்டிஸ்’ மந்திரிசபை அமைந்திருக்குமா? மூன்ரும் முறைத் தேர்தலில் காங்கிரஸ்

ஈடுபட்டது. 'ஜஸ்டிஸ்' படுதோல்வியடைந்தது. இரண்டு முறை அமைந்த 'ஜஸ்டிஸ்' கட்சி மந்திரிசபை காங்கிரசின் பிச்சை''.

[திரு. வி- க. வாழ்க்கைக் குறிப்புக்கள்: பக்.394]

இது, ஜஸ்டிஸ் கட்சியினருக்குத் திரு. வி. க. தந்த தெளிவுரை. அவர்களும் இந்த உண்மையை உணர்ந்தனர். ஜஸ்டிஸ் கட்சியைக் காங்கிரசுடன் இணைப்பது பற்றி ஆலோசிக்க அறிஞர் குமாரசாமி ரெட்டியார் தலைமையில் கோவையில் 23—7—26ல் கட்சிச் சார்பற்ற முறையில் ஒரு மாநாடு நடந்தது. அதிலே, காங்கிரசின் சார்பில் திரு. வி. க. கலந்து கொண்டார். மற்றும், டாக்டர் பி. வரதராசுலு நாயுடு போன்ற தேசிய வாதிகள் சிலரும் பங்கு கொண்டனர்.

ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் அதன் அப்போதைய தலைவர் பானகல் அரசர், முன்னாள் அமைச்சர் ஏ. பி. பாத்ரோ, ஓ. தணிகாசலஞ் செட்டியார் எம். எல். சி. ஈ. வே. ராமசாமி நாயக்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். அப்போது, ஈ. வே. ரா. ஜஸ்டிஸ் கட்சியில் இருந்தார். சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவிக்கவில்லை.

இந்த மாநாட்டைப் பற்றி 'திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்பு' என்ற தமது நூலில் (பக். 393–94) திரு. வி. க. கூறுவதாவது:

''மாநாடு நன்கு நடைபெற்றது. விஷயாலோசனைக் கூட்டத்தில் ஜஸ்டிஸ் சார்பில் பாத்ரோ, இராமசாமி முதலியார், தணிகாசலஞ் செட்டியார், ஆர்யா முதலியோர் பேசினர். ஆர்யா காங்கிரசைத் தாக்கியும், காஞ்சியில் வகுப்புத் தீர்மானத்தை யான் தள்ளியதை எள்ளியும் ஆரவாரஞ் செய்தனர். அவ்வேளையில் இராமசாமி நாயக்கர் தலையிட்டுப் ''பழைய குப்பைகளை இங்கே ஏன் கிளறல் வேண்டும்?'' என்றார்.

''அம்மாநாடு நிறைவேற்றிய தீர்மானங்களுள் சிறந்தன இரண்டு. ஒன்று ஜஸ்டிஸ் கட்சியார் காங்கிரசிலும் அங்கம் பெறுதல் வேண்டுமென்பது: இன்னொன்று பதவி ஏலாது சட்டசபையில் காங்கிரசுடன் ஒத்துழைத்தல் வேண்டுமென் பது. யான் இரண்டுக்கும் ஆசி கூறினேன்.

''கோவை மாநாட்டுத் தீர்மானத்தின்படி ஏ. இராம சாமி முதலியார், ஒ தணிகாசலஞ் செட்டியார் முதலியோர் காங்கிரசில் சேர முயன்றனர். 'நமது எண்ணம் ஓரளவிலா தல் ஈடேறிற்றே' என்று இன்புற்றேன்; அவ்வின்பம் பொங்கி வழியவில்லை. ஏன்? தமிழ்நாட்டுக் காங்கிரஸ் 'ஜஸ்டிஸ்' தலைவர்களை ஏற்க விரும்பவில்லை. புதுப் புதுக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. யான் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீநிவாச ஐயங்காரைக் கண்டு, ''ஜஸ்டிஸ் கட்சியின் துணைகொண்டு, சட்டசபையில் முட்டுக்கட்டையிடலாமே; இரட்டையாட்சியைக் குலைக்கலாமே'' என்று கேட்டேன்.

''ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களிடத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கு நம்பிக்கையில்லை. யான் என்ன செய்வேன்? எல்லோரையும் உங்களைப்போல நினையாதேயுங்கள். அரசியல் இராஜ தந்திரம் ஆழமுடையது' என்று பதிலிறுத் தார். நல்ல வாய்ப்பைக் காங்கிரஸ் இழந்தது என்று யான் எண்ணலானேன். எப்படியாவது சட்ட சபையில் முட்டுக் கட்டையிட்டு இரட்டை யாட்சியை வீழ்த்த வேண்டு மென்பது எனது உள்ளக் கிடக்கை. வகுப்புவாதம் நாட்டு மக்களுக்குள் அவநம்பிக்கையை உண்டு பண்ணியது.''

கோவை சமரச மாநாட்டில் தமிழ் நாட்டுக் காங்கிரசைச் சார்ந்த பிராமணத் தலைவர்களில் யாரும் கலந்து கொண்ட தாகத் தெரியவில்லை. காங்கிரஸ் பிராமணர்கள், 1926ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சியானது காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சியால் தோற்கடிக்கப் பட்டிருந்ததால், அதோடு அக்கட்சி தொலைந்து போகுமென்று நம்பின ரென

லாம். ஆனால், 1930 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி திரும்பவும் வெற்றி பெற்று, ஆட்சிபீடத்தி லேறியது. தொடர்ந்து ஏழாண்டுக் காலம் அதன் ஆட்சியே நீடித்தது. அந்தக் கட்சி இன்று இல்லையென்றாலும், அது வளர்த்த வகுப்புவாத உணர்வுதான் தமிழரல்லாதார் இன்றும் தமிழ்நாட்டிலே உயர் உத்தியோகங்கள் பெற்று வருவதற்குக் காரணமாக இருந்து வருகிறது.

கோவை மாநாட்டின் முடிவுப்படி ஜஸ்டிஸ் கட்சியாரை காங்கிரஸ் கட்சியில் சேர அனுமதித்திருந்தால், அவர்களில் பலர் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரர்களாக மாறி யிருத்தல் கூடும். அதனால், நாளடைவில் ஜஸ்டிஸ் கட்சி காங்கிரசிலே கரைந்து போயிருக்கவும் கூடும். அந்நாளில், மதரீதியில் வகுப்புக் கட்சிகளாக விளங்கிய முஸ்லிம் லீக், இந்து மகாசபை ஆகியவற்றின் தலைவர்கள் காங்கிரசிலும் சேர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தனர். பண்டித மதன்மோகன் மாளவியா, ஒரே காலத்தில் காங்கிரசிலும் இந்து மகாசபையிலும் தலைவராக இருந்தார். அதுபோல, கோவை மாநாட்டுத் தீர்மானப்படி ஒத்துழையாமைக் கொள்கையை ஏற்றுக் கொண்ட ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் களைக் காங்கிரசில் சேர்த்துக் கொண்டிருக்கலாம்.

ஜஸ்டிஸ் கட்சியாரை காங்கிரசிலே சேர்க்கத் தாம் எடுத்துக் கொண்ட முயற்சிக்கு பிராமணத் தலைவர்கள் ஆதரவு தராததனால் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. வேதனை யுற்றார். அவர் காங்கிரசிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். அந்நாளைய தமிழ்நாடு காங்கிரசிலே வகுப்புவாதக் கோடரியால் தமிழினம் வெட்டிப் பிளக்கப்படுவது கண்டு வேதனையுற்ற ஒரே காங்கிரஸ்காரர் திரு. வி. கல்யாண சுந்தரனாரேயாவார். ஈ. வெ. ரா. வெளியேறக் காரணமாக இருந்த காஞ்சி காங்கிரஸ் மாநாட்டிலேயே திரு. வி. க. கீழ் வருமாறு கூறி, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்களை எச்சரித் தார்.

"தமிழ் நாட்டின் ஒற்றுமைக்கு ஒரே சாதனமாயிருப்பது தமிழ் மொழி என்று மீண்டுமொருமுறை கூறுகிறேன். நாம் அனைவரும் தமிழர்கள் என்ற உணர்ச்சி பெருக வேண்டும்."

[திரு. வி. க. வாழ்க்கைக்
குறிப்புக்கள்; பக். 366]

கோவை மாநாட்டிலே ஜஸ்டிஸ் கட்சியினரை காங்கிரஸ் மகாசபைக்குள் கொண்டு வருவதற்கு முயன்று திரு. வி. க. தோற்பதற்கு முன்னும் பின்னும் காந்தியடிகளைக் கொண்டும் அம்முயற்சியில் பிராமணரல்லாதார் இயக்கத் தலைவர்களிலே சிலர் ஈடுபட்டனர்.

வகுப்புவாத நஞ்சு கலவாத நெஞ்சினரான காந்தியடிகளும் பிராமணருக்கும் பிராமண ரல்லாதாருக்கும் தக்க அறிவுரைகள் கூறி, அவர்களை ஒன்றுபடுத்த முயன்றார். 1920லும், 1927லும் தமிழகம் வந்திருந்தபோது, பிராமணர்—பிராமணர் அல்லாதாரிடையில் ஏற்பட்டுள்ள பிணக்கைத் தீர்த்து வைக்குமாறு அவர் வற்புறுத்தப்பட்டிருக்கிறார்.

22—8—20ல் அடிகள் சென்னையிலிருந்தபோது சட்டக் கல்லூரி மாணவர் சிலர் அவரையணுகி, பிராமணர்—பிராமணரல்லாதார் பிரச்னைபற்றி அடிகள் நிலையை அறிய விரும்பினர். அப்போது அவர் கூறியதாவது:

"பிராமணர்—பிராமணரல்லாதார் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பிராமணர்கள் சரணாகதி அடைந்து விட வேண்டும். இதுதான் அவர்களுடைய கடமை. பிராமணரல்லாதார் எத்தனை இடங்கள் கேட்கிறார்களோ அத்தனை இடங்களையும் அளித்து விட வேண்டும். என்னுடைய அதிகாரத்தில் அது இருந்தால், அவர்கள் கேட்பதற்கு மேலும் சில இடங்களை அளிப்பேன்.

"பிராமணர்கள் மீது கொண்டுள்ள அவநம்பிக்கையால் தான் பிராமணரல்லாதார் இவ்வாறு இடங்கள் கேட்கிறார்கள்.

"பிராமணர்கள் நீண்ட காலமாக மிகச் சிறந்த தொண்டாற்றியிருக்கிறார்கள். ஆனாலும் தங்களை உயர்வாகக் கருதும் தற்பெருமையின் காரணமாக, தங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே அவர்கள் கற்பிக்கும் வேறுபாடு கொடூரமானது. நாம் எந்த வேறுபாட்டை—அதாவது, ஐரோப்பியர்கள் தங்களுக்கும் கறுப்பர்களுக்கும் இடையே பாராட்டுகிற வேறுபாட்டை—எதிர்த்துப் போராடுகிறோமோ, அந்த வேறுபாட்டின் அளவிற்கு இதுவும் கொடூரமானது."

['இந்து', 23-8-1920]

தம்மை நேரில் சந்தித்து, பிராமணர்—பிராமணரல்லாதார் பிரச்னை பற்றிப் பேசிய சென்னைவாழ் பிராமண பிரமுகர் ஒருவர் மூலம் தமிழ் நாட்டுப் பிராமணர்களுக்கு அடிகள் அனுப்பிய செய்தி வருமாறு:

"நான் ஒரு பிராமணனாக இருந்து, ஒரு பிராமணரல்லாதார் என் வீட்டைக் கேட்டால், நான் அதை அளித்து விடுவேன். இதுவரை பிராமணர்கள் உன்னதமான, மதிப்பிற்குரிய நிலையில் இருந்து வந்திருக்கிறார்கள். அதனால்தான் அ ர்களிடம் செருக்கு வளர்ந்து வந்துகொண்டிருக்கிறது. அ ் போன்று பிராமணரல்லாதார் மத்தியில், தாங்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணமும் உருவாகி வந்திருக்கிறது. இந்த எண்ணம் உருவாகியதன் காரணமாக அவர்களுக்கு பிராமணர்கள் மீது நம்பிக்கையில்லாமல் போய்விட்டது. தற்போது இவ்வாறு பிராமணர்கள் உள்ள நிலை அவர்களே ஏற்படுத்திக் கொண்டதாகும். இந்த அவநம்பிக்கையைப் போக்கி ஒருமைப்பாட்டை ஏற்படுத்த வேண்டுமானால், பிராமணர்கள் பிராமணரல்லாதாருக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காகத் தங்களிடம் உள்ளதை யெல்லாம் அளித்துவிட வேண்டும். நீங்கள் (பிராமணர்கள்) உண்மையிலேயே அவர்களை உடன் பிறந்தவர்களாக எண்ணுகிறவர்கள் என்பதையும் இதுவரை அவர்கள் எவ்வாறு உங்களை நம்பி வந்திருக்கிறார்களோ அதேபோன்று நீங்களும்

நம்பிவந்திருக்கிறீர்கள் என்பதையும் அவர்களுக்கு மெய்ப்பித்துக் காட்டுங்கள்.''

['தமிழ் நாட்டில் காந்தி'; பக்கம் 296–97]

ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் திரும்பவும் காந்தியடிகள் 1927 செப்டம்பரில் தமிழ் நாட்டிற்கு வருகை தந்தார். இடைப்பட்ட ஏழு ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் வகுப்புவாதப் பூசல் வளர்ந்திருந்ததேயன்றி, குறைந்திருக்கவில்லை. ஆயினும், ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் காந்தியடிகள் மீது வைத்த நம்பிக்கையை இழந்தவர்களாகிவிடவில்லை. ஆகவே, 16—9—27ல் திரு. பன்னீர்செல்வம், திரு. உமா மகேசுவரன் பிள்ளை ஆகிய இருவரும் ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் சென்னையில் காந்தியடிகளைச் சந்தித்து, தமிழ் நாட்டைப் பிடித்துள்ள வகுப்புவாதத் தீமைக்குப் பரிகாரம் காணுமாறு வேண்டினர். அவர்களுடைய உரையாடல் வருமாறு:

உமா மகேசுவரம் பிள்ளை: பிராமணர்—பிராமணரல்லாதார் விவகாரம் வரவரச் சிக்கலாகி வருகிறது. தலைவர்கள் இதில் தலையிட்டு. சமாதானத்தை உண்டுபண்ண வேண்டும்.

மகாத்மா: பிராமணரல்லாதாரே இந்த இயக்கத்தைப் பற்றிப் பலவிதமாகக் கூறுகிறார்கள். பிராமணர்—பிராமணரல்லாதாருக்கிடையே இப்போது வேறுபாடுகள் இருந்தாலும் சிறிது காலத்தில் அவை மறைந்துவிடும் என்று டாக்டர் வரதராஜுலு நாயுடு கூறுகிறார். என்னைப் போன்றவர்கள் இதில் தலையிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். ஆனால், ஈரோடு இராமசாமி நாயக்கர் தென்னாட்டில் பிராமணர் கொடுமை அதிகமாக இருக்கிறதென்றும் என்னைப் போன்றவர்கள் இதில் அவசியம் தலையிட்டு, மன நிறைவு தரக்கூடிய ஒரு முடிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார். இப்போது பிராமணர்களிடத்து முற்போக்கான கொள்கைகள் பரவி வருவதைக் காண்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் நான் சென்னைக்கு

வந்தபோது, எஸ். சீனிவாச ஐயங்கார் வீட்டில் தாழ்வாரத்தில்தான் உட்கார்ந்திருந்தேன். இப்போது, அவர் வீட்டை என் வீடாகவே நினைத்துப் பழகி வருகிறேன். என் மனைவி அவர்களுடைய அடுப்பங்கரை வரை செல்கிறாள்.

பன்னீர்செல்வம்: பிராமணர்கள் அதிகாரங்களையும், உத்தியோகங்களையும் தாங்களே வைத்துக் கொள்கிறார்கள். பிற வகுப்பார் அவைகளை அடைவதற்கு இடமில்லாமற் போய்விடுகிறது.

மகாத்மா: நீங்கள் சொல்வதிலிருந்து அதிகாரங்களையும் உத்தியோகங்களையும் பங்கு போட்டுக் கொள்வதே உங்களுடைய முக்கிய குறிக்கோளாய் இருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட ஒரு குறிக்கோளுக்கு நான் ஆதரவாயிருக்க முடியாது. பொதுமக்களுடைய நன்மையைக் கருதாத எந்த இயக்கத்திலும் எனக்கு அனுதாபம் கிடையாது.

['தமிழ் நாட்டில் காந்தி'; பக். 221-22]

1920ஆம் ஆண்டின் இறுதியில் காந்தியடிகள் தமிழகம் வந்தபோது இங்கு நிலவிய பிராமணர்—பிராமணர் அல்லாதார் பூசல்பற்றித் தமது கருத்தைத் தெளிவுபடக் கூறியதனை ஏற்கனவே அறிந்தோம். அதிலே, பிராமணரல்லாதாருக்குப் பிராமணர்கள் விட்டுக் கொடுத்து சமரசம் காண வேண்டியதன் அவசியத்தை அடிகள் வற்புறுத்தியிருந்தார். அரசியல் பதவிகளையும், அரசு அலுவல்களையும் பிராமணர்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள நிலைதான் வகுப்புப் பூசலுக்குக் காரணமென்பதனை அடிகள் உணர்ந்திருந்தது புலனாகின்றது.

1920க்குப் பின்னர், மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி, சென்னை மாகாண சட்ட மன்றத்திற்கு மூன்று பொதுத் தேர்தல் நடந்து முடிந்திருந்த நிலையில் 1927ல் அடிகள் திரும்பவும் தமிழகத்திற்கு வருகை தந்தார். 1920க்கும் 1927க்கும் இடையிலுள்ள 7ஆண்டு காலத்தில் ஜஸ்டிஸ் கட்சியானது தனக்கென ஒரு வரலாற்றைப் படைத்து விட்டது

உண்மையில் இந்த ஏழு ஆண்டு காலத்தில்தான் இந்தியாவில் விடுதலைக் கிளர்ச்சி பொதுஜன எழுச்சியாக மாறுதலடைந்தது. ஆம்; சாதாரணப் பொது மக்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக எழுச்சி கொண்டது இந்தக் காலத்தில்தான்!

சட்டமன்றம், கல்லூரிகள், நீதிமன்றங்கள் ஆகியவற்றைப் பகிஷ்கரிக்கும் வகையிலான வேலைத் திட்டங்களைக் கொண்ட "ஒத்துழையாமை"ப் போர் நிகழ்ந்தது 1920க்கும் 1927க்கும் இடையிலுள்ள ஏழாண்டு காலத்தில்தான்! இந்தக் கால கட்டத்தில் ஜஸ்டிஸ் கட்சியின் போக்கு எதுவாக இருந்ததென்பதனைத் திரு. வி. கலியாணசுந்தரனார் கூறக் கேட்போம்:

> "'ஜஸ்டிஸ்' கட்சி காங்கிரசுக்கு மாறுபட்டு நிற்றலான், அது, தேச நலனுக்கு மாறுபட்ட நெறியில் நிற்கக் கடமைப்பட்டு விட்டது.
>
> "காங்கிரஸ் 'ஒத்துழையாமை' என்றால், 'ஜஸ்டிஸ்' 'ஒத்துழைப்பு' என்று சொல்லும்.
>
> "காங்கிரஸ் 'பகிஷ்காரம்' என்றால், 'ஜஸ்டிஸ்' 'வரவேற்பு' என்று கூறும்.
>
> "காங்கிரஸ் 'வெண்மை' என்றால், 'ஜஸ்டிஸ்' 'கருமை' என்று பகரும்.
>
> "இவ்வாறு தேச நலனுக்கு இடையூறு செய்வதே 'ஜஸ்டிஸ்' கட்சியின் தொண்டாக முடிந்தது."
>
> ['நவசக்தி', 13—3—1929;
> தமிழ்ச்சோலை, பக். 105]

திரு. வி. க. வருணித்த வகையிலான ஜஸ்டிஸ் கட்சியின் ஏழாண்டு கால வரலாறு காந்தியடிகளுக்கு அதன்பால் நல்லெண்ண மில்லாதபடிச் செய்திருக்கக் கூடும். அதனால், 1927ல் அடிகள் தமிழகத்திற்கு வருகை தந்தபோது,

தேசவிரோதப் போக்கிலிருந்து ஜஸ்டிஸ் கட்சி தன்னை விடு வித்துகொள்ள வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். அது வருமாறு:

"இந்து—முஸ்லிம் சச்சரவு பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பயன்படுவதாக இல்லை. ஆகையால், பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்கும் இடையேயுள்ள பிளவைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது. பிராமணரல் லாதார் உண்மையிலேயே இதய பூர்வமாக சுதந்திர இயக்கத்தில் பங்கு கொள்ள முடியாவிட்டால், அதற்கு எதிராக அரசு செய்யும் சதியில் சேர்ந்துகொண்டு சுதந்திரப் போருக்கு முட்டுக்கட்டை போடாமலாவது இருப்பார்களாக!"

['தமிழ் நாட்டில் காந்தி';
பக். 310—11.]

இத்துடனன்றி, பிராமணர்கள் தங்களுக்கிழைக்கும் கொடுமைகள் பற்றிப் பேசும் பிராமணரல்லாதார்—குறிப் பாக, அவர்களில் உயர் சாதியார், தாழ்த்தப்பட்ட மக்களுக் கிழைக்கும் கொடுமைகளையும் சுட்டிக் காட்டினர். அது வரு மாறு:

"பிராமணர்கள் மீது பிராமணரல்லாதார் குறை கூறுகிறார்களே, அது, இந்து சமயத்தின் மீது ஆதி திராவிடர்களும் பஞ்சமர்களும் கூறும் குறைகளுடன் ஒப்பிட்டால் ஒன்றுமே இல்லை. இந்து சமயமானது இவர்களை ஒருவகைத் தொழுநோயர்களாக்கி வைத் திருக்கிறது. இதன் விளைவாகத்தான் நம்மை பிரிட்டிஷ் பேரரசு தொழு நோயர்களாக்கிவிட்டது. பஞ்சமர்கள் வயிற்றால் ஊர்ந்து போகுமாறு செய்த குற்றம் பிரா மணரல்லாதாரையும் சாரும்."

['தமிழ் நாட்டில் காந்தி';
பக்.311 – 12]

ஜஸ்டிஸ் கட்சியின் தவருன அரசியல் போக்கிலிருந்து பிராமணரல்லாதாரின் நலன்களைப் பிரித்துப் பார்த்து, அவர்களுடைய கோரிக்கைகள்பால் அனுதாபம் காட்டி, தமிழ் நாட்டில் வகுப்புப் பூசல் தீருவதற்கான வழிவகை களைக் கூறவும் அடிகள் தவறவில்லை.

ஜஸ்டிஸ் கட்சியின் செல்வாக்கிலிருந்த கடலூர் (தெ. ஆ.) நகர மன்றம் அடிகளுக்களித்த வரவேற்பில், வகுப்புப் பூசலைத் தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அடிகள் அளித்த பதில் வருமாறு :

''நானே ஒரு பிராமணரல்லாதார் என்ற முறையில் என் உயிரை இழப்பதன் வாயிலாக அந்த வேற்றுமை களை நான் அகற்ற முடியுமாயின், இந்த விநாடியே செய்து விடுவேன்.

''இந்தக் கஷ்டமான பிரச்னைக்குத் திட்டமான பரி காரம் எதுவும் என்னிடம் இல்லை. அந்த இருசாராருக் கும் எவ்விஷயத்தில் வேற்றுமை என்பது இப்போதுகூட எனக்குத் தெரியாதென்பதை நான் உங்களிடம் ஒப்புக் கொள்ளுகிறேன்.

''நந்திமலையில் என்னைப் பார்க்க வந்த பிராமணரல் லாதாரிடமிருந்து வேற்றுமைக்குக் காரணத்தைத் தெரிந்து கொள்ள முயற்சித்தேன். என்னுடைய பிரயாணத்தின்போது வேற்றுமைக்கான காரணங்கள் யாவற்றையும் எனக்குக் கூறுவதாக அவர்கள் உறுதி கூறியுள்ளனர்.

''பிராமணர்களின் புகார் என்ன வென்பதும் எனக்குத் தெரியாது என்பதை நான் ஒத்துக் கொள்ளத் தான் வேண்டும். இந்த விஷயத்தைக் குறித்து என் கருத்து எப்படி இருக்கு மென்பதைப் பூரணமாக அறிந்து கொண்டே, வேற்றுமைகள் என்னவென்பதைத் தந்திரசாலிகளான பிராமணர்கள் என்னிடம் கூறவில்லை போலும்!

"நான் ஒரு பிராமணரல்லாதார் என்பது உங்களுக்குத் தெரியும். இருந்தாலும் நான் பிராமணரல்லாதாரைக் காட்டிலும் பிராமணர்களிடையேதான் அதிகமாக வாழ்ந்திருக்கிறேன்; அவர்களுடன்தான் அதிகமாகப் பழகியிருக்கிறேன். எனவே, பிராமண நண்பர்களிடமிருந்துதான் இந்த வேஷமெல்லாம் நான் எடுத்துக் கொண்டிருப்பதாகப் பிராமணரல்லாத நண்பர்கள் ஐயப்படுகிறார்கள். இந்தப் பிரச்சினை ஒழுங்காகத் தீர என் மீது நம்பிக்கை வைப்பதில் பலனில்லையென்று பிராமணரல்லாதார் கருதுகிறார்களோ என்ற தீவிர ஐயப்பாடும் எனக்கு உண்டு. இருசாராராலும் ஒதுக்கி வைக்கப்பட்ட ஆனந்த நிலையில் நான் இருக்கிறேன்."

[காந்தி நூல்கள் தொகுப்பு-7; பக். 77-78]

தமிழ் நாட்டைப் போலவே மகாராஷ்டிரத்திலும் பிராமணர்—பிராமணரல்லாதாரிடையில் அரசியல் பதவிகளையும், அரசு உத்தியோகங்களையும் அடைவதிலே வகுப்பு ரீதியான போட்டியும் போராட்டமும் கடுமையாக இருந்தன. அங்கும் அடிகளார் இருசாராருக்கும் அறிவுரை கூறினார். தமிழ் நாட்டுக்கும் பொருந்தக் கூடியதாக இருப்பதால், அதனை இங்கு பார்ப்போம்:

"பிராமணரல்லாதார் கூறும் வாதம் மிகவும் பலவீனமானது. எனவே, தேசியக் கட்சியைச் சார்ந்த பிராமணர்கள் காங்கிரசின் ஒத்துழையாமைத் திட்டத்தை முற்றிலும் நிறைவேற்றுவார்களாயின் மகாராஷ்டிரத்தின் பொது வாழ்க்கையிலிருந்து பிராமணரல்லாதாரின் இயக்கம் மறைந்துவிடும் என்பது நிச்சயம். மத அல்லது சமுதாயக் குறைபாடு காரணமாக அந்த இயக்கம் வலுப்பெறவில்லை; பிராமணர்களின் அரசியல் ஆதிக்கம் காரணமாகவே அது பலம் பெற்றுள்ளது.

"சந்தேகமின்றி யோக்கியதாம்சம் காரணமாகவே பிராமணர்கள் அரசியலில் ஆதிக்கம் பெற்றிருக்கிறார்கள். சுயராஜ்யம் பற்றிப் பரந்த கருத்துக்கள் கொண்டுள்ள தேசிய பிராமணர்கள், அரசு உத்தியோகங்களை அறவே விலக்கிவிட வேண்டும்; சட்டசபைகளையும் நகர மன்றங்களில் உள்ள நியமன இடங்களையும் பகிஷ்கரித்து விடவேண்டும். இவ்விதம் செய்தால் பிராமணரல்லாதாரின் புகார் அறவே மறைந்துவிடும்.

"பிராமணர் அல்லாதாருக்குத் தெரியாமலேயே அரசினர் அவர்களைப் பிராமணர்களுக்கு எதிராகத் தூண்டிவிடச் சூழ்ச்சி செய்வார்கள். அதுதான் அரசினரின் கொள்கை என்பது நிரூபிக்கப் பட்டதாகும். இருசாராரிடையிலும் அவ்விதம் சண்டையைத் தூண்டிவிட்டும், பிராமணரல்லாதாருக்கு அரசியல் ஆசை காட்டியும். அரசினர் தங்கள் ஆயுளை நீட்டித்துக் கொள்ள முயற்சிப்பார்கள்.

"பிராமணர்கள் அதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் பிராமணரல்லாதாரின் எதிர்ப்பைத் தீங்கற்றதாகச் செய்துவிடவேண்டும்—அதாவது, எந்த உருவத்திலும் பிராமணர்கள் அரசின் ஆதரவையோ, சலுகையையோ துறந்துவிட வேண்டும்."

[காந்தி நூல்கள்—தொகுப்பு 7: பக். 119.]

5—10—27ல் தமிழகத்தில் கோயில்பட்டியில் நடந்த காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் தமிழ் நாட்டில் நிலவும் வகுப்புப் பிரச்னை பற்றி அடிகள் கூறியது வருமாறு:

"இந்தச் சிக்கலைப் புரிந்து கொள்ள நான் ஒவ்வொரு முயற்சியும் செய்திருக்கிறேன். எவ்வளவு நேரம் ஒதுக்க முடியுமோ அவ்வளவு நேரம் ஒதுக்கி பிராமணரல்லாதார் தலைவர்களுடன் விவாதித்திருக்கிறேன். இப்போது இச் சிக்கலை நான் புரிந்துகொண்டு விட்டேன் என்று எண்ணுகிறேன்.

"இதைப்பற்றி 'யங் இந்தியா'வில் எழுதி, இரு வகுப்பினருக்கிடையேயும் உள்ள வேறுபாட்டைப் போக்கி நல்லுறவை ஏற்படுத்த முயலுவேன். அதற்கு மேல் நான் எதுவுஞ் செய்வதற்கில்லை. ஏனென்றால், இரண்டு வகுப்பினருமே என்னுடைய ஆலோசனைப்படி நடப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

"இரண்டு வகுப்பைச் சேர்ந்த தலைவர்களும் சந்தித்துப் பேசித் தங்களுக்கிடையே ஓர் உடன்பாட்டிற்கு வர முயல வேண்டும்.

"பிராமணர்மீது பிராமணரல்லாதார் கூறும் சில குறைகள் நியாயமானவையாகவே இருக்கின்றன. ஆனால், சில சமயங்களில் அளவுக்கு மீறி அவைகளை அவர்கள் மிகைப்படுத்தி விடுகிறார்கள். அவர்களுடைய நியாயமான குறைகளையெல்லாம் நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால், அதற்காக பிராமணர்கள் மீது பிராமணரல்லாதார் வெறுப்புக் கொள்வதை நான் ஏற்க முடியாது.

"பிராமணர்கள் தங்களுக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்வதில்லையென்று பிராமணரல்லாதார் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். ஆனால், அதற்காக எல்லாத் தீமைகளையுமே பிராமணர்கள்தான் ஏற்படுத்தி விட்டதாக அவர்கள் கூறுவதை நான் ஏற்க முடியாது.

"நான் ஆலோசனை கூறினாலும் பரம்பரை பரம்பரையாகத் தங்களுக்குக் கிடைத்துள்ள உரிமைகளை விட்டுக் கொடுக்க பிராமணர்கள் முன்வருவார்களா என்பது ஐயத்திற்கிடமானதே."

['தமிழ் நாட்டில் காந்தி'; பக். 560,]

தமிழ் நாட்டிலுஞ் சரி; மகாராஷ்டிரத்திலுஞ் சரி; பிராமணருக்கும் பிராமணரல்லாதாரில் படித்தவருக்குமிடையில் அரசியல் பதவிகளையும், அரசு உத்தியோகங்களையும் பங்கிட்டுக் கொள்வதில்தான் போட்டியும் போராட்ட

மும் உருவாயின. அதனல், ஒத்துழையாமை இயக்கத்தின் கர்த்தாவான காந்தியடிகள், வகுப்பு விகிதாச்சாரப்படி அரசியல் பதவிகளையும் உத்தியோகங்களையும் பங்கிட்டுக் கொடுக்கும் அடிப்படையில் பிராமணருக்கும் பிராமண ரல்லாதாருக்கு மிடையில் சமரசம் செய்து வைப்பதற்குச் சந்தர்ப்பமே இல்லை. காந்தியடிகளேயன்றி, தமிழ் நாடு காங்கிரசும் வகுப்பு சமரசத்தில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்ப மில்லை. காங்கிரசிலிருந்த ராஜாஜி போன்ற பிராமணத் தலைவர்கள் நிலையும் இதுதான்.

காங்கிரசிலிருந்து வெளியேறி அரசுடன் ஒத்துழைத்து வந்த சர். சி. பி. ராமசாமி ஐயர், மகாகனம் சாஸ்திரியார், டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியார், வி. கிருஷ்ணசாமி ஐயர் போன்ற மிதவாத பிராமணத் தலைவர்கள் தமிழ் நாட்டள விலேனும் பிராமணரல்லாத தலைவர்களுடன் கலந்து பேசி ஒரு உடன்பாடு கண்டு வகுப்புவாதப் பூசலைத் தவிர்த்திருக்க முடியும். ஆனல், மேற்சொன்னவர்கள் காங்கிரசிலிருந்து வெளியேறியதே பிரிட்டிஷார் வழங்கிய அரசியல் சீர் திருத்தத்தின் மூலம் கிடைக்கக் கூடிய பதவிகளைப் பெறு வதற்காகத்தானுதலால், அவர்கள் தமிழினத்தாரைப் பிளவு படுத்திய வகுப்புப் பூசலைத் தீர்க்கத் தவறியது நாம் புரிந்து கொள்ளக் கூடியதுதான்!

தமிழ் நாட்டு அரசியல் வாதிகள்—அவர்கள் பிராமண ராயினும், பிராமணரல்லாதாராயினும்—தாய் மொழி யிடத்துப் பற்றில்லாதவர்களா யிருக்கின்றனர் என்ற உண்மையைக் காந்தியடிகள் தமது சுற்றுலாவின்போது உணர்ந்து கொண்டார். அதுபற்றி அவர் கூறியதாவது :

"சென்னைச் சுற்றுலா எனக்கு ஏமாற்றம் அளித்தது. அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக அந்தப் பகுதியில் ஆங்கிலத்தின் மோகம் அவ்வளவு ஆழ மாகப் பதிந்திருக்கிறது. சென்னையில் ஆங்கிலந் தெரிந்த யாரும் தமிழைப் பற்றி அக்கரை கொள்வதில்லை. வங்காளி

களும் ஆங்கிலத்தை நேசிக்கிறுர்கள். ஆனுலும், அதற்காக வங்காளி மொழியை அவர்கள் கைவிட்டு விடுவதில்லை. சென்னையில் தமிழைக் கைவிட்டு விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். இதனுல், தமிழ் வளர்ச்சியடையவில்லை யென்பது மட்டுமல்ல; ஆங்கிலம் பேசும் பிரிவினருக்கும் தமிழ் பேசும் பிரிவினருக்கும் இடையே ஒரு பெரிய ஏற்றத் தாழ்வு இருக்கிறது.

"என்னுடைய ஏமாற்றத்திற்கு மற்றொரு முக்கிய காரணம் யாதெனில், தருமத்தின் மீது சென்னை மக்கள் உண்மையான 'மதிப்புக் கொண்டிருந்தாலும், குருட்டுத்தன மான மதவைதிகம் தங்களை முழுதும் ஆட்கொள்ள அவர்கள் இடமளித்துவிட்டார்கள். ஆகையால் சமயத்தின் வெளித் தோற்றங்கள்தாம் அங்கே இருக்கின்றன. உட்பொருள் மறைந்துவிட்டது. இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலும் இல்லாத அளவிற்குப் பஞ்சமர்கள் அங்கு இழிவுபடுத்தப்படு கிறுர்கள்.

"வேறு எங்கும் இல்லாத அளவுக்குப் பிராமணர்களி லிருந்து பிராமணரல்லாதார் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர்.

"அதே சமயம் வேறு எப்பகுதியினரும் அவர்கள் அளவு விபூதியையோ, சந்தனத்தையோ, குங்குமத்தையோ செல வழிப்பதில்லை. வேறு பகுதியிலும் அங்குள்ள அளவு கோயில்கள் இல்லை; கோயில்களுடைய பராமரிப்பிற்காகத் தமிழகத்தின் அளவுக்கு செலவிடுவதுமில்லை.

"இதன் காரணமாகப் படித்தவர்கள் சமயத்திலிருந்து ஒதுங்கி எதற்கெடுத்தாலும் குற்றங்கண்டு பிடித்துக் கொண் டிருக்கின்றனர்.

"இது ஒருபுறம்; மற்றொரு புறம் வைதிகர்களிடையே ஒரே இருளும் அறியாமையும் சூழ்ந்திருக்கின்றன."

['தமிழ் நாட்டில் காந்தி'; பக். 375—76.]

காந்தியடிகள், தமிழினத்தாருடைய குறைபாடுகளை—குறிப்பாக, தமிழர் சமுதாயத்தின்மீது செல்வாக்கு செலுத்தும் பிராமணர்களுடைய குறைபாடுகளைச் சரியாகவே மதிப்பிட்டுக் கூறினர். தமிழருக்குத் தாய்மொழிப்பற்று இருந்திருக்குமானல், அவர்களில் பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்கும் இடையே பூசல் தோன்றியிருக்காது. சந்தர்ப்ப நிர்ப்பந்தங்களாலும், அன்னிய ஆட்சியின் சதிகளாலும் அப்பூசல் தோன்றியிருப்பினும், அது, தமிழ் மொழிப்பற்று என்னும் சூரியன்முன் பனிபோன்று தோன்றிய ஆரம்பத்திலேயே அழிந்து போயிருக்கும். தமிழ் நாட்டவரிடையில் தமிழ்ப் பற்று இருந்திருக்குமானல், அதன் விளைவாகத் 'தமிழர்' என்ற இனப்பற்றும் இருந்திருக்கும். மொழிப்பற்றும் இனப்பற்றும் இல்லாமையால், எஞ்சியது சாதிப்பற்று ஒன்ருகத்தான் இருந்தது. அதுவே பரஸ்பரம் பகைப்பதற்கும் காரணமானது.

சுருங்கச்சொன்னல், பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்குமிடையே மொழிப்பற்ருே, இனப்பற்ருே, உண்மையான மதப்பற்ருே இணைப்புச் சக்தியாக இருக்கவில்லை. அதனுற்ருன், அவர்கள் தத்தம் சாதியையே முதலும் முடிவுமாகக் கொண்டு சண்டையிட்டார்கள். அன்றுமட்டுமா, இந்த அவலம்? இன்றுங்கூடத்தான்!

பிராமணரல்லாதாரின் குருமார்களாக விளங்கிய பிராமணர்களின் மதப்பற்று குறித்து அடிகள் கூறியதும் எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். பிராமணர்களைப் பிடித்துள்ள ஆங்கில மோகமும் உத்தியோக மோகமும் அவர்கள் தங்களிடமிருந்து ஆங்கிலமறியா பிராமணரல்லாதாரை ஒதுக்குவதற்குக் காரணமாக இருந்தன.

தமிழர் சமுதாயத்தில் கல்வியறிவிலும் உலக அனுபவத்திலும் சிறந்து விளங்கிய பிராமணர்கள் முதல் முயற்சியெடுத்திருந்தால் தமிழினத்தைப் பிளவுபடுத்திய வகுப்புப் பூசலை ஒழித்துக் கட்டும் வகையில் பிராமணரல்லாத தலை

வர்களிடையே பேசி சமரசம் கண்டிருக்க முடியும். அதைத் தான் காந்தியடிகளும் வற்புறுத்தினர்.

சமரச விஷயத்தில் பிராமணரல்லாத தலைவர்கள் காட்டிய ஆர்வத்தை பிராமணத் தலைவர்கள் பிரதிபலிக்கவில்லையென்பது வரலாறு காட்டும் உண்மையாகும். ஒரு சமுதாயத்தின் அறிவாக விளங்கும் சாதியார் தங்கள் கடமையை செய்யத் தவறிவிட்டால், அந்தச் சமுதாயமே அழிந்து போகும் என்பதற்கு சகோதரர்களான கௌரவருக்கும் பாண்டவர்களுக்கும் இடையில் நடந்த போரைக் காட்டுகிறார் பாரதியார். அது வருமாறு:

''ஒரு சங்கத்தின்—ஒரு ஜாதியின், ஒரு தேசத்தின்—அறிவு மழுங்காதிருக்கும் வரை அதற்கு நாசம் ஏற்படாது. பாரத தேசத்தில் முற்காலத்தில் சாதி முழுமையின் அறிவுக்குப் பொறுப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர் இருந்ததாகப் பழைய நூல்களிலே காணப்படுகிறது.

''அந்தப் பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பார்களானால் மற்றக் குலத்தவரும் நெறி தவறியிருக்கமாட்டார்கள்; மஹாபாரதப் போர் நடந்திருக்காது. பாரத தேசத்தில் பெரியதோர் க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்கமாட்டா. ஒரு தேசத்திற்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத் தேசத்திலுள்ள பிராமணர்களே பொறுப்பாளிகள்.''

[பாஞ்சாலி சபதத்திற்குப் பாரதியார் எழுதியுள்ள ''பொருள் விளக்கமும் குறிப்புக்களும்'' என்னும்பகுதியில்]

பிராமணர் அல்லாதார் இயக்கத்தின் பலத்தை அது தோன்றிய காலத்தில் வாழ்ந்த பிராமணத் தலைவர்கள் சரியானபடி மதிப்பிடத் தவறிவிட்டனர். அந்த இயக்கத்தின் தலைவர்கள் தேச விடுதலை இயக்கத்திற்கு எதிராகச் செயல்பட்டமையால், அது காரணமாகவே அது அடியோடு அழிந்து போய் விடுமென்று தவறாக மதிப்பிட்டனர்.

பிராமணர்களிலே முற்போக்காளரும் பிராமண சாதி யாரின் குறைபாடுகளை அஞ்சாது எழுதியும் பேசியும் அந்த சாதியாரின் வெறுப்புக்கு ஆளானவருமான பாரதியார் கூட, பிராமணரல்லாதார் இயக்கத்தைச் சரியாக மதிப் பிடத் தவறிவிட்டார். மகாகவி என்ற முறையில் அவர் பெற் றிருந்த தீர்க்க தரிசனம் இதிலே அவருக்குக் கைகொடுக்க வில்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது. இதோ, பாரதியார் கூறுகிருர்:

"இந்தியாவின் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் நமது சென்னை மாகாணத்தில்தான் ஜாதி பேதத்தைப் பற்றிய மனஸ்தாபங்கள் இப்போது அதிகமாக முளைத்திருக்கின்றன வென்பது அந்த மனஸ்தாபங்கள் ராஜரீக விவகாரங்களி லுங்கூடப் புகுந்து தேச விடுதலையாகிய பரம தர்மத்திற்கே ஓர் இடுக்கணுகக் கூடிய நிலைமை இம்மாகாணத்தில் மாத்தி ரமே காணப்படுவதினின்றும் நன்கு விளங்கும். ஆயினும் இது பற்றி சுதேசாபிமானிகள் அதிகமாகப் பயப்பட வேண் டியதில்லை. ஏனென்ருல். முதலாவது உலகம் முழுவதிலும் புதிதாகத் தோன்றிச் சென்ற சில வருஷங்களாகப் புயற் காற்றைப்போல் தொழில் செய்து வரும் தெய்விகமான விடுதலைக் கிளர்ச்சியின் சக்தியால் இந்தியாவின் மக்கள் முப் பது கோடி பேரும் எங்களுக்கு ஸ்வராஜ்யம் வேண்டிய தில்லையென்று ஹடம் பண்ணிய போதிலும் இந்தியாவுக்குக் கட்டாயமாக ஸ்வராஜ்யம் வந்து தீரவே செய்யும்.

"எனவே எந்த வகையாய் யோசித்த போதிலும் இந்த சென்னை மாகாணத்து ஜாதி பேதக் கிளர்ச்சியினுல் இந்தியாவின் விடுதலைக்குத் தாமஸம் ஏற்படுமென்று நினைக்க ஹேது இல்லை.

"தவிரவும், இந்த பிராமணரல்லாதார் கிளர்ச்சி கால ரீதியில்தானே மங்கி அழிந்து விடுமென்று நிச்சயிப்பதற்குப் போதிய காரணங்கள் இருக்கினறன. முதலாவது, இதில் உண்மையில்லை. உண்மையாகவே இந்தியாவில் ஜாதிபேத

மில்லாமல் செய்துவிட வேண்டுமென்ற ஐக்கிய புத்தி உடையோரில் மிகமிகச் சிலரே இந்தக் கிளர்ச்சியில் சேர்ந்திருக்கிறார்கள். பெரும்பாலும் சர்க்கார் அதிகாரங்களையும் ஜில்லா போர்டு தாலுகா போர்டு முனிசிபாலிடி சட்டசபை முதலியவற்றில் கௌரவ ஸ்தானங்களையும் தாமே அடைய வேண்டுமென்ற ஆவல் உடையவர்களே இக்கிளர்ச்சியின் தலைவராக வேலைசெய்து வருகிறார்கள்.

''பிராமணரல்லாதார் என்ற வகுப்பே கிடையாது. அதுவே பொய். எனவே இந்தக் கிளர்ச்சியின் மூலமே பொய்யாக இருப்பது கண்டு இதனை உண்மையில்லாத கிளர்ச்சி என்கிறேன்.

''உண்மையாகவே, இந்தியாவில் ஜாதி பேதங்களில்லாமல் சமத்துவக் கொள்கை வெற்றியடைய வேண்டுமென்றால், அதற்கு ஸ்வராஜ்ய ஸ்தாபனமே சரியான உபாயம். ஸ்வராஜ்யம் கிடைத்தால் சட்ட சபைகளில் எல்லா ஜாதி மேதாவிகளும் கலந்திருப்பார்களாதலால் அந்த சபைகளின் மூலமாக இந்தியாவில் முதலாவது ராஜரீக வாழ்வில் சமத்துவக் கொள்கையை நிறுத்தி விடலாம்.''

[பாரதி நூல்கள்—கட்டுரைகள்; பக். 572-574]

பிராமணரல்லாதார் இயக்கம் பற்றி பாரதியாரின் மதிப்பீடு சரியானதல்ல வென்பதைக் காலம் காட்டிவிட்டது. அவர், 1921 செப்டம்பரில் காலமானார். அதற்கு ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன் அவர் இதை எழுதியிருக்கலாம். அவர் மறைந்த பின்னர் ஜஸ்டிஸ் கட்சி சரியாக 16 ஆண்டுகள் சென்னை மாகாணத்தில் ஆட்சி செலுத்தி, பிரிட்டிஷார் புகுத்திய இரட்டையாட்சிக்கு வெற்றி தேடித் தந்ததை வரலாறு காட்டுகிறது.

ஜஸ்டிஸ் கட்சியானது அரசியல் பதவிகளை, அரசு உத்தியோகங்களை அடைவதில் மட்டுந்தான் பிராமணர்களுடன் போட்டியிட்டது. ஆனால், ஜஸ்டிஸ் கட்சியின் ஆதரவோடு பெரியார் ஈ.வே. ராவால் தொடங்கப் பெற்ற சுயமரியாதை

இயக்கமானது அரசியல்-சமய-சமுக ரீதியில் பிராமணருக்கு எதிராக ஒரு போராட்டத்தையே தொடங்கி வைத்ததைக் கண்டோம். அது, பல மாற்றுப் பெயர்களைக் கொண்டு இன்றளவும் நீடித்து வருவதையும் காண்கிறோம். இடைக் காலத்தில் தமிழ் நாடு காங்கிரசின் தார்மிக ஆதரவு அதற்குக் கிடைத்ததையும் நாடறியும்.

பிராமணரல்லாதார் இயக்கம் பழைய சென்னை மாகாணம் முழுவதிலும் நடைபெற்றதென்றாலும், அதன் வேகம் தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருந்தது. ஆந்திர, கேரள, கர்நாடகப் பகுதிகளில் பிராமணருக்கும் பிராமணர் அல்லாதாருக்குமிடையே போட்டிதான் நிகழ்ந்தது. தமிழ் நாட்டிலோ, போராட்டமே நடந்தது—நடக்கிறது.

தேசியவாதிகளான தமிழர்கள்-குறிப்பாக, பிராமணர்கள் ''பிராமணரல்லாதார் இயக்கத்தால் தேச விடுதலைப் போர் பாதிக்குமா, பாதிக்காதா?''—என்றுதான் ஆய்வு நடத்தி அபிப்பிராயம் வெளியிட்டார்கள். அந்த வகுப்புப் பூசலால் தமிழினம் பிளவுபட்டதையோ, அதனால், தமிழரல்லாதார் தமிழகத்தைத் தங்கள் உத்தியோக வேட்டைக்காடாகக் கொண்டதனையோ கவனத்திலெடுத்துக் கொண்டு ஆய்வு நடத்தத் தவறிவிட்டனர். காரணம், 'தமிழர்' என்ற இன உணர்ச்சி யில்லாமைதான்.

1926ல் சென்னை மாகாண சட்ட மன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில், சுயராஜ்யக் கட்சியின் மூலம் காங்கிரஸ்காரர்கள் ஜஸ்டிஸ் கட்சி வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட்டனர். அதனால், அக்கட்சி படுதோல்வியுற்றது. அப்போது, 3—12—26ல் சென்னை மயிலாப்பூர் இந்திய நாகரீக அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் டாக்டர் யூ. ராமராவ் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அதில், சக்கரவர்த்தி ச. இராசகோபாலாச்சாரியார் தமிழ்நாட்டில் நிலவிய வகுப்புப் பூசல்பற்றிப் பேசியதாவது:

"இங்கே பெரும்பாலோர் பிராமணர்களா யிருப்ப தால் அவர்களுக்கென்று சில வார்த்தைகள் கூறுகிறேன். "உத்தியோகம் உத்தியோகம்" என்று வயிற்றுப் பிழைப்பு வேட்டையில் ஈடுபட்டும், பிறவகுப்பாரின் பொருமைக்கும் பகைமைக்கும் ஏன் நீங்கள் ஆளாக வேண்டும்?

"தேர்தலில் டாக்டர் ராமராவ் போன்றவர்களே நிறுத்தி வெற்றிபெற வைத்துவிட்டதால் மட்டும் இந்தப் பகைமை போய்விட்டதாக எண்ணிக்கொள்ள வேண்டாம். உத்தியோகப் போட்டி உள்ளளவும் பகைமையும் துவேஷ மும் இருக்கத்தான் செய்யும். எளிய வாழ்க்கையை மேற் கொள்வதன் மூலம் இந்தப் போட்டியிலிருந்து நீங்கள் ஏன் விலகிக் கொள்ளகூடாது?

"முற்காலத்தில் பிராமணர்கள் நான்கு சாதிகளே வகுத்து ஒவ்வொரு சாதிக்கும் கடமைகளே ஏற்படுத்திஞர் கள் என்று சிலர் சொல்லுகிருர்கள். இதை நான் நம்ப வில்லே. ஆனுல், இது உண்மை என்று வைத்துக் கொண்டு பார்த்தால் பிராமணர்கள் தான் இருப்பதற்குள் கஷ்டமான கடமைகளே ஏற்றுக் கொள்கிருர்கள். பிச்சை எடுத்து எளிய வாழ்க்கை நடத்துவதும் பிறருக்கு உதவி செய்வதுமே அவர்களுடைய வேலேகள். மானத்தை விட்டுப் பிச்சை எடுத்தல் எளிய காரியமா? ஒரு நாளுமில்லே.

"அக்காலத்தில் பிராமணர்கள் பிறருடைய வேலேக ளுடன் போட்டியிட வரவில்லே. அவர்களுடைய சந்ததிகளா கிய நீங்கள் ஏன் அவர்களேப் பின்பற்றக் கூடாது?

"பிராமணர்களிடம் மற்றவர்களுக்குள்ள பகைமையைப் போக்க இதுதான் வழி. எதிர்த்துப் போராடுவதால் துவே ஷம் வளருமேயன்றி வேறில்லே.

"ஜஸ்டிஸ் கட்சி தேர்தலில் தோற்றுவிட்டதால் பகைமையாவது உத்தியோகப் போட்டியாவது தீர்ந்துவிட வில்லே."

[திரு. வி. க. நடத்திய 'நவசக்தி' 3—12—1926 இதழில் 2ம் பக்கத்தில் வெளியானபடி]

தமிழ் நாட்டின் வகுப்புப் பிரச்னையை மகாகவியான பாரதியாரை விடவும் மூதறிஞரான ராஜாஜி சரியானபடி அறிந்து வைத்திருந்தார். "பிராமணர்கள் தியாகம் செய்ய முன்வந்தாலன்றி, ஜஸ்டிஸ் கட்சி தோற்றுவிட்டதால் மட்டும் பிராமணத் துவேஷம் மறையாது; வளரும்" என்று ராஜாஜி கூறியது, இவ்விஷயத்தில் அவருக்கிருந்த தீர்க்க தரிசனத்தைக் காட்டுவதாகும்.

ஜஸ்டிஸ் கட்சியார் விடுதலைக் கிளர்ச்சிக்கு எதிராக இருந்ததனை ஒரு வாய்ப்பாகக் கொண்டு, பிராமணர்—பிராமணரல்லாதார் பூசலை, காங்கிரஸ்—ஜஸ்டிஸ் கட்சிகளிடையிலான கட்சிவழி அரசியல் பிரச்னையாக—அதாவது, விடுதலை விரும்பிகளுக்கும் விடுதலை விரோதிகளுக்கும் இடையிலான அரசியல் பூசலாக வருணித்து, அதில் தங்களுக்குள்ள கடமையைத் தட்டிக்கழிக்க முயன்றனர் பிராமண வட்டாரத்தினர். இதற்கு மாருக, அது முற்றிலும் சமூகப் பிரச்னை என்பதையும், பிராமணர்கள் தியாகம் செய்வதன் மூலம் தான் அது மறையும் என்பதையும் பிராமணர்களுக்கு ராஜாஜி உணர்த்தினர்.

பிராமண சாதி நிலையில் வேறு எந்த வகுப்பு இருந்திருப்பினும் சந்தர்ப்ப வசத்தால் தனக்குக் கிடைத்துவிட்ட சலுகைகளை விட்டுக் கொடுத்திருக்குமென்று நம்புவதற்கில்லை. உழவர்களையும் தொழிலாளர்களையும் சுரண்டிவரும் நிலப்பிரபுத்துவமும் தொழில் முதலாளித்துவமும் காந்தியடிகள் போதித்த தருமகர்த்தாப் பொதுவுடைமையை ஏற்றுக் கொண்டதா? தாழ்த்தப்பட்டோருக்கு பிராமணரல்லாத உயர்சாதியார் விட்டுக் கொடுத்தார்களா? பிராமணரல்லாதாரிலேயும் முற்பட்ட சாதியார் பிற்பட்ட சாதியாருக்கு விட்டுக் கொடுத்தார்களா? சட்டத்தின் மூலந்தானே அதைச் சாதிக்க முடிகிறது.

பிராமணர் நிலையும் அன்று இதுவாகத்தான் இருந்தது. அவர்கள், பிராமணரல்லாதார் தலைவர்களிடம் கலந்து பேசி ஒரு உடன்பாடு காண எதுவும் செய்ததாக வரலாறு காட்டவில்லை. அதற்கு மாருக, தமிழக பிராமணர்கள் பிராமணரல்லாதாரிடமிருந்து ஒதுங்கி வாழும் போக்கிலே உறுதி காட்டினர் என்று காந்தியடிகள் கருதினுர். அதுபற்றித் 'தமிழ்நாட்டில் காந்தி' என்னும் நூலில் (பக். 527, 528) தரப்பட்டுள்ள தகவல் வருமாறு:

''20-9-27ல் திருச்சி தேசிய கல்லூரியில் சமஸ்கிருதத்தில் வரவேற்பு அளித்து விட்டார்கள். காந்திஜி பேச எழுந்தார். கூட்டத்தில் சம்ஸ்கிருதம் தெரிந்தவர்களைக் கையைத் தூக்குமாறு கேட்டுக் கொண்டார். வெகு சொற்ப பேரே தூக்கினுர்கள். 'மிகப் பெரும்பாலோருக்கு சமஸ்கிருதம் தெரியாத போது அந்த மொழியில் வரவேற்புரையைப் படித்து அளித்திருக்க வேண்டியதில்லை' என்று அண்ணல் கூறினுர்.

''வரவேற்புரையைத் தமிழில் எழுதிவிட்டு, அதன் சாரத்தை இந்தியிலோ, சம்ஸ்கிருதத்திலோ தெரிவித்திருக்கலாம் என்று கூறினுர்.

''பின்னர் அக் கூட்டத்திலிருந்து திரும்பி வந்தபோது, சமஸ்கிருதத்தின் மீது தங்களுக்குள்ள பிரியம் தெரிந்தது தானே. அப்படி யிருந்தும், அம்மொழியில் எழுதியளித்த வரவேற்பைத் தாங்கள் ஏன் விரும்பவில்லை' என்று காகா கலேல்கர் கேட்டார். அதற்குக் காந்திஜி சொன்னுர்: 'எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த மாணவர்களின் சார்பாக இந்த வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார்கள். ஆகையால் அவர்களுக்குப் புரியக்கூடிய மொழியிலே அதைத் தயாரித்திருக்க வேண்டும். மேலும், இப்பகுதியில் பிராமணர்—பிராமணர் அல்லாதார் இயக்கம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த இயக்கத்தின் எதிரொலியாகத்தான் இந்த வரவேற்புரையைச் சமஸ்கிருதத்தில் எழுதியிருக்கிருர்களோ

என்றும் நான் ஐயப்படுகிறேன். அதனாற்றான் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டேன்.''

பிராமணரல்லாதார் இயக்கமானது பிராமணர்களிடையே மனமாற்றத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவர்கள் தங்கள் தவறிலே பிடிவாதங் காட்டுவதற்குப் பயன் பட்டு விட்டது என்பதற்கு மேலே தந்த நிகழ்ச்சி சிறந்த சான்றாகும்.

1925ல் காஞ்சியில் நடந்த தமிழ் மாகாண மாநாட்டிலே தாம் கொடுத்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ ஆதரிப்புத் தீர்மானம் மாநாட்டுத் தலைவர் திரு. வி. க. அவர்களால் நிராகரிக்கப்பட்டதால், பெரியார் ஈ. வே. ரா. காங்கிரஸிலிருந்து வெளியேறினர் என்பதை முன்பே அறிந்தோம். அவரை வெளியேற விட்டது காங்கிரசிலிருந்த பிராமணர்களேயன்றி, பிராமணரல்லாதாரும் செய்த பெருந் தவறு என்பதனை வரலாறு காட்டிவிட்டது.

சுயமரியாதைச் சூருவளி

காஞ்சி மாநாட்டிலே பெரியார் ஈ. வே. ரா. வின் வகுப் புரிமைத் தீர்மானத்தை ஏற்க மறுத்த பிரதிநிதிகளோ, 'ஒழுங்கற்றது' என்று கூறி அதனை நிராகரித்த திரு. வி. க. வோ, தமிழ் இனவுணர்ச்சியால் அந்த முடிவுக்கு வர வில்லை. 'காங்கிரசின் தேசியக் கொள்கைக்கு விரோதமான வகுப்புவாதம்' என்று கருதித்தான் பெரியாரின் தீர்மானத்தை ஏற்க மறுத்து, அவர் காங்கிரசிலிருந்து வெளியேற அனு மதித்தனர்.

அவர்களில் யாரும்—ஒரு வேளை, திரு. வி. க. வைத் தவிர—தமிழரல்லாதார் தமிழகத்தில் உத்தியோக வேட்டை யாடியதை வெறுத்தவர்களல்ல; அது 'தேசியத்'திற்கு ஏற்றது என்று எண்ணியவர்களே! இந்தப் போலித் தேசிய முந்தான் தமிழகத்தைத் தமிழரல்லாதாரின் உத்தியோக வேட்டைக்காடாக்கியது.

எஸ். இராமநாதனல் முன்மொழியப்பட்ட வகுப்புரி மைத் தீர்மானத்தால் தமிழ் இனத்தாரின் உத்தியோக நலன் எப்படிப் பாதிக்கப்படுமென்பதனை அன்று 'தலைவர்' என்று பெயர் பெற்றிருந்தவரில் எவரும் அறிந்திருக்கவும் இல்லை. காரணம், அனுபவமின்மைதான்! காஞ்சி மாநாட்டுக்குப் பின்னுள்ள அரை நூற்றுண்டு கால தமிழர் வரலாறு வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தால் தமிழினத்துக்கு நன் மையை விட தீமையே அதிகம் என்பதனைக் காட்டிவிட்டது. ஆனல், இந்த உண்மை இன்னும் ஜஸ்டிஸ் பாரம்பர்யத்தின ரால் ஒப்புக்கொள்ளப் படவில்லை,

அவர்களெல்லாம் 'பிராமணரல்லாதார், என்ற மயக்கத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு, 'தமிழர்' என்னும் இனவுணர்வுடன் இந்தப் பிரச்னையை அணுகி ஆராய்வார்களானால், நான் சொல்லுவதிலுள்ள உண்மையை உணர்வார்கள்—ஒப்புக் கொள்வார்கள்.

தமிழரிலே பிராமணரல்லாதார் என்போர் போதிய அளவில் உயர் உத்தியோகங்களுக்கான தகுதிகளைப் பெற்றிராத ஒரு நேரத்திலே ஆந்திர மரபினரான சர். பி. தியாகராயராலும், கேரளரான டி. எம். நாயராலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கோரப்பட்டது. அவர்கள், பிராமணருக்கெதிராக பிராமணரல்லாதாருக்கு வகுப்பு அடிப்படையில் பிரதிநிதித்துவம் கோரினரென்றாலும், நடைமுறையில் அது தமிழ்ப் பிராமணர்களுக்கு மட்டுமே எதிரான கோரிக்கையாகத்தான் இருந்தது. இந்த உண்மை காஞ்சி மநாட்டிலே வகுப்புரிமைத் தீர்மானத்தைப் பிரரேபித்தவர்களாலும் அதை எதிர்த்தவர்களாலும் உணரப்படவில்லை. பிராமணரல்லாதாரிலே தமிழரல்லாதாரிடம் உத்தியோகங்களைக் கொள்ளை கொடுப்பதற்காகத் தமிழர்—குறிப்பாக, தமிழகத்துத் தேசிய வாதிகள் பிளவுபட்டனர், காஞ்சியிலே!

பெரியார், கள்ளங் கபடமற்ற உள்ளமுடையவர். அநீதி கண்ட விடத்து, அதனை எதிர்த்துப் போராடும் ஆண்மையுடைவர். அதனாலேயே எளிதில் உணர்ச்சிவயப்பட்டுவிடக் கூடிய குறைபாடுடையவர். ஆயினும், மரியாதை காட்டி அவர் மனதை மாற்ற தக்கார் முயன்றால், சாந்த மடைந்து விடக் கூடிய சமரச மனோபாவமுடையவர். இதனை, அவருடன் நெருங்கிப்பழகிய ராஜாஜியும் திரு. வி. க. வும் நன்கு அறிவர். அறிந்திருந்தும், ஈ. வே. ரா. வின் முடிவை மாற்ற காஞ்சியிலே அவர்கள் முயன்றதாகத் தெரியவில்லை.

ஈ. வே. ரா., 1919ல் காங்கிரசில் சேர்ந்தார். அதற்கு முன்பே அவர் ஈரோடு நகர அளவில் பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார். நகர மன்றத் தலைவர் பதவியையும்

அடைந்தார். 1916ல் ஜஸ்டிஸ் கட்சி தோன்றியதிலிருந்து தொடர்ந்து பத்தாண்டு காலம் அதனை உறுதியாக எதிர்த்து வந்தார் ஈ.வே.ரா. ஜஸ்டிஸ் கட்சியை எதிர்ப்பதற்கென்றே பிராமணர்களின் தூண்டுதலால், பிராமணரல்லாத காங்கிரஸ் பிரமுகர்களால் அமைக்கப்பட்டதென்று சொல்லப்பட்ட, சென்னை மாகாண சங்கத்தின் துணைத்தலைவராகவும் இருந்தார்.

சென்னை மாகாண சங்கத்தின் இரண்டாவது மாநாடு ஈரோட்டில் 11-10-19ல் நடந்தது. அதன் வரவேற்புக் குழுத் தலைவராக இருந்தார் ஈ.வே.ரா. இந்த மாநாட்டின் மூலமாகத்தான்—அதாவது ஜஸ்டிஸ் கட்சி எதிர்ப்பு மாநாட்டின் வாயிலாகத்தான் ஈ.வே.ரா. காங்கிரஸ் கோட்டைக்குள் பிரவேசித்தார் என்று தெரிகிறது. ஈரோடு மாநாட்டின் தலைவராக வரவேற்புக் குழுவால் அழைக்கப்பட்டவர் சென்னைவாழ் வடஇந்தியர் லாட் கோவிந்த தாஸ் ஆவர்.

ஈ.வே.ரா. தொடர்ந்து ஏழு அல்லது எட்டாண்டு காலம் காங்கிரசில் இருந்து, காந்தியடிகளால் போற்றப்படும் அளவுக்குக் கதர் வளர்ச்சி, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு ஆகிய ஆக்கவழிப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டார். அப்பணிகளிலே, தம்முடைய மனைவியார், தமையனார் உட்பட தமது குடும்பம் முழுவதையுமே ஈடுபடுத்தினார். தமிழ் நாட்டின் துரதிஷ்டம் காரணமாக, தமிழினத்திற்கு நன்மை பயக்காத ஒரு கோரிக்கைக்காகப் பெரியார் விடுதலைப் பாசறையிலிருந்து வெளியேறினார்.

அதன் பின்னர், ''குடியரசு'' என்ற பெயரில் வாரப் பத்திரிகையொன்றைத் தொடங்கினார். ஞானியார் சுவாமிகள் என்றழைக்கப்பட்ட திருப்பாதிரிப்புலியூர் சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் ''குடியரசு'' முதல் இதழின் விற்பனையைத் தொடங்கி வைத்து, அந்தப் பத்திரிகைக்கு ஆசி கூறினார். ஆம்; ''குடியரசு'' பிறப்பிலேயே நாத்திக ஏடாகப் பிறக்கவில்லை என்பது தெரிகிறது.

பெரியார் இயற்கையிலேயே மூட நம்பிக்கைகளை வெறுக்கும் சுபாவமுடையவர். காங்கிரசில் இருந்த காலத்திலேயே எழுத்திலும் பேச்சிலும் பகுத்தறிவுக் கொள்கைகளை வலியுறுத்தி வந்தார். காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னர், பகுத்தறிவு இயக்கமொன்றையே தொடங்குவதற்கு அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டது. ஆகவே அவருடைய சீர்திருத்த இயக்கமானது பிராமணத் துவேஷத்திலிருந்து பிறந்ததென்று சொல்லுவதற்கில்லை. அதுவும் சேர்ந்துக் கொண்டு விட்டது—அவ்வளவுதான்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குத் துணைபோன ஜஸ்டிஸ் கட்சியைத் தோழமை கொள்ளாமல், அரசியல் கட்சிச் சார்பற்ற சீர்திருத்த இயக்கமாக மட்டுமே சுயமரியாதை இயக்கத்தை நடத்தியிருப்பாரானால், தமிழ் நாட்டின் இன்றைய நிலைமை—தமிழினத்தின் இன்றைய வாழ்வு வேறு விதமாக இருந்திருக்கும் என்று கருதுவதற்கும் இடமிருக்கிறது. வடபுலத்தின் 'சீர்திருத்தவாதிகளான ராசா ராம்மோகன் ராய், தயானந்த சரஸ்வதி, சுவாமி விவேகானந்தர், கேரள நாட்டு நாராயண குரு ஆகியோர் அரசியல் சார்பற்ற முறையில் சீர்திருத்த இயக்கங்களை நடத்தவில்லையா?

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பற்றி என் ஆய்வும் முடிவும், 1920 தொடங்கி 1936 வரையுள்ள—அதாவது மாண்டேகு — செம்ஸ்போர்டு சீர்திருத்தம் நடைமுறையிலிருந்த காலத்தைப் பற்றியதுதான் என்பதை மீண்டும் ஒரு முறை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்தக் கால கட்டத்திலே அரசாங்க உத்தியோகத் துறையிலே பிராமணர் ஆதிக்கம் தேய்பிறையாகி வந்தது என்பதையோ, பிராமணரல்லாதார் உயர்உத்தியோகங்களை அடைவதிலே வளர்பிறையாகி வந்தனர் என்பதையோ நான் மறுக்கவோ, மறந்துவிடவோ இல்லை. ஆனால், தேய்பிறையாகி வந்த பிராமணர்கள் தமிழராகவும், வளர்பிறையாகி வந்த பிராமணரல்லாதார் அநேகமாக தமிழரல்லாதா

ராகவும் இருந்தனர் என்பதனைத் திரும்பத் திரும்ப நினைவூட்டுவது எனது கடமையாகும்.

தமிழ் நாட்டில் பிராமணரல்லாதார் இயக்கம் ஈ. வே. ரா. வால் தோற்றுவிக்கப்பட்டதல்ல. அது மலையாளியான டாக்டர் நாயரால் தோற்றுவிக்கப்பட்டபோது, தொடர்ந்து பத்தாண்டு காலம் அதனை ஈ. வே. ரா. எதிர்த்து வந்திருக்கிறார். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அவர் காங்கிரசிலிருந்தபோதே ஆதரித்ததற்குக் காரணம், அதன் மூலம் ஜஸ்டிஸ் கட்சியின் தாக்குதலிலிருந்து காங்கிரசைக் காக்க வேண்டுமென்பதாகவும் இருக்கலாம். அப்படிக் கருதித்தான் 1928ல் சேலத்தில் நடந்த காங்கிரஸ் மாநாட்டின் தலைமையுரையிலேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வ. உ. சிதம்பரனாரும் துணிவோடு ஆதரித்துப் பேசினார்.

ஆரியர் — திராவிடர் என்ற நிறவழிப்பட்ட இனவாதமோ, அந்த இன அடிப்படையில் பிறந்த திராவிடத் தனிநாடு கோரிக்கையோகூட பெரியார் ஈ. வே. ரா. வால் தோற்றுவிக்கப்பட்டதல்ல. ஆரியர்—திராவிடர் என்ற இனப் பிரிவினை, 'ஆராய்ச்சி'என்ற போர்வையில் ஆங்கிலேய பாதிரிமார்களால் தொடங்கி வைக்கப்பட்டதாகும். அவர்கள் அப்படிச் செய்ததற்கு அரசியல் உள்நோக்கமும் இருந்ததென்று கருதியோருமுண்டு, ஆம்; தமிழினத்தவரிடையே நிலவிய ஒருமைப்பாட்டைக் குலைப்பதற்காகவும் ஆங்கிலேய பாதிரிமார் ஆரியர்—திராவிடர் பிரச்னையைக் கிளப்பியிருக்க வேண்டுமென்பது புலவர்களிலே ஒருசாராரின் கருத்தாகும்.

அது எப்படியாயினுஞ் சரி: ஆரியர்—திராவிடர் இனப் பாகுபாட்டு அடிப்படையில் திராவிடத் தனி நாட்டுக் கோரிக்கை டாக்டர் நாயர் காலத்திலேயே எழுப்பப்பட்டு விட்டது என்பது மறுக்க முடியாததாகும்.

பிராமணர்—பிராமணரல்லதார் பூசலானது ஆரியர்— திராவிடர் என்ற இனப் பூசலாகவும் மாறியது தமிழகத்

திலே! அதனை வளர்க்கும் செவிலித்தாயாகப் பிற்காலத்தில் பெரியார் விளங்கினரென்ருலும், அந்தப் பூசலைத் தொடங்கியவர் அவரல்ல. ஜஸ்டிஸ் கட்சி தோன்றியதிலிருந்து அதிலிருந்த தமிழரிலே ஒரு சாரார் 'ஆரியர்—திராவிடர்' என்ற இனப் பூசலை வளர்க்கும் வகையில் தமிழகத்தில் பிரசாரம் செய்து வரலாயினர்.

1920ஆம் ஆண்டில் காந்தியடிகள் தமிழ் நாட்டில் சுற்றுலாச் செய்தபோது, சென்னைக் கடற்கரையில் நிகழ்த்தியச் சொற்பொழிவொன்றில் பிராமணர்–பிராமணர் அல்லாதார் பிரச்னை பற்றிப் பேசினர். அதிலே அவர் வெளியிட்ட கருத்துக்கள் சிலவற்றை ஆட்சேபித்து, 'யங் இந்தியா' வாசகர் என்ற முறையில் திரு. சி. கந்தசாமி என்பவர் அடிகளுக்கு எழுதினர். அதன் பகுதிகள் வருமாறு:

''திராவிட நாகரிகம், மதம், பண்பாடு, தற்போதைய பிராமணரல்லாதார் இயக்கத்தின் காரணங்கள், அதன் உட்பொருள் இவற்றைப் பற்றிக் காந்திஜிக்கு எதுவுமே தெரியாதென்பது, அவரது சொற்பொழிவிலிருந்து தெரிகிறது.

''இந்தியாவின் மற்றப் பகுதிகளிலிருந்து தென்னிந்தியாவைத் தனித்துக் காட்டும் திராவிட நாகரிகத்தின் விசேஷ அம்சங்களை அவர் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.''

[காந்தி நூல், தொகுப்பு–7; பக். 121]

இந்தப் பகுதிகளடங்கிய முழு கடிதத்தையும் அடிகள் தமது 'யங் இந்தியா' (27—4—20) இதழில் பிரசுரித்து, அதற்குப் பதில் அளித்திருந்தார். அதன் பகுதிகள் வருமாறு:

''இதே தொனியில் எனக்குப் பல கடிதங்கள் வந்திருக்கின்றன. இந்த நிருபர்கள் நான் கூறியதைத் தவருக அர்த்தம் செய்து கொண்டுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

''திராவிட நாகரிகத்தின் சாதனைகளை யாரும் மறுக்கவில்லை, எதிர்க்கவுமில்லை. எனினும், அந்தச் சாதனை

களால் இந்து மதத்திற்கோ அல்லது மானிடவர்க்கத் துக்கோ பிராமணர்கள் புரிந்து வந்துள்ள தொண்டு மறுக்கப்படவுமில்லை, குறைந்து விடவுமில்லை.

"ஆரியவட நாட்டிலிருந்து திராவிட தென்னாட்டைப் பிரித்து ஒதுக்கவேண்டாமென்றும் இந்த நிருபர்களை எச்சரிக்கின்றேன்.

"இன்றைய இந்தியா இரண்டு பண்பாடுகள் மாத் திரமல்ல, மற்றும் பல பண்பாடுகள் சேர்ந்த ஓர் ஐக்கிய நாடேயாகும்."

[காந்தி நூல் தொகுப்பு–7; பக். 122]

ஜஸ்டிஸ் கட்சியின் தாயான டாக்டர் டி. எம். நாயரவர் கள் நிகழ்த்திய சொற்பொழிவுகளிலே ஆரிய—திராவிட இனப்பாகுபாடும், திராவிட நாட்டுக் கோரிக்கையும் வற் புறுத்தப்பட்டுள்ளன. வியப்பென்னவென்றால், மலையாளி யான டாக்டர் நாயர், தமது தாயகமான கேரளத்திலல்லா மல், தமிழ் நாட்டில்தான் ஆரியர்—திராவிடர் என்ற இன வேறுபாட்டைப் பரப்புவதில் அக்கரை காட்டியதாகும்.

தமிழ் இனத்தவரை நிறவழி ஆரியர் என்றும், திராவிடர் என்றும் பிரித்துப் பிரசாரம் செய்வதை இந்நாட்டில் புகுந்த பிரிட்டிஷ் பாதிரிமார்தான் தொடங்கி வைத்தனர். மொழி ஆராய்ச்சிக்காக இந்திய அறிஞரிலேயுஞ் சிலர் இந்த வேற்றுமையை எடுத்துக் காட்டியதுண்டு. ஆனால், இந்துத் தமிழரிடையே பிளவை உண்டாக்கும் உள்நோக்குடனும் இந்த இன வாதத்தை ஆங்கிலேயப் பாதிரிமார்கள் பயன் படுத்தினர்.

ஆராய்ச்சி அளவில் இருந்த ஆரியர்—திராவிடர் இன வாதத்தை முதன் முதலில் அரசியலுக்குக் கொண்டு வந்த "பெருமை" ஜஸ்டிஸ் கட்சிக்கே உரிமை. அந்தக் கட்சியினரும் தமிழ் நாட்டளவில்தான் இந்த இனப் பாகுபாட்டைப் பெரிதுப்படுத்தப் பிரசாரம் செய்தனர். ஜஸ்டிஸ் கட்சியின்

தமிழ் நாளிதழுக்குத் மட்டுமே 'திராவிடன்' என்று பெயர் வைத்ததே இதற்குச் சான்ருகும்.

தமிழரிலே அந்தணரெலாம் ஆரியரென்றும், பிராமணரல்லாதாரெல்லாம் திராவிடரென்றும் ஜஸ்டிஸ் கட்சியார் தமிழ் நாட்டில் பிரசாரம் செய்தனர். இந்த வாதத்தை ஏற்றுக் கொள்வதானல், தமிழ் நாட்டில் மதம் மாறிய முஸ்லிம்களின் சந்ததியினர் அராபியாரவரே! பிராமணர்கள் தமிழ் நாட்டிற்கு அன்னியர் என்ற கருத்தைத் தமிழரிடையே பரப்புவதற்காகவே இந்த ஆரிய—திராவிட வாதம் பிராமணரல்லாதார் இயக்கத்தைச் சார்ந்த பிரசாரகர்களால் பயன் படுத்தப்பட்டது. இதனல் ஒன்றுபட்டு ஓரினமாய் வாழ்ந்து வந்த தமிழர்கள் பரஸ்பரம் பகை யுணர்ச்சியுடைய இரு வேறு இனங்களாகப் பிளவுபட்டனர்.

தமிழகத்தில் தமிழரல்லாதார் ஆதிக்கம் பெறுவதற்கு இந்த ஆரிய—திராவிட வாதம் பெருமளவுக்கு இடம் கொடுத்துவிட்டது. தமிழ் நாட்டுப் பிராமணர்களுக்கு எதிராக வளர்க்கப்பட்ட 'பிராமணரல்லாதார்' அல்லது 'திராவிடர்' என்ற புதிய வகுப்பு உணர்ச்சியானது தமிழ் இனத்தவரை இரு கூருக வெட்டிப் பிளந்துவிட்டது. தங்கள் உத்தியோக வேட்டைக்குப் பயன்பட்டதால் பிராமணரல் லாதத் தமிழரிலே படித்துப்பட்டம் பெற்றவர்களெலாம் இந்த நிற வேற்றுமையை ஆராய்ச்சியின்றியே ஏற்றனர் எனலாம். ஆனல், உண்மையில் ஆரியரென்றும் திராவிடரென்றும் தமிழர் பிளவுபடுத்தப்பட்டதால் உத்தியோகத் துறையில் அதிகமாகப் பயன் அடைந்தவர்கள் மலையாளிகளும் ஆந்திரர்களுமே யாவார்கள். அப்படியிருந்தும், ஆந்திர—கேரளப் பிரதேசங்களில் "ஆரியர்... திராவிடர்" என்ற இனப் பூசல் நுழைய ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களான ஆந்திரரும் கேரளரும் அனுமதிக்கவில்லை. அந்தப் பிரதேசங்களில் 'திராவிடர்' என்ற சொல்லைக் கூடப் பயன் படுத்துவாரில்லை.

தமிழ் நாட்டில் மட்டும் ஆரியர்—திராவிடர் என்ற இனப் பிரிவினை, தமிழினத்தார் பிளவுபடுமளவுக்குப் பயன் பட்டதற்கான மற்றொரு காரணம், ஜஸ்டிஸ் கட்சி தோன்று வதற்கு முன்பே தமிழ்—சம்ஸ்கிருத மொழிகளிடையே நிலவிய போட்டியாகும்.

சம்ஸ்கிருத மொழியில் புலமையுடைய 'சனாதனிகள்' என்போர், தமிழ் மொழியின் தனித் தன்மையே அழிந்துவிடு மளவுக்குத் தமிழ் நாட்டில் சம்ஸ்கிருதத்திற்கு ஆதிக்கந் தேட முயன்றனர். இஸ்லாம்—கிறித்துவ சமயங்களின் போட்டியைச் சமாளிக்க இந்து சமயத்தவர்களை ஒன்று படுத்தும் பொருட்டு சம்ஸ்கிருதத்தை இந்துக்களின் பொது மொழியாக்க முயன்றனரென்றால், அதிலே பொருளுண்டு. தற்காப்புக்காகவேனும் இந்துத் தமிழர்கள் மொழித் துறை யில் சிறிது தியாகஞ் செய்திருக்க முடியும். ஆனால், இந்துக் களையெல்லாம் ஒன்றுபடுத்த சாதி வேற்றுமைகளை—குறைந் தளவு சாதி வழிப்பட்ட உயர்வு தாழ்வுகளை ஒழித்து— குறிப்பாக, தீண்டாமையைத் தொலைத்து, அதனோடு சேர்த்து சம்ஸ்கிருதத்தைப் பொது மொழியாக்கும் பணியைச் சனாதனிகள் செய்திருந்தால், சம்ஸ்கிருதத்தி லுள்ள வேதாகம சாத்திரங்களை அனைத்து வருணத்தினருக் கும் பொதுவுடமையாக்கியிருந்தால், தமிழ்—சம்ஸ்கிருதப் பூசலைத் தவிர்த்திருக்க முடியும். இந்து மதத்தின் துரதிர்ஷ் டத்தால், அந்தத் திசையில் சனாதனிகளான பிராமணத் தமிழர்களின் திருப்பார்வை விழவேயில்லை.

'ஆரியம்' என்பது ஒரு காலத்தில் சம்ஸ்கிருத மொழியைக் குறிப்பதாக இருந்தது. ஆனால், அப்போதுகூட, தமிழ் மொழி திராவிடம் என்று அழைக்கப்படவில்லை. கி. பி. எட்டாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் சைவ சமய குரவரான திருநாவுக்கரசர், ''முத்தமிழும் நான் மறையும் ஆனான் கண்டாய்'' என்றும், ''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்' என்றும், 'ஆரியந்தமிழோ டிசையானவன்'' என்றும் பாடி யிருப்பதே சான்று. மற்றும்,

"வடமொழியுந் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண்..."

என்றும் கூறுகின்றார். நான் மறையாளரான ஞானசம்பந்தப் பெருமான்,

"தென்சொல் விஞ்சமர் வடசொல்
திசை மொழி..."

என்றும்,

"தம்மலர் அடியொன்றில் அடியவர் பரவத்
தமிழ்ச் சொலும் வடசொலுந்தாள் நிழற் சேர"

என்றும் பாடியுள்ளார்.

ஐரோப்பியரான கிறித்துவர் இந்தியாவில் புகும்வரை 'திராவிடம்' அல்லது 'திராவிடர்' என்ற சொல் தமிழர் வாழ்விலே வழக்கத்தில் இருக்கவில்லை. ஐரோப்பியரான. கால்டுவெல், மொழி ஆராய்ச்சி என்ற பெயரிலும், ஜி. ஏ கிரீயர்சன் என்பார், 'இன ஆராய்ச்சி' என்ற பெயரிலும் 'திராவிடம்' அல்லது 'திராவிடர்' என்ற சொல்லைத் தமிழர் வாழ்விலே வழக்கத்திற்குக்கொண்டு வந்தனர். பின்னர், பிராமணரல்லாதார் இயக்கமானது, அதனை, அரசியலிலே புகுத்தி, பிராமணத் தமிழர்களை வெல்வதற்கான கேடய மாகப் பயன்படுத்தியது. இதுபற்றிப் பாரதியார் எழுதியிருப் பதாவது:

"ஹிந்து மதத்தை வேரறுத்து இந்தியாவில் கிறிஸ்து மதத்தை ஊன்றுவதே முக்கிய நோக்கமாகக் கொண்டு வேலை செய்துவரும் பாதிரிகள், ஹிந்து மதத்துக்குப் பிராமணரே இதுவரை காப்பாளிகளாக இருந்து வருதல் கண்டு, அந்தப் பிராமணரை மற்ற ஜாதியார் பகைக்கும்படி செய்தால் தம்முடைய நோக்கம் நிறைவேறுமென்று யோசிக்கத் தொடங்கினார்கள். இங்ஙனம், மற்ற ஜாதிப் பிள்ளைகளுக்கு ஹிந்து மதத்தில் துவேஷ புத்தி யுண்டாக்கு

வதற்கு அடிப்படையாக :பிராமணத்துவேஷம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற கருத்துடையோர் சென்னை நகரத்து முக்யமான கல்வி ஸ்தலங்கள் சிலவற்றிலுமிருந்து நெடுங்காலமாகவே வேலை செய்து வருகிறார்கள்.

"காமம், குரோதம் முதலிய தீய குணங்களை வேதம் அஸுரரென்று சொல்லி, அவற்றைப் பரமாத்வாவின் அருள் வடிவங்களாகிய தேவர்களின் உதவியால், ஆரியர் வெற்றி பெறுவதற்குரிய வழிகளைப் பற்றிப் பேசுகிறது; இந்த உண்மையறியாத ஐரோப்பிய ஸம்ஸ்க்ருத வித்வான்கள் சிலர் அஸுரர் என்று முற்காலத்தில் ஒரு வகுப்பு மனிதர் இந்தியாவிலிருந்தார்களென்றும், அவர்களை ஆரியர் ஜயித்து இந்தியாவின் ராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டு, அதன் பூர்வக் குடிகளைத் தாழ்த்திவிட்டன ரென்றும் அபாண்டமான கதை கட்டி விட்டார்கள்.

"இதைக் கிறிஸ்துவப் பாதிரிகள் மிகவும் ஆவலுடன் மனனம் செய்து வைத்துக்கொண்டு தம்மிடம் இங்கிலீஷ் படிப்பதற்காக வரும் பிள்ளைகளில் பிராமணரைத் தவிர மற்ற வகுப்பினர்—தென்னிந்தியாவில் மாத்திரம்—அஸுர வம்சத்தாரென்றும், ஆதலால் பிராமணர் இவர்களுக்குப் போன யுகத்தில் (வேத மெழுதிய காலத்தில்) விரோதிகளாக இருந்தனரென்றும், ஆதலால் இக்காலத்தில்அந்தப் பிள்ளைகள் அஸுரக் கொடியை மீளவும் தூக்கி பிராமணரைப் பகைக்க வேண்டுமென்றும போதிக்கத் தொடங்கினார்கள்.

"இந்தியாவிலுள்ள ஜாதி பேதங்களைத் தீர்த்து விட்டு இங்கு ஸமத்வ தர்மத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அந்தப் பாதிரிகள் இந்த வேலை செய்யவில்லை. இந்து மதத்துக்குக் கேடு சூழவேண்டுமென்ற நோக்கத்துடன் செய்தார்கள்."

['பாரதி தமிழ்'; பக். 327—330]

மேற்காட்டிய கருத்தினைப் பாரதியார் வெளியிட்டது, 'சுதேசமித்திரன்' 1—12—1920ஆம் நாள் இதழிலாகும்.

இதனுல், பெரியார் ஈ. வே. ரா.வுக்குமுன்பே—அவர் ஜஸ்டிஸ் கட்சியை எதிர்த்து வந்த காலத்திலேயே—தமிழ் நாட்டு அரசியலில் 'ஆரியர்—திராவிடர்' என்ற இன வேற்றுமை வாதம் உச்ச கட்டத்திலிருந்த தென்பதனை அறிகிருேம்.

இந்த இன வேற்றுமைப் பிரசாரத்தைப் பெரியார் ஈ. வே. ரா. வன்மையாகக் கண்டித்ததும் உண்டு. இதோ சான்று:

"தமிழ் நாட்டவர் அனைவரும் தமிழரேயாவர். தமிழருள் பல சாதியார், பல சமயத்தார் இருக்கலாம். அவர் அனைவரையும் தமிழ் மொழி ஒன்றுபடுத்தியிருக் கிறது. தமிழ் நாட்டில் பல வகுப்பார் குடியேறியிருப்பது உண்மையே. அவர் தமிழ் நாட்டிலேயே தங்கித் தமது தாய் நாடாகக் கொண்டமையால், அவர் தமிழராகாது பின் எவராவர்?...

"பழந்தமிழர், புதுத் தமிழர் என்ற வார்த்தையை ஆராய்ச்சிக்காரருக்கு விட்டுவிடலாம். சில பழைய சரித்திரங்களைப் படித்துப் பிளவுகளை உண்டாக்கல் அறி வுடைமையாகாது. தமிழ் நாட்டிலுள்ள பிராமணர், பிராமணரல்லாதவர், திராவிடர், ஆதித் திராவிடர், இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சமணர்கள் முதலிய எல்லோரும் தமிழரே யாவர்."

[30ஆவது தமிழர் மாநாட்டில் (1929) பெரியார் செய்த தலைமைச்சொற்பொழிவி லிருந்து—'குமுதம்' 28—11—74 இதழில் மறு பிரசுரம் செய்யப்பட்டது.]

தமிழினத்தவரை ஆரியர் என்றும், திராவிடர் என்றும் பிரிப்பது எவ்வளவு கேடானதென்பதனை, இருபதாம் நூற் ருண்டின் சமுகப் புரட்சிக் கவிஞரான பாரதியாரும், சமூகப் புரட்சி இயக்கத்தின் தந்தையான பெரியார் ஈ. வே. ரா.வும் அப்போதே எடுத்துக்காட்டியிருப்பது தமிழினத்தின் ஒற்று

மையை விரும்புவோருக்கு ஆறுதல் தருவதாகும். பாரதியார்கூட, இந்திய தேசியத்தின் சார்பில்தான் எழுதியிருக்கிறார். பெரியாரோ, 'தமிழர்' என்னும் இனவுணர்ச்சியுடனேயே கண்டித்திருக்கிறார்.

ஆரியர்—திராவிடர் என்ற வேற்றுமைப் பிரசாரத்தைப் பெரியார் கண்டித்திருப்பது, அவர் காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னராகும். இன்னும் சொன்னால், 1926ல் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து, 1929 பிப்ரவரியில் செங்கற்பட்டில் சுயமரியாதை முதலாவது மாநில மாநாட்டையும் நடத்திய பின்னரே கண்டித்திருக்கிறார். அவர் வாதத்திலுள்ள வலிமையும் வாய்மையும் அவரது பிற்கால வரலாறுகூட வென்றிட முடியாதவையாகும்.

பிராமணரல்லாதார் இயக்கமும், ஆரியர்—திராவிடர் என்ற இனவாதமும் பெரியார் ஈ. வே. ரா. வால் தொடங்கப்பட்டவையல்ல வென்றாலும், தமிழினத்தின் உரிமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உதவி 'புரியாத அந்தக் கிளர்ச்சிகளை வளர்க்கும் போஷகராக பெரியார் தம்மைச் செய்து கொண்டுவிட்டது தமிழினத்தின் துரதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும்.

1924 டிசம்பரில் திருவண்ணாமலையில் கூடிய 30வது காங்கிரஸ் மாகாண மாநாட்டில், அப்போது த. நா. கா. தலைவராக இருந்த ஈ. வே. ரா. பேசியது வருமாறு:

"தென்னிந்தியாவில் ஹிந்து—முஸ்லிம் ஒற்றுமை குலையாதிருப்பினும், ஹிந்துக்களுக்குள் ஒற்றுமை குலைந்து வருவதுண்மை. முதலாவது, பிராமணர்—பிராமணரல்லாதார் நிலையைச் சிறிது சிந்திப்போம்.

"ஒரு மதத்தைச் சேர்ந்த இவர்களுக்குள் வேற்றுமையுணர்வு தோன்றுவானேன்? வேற்றுமைக்கு அடிப்படையான காரணங்கள் இருத்தல் வேண்டும். அக் காரணங்களை யுணர்ந்து ஒற்றுமைக்கு உழைக்க தேசபக்தர்கள் முயல வேண்டும்.

"காங்கிரஸ்வாதியாயிருந்த டாக்டர் நாயர் திடீ ரென ஒரு கட்சியைத் தோற்றுவிக்கக் காரணங்களாய் நின்றவைகள் எவைகளோ அவைகள் இன்னும் நிற் கின்றனவா, இல்லையா? என்பதை நேயர்கள் கவனிப்பார் களாக. அக்காரணங்கள் அழிந்துவிட்டதாக எனக்குத் தோன்றவில்லை. அவைகள் தமிழ் நாட்டில் ஊர்ந்து கொண்டிருக்கும் வரை தமிழ் நாட்டில் பிராமணர்— பிராமணரல்லாதார் ஒற்றுமை நிலவுதலரிதே. தேச சேவையில் ஈடுபட்டுத் தமிழ் நாட்டுக் காங்கிரசில் காரியதரிசியாகவும், தலைவனாகவும் இருந்து பெற்ற அனுபவத்தை ஆதாரமாகக் கொண்டே நான் இங்கே பேசுகிறேன்."

['நவசக்தி', 1924 நவம்பர் 21 இதழில் வெளியானது—'தமிழர் தலைவர்' என்ற நூலில் (பக். 93) எடுத்தாளப்பட்டுள்ளது.]

இந்தப் பேச்சிலே பெரியார் ஈ. வே. ரா., பிராமணர்— பிராமணரல்லாதார் பூசல் தீர ஆக்க வழியில் ஆலோசனை கூறியதையும், தம்மை ஒரு இந்துவாகக் கருதி அவர் இந்துத் தமிழர்களை ஒற்றுமைப்படுத்த விரும்பியதும் புலனாகும்.

பெரியார் ஈ. வே. ராவால் தொடங்கப் பெற்ற சுய மரியாதை இயக்கமானது தமிழ்நாட்டில் வெகு வேகமாகப் பரவியது. நூற்றுக் கணக்கான ஊர்களில் கிளைகளைப் பெற் றது. ஜஸ்டிஸ் கட்சியால் பிராமணரல்லாதாரில் உயர் கல்வி கற்றவர்களின் ஆதரவைத்தான் பெற முடிந்தது. சுய மரியாதை இயக்கமோ, பிராமணரல்லாதாரில் உயர் கல்வி பெற வாய்ப்பற்ற சாதாரண மக்களையும் கவர்ந்தது. குறிப் பாக, இளைஞர்களிடையே நல்ல செல்வாக்கைப் பெற்றது.

பெரியார் ஈ. வே. ராவின் மத எதிர்ப்பும், கடவுள் எதிர்ப்பும் ஜஸ்டிஸ் கட்சியின் பெருந் தலைவர்களால் ஏற்க முடியாதவையாகும். ஆம்; ஜஸ்டிஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களாக விளங்கிய தமிழர்கள் சமயப்பற்

றுடையவர்கள். குறிப்பாக, ஈ. வே. ரா. எவற்றையெல்லாம் மூடப் பழக்க வழக்கங்களாகக் கருதி எதிர்த்தாரோ, ஏற்க மறுத்தாரோ அவற்றை யெல்லாம் தங்கள் வாழ்க்கையிலே அவர்கள் கடைப்பிடித்து வந்தனர். ஆனுல், அவர்களும் சுயமரியாதை இயக்க மாநாடுகளில் கலந்துகொண்டு பெரியாரை உற்சாகப்படுத்தும் வகையில் பேசி வந்தனர்.

ஆந்திர—கேரளப் பிரதேசங்களைச் சார்ந்த ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களும் தமிழ் நாட்டளவில் சுயமரியாதை இயக்கம் வளர்வதை, வலுப்பதை விரும்பி அதற்கு ஆதர வளித்தனர். பனகல் அரசர், பொப்பிலி அரசர், சர். கே. வி. ரெட்டி நாயுடு, சர். ஏ. பி. பாத்ரோ, சர். எம். கிருஷ்ணன் நாயர் ஆகியோர் தமிழ் நாட்டில் நடந்த சுயமரியாதை மாநாடுகளில் கலந்துகொண்டு, சுயமரியாதைக் கொள்கை களில் பற்றுடையவர்கள்போலப் பேசி வந்தனர். ஆனுல், இந்தத் தலைவர்கள் தங்கள் வாழிடங்களான ஆந்திர—கேரளப் பிரதேசங்களில் சுயமரியாதைச் சங்கத்தின் கிளை களை அமைக்கவோ, பெரியார் ஈ. வே. ராவை அழைத்துப் போய் அங்கெல்லாம் சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பவோ முன்வரவில்லை யென்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

ஆந்திர மக்கள்—குறிப்பாக, அவர்களில் பிராமணரல்லா தார் ஆந்திர இனம் பிளவுபடுவதை விரும்பவில்லை. உத்தி யோக நலன் கருதிப் பிராமணருக்கும் பிராமணரல்லா தாருக்கு மிடையே போட்டி ஏற்படுவதை—அது காரண மாக, ஜஸ்டிஸ் கட்சி வளர்வதை ஆந்திரப் பொதுமக்கள் எதிர்க்கவில்லை யென்ருலும், அதற்காகக்கூட ஆந்திரரிலே பிராமணருக்கும் பிராமண ரல்லாதாருக்கு மிடையில் போராட்டம் ஏற்பட்டு, அது காரணமாக ஆந்திர தேசிய இனம் பிளவுபடுவதை அவர்கள் விரும்பாதவராயினர் என் பதனைக் கடந்த அறுபதாண்டுகால வரலாற்றை ஆய்வு செய்யும் யாரும் அறிந்து கொள்ள முடியும்.

தமிழ்நாட்டில்பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்கு மிடையில் ஏற்பட்ட சாதிப் பூசலானது தமிழினத்தைப் பிளவுபடுத்தி, பிற இனத்தார் தமிழகத்தில் உத்தியோக வேட்டையாடுவதற்கு உதவி புரிந்துவிட்டதே, அந்த அனு பவத்தைக்கொண்டு பார்க்கிறபோது, ஆந்திர—கேரள மக்கள் சுயமரியாதை இயக்கம் தங்கள் நாடுகளில் நுழைய விடாமல் செய்ததனைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆந்திரர்—கேரளர் அளவுக்குத் தமிழ் நாட்டு மக்களுக்கும் சாதிப் பற்றினை வெல்லுமளவுக்கு இனப்பற்று இருந்திருக்குமாயின் இன்று தமிழ் நாட்டின் நிலை வேறுவிதமாக இருந்திருக்கக் கூடுமென்பதில் ஐயமில்லை.

பெரியார் ஈ. வே. ரா., நாட்டாலும் பழக்க வழக்கங்க ளாலும் தமிழராயினும், மொழியால் கன்னடராகத்தான் இருந்தார். ஆம்; அவரது வீட்டு மொழி கன்னடம். தாம் கன்னடர் என்பதனை அவரே தமது பேச்சிலும் எழுத்திலும் பன்முறை மிகவும் பெருமிதத்தோடு சொல்லிக்கொண்டார். அப்படியிருந்தும், கன்னட நாட்டோடு அவருக்கிருந்த மொழித் தொடர்புகூட, அந்த மாநிலத்தில் பிராமணரை எதிர்க்கும் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்புவதற்கு அவருக்குக் கை கொடுக்கவில்லை.

திரு. எதிராஜ் சுரேந்திரநாத் ஆரியா என்பவர் முதலில் காங்கிரஸ்காரராக இருந்து, விடுதலை இயக்கத் திலும் பங்கு கொண்டு, மகாகவி பாரதியாரின் தோழராக விளங்கி, பின்னர், ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்தவர். அவர், தமிழ் நாட்டில் பிராமணரல்லாத இளைஞர் இயக்கமொன் றைத் தொடங்கினர். அதன் பெயரால் பல மாநாடுகளைத் தமிழகத்தின் பல நகரங்களில் நடத்தினர். ஆனல், அந்த இளைஞர் இயக்கத்தை ஆந்திர மாவட்டங்களில் பரப்ப அவரால் இயலவில்லை. அவர் அதற்காக முயன்றதாகவும் தகவல் இல்லை. அவர், தமிழ் நாட்டில் வாழ்ந்தவரென்று லும், இனத்தால் அசல் ஆந்திரர்! அவர்கூட ஆந்திராவில் சுயமரியாதை இயக்கத்தை நுழைக்க முயலவில்லை. முயன்

றிருந்தாலும், முடிந்திருக்காது. உண்மையில் மூடப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதிலே, பிராமணர்களை வழிபடுவதிலே தமிழரைவிடவும் ஆந்திரரே தீவிரமானவர்கள்.

பானகல் அரசர், பொப்பிலி அரசர், சர். ஏ. பி.பாத்ரோ' சர். கூர்ம வெங்கட ரெட்டி போன்ற ஜஸ்டிஸ் கட்சியின் ஆந்திரத் தலைவர்கள் பெரியாரைப் பெரிதும் மதித்தார்கள். அவரோடு நெருங்கித் தோழமை கொண்டு பழகினர்கள். 1937 க்குப் பின்னர் பெரியார் ஈ. வே. ரா. ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர் பதவிக்கு வருவதற்கு அவர்கள் ஆதரவு காட்டினர்கள். அந்த அளவுக்கு அவர்கள் பெரியாரோடு தொடர்பு வைத்துக் கொண்டிருந்தும், ஆந்திர நாட்டுக்கு சுயமரியாதை இயக்கம் தேவையற்றதென்றே அவர்கள் கருதியதாகத் தெரிகிறது.

ஆந்திர பொது மக்களைப் போன்றே ஆந்திரத் தலைவர்களும் பிராமணர்—பிராமணரல்லாதார் பூசலை கலாசாரத் துறையிலும் பரவ விடுவதால் ஆந்திர இனம் திரும்பவும் ஒன்றுபட முடியாத அளவுக்குப் பிளவுபட்டுவிடக் கூடுமென்று அஞ்சியிருக்க வேண்டும். இதைத் தவிர சுயமரியாதைக் கொள்கைகளை அவர்கள் ஆந்திர நாட்டில் வரவேற்கத் தவறியதற்கு வேறு காரணம் இருந்ததாகத் தெரியவில்லை.

ஜஸ்டிஸ் கட்சியில் ஆதிக்கம் பெற்றிருந்த ஆந்திரத் தலைவர்களில் பெரும்பாலோர் பெரிய ஜமீன்தாரர்களாகவும் மிராசுதாரர்களாகவும் இருந்தனர். அதனுலும் அவர்கள் பெரியார் போதித்த சுயமரியாதைக் கொள்கைகளில் ஈடுபாடு காட்டுவது சாத்தியமில்லைதானே!

இந்து மதத்தின்—குறிப்பாக, புரோகித மதத்தின் காவலர்கள் நிலப் பிரபுக்கள்தானே! நிலப் பிரபுத்துவ—புரோகித வர்க்கங்களின் கூட்டு முயற்சியிலிருந்து பிறந்ததுதானே தீண்டாமை! விஞ்ஞான அறிவு கொண்டு இந்திய சமுதா

யத்தின் வளர்ச்சியை—வரலாற்றை ஆராய்ந்தால், சாதி வேற்றுமைகளைப் படைத்தது புரோகித மென்றாலும், அதனைப் போஷித்து வளர்த்து வருவது நிலப் பிரபுத்துவம் தான் என்பது விளங்கும். ஆகவே, ஜஸ்டிஸ் கட்சியின் முன்னணித் தலைவர்களான ஆந்திர நிலப் பிரபுக்கள் சுய மரியாதை இயக்கத்திலே இதய பூர்வமாக ஈடுபாடு காட்டாதது நாம் புரிந்து கொள்ளக் கூடியதே.

தமிழ் நாட்டிலும் ஜஸ்டிஸ் கட்சியில் செல்வாக்குடன் விளங்கியவர்கள் பிராமணரல்லாதாரில் முன்னேற்றமடைந்து விட்ட சாதியினரும், நிலப் பிரபுக்களுமேயாவர். அந்நாளில் ஜஸ்டிஸ் கட்சிக்காரராக இருப்பது ஆளுஞ் சாதியினரான ஆங்கிலேயருடைய நல்லெண்ணத்தைப் பெறுவதற்கு வழியாக இருந்ததாலும், அவர்கள் அக் கட்சியில் சேர்ந்து வளர்ந்தனர்; வாழ்வு பெற்றனர்.

ஜஸ்டிஸ் கட்சி நிலப் பிரபுக்கள் சுயமரியாதை இயக்கத்திற்குத் தமிழ் நாட்டளவிலேனும் ஆதரவு காட்டியதற்கு மற்றொரு காரணமும் உண்டு. அது, சுயமரியாதை இயக்கம் தோன்றிக் கொண்டிருந்த நேரத்திலே—அதாவது, 1926ஆம் ஆண்டின் இறுதியிலே நடந்த சட்ட மன்றத் தேர்தலில் ஜஸ்டிஸ் கட்சி படுதோல்வியுற்று, சுயராஜ்யக் கட்சியின் பெயரால் காங்கிரஸ்காரர்கள் வெற்றி பெற்றிருந்ததாகும்.

தேர்தல் களத்தில் ஏற்பட்ட தோல்வி காரணமாக ஜஸ்டிஸ் கட்சியின் எதிர்காலம் இருண்டு போய்விட்டது. அந்த நேரத்தில் சுயமரியாதை இயக்கம் தோன்றி, அதற்குத் தாழ்த்தப்பட்ட—பிற்பட்ட சாதிகளிடையே—குறிப்பாக, சமுதாயத்தின் அடித்தளத்து மக்களிடையே செல்வாக்கு ஏற்பட்டதால், நீரில் மூழ்கிக் கொண்டிருப்பவன் கிடைத்ததைப் பிடித்துக்கொண்டு கரையேற முயல்வதுபோல, சுயமரியாதைக் கொள்கைகளில் பிடிப்பற்றவர்களாக இருந்தும், தங்கள் வருங்கால சுய நலன் கருதி, அந்த இயக்கத்தை ஜஸ்டிஸ் கட்சித் தமிழர்கள் ஆதரிப்பாராயினர்.

இங்கு, தமிழர்—அவர்கள் ஜஸ்டிஸ், சுயமரியாதைப் பாரம்பர்யத்தினராயினும்—நினைவில் கொள்ள வேண்டியது ஆந்திரப் பிரதேசத்தில் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்ப ஜஸ்டிஸ் கட்சியின் ஆந்திரத் தலைவர்கள் பெரியாருக்கு உதவி புரியாத நிலையாகும். ஆம்; ஆந்திரர் என்றுமே இன உணர்ச்சியில் இந்திய இனங்களிலே முன்னணியிலிருப்பவர்கள். வங்காளியர்கூட இன உணர்ச்சியில் ஆந்திரருக்கு அடுத்தவர்கள்தான். தமிழர், இனவுணர்ச்சியிலே சூன்யம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லையல்லவா!

தமிழர் பிளவுபடுவது தாங்கள் தமிழகத்தில் உத்தியோக வேட்டையாடுவதற்கு வசதியாக இருக்கிறதென்பதனை ஆந்திரரும் கேரளரும் கன்னடரும் அனுபவத்தில் உணர்ந்திருந்தனராதலால், தமிழக அளவில் பிராமணரை வெறுக்கும் சுயமரியாதை இயக்கம் வளர்வதற்கும் வலுப்பதற்கும் அவர்கள் கை கொடுக்கலாயினர்—புத்திசாலிகள்!

ஆந்திர—கேரள கன்னடப் பிரதேசங்களில் சுயமரியாதைக் கொள்கைகளைப் பரப்ப அந்தப் பிரதேசங்களின் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் தமக்குக் கை கொடுக்காதது பற்றிப் பெரியாரும் சுயமரியாதைத் தமிழர்களும் அந்நாளில் என்ன நினைத்தார்கள் என்பதனை அறிந்து கொள்ள இயலவில்லை. அதைப்பற்றி அவர்கள் சிந்திக்கவே இல்லையோ என்னவோ!

சுயமரியாதை இயக்கம் தமிழகத்திற்கு வெளியே கிளை விடவில்லை யென்றாலும், தமிழ் நாட்டில் சுயமரியாதைக் காரர்கள் நடத்திய மாநாடுகளுக்கும் பிற நிகழ்ச்சிகளுக்கும் தமிழரல்லாதார் தாராளமாக அழைக்கப்பட்டனர். தமிழ் நாட்டில் நடைபெற்ற சென்னை மாகாண மாநாடுகளுக்கேயன்றி, தமிழ் மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற ஜஸ்டிஸ் சுயமரியாதை மாநாடுகளுக்கும் ஆந்திர கேரளத் தலைவர்கள் அழைக்கப்பட்டனர். மாநாட்டைத் திறந்துவைக்கவோ, பேசவோ அல்லாமல், மாநாட்டில் தலைமை வகிக்கவும் அழைக்கப்பட்டனர்.

1926ல் மதுரையில் நடைபெற்ற மாகாண பிராமண ரல்லாதார் மாநாட்டில் ஆந்திரரான சர். ஏ. பி. பாத்ரோ தலைமை வகித்தார்.

1927ல் கோவை நகரில் நடைபெற்ற மாகாண பிராமண ரல்லாதார் விசேஷ மாநாட்டிலும், 1929ல் நெல்லை நகரில் நடைபெற்ற திருநெல்வேலி மாவட்ட சுயமரியாதை மாநாட்டிலும் திரு. குமாரசாமி ரெட்டியார் தலைமை வகித்தார்

1930ல் நடைபெற்ற இரண்டாவது மாகாண சுயமரி யாதை மாநாட்டில் திரு. எம். ஆர். செயகர் என்ற வட இந்தியர் தலைமை வகித்தார்.

1933ல் நடைபெற்ற கோவை மாவட்ட சுயமரியாதை மாநாட்டில் திரு. கே. ஐயப்பன் என்ற மலையாளி தலைமை வகித்தார்.

1937ல் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் சர். கூர்மவெங்கட ரெட்டி தலைமை தாங்க அழைக்கப்பட்டு, அவர் தலைமையிலேயே அம் மாநாடு கோலாகலமாக நடைபெற்றது. ஆம்; 'தமிழ் வாழ்க' என்ற வாழ்த்தொலியுடன் தமிழ் மொழியைக் காக்க நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டிலும் ஆந்திரத் தலைவர்கள் தலைமை தாங்க அனுமதிக்கப்பட்டனர். அந்நாளில் சுயமரியாதை இயக்கம் தமிழ் இனத்தின் சார்பில் செயல்படவில்லை. சென்னை மாகாணத்தில் தமிழகத்துக்கு வெளியே இந்தி எதிர்ப்பு நடைபெறவில்லையென்பதையும் இங்கு நினைவில் கொள்ள வேண்டும். ஆந்திர—கேரள ஜஸ்டிஸ் தலைவர்கள் தத்தம் பிரதேசங்களில் கட்டாய இந்தியை எதிர்த்துப் போர் நடத்தப் பொறுப்பேற்காமல் தமிழ் நாட்டிலே அந்த எதிர்ப்பை வலுப்படுத்த சுயமரியாதை இயக்கத்தாருக்கு ஒத்துழைப்புத் தந்தார்கள்.

தமிழ் நாட்டு ஜஸ்டிஸ்—சுயமரியாதை இயக்கத் தலைவர் களுக்கும் ஆந்திர—கேரளத் தலைவர்களுக்குமிடையிலிருந்த

காதல் "கைக்கிளை" (ஒருதலைக் காமம்) என்று சொல்லத்தக்க தாக இருந்தது. ஜஸ்டிஸ் கட்சி—சுயமரியாதை இயக்கங்களின் தமிழர்கள் ஆந்திர—கேரள மாநிலங்களின் தலைவர்களைத் தமிழ் நாட்டிற்கு அடிக்கடி அழைத்துப் பெருமைப்படுத்திய தன் விளைவு என்ன? அவர்கள் வேற்றினத்தார் என்ற நினைப் பின்றி—பிராமணர் அல்லாதார் என்ற ஒரே காரணத்திற் காக—தங்கள் தலைவர்களாகவே தமிழ் மக்கள் அவர்களை ஏற்றுக் கொண்டதாகும். தமிழகத் தலைவர்கள் ஆந்திர–கேரள மாநிலங்களுக்கு அழைக்கப்படாததன் விளைவு என்ன? அங்குள்ள மக்கள் தமிழகத் தலைவர்களை—பிராமணரல்லா தார் என்பதற்காகக் கூட—தங்கள் தலைவர்களாக ஏற்பதற் கான வாய்ப்பற்றுப் போனதாகும்.

சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளை இங்கு விமர்சிக்கப் புகுவது நான் எடுத்துக் கொண்ட விஷயத்திற் குப் புறம்பானதாகும். ஆகவே, அதிலே புகுவதற்கு நான் விரும்பவில்லை. ஆயினும், பொதுப்படைப்படையாகச் சில கருத்துக்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

பத்தொன்பதாம் நூற்றூண்டு விஞ்ஞான சகாப்தமாத வால் சீர்திருத்த சகாப்தமாகவும் விளங்கியது. தமிழ் நாடும் சீர்திருத்தப் புரட்சிக்கு ஒதுக்கமாக இருக்கவில்லை. இங்கு, இராமலிங்க சுவாமிகள் தோன்றி, புரட்சிகரமான சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கினுர். ஆம்; அவர், சீர்திருத்தக் கொள்கைகளைப் போதித்ததோடன்றி, அவற்றிற்கு வெற்றி தேடும் பொருட்டு "சமரச சுத்த சன்மார்க்க சங்கம்" என்ற பெயரில் ஒரு இயக்கத்தையும் தோற்றுவித்தார்.

பெரியார் ஈ. வே. ரா. சுயமரியாதை இயக்கத்தைத் துவக்குவதற்கு முன்பே தமிழ் நாட்டில் சமயங் கடந்த, நிலையில் சமூக சீர்திருத்த இயக்கம் தோன்றிவிட்டது. தூய தமிழ்க் குடியில் பிறந்த இராமலிங்க சுவாமிகள் (1823—1874) புரட்சிகரமான சீர்திருத்தங்களைத் தமிழ் மக்களுக்குப்

போதித்தார். அவ் வகையில், தமிழில்—உரை நடையிலும் கவிதை நடையிலும்—இலக்கியங்களைப் படைத்தார். சுவாமிகளுடைய போதனைகள் மூடநம்பிக்கைகளைச் சாடுவனவாகும். அவை, பகுத்தறிவாளர் ஏற்கத் தக்கவையுமாகும்.

'வள்ளலார்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற சுவாமிகள் தெய்வம் உண்டு என்று நம்பினார். அதனை, வழிபட்டு உய்ய வேண்டுமென்றும் மக்களை வற்புறுத்தினார். தெய்வ வழிபாட்டுக்குரிய பக்திப் பாடல்களையும் ஆயிரக்கணக்கில் இயற்றி வழங்கினார். ஆனால், தெய்வம் பற்றிச் சனாதன, சைவ குருமார்கள் கற்பனையாகக் கூறியுள்ளவற்றையெல்லாம் அவர் மறுத்தார். அவ் வகையில் மதவழிப்பட்ட மூட நம்பிக்கைகளிலிருந்து மக்களை மீட்க சுவாமிகள் அரும்பாடுபட்டார்.

கடவுள் ஒருவரே என்ற உண்மையையும் வள்ளலார் மக்களுக்கு உணர்த்தினார். 'தெய்வம் பலபல சொல்லும் மூடத்தனத்தை நம்ப வேண்டாம்' என்றார். "உண்மையில் 'கடவுள்' எனப்படுவது அகிலமாம்—அன்பாம். அஃது, உலகிலுள்ள எல்லாவற்றிலும் பரிபூரண சமாதானத்தையும் சமரச நிலையையும் ஏற்படுத்தி அவைகளை நிலைநிறுத்துகின்றது" என்றார். புராணங்களெல்லாம் தத்துவங்களை விளக்கப் புகுந்த கற்பனைக் கதைகளே என்பதனை மக்களிடையே பரப்பினார்.

தெய்வத்தை வழிபடும் முறையிலும் காலத்திற்கேற்ற— பகுத்தறிவாளரும் ஏற்கத்தக்க மாறுதல்களைப் போதித்தார்.

சம்ஸ்கிருத மொழியிலுள்ள வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் ஆகியவற்றைப் பழுதறப் பயின்றவரென்றாலும் அவற்றில் தெய்வத்தைப்பற்றி வெளிப்படையாகவும், தெளிவாகவும் சொல்லப்படவில்லையாதலால், அவற்றை நம்ப வேண்டாம்என்று மக்களிடம் கூறினார்.

பெண்களுக்கு ஏட்டுக் கல்வி தரக்கூடாதென்ற மூடத் தனத்தை எதிர்த்தார். வெறும் லௌகிகக் கல்வியேயன்றி, ஆன்மிகக் கல்வியும் அவர்களுக்குத் தரவேண்டும்—என்ருர்.

பெண்களேயன்றி, ஆண்களும் கையில் தங்கக் காப்பும் காதில் கடுக்கனும் அணியும் வழக்கமிருந்த காலத்திலே வள்ளலார் வாழ்ந்தார். அதனுல், நகைப் பைத்தியத்தை விடுமாறும் போதித்தார்.

தெய்வநம்பிக்கையுடையவர்கள் தங்கள் வாழ்க்கையிலே ஆடம்பரங்களைக் கடைப்பிடிப்பது கண்டு அடிகள் வேதனை யுற்ருர்—குறிப்பாக, திருமணம் போன்ற நிகழ்ச்சிகளிலே பணத்தை விரயம் செய்வதைக் கண்டித்தார்.

வள்ளலார், துவராடை (காஷாயம்) அணிவதை வெறுத்து வெள்ளாடைத் துறவியாகவே வாழ்ந்து மறைந் தார். "மூன்ருசைகளில் விசேஷம் பற்றில்லாதவர்களுக்குக் காவித் துணியுஞ் சந்நியாசமும் வேண்டுவதில்லை" யென்றும் கூறினுர்.

தெய்வத்தைப் பற்றிச் சொல்லப் புகுந்த மகான்களை யெல்லாம் தெய்வமாகவே கருதி வழிபடும் மூடப்பழக்கம் ஏற்பட்டு, அது போற்றி வளர்க்கப்பட்டு வருவது கண்டு வள்ளலார் வருந்தினுர். புரட்சிகரமான சீர்திருத்தவாதி யாகிய அவர், மனிதனைத் தெய்வமாகக் கருதும் வழக்கத்தை எதிர்த்தார்.

உருவ வழிபாட்டை கடவுள் வழிபாட்டிற்காக மட்டு மன்றி, தனி நபர்களைப் பெருமைப்படுத்துவதற்காகவும் கடைப்பிடிப்பதை அடிகள் வெறுத்தார்.

சாதி, சமய, மத வேறுபாடுகளை அடிகள் அடியோடு வெறுத்தார். இந்நாளில் சமூக சீர்திருத்தவாதிகளிலே கூட சுய சாதிப் பற்றற்றவர்களைக் காண்பது அரிதாக இருக்கிறது. வள்ளலர், சாதி சமய மத வேறுபாடுகளை விட்டு வாழ்ந்தார்,

மக்களில் ஒருவர் விடாமல் கல்வியறிவு பெறும்போது தான் சாதி, சமய, வருணப்பற்றுக்களிலிருந்து அவர்களை விடு விக்க முடியுமென்று வள்ளலார் நம்பினார். அதனால், கல்வி கற்க உரிமையற்றவர்களாக ஆக்கப்பட்டிருந்த பெண்களுக் கும் சமூகக் கல்வியேயன்றி ஆன்ம ஞானக் கல்வி தருவதும் அவசியம் என்றார். கல்விக் கூடங்களிலேகூட, உயர் சாதி ஆணவம் ஆதிக்கஞ்செலுத்துவது கண்டு அடிகள் வருந்தினார்.

வள்ளலார், பற்றுக்களனைத்தையும் துறந்த பரமயோகி யாக வாழ்ந்தாரென்றாலும், தமிழ்ப்பற்றை மட்டும் துறக்கா தவரானார். தம் காலத்தில் வாழ்ந்த சங்கராசாரிய சுவாமி களைச் சந்திக்க நேர்ந்தபோது, ''மொழிகளுக்கெல்லாம் தாய் மொழி சம்ஸ்கிருதமே'' என்று ஆசாரிய சுவாமிகள் கூற, ''ஆயின், தமிழ் தந்தை மொழி'' என்று வள்ளலார் பதில் பகர்ந்தார். தமிழிடம் தாம் கொண்டுள்ள பற்றுக்குக் காரணம் கூறும் வகையிலே, தமிழ் என்ற மூன்றெழுத்துப் பெயருக்கு விளக்கமெழுதினார்.

வள்ளலார், தம் காலத்தில் வாழ்ந்த சீர்திருத்தவாதிக ளான இராம்மோகனர், தயானந்த சரஸ்வதி ஆகியோரை யும் விஞ்சிவிட்டார் எனலாம். அவர் தம் கொள்கைகளைக் கவிதை வடிவில்—உரைநடையில் எழுதியதோடல்லாமல், தம்மைப் பின்பற்றியோருக்கு அடிக்கடி வகுப்புகள் நடத்தி அவர்களுக்குப் போதித்தார்.

போதித்ததோடு நின்றுவிடாமல், சுத்த சன்மார்க்க சங்கமொன்றும் அமைத்து, அதற்கெனத் தனியாக ஒரு கொடியும் கண்டு, பேரியக்கமொன்றை உருவாக்கினார். சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் போதிப்பதிலே மட்டுமல் லாமல், அவற்றிற்கு வெற்றி காண்பதற்கென இயக்கமொன் றைப் படைப்பதிலேயும் வள்ளலார் ஈ. வே. ரா.வுக்கு முன்னோடியாக விளங்கினார் எனலாம்.

வடபுலத்தில் சீர்திருத்தக் கிளர்ச்சி ராம்மோகனராலும், தயானந்தராலும் தோற்றுவிக்கப்பட்டபோதே தமிழகத்தி

லும் சாதி மத வருண குல கோத்திர வேறுபாடுகளை எதிர்க்கும் இயக்கம் தோன்றிவிட்டது என்பதனை எடுத்துக் காட்டவே வள்ளலாரின் போதனைகளையும் சாதனைகளையும் சற்று விரிவாகக் கூறினேன்.

வள்ளலாரின் புரட்சிகரமான கருத்துக்கள் அனைத்தையும் இங்கு எடுத்துக் காட்டுவதோ, அவற்றைப் பற்றி விமர்சிப்பதோ 'மற்றொன்று விரித்தல்' என்ற குற்றத்தின்பாற்படும். ஈ. வே. ரா.வின் சுயமரியாதை இயக்கம் சூன்யத்திலிருந்து பிறக்கவில்லை; அதுவரை தமிழர் உறங்கிக் கிடக்கவுமில்லை என்பதனை இளைஞர் சமுதாயம் உணரவேண்டும் என்பதற்காகவே வள்ளலாரைப் பற்றிச் சற்று விரிவாகக் கூறினேன்.

கோபாலகிருஷ்ண பாரதியார் என்பவர் வள்ளலார் காலத்தில் வாழ்ந்தவர். சிறந்த இசை வாணர். சிவ கதை நடத்தி, அதில் வரும் வருவாயைக் கொண்டு வாழ்க்கையை நடத்தியவர். இவர், 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' என்ற நாடக நூலைப் படைத்தார். சேக்கிழார் 'திருநாளைப் போவார்' என்னும் பெயரில் இயற்றிய நந்தனார் புராணத்திலே அந்தண மிராசுதார் பாத்திரம் இல்லை. அதிலே வரும் நந்தன் உழவனல்லன். பெரிய புராணத்திலிருந்து வேறுபட்டு நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் படைத்தார் பாரதியார். அதிலே, புதிதாக அந்தண மிராசுதாரரைப் படைத்து, சிவபக்தனான நந்தனை உழவனாக்கினார். கோபால கிருஷ்ண பாரதியாரின் நாடக நூலில், அந்தணருக்கும் அரிசன பக்தனுக்குமிடையே நிகழும் வருணாசிரமப் போராட்டமும், மிராசுதாருக்கும் உழவனுக்குமிடையில் நிகழும் உரிமைப் போராட்டமும் புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டவையாகும்.

நிலப்பிரபுத்துவக் கோட்டையான தஞ்சை மாவட்ட வாசியாதலால், நிலப்பிரபுக்களிடம் அரிசன உழவர்கள் படும் அல்லல்களைத் தம்முடைய நாடகத்தின் மூலம் எடுத்துக் காட்டினார். வருணாசிரமத்தின் செவிலித் தாய் நிலப்பிரபுத்

துவம் என்பதை சொல்லாமல் சொல்லும் வகையில் அமைந்தது நந்தனார் சரித்திரக் கீர்த்தனை.

தஞ்சை மாவட்ட மிராசுதாரர்களால் தூண்டிவிடப்பட்ட புலவர் சிலர் 'நந்தன் சரித்திரத்தைக் கேளாதே!' என்று மக்களிடையே பிரசாரம் செய்தனர். சனாதனிகளான அந்தணர் சிலரும் பாரதியாரின் நந்தனார் சரித்திர நாடகத்தைப் பகிஷ்கரித்தனர். ஆனால் சனாதனிகள், மிராசுதாரர்கள், புலவர்கள் ஆகியோரின் எதிர்ப்பைக் கண்டு பாரதியார் அஞ்சவில்லை. தாமே ஊர் ஊராகச் சென்று அரிசனங்கள் உள்பட சாதாரணப் பொது மக்களைக் கூட்டி வைத்து, தமது நந்தனார் சரித்திரக் கீர்த்தனையை புராண காலட்சேபமாக நடத்தி, அதிலுள்ள சாதி ஒழிப்புக் கொள்கையைப் பிரசாரம் செய்தார்.

கோபால கிருஷ்ண பாரதியாரின் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் மிகவும் துணிச்சல் வாய்ந்ததாகும். அந்நாளில் அவருக்குத் துணைபுரிய சீர்திருத்த இயக்கமெதுவும் நாட்டில் இருக்கவில்லை. அதனால், அவர் தனித்து நின்று சனாதனிகள்—மிராசுதாரர்கள் கூட்டு எதிர்ப்பைச் சமாளித்தார்.

பாரதியார் மறைந்த பின்னர் அவருடைய நந்தனார் சரித்திரக் கீர்த்தனை புகழ்பெற்ற நடிக—நடிகையால் நாடகமாக நடிக்கப்பட்டது. காந்தியடிகளின் தீண்டாமை விலக்கு இயக்கத்திற்கு வலுத்தேட பாரதியாரின் நாடகம் பெரிதும் பயன்பட்டது.

தேசியக்கவி பாரதியார், 'நந்தனைப் போலொரு பார்ப்பான் இந்த நானிலத்திலில்லை கண்டீர்' என்று பாடியது சேக்கிழார் படைத்த நந்தனை நினைத்தல்ல; கோபாலகிருஷ்ண பாரதியார் படைத்த—அந்தண மிராசுதாரரை எதிர்த்துப் போரிட்ட—உழவரான நந்தனாரை நினைத்துத்தான்!

பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தோன்றிய சமூக சீர்திருத்தப் பிரசார

நாடகமாகும். இதனை முதலாகக் கொண்டுதான் சீர்திருத்தப் பிரசார நாடக இலக்கியங்கள் பிற்காலத்தில் தோன்றின எனலாம்.

நந்தனார் கீர்த்தனை நாடகம் பிராமணரான கோபால கிருஷ்ண பாரதியாரால் தெய்வ பக்தியை உடன்பாடாகக் கொண்டு படைக்கப்பட்டதால், அந்தண சாதியைச் சார்ந்த புராணிகர்களும், நடிக—நடிகையரும் அதன் அடியொற்றிச் சீர்திருத்தப் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

வள்ளலார்—கோபாலகிருஷ்ண பாரதியார் காலத்தவரும், கிறித்துவப் பெரியாருமான மாயூரம் நீதிபதி வேதநாயகம் பிள்ளையவர்களும், 'சர்வ சமய சமரசக் கீர்த்தனை'கள் புனைந்து, தம் காலத்தில் தோன்றிய சீர்திருத்தக் கிளர்ச்சியிலே பங்கு கொண்டார். ஆரவார மற்றது அவரது சமூக சீர்திருத்தத் தொண்டு!

காங்கிரஸ் மகாசபையின் முதற் கூட்டத்திலே கலந்து கொண்டவரும், 'சுதேச மித்திரன்—'இந்து' பத்திரிகைகளைத் தோற்றுவித்தவருமான திரு. ஜி. சுப்பிரமணிய ஐயரும் தலை சிறந்த சீர்திருத்த வாதியாக விளங்கினார். சனாதன அந்தணர்களின் எதிர்ப்பைப் புறக்கணித்து, தம்முடைய விதவை மகளுக்கு அகில இந்திய காங்கிரஸ் மகாசபைப் பந்தலிலேயே மறுமணம் செய்து வைத்தார். அவரது வாழ்க்கை வரலாற்றில் இன்னும் பல சீர்திருத்தச் செயல்களைக் காண்கின்றோம். அவரும் ஆரவாரத்தை வெறுத்து அமைதியான முறையில் சீர்திருத்தத்தைப் போதித்தார்.

தேசியக் கவி பாரதியார் (1882-1921) வள்ளலாரின் வாரிசாக நின்று, அவர் விட்டுப் போன சீர்திருத்தப் பணியைத் தொடர்ந்தார். சுப்பிரமணிய பாரதியாரை தேசியக் கவியாகத்தான் நினைக்கின்றது தமிழுலகம். அவர், எந்த அளவுக்கு அரசியல் வாதியோ, அதைவிடவும் அதிக அளவுக்கு சீர்திருத்த வாதியாவார். அவர், நாட்டின் அரசியல் விடுதலையையும் சமூக விடுதலையையும் ஒரு நாண

யத்தின் இரு பக்கங்களாக மதித்தார். பாரதியாரின் சமூக சீர்திருத்தக் கொள்கைகளே கனக சுப்புரத்தினத்தைப் 'பாரதி தாசன்' ஆக்கிய தெனலாம். ஆம்; பாரதி தாசன் பாரதியாரின் தேசியக் கொள்கைகளிலே கவர்ச்சி பெற்றவர் என்று சொல்வதற்கில்லை.

பாரதியார் தம்முடைய எண்ணற்ற பாடல்களிலேயும் உரைநடைக் கட்டுரைகளிலேயும் சிறு கதைகளிலேயும் சமூக சீர்திருத்தக் கொள்கைகளை வலியுறுத்தியுள்ளார். இந்தியா அரசியல் விடுதலை பெறும் கணத்திலேயே சமூக விடுதலையும் பெற்றாக வேண்டுமென்பதனை 'விடுதலை விடுதலை விடுதலை' என்று தொடங்கும் பாடலிலே, 'பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை, பறவரோடு குறவருக்கும் மறவருக்கும் விடுதலை' என்று அவர் கூறுவதால் அறிகிறோம்.

பாரதியார், சாதிக் கொடுமைக்கு அந்தணரே ஆதிகாரண ரென்று ஒளிவு மறைவின்றிக் கூறியிருக்கின்றார். ஆம்; அந்தண சாதியின் பெயரைச் சொல்லி, அவர்களது உயர்வு மனப்பான்மையைப் பாரதியார் கண்டித்துள்ளார்.

மகாகவி பாரதியார், பாரத தேசப் பற்று—தெய்வப் பற்று—தமிழினப்பற்று – தாய்மொழிப் பற்று ஆகிய பற்றுக் களைக் கொண்டவராகி, சமூக சீர்திருத்தக் கொள்கை களைப் போதித்தார். நாட்டு விடுதலையைக்கூட சமூக சீர் திருத்தத்திற்காகவே அவர் விரும்பினார். ஒரு மகாகவி என்ற வகையிலே ஒரு மாபெரும் ஸ்தாபனத்திற்குரிய சக்தியைப் பெற்று அவர் விளங்கினார்.

சர்வ சமய சமரச அடிப்படையில் இந்து மதத் தெய்வங் களையேயன்றி, பிற சமயங்களின் தெய்வங்களான ஏசுவை யும் அல்லாவையும்கூட பாடிப் பரவினர்.

வள்ளலார், கோபால கிருஷ்ண பாரதியார், வேத நாயகம் பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் பிற் கால சந்ததியார் சமூக சீர்திருத்த இயக்கத்திற்குப் பயன் படுத்திக் கொள்ளத்தக்க வகையில் ஏராளமான இலக்கியங் களைப் படைத்தனர். அந்த இலக்கியங்களைப் பிற்காலத்தில் தோன்றிய சுயமரியாதை இயக்கத்தார் தங்கள் பிதிரார்ஜிதச் சொத்துக்களாக ஏற்றுக்கொண்டு, சமூக சீர்திருத் தத்திற்குப் பாடுபட்டிருந்தால், தமிழ்நாடு இந்தியா முழுவ தற்கும் வழி காட்டியிருக்கும். சமுதாய சீர்திருத்தத் துறையிலேனும் பிற மொழியினர் ஆதிக்கம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டிருக்கும். அப்படி நடந்ததா? இல்லை.

அழிவுப் பாதையிலே...

1925ல் பெரியார் ஈ. வே. ரா. காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னர், அவரால் தொடங்கப் பெற்ற சுயமரியாதை இயக்கமானது வள்ளலார்—கோபாலகிருஷ்ண பாரதியார்—சுப்பிரமணிய பாரதியார் ஆகிய சீர்திருத்தவாதிகள் வகுத்த பாதையிலே நடைபோடத் தவறியது தமிழினத்தாரின் துரதிர்ஷ்டமாகும். இதற்குக் காரணம், தேசபக்தியையும் தெய்வபக்தியையும் கூடப் பெரியார் மூட நம்பிக்கைகளாகக் கருதிவிட்டதாகும்.

சமூக சீர்திருத்தம் பற்றித் தமது கருத்தை பெரியார் ஈ. வே. ரா. அவர்கள், 26-11-28ல் சென்னை விக்டோரியா பப்ளிக் ஹாலில் நடைபெற்ற தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் மாநாட்டுத் தலைமையுரையில் தெரிவித்துள்ளார். அதனை இங்கு பார்ப்போம்!

“இம் மாநாடு சீர்திருத்தக்காரர்கள் மாநாடு என்று சொல்லப்படுகின்றது. எனவே, இத்தகைய ஒரு மாநாட்டிற்குச் சீர்திருத்தத்தில் மிகுதியும் நம்பிக்கையுள்ள ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பீர்களானால், அது மிகவும் பொருத்தமுடையதாக இருந்திருக்குமென்று நான் சொல்வதற்காக என்னை மன்னிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், வரவர எனக்குச் சீர்திருத்தம் என்பதிலே உள்ள நம்பிக்கை மறைந்து கொண்டே போகிறது. அன்றியும், நமது நாட்டை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்பவர்களுக்கும் நமது நாட்டுப் பெரும்பான்மை

யான மக்களுக்குச் சுயமரியாதையும், சமத்துவமும், விடுதலையும் உண்டாக்கச் செய்ய வேண்டும் என்பவர்களுக்கும் எதிரில் இருக்கும் வேலை சீர்திருத்த வேலை அல்ல என்பதே எனது அபிப்பிராயம். மற்றும் என்னையெனில், உறுதியும் தைரியமும் கொண்ட அழிவு வேலையே ஆகும். அளவுக்கு மீறின பொறுமை கொண்ட யோசனையின் மீதே நான் இந்த முடிவிற்கு வந்திருக்கிறேன்.

''மூட பக்தியையும் குருட்டு நம்பிக்கையையும் ஒழிக்க வேண்டும் என்று சொல்வது சீர்திருத்த வேலையின்பாற்பட்டதல்ல; அது மனித சமூகத்தின் நன்மைக்காக அழிக்கப்பட வேண்டிய வேலையின்பாற்பட்டதாகும். ஏனெனில், அடியோடு அழித்துத் தரைமட்டமாக்கிப் புதுப்பிக்க வேண்டி இருக்கும் வேலை சீர்திருத்த வேலை ஆகாது.''

[''ஈரோடு தந்த வள்ளல் ஈ. வே. இராமசாமிப் பெரியார்''—(பக். 16, 18-19) என்ற நூலிலிருந்து]

பெரியாரின் அழிப்பியக்கமானது சுமார் அரை நூற்றுண்டு காலம் தமிழ் நாட்டு மக்கள் தமிழ் இன உணர்ச்சி கொள்ளாதபடிச் செய்து, அவர்களைப் பிளவுபடுத்தி விட்டது. திரு. வி. க., பெரியார் ஈ. வே. ரா. வின் இயக்கம் பற்றிக் கூறுகையில், ''பிராமணர்க்குள் ஒற்றுமையையும் பிராமணரல்லாதார்க்குள் வேற்றுமையையும் வளர்ப்பதாகும்.'' (திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்; பக். 257) என்று வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

சுயமரியாதை இயக்கத்தார், அயல் நாட்டினரான இங்கர்சால், கமால் அதாதுர்க், கமால் பாஷா, கார்ல் மார்க்ஸ் ஆகியவர்களையெல்லாம் தமிழரிடையில் தேவைக்கதிகமாகவே விளம்பரப்படுத்தி, தாங்கள் நடத்திய மாநாடுகளில் அவர்களுடைய உருவப் படங்களைத் திறந்து வைத்து, தங்கள் இயக்கத்திற்கு வலுவூட்ட முயன்றனர். அதுபோல, தங்கள் முன்னோரான வள்ளலார் போன்ற தமிழினத்துச்

சீர்திருத்தக்காரர்களை அவர்கள் தமிழரிடையேபிரபலப்படுத்த வில்லை. இதற்குக் காரணம், சுயமரியாதை இயக்கமானது அழிப்பியக்கமாகவும் தமிழ் இன உணர்ச்சிக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளாததாகவும் இருந்ததுதான் என்று கூறலாம்.

தமிழினத்தில் தோன்றிய பிராமணரல்லாத சீர்திருத்த வாதிகளைத் தங்கள் வழிகாட்டிகளாகக் கொள்ள மறுத்த தவறை பிராமணர்களும் செய்தனர் என்பதை இங்கு நான் சொல்லியாக வேண்டும். ஆம்; சமய—சமூகத் துறைகளிலே பிராமணத் தமிழர்கள் வள்ளலாரைப் பெருமை படுத்தத் தவறிவிட்டனர். தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார் ஒருவரே இதற்கு விலக்கானவர்.

பிராமணரின் புறக்கணிப்பிலிருந்து பிராமணரல்லாதாருக்கெல்லாம் காப்பு தேடவந்த சுயமரியாதை இயக்கமும்— அழிப்புப் பாதையில் சென்றதன் காரணமாக—ஆக்கவழிச் சீர்திருத்த வாதியான வள்ளலாரை வழிகாட்டியாகக் கொள்ளத் தவறிவிட்டதுதான் எனக்கு வியப்பைத் தருகின்றது.

'சீர்திருத்தம்' என்பது பழைமையிலே புதுமை காண்பதாகத்தான் இருக்க முடியும். அதைத்தான் வள்ளலாரும் சுப்பிரமணிய பாரதியாரும் செய்தனர். அவர்கள், தெய்வ நம்பிக்கையின் பெயரால் வளர்க்கப்பட்டு வரும் மூட நம்பிக்கைகளை எதிர்த்தார்கள். ஆனால், தெய்வம் உண்டு என்பதனை நம்பி, அதனை வழிபட்டு உய்ய வேண்டுவதன் அவசியத்தை வற்புறுத்தினார்கள்.

பிராமணர்கள் எவற்றையெல்லாம் ஆதிமுதல் மக்களுக்குப் போதித்து வந்தார்களோ, அவற்றையெல்லாம் எதிர்ப்பதுதான் பிராமண ஆதிக்கத்திலிருந்து மக்களை விடுவிப்பதற்கு வழியாகுமென்று சுயமரியாதைக்காரர்கள் உண்மையாகவே நம்பினார்கள். அந்த வகையில்தான் அவர்கள் பிராமணரல்லாத மக்கள் தெய்வ நம்பிக்கை, தெய்வ

வழிபாடு, சாத்திர தோத்திர இலக்கியங்கள், சமய வழிப் பட்ட கலைகள், காவியங்கள் ஆகியவற்றை யெல்லாம் வெறுத்துக் கைவிட வேண்டுமென்று இடைவிடாது பிர சாரம் செய்தார்கள்.

ஆக்க வழியில்—ஆராய்ச்சி ரீதியில்—நாத்திகம் போதித்த பெரியார் பலர் உலகில் தோன்றி யிருக்கின்றனர். அவர்க ளெல்லாம் பிறப்பு காரணமாக மக்களிலே எந்த ஒரு கூட்டத் தாரையும் தங்கள் பகைவர்களாகக் கருதவில்லை. அப்படிக் கருதுவதும் மூட நம்பிக்கைகளில் ஒன்றுதானே! ஆனல் தமிழ்நாட்டில் தோன்றிய சுயமரியாதை இயக்கத்தார், பிறப்பால் பிராமணர்களாக உள்ள அனைவரையும்—அவர் களில் குருமார்களாக, புரோகிதர்களாக இல்லாதவர்களை யும்—ஒட்டு மொத்தமாக எதிர்த்தார்கள்.

அந்த வகையில், உத்தியோகத்திற்காக மட்டுமே பிரா மண சாதித் தமிழர்களுக்கு எதிராக மற்ற சாதித் தமிழர் களிடையே பிராமணரல்லாதார் என்ற 'பாசறை' உணர்ச் சியை வளர்த்த ஜஸ்டிஸ் கட்சியின் பாதையிலேயே நடை போட்டனர் சுயமரியாதை இயக்கத்தார். இதனுல், ஜஸ்டிஸ் கட்சியின் வகுப்புவாதப் பிரசாரத்தால் தமிழினத்தில் ஏற்பட்ட சிறிய வீறலானது, சுயமரியாதை இயக்கங் காரண மாகப் பெரிய பிளவாகவே மாறி விட்டது! ஆம்; தமிழ் இனம் பிளவுபடுத்தப்பட்டு விட்டது!

ஒரு இனத்தையே இருகூருக வெட்டிப் பிளக்கும் வகை யில் எந்த ஒரு நாட்டிலும் சமூக சீர்திருத்த இயக்கம் தோன்றி வளர்ந்ததாக உலக வரலாறு கூறவில்லை. பிரா மணர்களிலே சனுதனிகளை—கோயில் குருமார்களை—சமயப் புரோகிதர்களை மட்டுமே திருத்தும் சுத்தப் பகுத்தறிவு இயக்கமாக சுயமரியாதை இயக்கம் வளர்க்கப்பட்டிருப்பின் தமிழினத்தார் பிளவுபட்டிருக்க மாட்டார்கள்.

'தமிழர்' என்னும் இன உணர்வு மறையவும், ஆந்திர —கேரள—கன்னட இனத்தார் தமிழகத்திலே உத்தியோகத்

துறையிலும் அரசியல் உள்ளிட்ட பிற துறைகளிலும் ஆதிக்கம் பெறவுமான கேடுகள் ஏற்படவும் காரணமாக இருந்தது—இருப்பது, பிராமணர்—பிராமணரல்லாதார் என்ற வகுப்புப் பூசலேயாகும். இது, கசப்பான உண்மை யாகும் என்ன செய்வது? தமிழ் இனத்தைப் பிடித்துள்ள 'தமிழரல்லாதார் ஆதிக்கம்' என்ற நோய் போகவேண்டு மானுல், இந்தக் கசப்பான மருந்தையும் விழுங்கித்தானுக வேண்டும்.

ஜஸ்டிஸ் கட்சியும் சுயமரியாதை இயக்கமும் பிராமண ரல்லாதாரிடையிலேனும் ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்க முடிந்திருக்குமானுல், அது தீமையிலிருந்து கிடைத்த நன் மையாக இருந்திருக்கும். துரதிர்ஷ்டவசமாக, அந்தக் குறைந்தபட்ச நன்மைகூடத் தமிழருக்குக் கிடைக்கவில்லை. காரணம், சுயமரியாதை இயக்கத்தார், கடவுள் எதிர்ப்பு—மத எதிர்ப்பு—புராண—எதிர்ப்பு—விடுதலைப் போராட்ட எதிர்ப்பு ஆகிய எதிர்ப்புக்களில் எல்லையற்ற ஆர்வத்துடன் பிடிவாதமாக ஈடுபட்டதாகும். எந்த ஒரு சீர்திருத்த இயக்க மும் மக்களை நிரந்தரமாகப் பிளவுபடுத்தும் இயக்கமாக இருக்கக்கூடாது. இருந்தால், அதனுல் எதிர்பார்க்கப்படும் பலன் கிடைக்காது. இதற்கு சுயமரியாதை இயக்கம் மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பிராமணரல்லாதார் இயக்கத்தால் தமிழரல்லாதாரே மிகுதியும் பயனடைந்தனர் என்ருலும், தமிழரிலேயுஞ் சிலர் உத்தியோகங்களும் பதவிகளும் பெற்றனர். ஆனுல், அவர்களில் பெரும்பாலோர், பிராமணரல்லாதாரில் முன் னேறிவிட்ட வேளாளர், முதலியார் ஆகிய சாதியினராகவே இருந்தனர் என்பது அரசு ஆவணங்கள் காட்டும் உண்மை யாகும். இதனை நிரூபிப்பதற்கான—அரசு ஆவணங்களி லிருந்து சேகரிக்கப்பட்ட—சான்றுகள் என் கைவசமிருப்பி னும், தமிழினத்தின் ஒற்றுமை கருதி அவற்றை இங்கு தர நான் விரும்பவில்லை,

பிராமணரல்லாதார் இயக்கத்தின் பலன்களை தமிழரிலே முன்னணியிலுள்ள ஒன்றிரு சாதியினரே அடைந்து வருவதை அனுபவத்தால் அறிந்த பின்னர், பிராமணரல்லாதாரில் பிற்பட்ட சாதியினரிடையில் சுயசாதி மனப்பான்மை வலுப் பெறலானது. அதன் விளைவாக, நாடு விடுதலை பெறுவதற்கு முன்பே சாதிச் சங்கங்கள் பெருகின. ஆம்; ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு சங்கம் தோன்றின தமிழ்நாட்டிலே! இந்த அளவுக்குச் சாதிச் சங்கங்கள் ஆந்திர நாட்டிலே தோன்றவில்லை எனலாம். இதனாலும், தமிழினம் மேலும் மேலும் பிளவுபடலானது. இதனை என்ன விலை கொடுத்தேனும் தவிர்க்க ஜஸ்டிஸ் கட்சியார் முயன்றிருக்க வேண்டும். பிராமணரல்லாதாரையும் பிளவுபடுக்தும் வகையில் உபசாதி மனப்பான்மை அரசியலை ஊடுருவுவதைத் தவிர்க்க ஜஸ்டிஸ் கட்சியிடம் வேலைத்திட்டம் எதுவும் இருக்கவில்லை யென்பது பரிதாபகரமான உண்மையாகும்.

சென்னை மாகாண ஜஸ்டிஸ் கட்சியிலே ஆந்திரர்களே மிகுதியாக ஆதிக்கம் செலுத்தினர் என்றால், அதன் தமிழ் நாட்டுப் பிரிவிலே இருமொழியினரான நாயுடு, ரெட்டியார், செட்டியார் போன்றோர் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அதையும் மீறி சுத்தத் தமிழரிலும் சிலர் ஜஸ்டிஸ் கட்சியில் செல்வாக்குப் பெற்றிருந்தனரென்றால், அவர்கள் வேளாளர், முதலியார் போன்ற முன்னேறிய சாதியினராகத்தான் இருந்தனர். இந்த நிலை ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய ஆரம்ப காலத்தில் இருந்து பிற்காலத்தில் மறைந்துவிட்டது என்று சொல்வதற்கில்லாமல், ஜஸ்டிஸ் கட்சி மறையும் வரை மறையாமல் இருந்தது.

ஜஸ்டிஸ் கட்சியானது பிற்பட்ட சாதிகளைச் சார்ந்தவர் களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடப் போவதாகச் சொல்லிக் கொண்டுதான் தோன்றியதென்றாலும், அதற் காக அக்கட்சியிடம் வேலைத்திட்டம் எதுவும் இருக்கவில்லை. ஜஸ்டிஸ் கட்சி அமைச்சரவையில் பிற்பட்ட சாதித் தமிழரோ, தாழ்த்தப்பட்ட சாதித் தமிழரோ

இடம் பெற்றதில்லை. பொதுத் தொதிகளிலிருந்து அரிசனர் ஒருவரைத் தனது செல்வாக்கால் சட்ட மன்றத்திற்குக் கொண்டுவர ஜஸ்டிஸ் கட்சியானது முயன்றதே இல்லை. அரிசனப் பிரதிநிதிகள் ஆங்கில ஆட்சியால் நியமிக்கப்பட்டுத் தான் சட்டமன்றத்தில் இடம் பெற்றனர். வியப்பென்ன வென்றால், இந்த நிலையிலும் தாழ்த்தப்பட்டோர்தான் ஜஸ்டிஸ் கட்சியின் படை வீரர்களாகப் பயன்பட்டனர் என்பதாகும்

இதெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியிலே பிராமணரல்லாதாரில் முன்னேறிய சாதியினர் பெற்றிருந்த ஆதிக்கத்திற்குச் சான்றுகளாகும். சுருங்கச் சொல்வதானால், பிராமணர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுவந்த பிற்பட்ட தாழ்த்தப் பட்ட சாதி மக்கள் பிராமணரல்லாத முற்பட்ட சாதியின ரின் ஆதிக்கத்தின் கீழ் வந்தனர் எனலாம்.

இதன் தீய விளைவு என்னவென்றால், 'நாடார்', 'மறவர்' 'வன்னியர்' என்ற சாதி உணர்ச்சி தமிழ்நாட்டு அரசியலை ஊடுருவியதாகும். நல்ல வேளையாக, 'வேளாள ரல்லாதார்,' 'முதலியா ரல்லாதார்' என்ற எதிர்ப்பியக்கங்களாகசுயசாதிச் சங்கங்கள் இயங்கவில்லை. அப்படி அவை இயங்கி இருந்தால் தமிழினம் இதற்குள் அழிந்தே போயிருக்கும்.

சுயமரியாதை இயக்கமேனும் 'தமிழர்' என்னும் இன வுணர்ச்சியை வளர்க்க முற்பட்டிருக்குமானால், சுயசாதி உணர்ச்சி தமிழக அரசியலை ஊடுருவுவதைத் தவிர்த்திருக்க முடியும். மாறாக, தமிழ் இன உணர்ச்சியை வளர்ப்பது பிராம ணர்களுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பின் விளைவுகளிலிருந்து அவர்களைத் தப்பவிடுவதாகும் என்றுகூடச் சொல்லப்பட் டது. தமிழர் என்ற இனவுணர்ச்சியைப் பரப்ப முயல்வோர் பிராமணரின் அல்லது ஆரியரின் அடிமைகள்'' என்ற பழிச் சொல்லைக்கூட அன்று ஏற்க வேண்டியிருந்தது என்பது வரலாறு காட்டும் வாய்மையாகும்.

தமிழகத்தில் இந்து மதத்துக்குள்ளே உப மதமாக வளர்ந்துள்ளது புரோகித மதம். இது இடைக் காலத்தில் தான் ஏற்பட்டிருக்க வேண்டும். சங்க காலத்தில் பிறப்பால் அந்தணர் எனப்படுவோர் தமிழருடைய இல்லந்தோறும் ஆதிக்கம் பெற்ற புரோகிதர்களாக இருந்ததற்குச் சங்க இலக்கியக்களிலே சான்றில்லை. சங்க காலத்தை அடுத்துள்ள ஒரு கால கட்டத்திலே தமிழரிடையில் பிறப்பு, இறப்பு, திருமண நிகழ்ச்சிகளிலே சடங்குகள் நிகழ்த்தும் பழக்க வழக்கங்கள் மலிந்தன. அப்போதுகூட, ஒவ்வொரு குடும்பத்தாரும் அந்தணரையே கொண்டு சமயச் சடங்குகளை நிகழ்த்தினர் என்று சொல்வதற்கில்லை. தத்தம் சாதிகளிலேயே புரோகிதர்களைப் பெற்றிருக்கலாம். ஒன்பதாம் நூற்றூண்டிற்குப் பின்னர்தான் அந்தணப் புரோகிதர்கள் தமிழர் மீது செல்வாக்குப் பெறுகின்றனர். அவர்கள் ஆந்திரராக இருக்கின்றனர் என்பது வரலாறு காட்டும் பயங்கர உண்மையாகும்.

இன்று தமிழ் நாட்டிலுள்ள புரோகிதர்களிலே நூற்றுக்கு 98 பேர் தெலுங்கராகவே இருக்கக் காண்கிறோம். இவர்கள் முன் எப்போதோ ஒருகாலத்தில் ஆந்திர நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்த ஆந்திரப் புரோகிதர்களின் சந்ததியாராகவே இருக்க வேண்டும். ஆந்திரர்கள் அரசர்களாகவும், படை வீரர்களாகவும், வணிகர்களாகவும், தொழிலதிபர்களாகவும் தமிழ்நாட்டில் புகுந்த காலங்களிலே தான் ஆந்திர புரோகிதர்களும் புகுந்திருக்கவேண்டும். நிச்சயமாக, தமிழ் நாட்டில் சுமார் 300 ஆண்டு காலம் ஆந்திர நாயக்கர்கள் ஆட்சி நடத்தியபோதுதான் ஆந்திரப் புரோகிதர்களும் அவர்களால் இறக்குமதி செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆந்திரர் ஆட்சிக் காலத்திலே தமிழரிலேயும் அந்தணப் புரோகிதர்கள் இருந்திருக்க வேண்டும். ஆனால் 'ஆளுஞ் சாதியார்' என்கிற உயர்வு மனப்பான்மை காரணமாக, தங்கள் வீட்டுக்கு வரும் புரோகிதர் தங்கள் இனத்தவராகவே இருக்க வேண்டுமென்று ஆந்திரர் எண்ணியிருந்

தால், அது இயற்கைதானே! ஆந்திரர்களுக்காகவே தமிழகம் போந்த தெலுங்குப் புரோகிதர்கள், நாளடைவில் தமிழர் களுக்கும் குருமார்களாகியிருக்கலாம். ஆம்; தமிழகத்திலே நிலவிய புரோகிதர் பற்றுக்குறை ஆந்திரப் புரோகிதர் வருகையால் நீங்கியிருக்கலாம்.

பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்திலே சென்னை நகரத்தில் குடியேறிய ஆரிய வைசியர் எனப்படும் ஆந்திர வணிகர் தங்கள் தேவையை முன்னிட்டு ஆந்திரப் புரோகிதர்களைத் தங்கள் தாயகத்திலிருந்து தருவித்தார்க ளென்றும் ஒரு கருத்து நிலவுகிறது. ஆந்திரப் புரோகிதர் களேயன்றி, ஆந்திரத் தோட்டிகளையும் தருவித்தனர் என்றும் சொல்லப்படுகிறது. இன்றும் சென்னை, நகரிலுள்ள குடிசைப் பிரதேசங்களிலே—அதாவது, சேரிகளிலே பல ஆந்திரத் தோட்டியர் முகாம்களாக இருக்கக் காண்கிறோம்.

சென்னையும் அதன் சுற்றுப்புறமும் தெலுங்கு நாயக்கர் ஆட்சிக் குட்பட்டிருந்த காலத்திலேயும் தோட்டிகள், சக்கிலி யர், உப்பரவர், ஒட்டர் போன்ற தெலுங்கு சாதியர் தமிழ் நாட்டில்—குறிப்பாக, சென்னையில் அணி அணியாகக் குடி யேறியிருக்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் சென்னை மாகாண அரசிலே ஆந்திராவும் இணைக்கப் பட்டு, அதன் தலைநகரகவும் சென்னை இருந்ததால், சென்னை யிலும் சுற்றுப்புறங்களிலும் ஆந்திரர் குடியேற்றம் அதி கரித்து வந்ததெனலாம்.

தமிழ் நாட்டில் புரோகிதர் எதிர்ப்பில் ஈடுபட்டோர் புரோகிதர்களில் பெரும்பாலோர் ஆந்திரராக—தமிழகத் திற்கு அன்னியராக இருக்கின்றனர் என்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டத் தவறி விட்டனர். ஒருகால், அவர்க ளுடைய ஆராய்ச்சியில் அது அகப்படாமலிருந்திருக்கலாம். ஆம்; அவர்கள் தமிழருக்கு அன்னியராகக் காட்ட விரும்பி யது தமிழ் நாட்டு அந்தணர்களைத்தானே!

பெரியார் அழிப்பு இயக்கந்தான் நடத்தினுரென்ருலும் அதனுலும் ஆக்க ரீதியான சீர்திருத்தங்கள் சொற்ப அளவி லேனும் ஏற்பட்டன என்பது வரலாறு காட்டும் உண்மை யாகும். குறைபாடு என்னவென்ருல், சுயமரியாதை இயக்கம் தமிழ் இன உணர்வை வளர்க்கத் தவறிவிட்டது என்பது தான். மற்றபடி, அந்த இயக்கத்தினுல் தமிழர் சமுதாயத் தில் ஏற்பட்ட முற்போக்கான மாறுதல்களைப் பாராட்ட நான் என்றுமே தவறியதில்லை.

எந்தக் காலத்திலுமே—எந்த நாட்டிலுமே சீர்திருத்த இயக்கம் எதுவுமே மக்களால் எதிர்ப்பின்றி ஏற்கப்பட்ட தில்லை. வள்ளலாரின்சுத்தசன்மார்க்கஇயக்கத்திற்குஏற்பட்ட எதிர்ப்பே இதற்குச் சான்ருகும். அந்தண சீர்திருத்த வாதி களான. இராமானுஜர், கோபால கிருஷ்ண பாரதியார், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோருக்கும் அந்தணர்களே எதிர்ப்பு காட்டினரல்லவா!

1939க்கும் 1944க்கும் இடைப்பட்ட ஐந்தாண்டுக் காலத்தில் பெரியாரின் எதிப்பு இயக்கத்திலே ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. அதற்குத் தூண்டுதலாக அமைந்தது, ராஜாஜியின் தலைமையில் இயங்கிய காங்கிரஸ் ஆட்சியானது நடுத்தரப் பள்ளிகளில் முதல் மூன்று வகுப்புக்களில் இந்தி மொழியைக் கட்டாய பாடமாகத் திணித்ததுதான்.

கட்டாய இந்தியை எதிர்த்து முதலில் மறைமலையடிகள், நாவலர் சோமசுந்தர பாரதியார் தலைமையில் கிளர்ச்சி தோன்றியது. எதிர்ப்பியக்கம் நடத்துவதில் வல்லவரான ஈ. வே. ரா.வின் தலைமை அதற்குத் தேவைப்பட்டது. அவரும் அதை ஏற்றுக் கொண்டார். தமிழ்ப் புலவர்கள் மட்டுமே நடத்திய தூயமொழிக் கிளர்ச்சியானது, பெரியார் தலைமை காரணமாக, அரசியல் வண்ணம் பெற்றது.

'தமிழ்'—'தமிழர்'—'தமிழ் நாடு' என்ற சொற்கள் முன் னணிக்கு வந்தன. "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற உரிமைக் குரலும் பிறந்தது. வில், புலி, மீன் சின்னங்கள்

பொறித்த தமிழ்க் கொடி இந்தி எதிர்ப்பு வீரர்களின் கைகளில் காட்சியளித்தது. சுயமரியாதைக்காரர்களெல்லாம் 'தமிழ் வாழ்க' என்று வாய் மணக்க வாழ்த்தினர்.

இந்த மாறுதல்கள் தமிழ் இனப் பற்றுடையோர்க்கு மிக்க மகிழ்ச்சியைத் தந்தன. தமிழர் புத்துயிர் பெற்று எழுச்சியுற்றுவிட்டனர் என்று நம்பவேண்டி யிருந்தது. அப்போதுதான் 'தமிழர் தலைவர்' என்ற பெயரில் ஈ. வே.ரா.வின் வரலாற்றைத் திரு. சாமி சிதம்பரனுர் எழுதி வெளியிட்டார்.

அந்த நேரத்தில் "இந்தியா இந்தியருக்கே" என்பது காங்கிரஸ் தமிழர்களின் விடுதலைக் கீதமாக இருந்தது. ஆம்; அதன் பொருள் 'இந்தியா அன்னியரான வெள்ளையருக்கல்ல' என்பதாகத்தான் இருந்தது. இந்தி எதிர்ப்புக் களத்திலே பிறந்த "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற உரிமைக் குரலின் பொருள் "தமிழ்நாடு வெள்ளையருக்கல்ல" என்பதாக இருக்கவில்லை. "தமிழ் நாடு பிராமணருக்கல்ல, வடவருக்கல்ல" என்பதாகத்தான் விளக்கப்பட்டது. வழக்கம்போல ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஆதரிக்கும்—இந்திய விடுதலையை எதிர்க்கும்நடவடிக்கைகளும் அதனேடு கலந்தன.

1944ல் சேலத்தில் கூடிய தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தின் மாநில மாநாட்டிலே "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற புதுக்குரல் பிறந்தது. ஆம்; கோஷம் மாறியது. திரும்பவும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது. இது, திட்டவட்டமாக தமிழ் இனவுணர்ச்சிக்கு எதிராகத்தான் 1966 வரை இருந்தது. சேலம் மாநாட்டிலே, சுயமரியாதை இயக்கமும் திராவிடர் இயக்கத்திலே இரண்டறக் கலந்துவிட்டது. ஜஸ்டிஸ் கட்சியின் பெயர் "திராவிடர் கழகம்" எனவும் மாற்றப்பட்டது. 1939ல் பிறந்த தமிழர்இயக்கம் என்ற ஒளி 1944ல் மறைந்து விட்டது.

வழக்கம்போல இந்தத் திராவிடர் கழகமும் ஆந்திர—கேரள—கன்னட நாடுகளில் வரவேற்கப்படவில்லை. அந்தப் பிரதேசங்களில் வாழும் மொழிவழிச் சிறுபான்மையினரான

தமிழர்கள்—அவர்களிலேயும் இளைஞர்கள் இங்குமங்குமாக சில ஊர்களில் திராவிடர் கழகக்கிளைகள் அமைத்திருக்கலாம். அந்தக் கிளைகள் அங்குள்ள தமிழரல்லாதார் ஆதரவைப் பெறவில்லை. ஆம்; தங்களைத் திராவிடர்களாக மாற்றிக் கொள்ள—அந்தப் பெயரில் தமிழரோடு ஓரினத்தவராகி உறவுகொள்ள — ஆந்திர, கேரள, கன்னட மக்களில் ஒருவர் கூட முன்வரவில்லை.

இந்த அளவில் சுயமரியாதைப் பாசறையி லிருந்து வெளியேறி தேசியப் பாசறையுள் புகுவோம்.

தேசியப் பாசறையிலே...

1946 ஆம் ஆண்டில் இரண்டாவது உலகப் பெரும் போர் முடிந்தது. அதன் விளைவாக, பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கு விடுதலை வழங்க முன்வந்தது. ஆகஸ்டுக் கிளர்ச்சி காரண மாக சிறையிலிருந்த காங்கிரஸ் பெருந் தலைவர்களுட்பட விடுதலை வீரர்கள் அனைவரையும் ஏக காலத்தில் நிபந்தனை யின்றி விடுதலை செய்தது.

சுதந்தரம் நெருங்கிக் கொண்டிருந்ததால், அரசைக் கைப்பற்றுவதிலே சமுதாயத்தில் முன்னணியிலிருந்த ஒன்றிரு சாதிகளிடையில் — அவர்களிலும், படித்தவர்களிடையில் போட்டி ஏற்பட்டது. இதிலிருந்த வகுப்புவாத உணர்வு வெளிப்படையாகத் தெரியவில்லை. 'தேச பக்தி' என்ற போர்வை போர்த்துக் கொண்டிருந்தது.

பாகிஸ்தான் கோரிக்கையை காங்கிரஸ் ஏற்று, அதன் விளைவாக முஸ்லிம் லீகும் காங்கிரசும் ஒன்றுபட்டு விடுதலைக் கோரிக்கையை வற்புறுத்த வேண்டுமென்று பிரசாரம் செய்த தன் காரணமாக 1942ல் ராஜாஜி காங்கிரசிலிருந்து வெளி யேற நேர்ந்தது. தாம் காங்கிரசிலிருந்து வெளியேறிய போது, தம்மைப் பின்பற்றுவோர் எல்லோரும் வெளியேறி விடவேண்டுமென்று அவர் அறிக்கை விடுத்தார். அதற்கிணங்க, காங்கிரசிலே பிரபலஸ்தர்களாக இருந்த சிலர் வெளியேறினர். அவர்களில் பெரும் பாலோர் பிராமணர்கள் என்பது மறுக்க முடியாத

உண்மையாகும். இதனால், நீண்ட நெடுங்காலமாக தமிழ் நாடு காங்கிரசில் பிராமணர்களுக்கிருந்து வந்த செல்வாக்கு மறைந்தது. காங்கிரசிலிருந்த பிராமணப் பிரமுகர்களிலே பெரும்பாலோர்—ஆம்; எல்லோருமல்ல ஸ்தாபனத்திற்குக் காட்டவேண்டிய விசுவாசத்தை விடவும் அதிகமாக தங்கள் தலைவரிடம் விசுவாச முடையவர்களாக இருந்தனர். அப் போது சென்னை மாகாண சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராஜாஜி இருந்தாரென்றாலும், அவரது அறிக் கைப்படி காங்கிரசி லிருந்து வெளியேற ஆந்திர, கேரள, கன்னட காங்கிரஸ்காரர்களிலே ஒருவர்கூட முன்வரவில்லை என்பது இங்கு நினைவில் கொள்ளத்தக்கதாகும். இதற்கு ஆந்திர பிராமணரும் விலக்கல்ல. தமிழரல்லாத காங்கிரஸ் காரர்கள் ராஜாஜியை எப்போதுமே தமிழராகத்தான் கருதி வந்தார்கள்.

தலைவர் ராஜாஜி காங்கிரசிலிருந்து வெளியேறியபோது அதற்காக ஆந்திரர்கள் உள்ளூர மகிழ்ச்சியடைந்தார்கள். தமிழரிலே அகில இந்திய செல்வாக்கு பெற்றிருந்த ஒரே தலைவரான ராஜாஜி காங்கிரசிலிருந்து வெளியேறியதால், சென்னை மாகாண காங்கிரஸ் அரசியலிலே தங்கள் செல் வாக்கு வலுக்கும் என்று ஆந்திரர்கள் நம்பினார்கள்.

ஜஸ்டிஸ் கட்சியானது சென்னை மாகாண அரசியலில் செல்வாக்கு பெற்றிருந்தபோது அக்கட்சியிலே ஆந்திரரே ஆதிக்கம் செலுத்தியதுபோல, அக்கட்சியின் பெயரால் அடுத்தடுத்து வந்த ஐந்து முதல் அமைச்சர்களும் ஆந்திரர் களாகவே இருந்தாற்போல, ராஜாஜி இல்லாத காங்கிரசின் பெயரால் தாங்கள் முதலமைச்சர்களாக வர முடியுமென்று ஆந்திரத் தலைவர்கள் நம்பினார்கள்.

உலகப் போர் முடிந்து, காங்கிரஸ் மீதிருந்த தடை நீக்கப்பட்டு, சிறைகளிலிருந்து தலைவர்கள் விடுதலை பெற்ற நேரத்திலே தலைவர் ராஜாஜி திரும்பவும் காங்கிரசில் சேர்ந் தார். அவரது வருகை காங்கிரஸ்காரர்களிலே ஒரு சாராரால் எதிர்க்கப்பட்டது

இதனால், சுதந்திரம் நெருங்கிக் கொண்டிருந்த தருணத்திலே தமிழ் நாட்டுக் காங்கிரசானது இரண்டாகப் பிளவுபட்டது. தொடக்கத்தில் திரு. காமராசர் பிளவை விரும்பாதவராகத்தான் இருந்தா ரென்றாலும், சூழ்நிலை யானது பிளவுக்கு அவரையும் கர்த்தாவாக்கி விட்டது. தமிழ் நாடு காங்கிரசில் ராஜாஜி தலைமை ஏற்பதை ஆதரித்து ஒரு கோஷ்டியும், எதிர்த்து ஒரு கோஷ்டியுமாக இருவேறு கோஷ்டிகள் தோன்றின. நான் ராஜாஜி கோஷ்டியிலிருந் தேன். எதிர்த்த கோஷ்டிக்குத் திரு. காமராசர் தலைவராகி விட்டார். இந்தக் கோஷ்டிப் பூசலுக்கு வெளிப்படையாகச் சொல்லப்பட்ட காரணம் வேறு; ஆனால் வகுப்பவாதமும் அதனுடன் சேர்ந்து கொண்டது.

1916ல் மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தம் வர விருந்தபோது தமிழ் நாட்டில் உருவான "பிராமணர்—பிரா மணரல்லார்" என்ற வகுப்புப் பூசலுக்குப் பிரிட்டிஷாரின் தூண்டுதலும் காரணமாக இருந்தது. ஆம்; தாங்கள் வழங் கும் சீர்திருத்தத்தை சுயராஜ்யக் (காங்கிரஸ்) கட்சி கைப் பற்றி விடுவதைத் தடுக்கும் பொருட்டு, பிராமணர்——பிராமணரல்லாதார் பூசலுக்கு வித்தூன்றினர் பிரிட்டிஷார். 1946ல், இந்தியருக்கு முழு விடுதலை வழங்கி விட்டு நாட்டை விட்டே வெளியேறிவிட பிரிட்டிஷார் முடி வெடுத்திருந்ததால், தென்னாட்டுக் காங்கிரசுக்குள் வகுப்பு வாதப் பூசலைத் தோற்றுவிக்க முயற்சிக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. அவர்கள் பிரித் தாளும் தந்திரம் வடக்கே மட்டும் வேலை செய்தது. அதுவும், நாட்டைப் பிளப்பதிலே!

காங்கிரஸ் தொடங்கிய ஆகஸ்டுக் கிளர்ச்சியை ராஜாஜி கடுமையாக எதிர்த்தார். அதனால், காங்கிரஸ்காரர்கள் பார்வையிலே அன்று அவர் தேசத் துரோகியாகக் காட்சி யளித்தார். அதனால், அவரை எதிர்ப்பதற்கு அவருடைய சாதியை ஒரு காரணமாகச் சொல்ல வேண்டிய அவசியம்

பிராமணரல்லாத உணர்வுடைய காங்கிரஸ்காரர்களுக்கு ஏற்படவில்லை. ''ஆகஸ்டுத் துரோகி'' என்ற ஒரு காரணமே வலுவானதாகவும் போதுமானதாகவும் இருந்தது.

தமிழ் நாடு காங்கிரசில் ஏற்பட்ட குழுச் சண்டையால் ஆந்திர காங்கிரஸ் பாதிக்கப்படவில்லை. குறிப்பாக, ராஜாஜிக்கு ஆதரவளிக்க ஆந்திர காங்கிரஸ்காரர்களிலே ஒருவரும் முன்வரவில்லை. அவர்கள் ஒருமைப்பாட்டுடனிருந்து தமிழ் நாடு காங்கிரசார் பிளவுபட்டதனுல் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய லாபத்தை அனுபவிக்கக் காலத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

காந்தியடிகளும் காங்கிரஸ் மேலிடத்தாரும் ராஜாஜியின் தலைமைக்கு முழு அளவு ஆதரவு காட்டினரென்ருலும், பயன் கிடைக்கவில்லை. இந்த நிலையில், 1946ல் சென்னை மாகாண சட்ட மன்றத்திற்குப் பொதுத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தலை யொட்டி தமிழ் நாட்டில் ராஜாஜி குழுவிற்கும் காமராசர் குழுவிற்குமிடையில் காங்கிரஸ் மேலிடத்தாரின் தூண்டுதலால் ஒரு சமரசம் ஏற்பட்டது.

பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு மகத்தான வெற்றி கிடைத்தது. தமிழ் நாட்டில் ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையால் தேர்தல் களத்திலே காங்கிரசின் வெற்றி வாய்ப்பு பாதிக்கப்படவில்லை யென்பது, தமிழினத்தாரின் தேசபக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இந்த வெற்றிக்குப் பின் கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதிலே சென்னை மாகாண சட்ட மன்ற காங்கிரஸ் கட்சிக்குள் மீண்டும் பூசல் ஏற்பட்டது. காங்கிரஸ் மேலிடம் கட்சித் தலைவராக ராஜாஜியைத் தேர்ந்தெடுக்குமாறு 'ஆணை' அனுப்பியது. அதனை ஏற்க மறுத்து விட்டது சட்ட மன்ற காங்கிரஸ் கட்சி.

அதன்பின், திரு. சி. என். முத்துரங்க முதலியாரும் திரு. டி. பிரகாசம் பந்துலுவும் போட்டியிட்டனர். முதலியா

ருக்குத் தமிழ் நாடு காங்கிரசும், பந்துலுவுக்கு ஆந்திர காங்கிரசும் பக்க பலமாக நின்றன. ஆனால், தமிழரான முதலியார் தோல்வியைத் தழுவினர். ஆந்திரரான பிரகாசம் வெற்றி பெற்றார்.

ஆம்; தமிழ் நாட்டு பிராமணப் பெரியவர் ஒருவரை வீழ்த்துவதிலே வெற்றி கண்ட தமிழ் நாட்டுக் காங்கிரஸ் காரர்களை, தமிழரல்லாத பிராமணத் தலைவரை ஏற்குமாறு காலம் தண்டித்து விட்டது! பிராமணரான பிரகாசம் முதல் வரானதற்காக ஆந்திர நாட்டு பிராமணரல்லாத காங்கிரஸ் காரர்களிலே ஒருவர் கூட எதிர்ப்புக் காட்டவில்லை. ஒரு மனதுடன் அவரது தலைமையை ஏற்றனர். காரணம், அவர் களுக்கிருந்த ஆந்திர இனவுணர்ச்சியானது பிராமணரல்லா தார் என்ற வகுப்புணர்ச்சியை வென்று விட்டதுதான்!

சென்னை மாகாண சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியிலே ஆந்திர மாநிலத்தாரை விடவும் தமிழ் மாநிலத்தவரே அதிக அளவில் இருந்தனர். ஆனால், தமிழ் நாட்டு உறுப்பினரிலே இருமொழியாளர்—குறிப்பாக, தெலுங்கர் நான்கில் ஒரு பங்கினராக இருந்தனர். அவர்களில் பெரும்பாலோர் 'இனம் இனத்துடன் சேரும்' என்பது போல, ஆந்திரரான பிரகாசத்திற்கு வாக்களித்தனர். வாக்கெடுப்பு இரகசிய முறையில் நடைபெற்றதால் இந்தத் துரோகம் சாத்திய மானது. தமிழ் நாட்டார் வகுப்பு ரீதியில் பிளவுபட்ட ஒவ்வொரு சமயத்திலும் ஆந்திரரே பயனடைந்தனர். இது, பழைய சென்னை மாகாணத்தின் அரசியல் வரலாறு காட்டும் உண்மையாகும்.

சென்னை மாகாணத்தில் திரு. டி. பிரகாசம் தலைமையில் காங்கிரஸ் அமைச்சரவை தோன்றியதையடுத்து, "பிரிட்டிஷ் மந்திரி சபைத் திட்டம்" என்ற பெயரில் இந்தியாவுக்கு சுதந் திரம் வழங்கும் அறிக்கை வெளியானது. அதனையொட்டி, இந்திய அரசியல் நிர்ணய மன்றத்திற்கு சென்னை மாகாணத்

தின் சார்பில் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தேர்வு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையில் நடைபெற்றது.

ஆம்; தமிழர், ஆந்திரர், கேரளர், கன்னடர் என்ற இன அடிப்படையில் நடத்தப் பெறவில்லை. இந்து, முஸ்லிம், கிறித்துவ, தாழ்த்தப்பட்ட வகுப்புகளின் எம். எல். ஏக்கள் தனித் தனியே வாக்களித்து தத்தம் வகுப்புக்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வழி செய்யப்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸ் இதனை முணுமுணுப்பின்றி ஏற்றுக் கொண்டது.

சென்னை மாகாணத்தில் நான்கு எம். எல். ஏ. க்களுக்கு ஒருவர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தமிழ் நாட்டு (தாழ்த்தப்பட்டவர், கிறித்துவர், இஸ்லாமியர் அல்லாத) இந்து எம். எல். ஏ.க்கள் அ. நி. மன்றத்திற்கு ஆறு பிராமணருள்பட மொத்தம் ‿0 பேரைத் தேர்ந்தெடுத்தனர். அவர்களில், தெலுங்கர் மூவர்; மலையாளி இருவர்; கன்னடர் ஒருவர்; வடஇந்தியர் ஒருவர்; தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட தமிழர் பதின்மூன்று பேர். ஆந்திர எம். எல். ஏக்கள் ஆந்திரப் பிரதேசத்தின் பிரதிநிதிகளாக ஆந்திரரையே தேர்ந்தெடுத்தனர். அவர்கள் இனவுணர்ச்சிவுடையவர்கள் அல்லவா!

தமிழர் பார்வையிலே தமிழ் நாடு காஸ்மாபாலிடன் மாகாணமாகப் பட்டது போலும்! திராவிடர் கழக ஏடுகள் தமிழ் நாட்டின் சார்பில் பிராமணத் தமிழர் அறுவர் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் கண்டித்துத் தலையங்கங்கள் எழுதின. ஆந்திரப் பிரதேசத்தார் தங்கள் பங்குக்கு ஆந்திரரையே தேர்ந்தெடுக்க, தமிழ் நாட்டார் மட்டும் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத எழுவரைத் தேர்ந்தெடுத்தது பற்றி திராவிடர் கழகம் மூச்சுவிடவில்லை. ஏனெனில், அவர்களெல்லாம் திராவிடர் என்ற உணர்வுதான்!

காங்கிரஸ் பாசறையிலே இவ்வாறெல்லாம் நிகழ்ந்து கொண்டிருந்த நேரத்திலே, திராவிடர் கழகத்தார் தமிழினத்

தாரைத் 'திராவிடர்' என்றும், 'ஆரியர்' என்றும் பிரிவினை செய்து எழுதியும் பேசியும் பிரசாரம் செய்து வந்தனர்.

இந்த நேரத்திலே ஆந்திரர் சென்னையைத் தலைநகராக வும் வட வேங்கடத்தைத் தெற்கெல்லையாகவும் கொண்ட விசால ஆந்திரம் கோரினர். கேரளர், கோவை—நெல்லை—நீலகிரி மாவட்டங்களோடு தெற்கே கன்னியா குமரியையும் சேர்த்து வடக்கே காசர்கோடையும் எல்லைகளாகக் கொண்ட ஐக்கிய கேரளம் கோரி வந்தனர். ஆந்திரரும் கேரளரும் தங் களுக்குள் எத்தகைய வேற்றுமையுமின்றி ஒருமனப்பட்டு ஒரே குரலில் விசாலாந்திரமும் ஐக்கிய கேரளமும் கோரினர் எபன்தனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

அவர்களோடு போட்டியிட்டு, சென்னையைத் தலை நகராகவும், வடவேங்கடத்தை வடக்கெல்லையாகவும், தென்குமரியைத் தெற்கெல்லையாகவும் கொண்ட "தமிழ் மாநிலம்" கோருவதற்கு தமிழ் நாட்டில் ஆளில்லாத நிலை இருந்தது. இந்த நிலை நீடித்திருக்குமானால், ஆந்திரரும் கேரளரும் விட்டுவிட்டுப் போன நிலப்பரப்புதான் தமிழ் நாடு என்று ஆகியிருக்கும். அதிலே சென்னை நகரமும் குமரிமாவட்டமும் தணிகைவட்டமும் இருந்திருக்கா.

இந்த நிலையில்தான் நான் தமிழர் சார்பில் தமிழரசுக் கழகத்தைத் தோற்றுவிக்க நான் முன்வந்தேன். சென்னை மாகாணம் மொழிவழியில் பிரிக்கப்பட்டாலன்றி, ஆந்திரர் ஆதிக்கத்திலிருந்து தமிழரைக் காப்பது இயலாத காரிய மென்று நான் நினைத்தேன். தமிழ் மாகாணம் அமைந்து, தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற்றா லன்றி, தமிழரிடையே இனவுணர்ச்சி ஏற்படுவது இயலாத காரியமென்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. இதன் விளைவு தான் தமிழரசுக் கழகத்தின் தோற்றம்.

ஆந்திரப் பிரிவினை

ஆந்திரர்கள் தமிழகத்தில் எல்லாத்துறைகளிலும் ஆதிக்கஞ் செலுத்தி வந்ததனைச் சான்றுகளோடு நான் இதுவரை எடுத்துக் காட்டினேன் என்றாலும், அவர்கள் தமிழினத்தாரிடம் பகையுணர்வு கொண்டவர்களாக இருந்தனர் என்றோ, தமிழகத்தின் மீது ஆதிக்கஞ் செலுத்த வேண்டுமென்ற உள்நோக்கம் அவர்களுக்கு இருந்ததென்றோ சொல்வதற்கில்லை. அன்றைய சென்னை மாகாணம் தமிழர்—ஆந்திரர் கேரளர்—கன்னடர் கலந்த கூட்டுக் குடும்பமாக இருந்ததால் அந்தக் கூட்டுக் குடும்பத்திலே ஆந்திரரோ,கேரள கன்னட இனத்தவரோ தங்கள் பங்கை அடைவதற்கு உரிமையுடையவராக இருந்தனர் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது.

சான்றாக, சென்னை ராஜ்ய முதலமைச்சர் பதவியை அடைவதற்கு தமிழரைப் போலவே, மக்கள் தொகையில் தமிழருக்கு அடுத்த நிலையில் இருந்த ஆந்திரருக்கும் உரிமையிருந்தது. ஆகவே, தமிழரும் ஆந்திரரும் மாறி மாறி முதல்வர் பதவிக்கு வந்திருந்தால், அதுபற்றி யாரும் குறைபட்டுக் கொள்வதற்கில்லை.

மாறாக, 1920 தொடங்கி 1952 வரை—இடையில் மூன்றாண்டுகள் தவிர— 33 ஆண்டு காலம் தெலுங்கைத் தாய் மொழியாகக் கொண்டவர்களே சென்னை ராஜ்யத்தின் முதல்வர் பதவியை மாறி மாறி அடைந்து வந்தார்கள். இன்னொரு வகையில் சொல்வதானால், 1920 முதல் 1952 வரை முதலமைச்சர்களாக வந்த

10 பேரில் 8 பேர் தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாத தெலுங்கர்களாக இருந்தார்கள். இதைத்தான் தமிழினத்தார் மீது ஆந்திரர் பெற்றிருந்த ஆதிக்கம் என்றுசொல்ல வேண்டியிருக்கிறது. இதற்குக் காரணம், தமிழர் இனவுணர்ச்சி அற்றவர்களாக, பிராமணர் — பிராமணர் அல்லாதார் என்ற சாதிப் பூசலால் பிளவுண்டவர்களாக இருந்ததுதான். ஆந்திரரைப் போன்று தமிழரும் இனவுணர்ச்சியுடையவர்களாக இருந்திருப்பின், உத்தியோகத்துறையிலோ, பார்லிமெண்டரித் துறையிலோ அவர்களுக்குரிய பங்கை அவர்கள் அடைத்திருக்க முடியும். தமிழர் இனவுணர்ச்சியற்றவர்களாக இருந்ததால்தான் ஆந்திரர் எல்லாத் துறைகளிலும் தமிழர் மீது ஆதிக்கஞ் செலுத்த முடிந்தது. இதற்காக அவர்களைக் குறைகூற தமிழருக்கு உரிமை ஏது?

இந்த நிலையிலும், ஆந்திர தேசிய வாதிகள் தமிழ் நாட்டிலிருந்து ஆந்திரத்தைப் பிரித்துக்கொள்ளவே விரும்பினர். அதற்காக, தொடர்ந்து கிளர்ச்சியும் செய்து வந்தனர் என்பதனை நாம் மறந்து விடுவதற்கில்லை. இனவுணர்ச்சியற்ற தமிழர் மீது தொடர்ந்து ஆதிக்கஞ் செலுத்தும் உள்நோக்கம் ஆந்திரருக்கு இருந்திருப்பின் அவர்கள் தனி ஆந்திர மாநிலம் கோரிக் கிளர்ச்சி நடத்தியிருக்க மாட்டார்கள். சென்னை ராஜ்யம் நீடிப்பதையே அவர்கள் விரும்பியிருப்பார்கள். மாறாக, தமிழ் நாட்டுத் தேசியவாதிகள்தான் மொழிவழி மாகாணப் பிரிவினையைக் கடைசிவரை முழு மூச்சுடன் எதிர்த்து வந்தனர். ஆம்: முதல்வர் பதவியைத் தொடர்ந்து தெலுங்கரே அடைந்து வருவதைக் கண்ணாரக் கண்டும், ஆங்கிலேயரிடமிருந்து விடுபட்டு இந்திய மயமாக்கப்பட்டு வரும் உயர் உத்தியோகங்களில் பெரும்பாலானவற்றை ஆந்திரரே அடைந்து வருவதை அனுபவ ரீதியில் அறிந்திருந்தும், தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தனித் தமிழ் மாநிலம் கேட்கவில்லை என்பதோடு, ஆந்திர மாநிலக் கோரிக்கையைப் பிடிவாதமாக எதிர்த்தும் வந்தது என்பது வரலாறு காட்டும் உண்மையாகும்.

சென்னை ராஜ்ய சட்ட மன்றத்தில் இருவேறு சந்தர்ப்பங்களில் ஆந்திரர் சார்பில் கொண்டு வரப்பட்ட ஆந்திர மாநிலப் பிரிவினைத் தீர்மானத்திற்கு ஆதரவாகத் தமிழ் நாட்டு உறுப்பினர்களும் வாக்களித்தனர் என்பது உண்மை தான். ஆயினும், அத் தீர்மானம் நடைமுறைக்கு வராத படி தமிழ்த் தலைவர்கள் உள்ளூரச் செயல்பட்டு வந்தனர் என்று ஆந்திரர் குற்றஞ்சாட்டினர் என்பதையும் நான் இங்கு நினைப்பூட்ட வேண்டும்.

முதலமைச்சர் பதவியிலிருந்த ராஜாஜி, ஆந்திரப் பிரதேசமான ஐதராபாத்தில் 1953-ல் நடந்த அகில இந்திய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திலே, ‘மொழிவாரி மாநிலக் கோரிக்கையானது காட்டு மிராண்டிகளின் கொள்கை’’ என்று இழித்துப் பேசினர்.

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் பதவியிலிருந்த திரு. காமராசர், ‘‘மொழிவாரி மாகாணக் கோரிக்கைக்கு நான் முதல் நெம்பர் விரோதி’’ என்று அடிக்கடி கூறி வந்தார். 1947 டிசம்பரில் கோவையிலும், 1951-ல் சென்னை தேனும்பேட்டையிலும் கூடிய தமிழ் மாகாண அரசியல் (காங்கிரஸ்) மாநாடுகளில் மொழிவாரி மாகாணக் கோரிக்கையை வற்புறுத்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்குக் காரணம், எனது வற்புறுத்தல்தான். அந்த இரு மாநாடுகளிலும் தீர்மானத்தை முன்மொழிந்தவனே நான்தான். அப்போதும் தமிழ் நாடு காங்கிரஸ் ‘பெருந்தலைவர்’ எனப்படுவோர் தீர்மானத்தை விரும்பாதவர்களாகவே இருந்தனர்.

1953-ல் ஆந்திர மாகாணப் பிரிவினை ஏற்பட்டது. அப்போது சென்னை ராஜ்ய முதல்வராக இருந்த ராஜாஜியின் விருப்பத்திற்கு விரோதமாகத்தான். 1956-ல் மலபார், தென் கன்னட மாவட்டங்கள் எஞ்சிய சென்னை ராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டு, ‘‘தமிழ் ராஜ்யம்’’ அமைந்ததும், அப்போது முதல்வர் பதவியிலிருந்த திரு. காமராசர் விருப்பத்தின் பேரில் அல்ல.

தமிழ் நாட்டாரால் நடத்தப்பட்டு வரும் ''இந்து'', ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'', ''தினமணி'' ஆகிய ஆங்கில—தமிழ் நாளேடுகளும் ஆந்திரப் பிரிவினைக்கு எதிராகப்பொது மக்கள் கருத்தை உருவாக்க தொடர்ந்து முயன்று வந்தன. மொழிவழி மாநிலங் கோருவோரின் முயற்சிகளுக்கு இருட்டடிப்பு செய்து வந்தன. அவர்களை, ''குறுகிய புத்தியாளர்கள்'' என்றும் குறை கூறி வந்தன.

இதற்குக் காரணம், பழைய சென்னை ராஜ்யத்தில்—ஆந்திரரும், கேரளரும் ஆதிக்கம் செலுத்தி வந்த நிலையிலும்—தமிழ் பேசுவோரில் ஒன்றிரு உயர்சாதியினரே உத்தியோகத்துறைகளில் செல்வாக்கு பெற்றிருந்ததுதான். தமிழ் மாநிலம் தனியரசுடையதாகி, தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற்று-ஆங்கில ஆதிக்கம் அஸ்தமித்து-விடுமானால், தமிழ்நாட்டில் தங்கள் சுயசாதி ஆதிக்கமும் அஸ்மித்துவிடக்கூடுமென்று முன்னேறிவிட்ட சாதிகளைச் சார்ந்த பரங்கிமொழி பக்தர்கள் அஞ்சினர். அதன் விளைவுதான் மொழிவழி மாநிலக் கோரிக்கைக்கு அவர்கள் காட்டிய எதிர்ப்பு!

தமிழரின் இந்த நிலைக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது ஆந்திரர் நிலை. ஆந்திரர் முன்னேற்றமானது, அவர்களில் சிலர் உயர் உத்தியோகங்களைப் பெறுவதிலோ, முதலமைச்சர் பதவியை அடுத்தடுத்துப் பெற்று வருவதிலோ இருப்பதாக அவர்கள் கருதவில்லை. கருதியிருந்தால், ஆந்திர மாநிலப் பிரிவினையை—1917 தொடங்கி 1953 வரை—தொடர்ந்து வற்புறுத்தி வந்திருக்க மாட்டார்கள். ஆந்திர மாநிலம் கோரிப் பொட்டி சீராமுலு பட்டினி கிடந்து செத்திருக்க மாட்டார். அவர் செத்தபேரது, ஆந்திரமெங்கும் புரட்சி தோன்றியதே, அது நடந்திருக்காது. ஆனால், ஆந்திரர்—பிராமணரும் பிராமணரல்லாதாரும்—லாப நட்ட நோக்கமின்றி, ஆந்திர இனத்தின் உரிமை வாழ்வில் அக்கறை காட்டினர். ஆந்திரம் தனியரசு மாநிலமானால், அதிலே, ஆட்சி மொழியாக—நீதிமன்ற மொழியாக—பல்கலைக் கழகப்

பாட மொழியாக தெலுங்கு வருவதற்கு வாய்ப்பு கிடைக்கு மென்று நம்பினர். தெலுங்கு மொழியை ஆங்கிலத்தைப் போன்று விஞ்ஞான மொழியாக வளர்க்க வழி செய்ய முடியுமென்று கருதினர்.

பொதுவாக, பிற இனத்தவர் தயவின்றி, ஆந்திர மக்க ளின் மொழி—கலை—கலாசார வளர்ச்சிக்குப் பாடுபடத் தங்களுக்கு உரிமையிருக்க வேண்டுமென்று ஆந்திர இனத் தலைவர்கள் — அவர்களிலேயும், தேசிய வாதிகள் — உறுதி கொண்டனர். அவர்கள், பாரத தேசப்பற்று மட்டுமன்றி, மொழிப்பற்றும் இனப்பற்றும் உடையவர்களல்லவா!

உண்மையில் பழைய சென்னை ராஜ்யத்தில் அத்தனை உத்தியோகங்களையும் அமைச்சரவை முழுவதையும் ஆந் திரரே என்றென்றும் அடைவதற்குத் தமிழர் இசைவு தெரி வித்திருந்தாலும், தனி மாநிலக் கோரிக்கையை ஆந்திரர் கைவிட்டிருக்கமாட்டார்கள். அவர்கள் விரும்பியது தமிழர் மீது ஆதிக்கஞ் செலுத்தும் ஆந்திர சாம்ராஜ்யமன்று; தங்களைத் தாங்களே ஆண்டு கொள்ளும் தனி ஆந்திர ராஜ்ய மாகும்.

ஆந்திரம் தனியரசு மாநிலமானால்தான் அகில இந்திய அரசியலிலும், மத்திய அரசிலும் ஆந்திரருக்கு செல்வாக்கு ஏற்படுமென்று அவர்கள் நம்பினார்கள். சென்னை ராஜ்ய அளவில் உத்தியோகத் துறையிலும் பார்லிமெண்டரித் துறையிலும் அப்போது தொடர்ந்து ஆந்திரர் செல்வாக்குப் பெற்று வந்தாலும், அகில இந்திய அரசியலிலே தாங்கள் செல்வாக்கு பெற முடியாத நிலை இருந்து வருவதை அவர்கள் உணர்ந்தனர். 'இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'மெயில்' ஆகிய ஆங்கில நாளேடுகள் தமிழ் நாட்டாரின் செல்வாக்கி லிருப்பதால் அகில இந்திய அரசியலிலே தமிழரே தொடர்ந்து செல்வாக்கு பெற்றுவருகின்றனர் என்ற குறை பாடு ஆந்திரருக்கு இருந்து வந்தது. அகில இந்திய அரசிய லில் செல்வாக்கு பெற்று வந்த தமிழரெல்லாம் பிராமண

ராக இருந்தும், ஆந்திர தேசபக்தர்களிலே பிராமணர்களா யிருந்தவர்கள் கூட சாதி உணர்ச்சி காரணமாக ஆறுத லடையவில்லை. பிராமண சாதி நலனைவிட, ஆந்திர இன நலனையே அவர்கள் பெரிதாகக் கருதினர். இதிலே, அவர்கள் தமிழ் நாட்டுப் பிராமணர்களிடமிருந்து வேறுபட்டனர்.

ஆந்திரருடைய இனவுணர்ச்சியானது எந்த நாளிலும் இந்திய தேசிய உணர்ச்சிக்கு எதிராகச் செயல்பட்டதே யில்லை. ஆந்திரர்கள், தேச நலன்களுக்கு ஒத்த வகையிலேயே இன நலன்களை வற்புறுத்தி வந்தனர். ஆந்திர மகாசபையா னது எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தேச விடுதலை விரோதிகள் கையில் சிக்கியதில்லை. "தேச விடுதலை விரோதிகள்" என்ப தாக ஒரு கூட்டம் ஆந்திர நாட்டில் இருந்ததாக வரலாறு காட்டவில்லை. ஜஸ்டிஸ் கட்சியில் ஆதிக்கம் பெற்றிருந்த ஜமீன்தார்கள்கூட ஆந்திரமாநிலத்தின் எல்லைக்குள்ளே தேச விடுதலைக்கு எதிரான செயல்களிலே ஈடுபட்டதாகத் தெரிய வில்லை. ஆம்; ஆந்திரப் பொது ஜன அபிப்பிராயம் அந்த அள வில் ஜஸ்டிஸ் கட்சியினரைக் கட்டுப்படுத்தி வந்ததெனலாம்

1917-ல் ஆந்திர மகாசபை (அரசியல் கட்சிச்சார்பற் றது) நெல்லூரில் கூடியது. அதனை வருணித்து மகாகவி சி. சுப்பிரமணிய பாரதியார், 9-6-1917 "சுதேசமித்திரனி"ல் எழுதியது வருமாறு:

"தமிழ் நாட்டு ஜனங்கள் வீண்சண்டைகளிலே பொழுது போக்குகிறார்கள். தெலுங்கர் ஜனாபிவிருத்திக்கு வழியாகிய நல்ல உபாயங்களிலே புத்தி செலுத்தி வருகிறார்கள். சுதேசிய விஷயத்தில் இப்போது தெலுங்கருக்குள் இருக்கும் பக்தி சிரத்தையிலே நாலிலொரு பங்குகூடத் தமிழ் ஜனங் களிடம் இல்லை.

"சென்ற வெள்ளிக்கிழமை (ஜூன் 1) யன்று நெல்லூரில் கூடிய ஆந்திர மஹாசபையில் சபாநாயகர் ஸ்ரீ. வெங்கடப் பய்ய பந்துலு செய்த உபந்யாஸம் கவனிக்கத்தக்கது.

"மேற்படி நெல்லூர் ஆந்திர மஹாசபைப் பந்தலில் வந்தேமாதரம் என்ற கோஷம் அபரிமிதமாக இருந்த தென்று தந்தி சொல்லுகிறது."

['பாரதி தமிழ்', பக். 206–7]

இந்திய விடுதலைப்போரில் தமிழ் நாட்டார் ஆற்றியுள்ள பணிகளும், செய்துள்ள தியாகங்களும் ஆந்திர மாநிலத்தா ருக்குக் குறைந்தவையல்ல; கூடுதலென்றுஞ் சொல்லலாம். சாதனையில் வீரபாண்டியக் கட்டபொம்மனுக்கும், கப்ப லோட்டிய தமிழருக்கும் இணையான தேசபக்தரையோ, வீரத்தியாகியையோ ஆந்திர நாட்டின் வரலாறு காட்ட வில்லை. சி. சுப்பிரமணிய பாரதியார் போன்ற தேசிய மகாகவி ஒருவர் ஆந்திர நாட்டு விடுதலை வீரர்களிடையில் தோன்றியதில்லை. ஆயினும் ஆந்திரருக்குள்ள இனவுணர்ச்சி யும், அந்த உணர்ச்சியை அவர்கள் இந்திய தேசிய உணர்ச்சி யோடு இணைத்துச் செயல்பட்டு வரும் திறனும் அவர்களை அன்றும் இன்றும் முன்னேற்றி வருகின்றன எனலாம்.

பொதுவாக, 1946 வரை தமிழ் நாட்டின் நிலை இதுதான்: ஜஸ்டிஸ் கட்சி, சுயமரியாதைச் சங்கம், திராவிடர் கழகம் ஆகியவற்றின் துணைகொண்டு உருவாகி வந்த "திராவிடர்" இயக்கமானது தேசிய எழுச்சிக்கு விரோதமாகவே செயல் பட்டு வந்தது.

அதுபோல, காங்கிரஸ் தலைமையில் இயங்கி வந்த தேசிய இயக்கமும் தமிழ்ப் பற்றுக்கும் தமிழர் என்ற இன உணர்ச் சிக்கும் புறம்பானதாக இருந்தது. இது, தமிழினத்துக்கு ஏற் பட்டுவிட்ட விபத்தாகவே எனக்குப் பட்டது. இதன் விளை வாக, தமிழினத்தின் தனி நலன்களுக்காகப் பாடுபட ஒரு தனி இயக்கம் தேவைப்படுவதனை நான் உணர்ந்தேன். அது வும், அரசியல் கட்சிகளில் ஒன்றாக அல்லாமல், தமிழினத் தார் அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்த இனவழித் தேசிய இயக்கமாக இருக்க வேண்டுமென்றும் கருதினேன். ஆம்; ஆந்திரருக்கு ஆந்திர மகாசபையும் கேரளருக்குக்

கேரள சமாஜமும் இயங்கி வருவதுபோல், தமிழ் இன வுணர்ச்சியையும் பாரத தேசீய உணர்ச்சியையும் இணைத்துச் செயல்படும் தமிழர் மகாசபை ஒன்றை நிறுவ காலம் எனக்குக் கட்டளை இடுவதாக நம்பினேன்.

இந்த நிலையில்தான் நான் தமிழரசுக் கழகத்தைத் தோற்றுவிக்க முன்வந்தேன். சென்னை மாகாணம் மொழி வழியில் பிரிக்கப்பட்டாலன்றி, ஆந்திரர் ஆதிக்கத்திலிருந்து தமிழரைக் காப்பது இயலாத காரியமென்று நான் நினைத்தேன். தமிழ் மாகாணம் அமைந்து தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே முதலிடம்பெற்றாலன்றி. தமிழரிடையே இனவுணர்ச்சி ஏற்படுவது இயலாத காரியமென்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

நானறிந்து, தமிழ் நாட்டின் வரலாற்றிலே தமிழர் அனை வருக்குமாகப் பிரதிநிதித்துவம் வகுக்கும் ஓர் அரசியல்—கலாசார அமைப்பு 1946க்கு முன்பு தமிழ் நாட்டில் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

1944ல் திரு. சி பா. ஆதித்தனார் தமிழரசுக் கட்சி தொடங்கியதை நான் மறந்து விடவில்லை. ஆனால், அது பிறந்த ஆண்டிலேயே ஒரு மாநில மாநாட்டோடு மறைந்து விட்டது.

தமிழ் நாட்டார்—தமிழர், தமிழரல்லாதார்—அனைவருக்குமாகத் தமிழ்நாடு காங்கிரஸ் 1920ல் மலர்ந்தது.

இந்த நிலையில், தமிழினத்தின் வரலாறு காணாத புதுமையாக, 1946 நவம்பர் 21ல் நான் தமிழினத்தாரின் தனி நலன்களைக் காக்கப் பாடுபடுவதெற்கென்று தமிழரசுக் கழகத்தைத் தொடங்கினேன். சந்தர்ப்ப நிர்ப்பந்தம் காரணமாக நானே கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்தது.

'தமிழினமே, ஒன்றுபடு!' என்று கோஷித்துக்கொண்டே தமிழரசுக் கழகம் பிறந்தது.

''மத்தியில் சமஷ்டி; மாநிலத்தில் சுயாட்சி'' என்பது கழகத்தின் அரசியல் கொள்கையாக அறிவிக்கப்பட்டது.

''தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழ் மொழிக்கே முதலிடம்'' என்பதே தனது மொழிக் கொள்கை என்று தமிழரசுக் கழகம் பிரகடனம் செய்தது.

மற்றும் ''சோஷலிஸத் தமிழ்க் குடியரசு'' படைப்பதே தனது பொருளாதாரக் கொள்கை என்று தமிழரசுக் கழகம் பறையறைந்தது.

''உரிமைக்கு எல்லை வேங்கடம்; உறவுக்கு எல்லை இமயம்'' என்றும் முழங்கியது.

உண்மையில், சுத்தத் தமிழர் ஒருவர் தலைமையிலே தமிழினத்தாரின் அரசியல்—மொழி—கலாசார—பொருளாதார நலன்களுக்காகப் பாடுபடுவதற்கென்று முதன் முதலில் தமிழக அளவில் தோன்றிய அமைப்பு தமிழரசுக் கழகந்தான் என்பது எவரும் மறுக்கஇயலாத வரலாற்று உண்மையாகும். வரலாறு காணாத இந்தப் புதுமையைச் சாதிக்க தமிழ்ச் சான்றோரான திரு. வி. கலியாண சுந்தரனார், டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் ஆகியோரின் பேராதரவு எனக்கு இருந்தது.

தமிழரசுக் கழகத்தின் கொள்கைகளும் கோஷங்களும் காங்கிரஸ் மகாசபையினுடைய கொள்கைகளின்—கோஷங்களின் நகல்களேயாகும். அதனால், தமிழ்நாடு காங்கிரசின்—அதனைச் சார்ந்தவர்களின் ஆதரவு எனக்கு எளிதில் கிடைத்து விடுமென்று நான் உறுதியாக நம்பினேன். அப்படியே, கழகம் தோன்றிய ஆரம்ப காலத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. காமராசர் உள்ளிட்ட காங்கிரஸ் பிரமுகர் பலர் கழகப் பணிகளிலே பங்கு கொண்டனர்.

தமிழரசுக் கழகத்தின் கொள்கைப் பிரகடனமாக 1947 ஜனவரியில்—பொங்கல் திருநாளையொட்டி—வெளியான தமிழர் தலைவர் பன்னிருவர் ஆதரவு பெற்ற கூட்டறிக்கையிலே

திரு. காமராசர், டாக்டர் ப. சுப்பராயன், டி.டி. கிருஷ்ண மாச்சாரி ஆகியோரும் கையொப்பமிட்டனர்.

திரு. டி.டி.கே., திரு, த. செங்கல்வராயன், டாக்டர் ப. சுப்பராயன் ஆகிய காங்கிரஸ் பிரமுகர்கள் 14-1-1947ல் செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் நடைபெற்ற கழகத் துவக்க விழாவில் கலந்துகொண்டு பேசினர்.

அந்நாளில், நான் தமிழ்நாடு காங்கிரசிலே முன்னணியி லிருந்தேன். ஆயினும், எனது தலைமையில் தோன்றிய தமி ழரசுக் கழகத்தை காங்கிரசின் கிளையாக அல்லாமல், சுதந் திரமான ஒரு தனி அமைப்பாகவே நடத்தலானேன். அதன் மூலம் காங்கிரசாரல்லாத தமிழர்களையும் இயக்கத்தின்பால் ஈர்க்க முடியுமென்று நம்பினேன்.

திராவிடர் கழகத்தோடு எனக்குக் கொள்கை ரீதியான உடன்பாடு இல்லையென்றாலும், அதனையும் பகைக்காத நிலையில் தமிழரசுக் கழகத்தைக் கட்டி வளர்க்கவே நான் முயன்றேன். அதனால், நாளடைவில் இரண்டு கழகங்களும் தோழமை கொண்டு தமிழினத்திற்குத் தொண்டாற்றுவது சாத்தியமாகுமென்றும் நான் நம்பினேன்.

எனது இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் அப்போது திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளராக இருந்த தளபதி சி. என். அண்ணாத்துரை அவர்கள் சிறிது வளைவு நெளிவுடனேனும் தமிழரசுக் கழகத்தை வரவேற்றும், அதன் கொள்கைகளுக்கு ஆதரவு காட்டியும் அடிக்கடி தமது 'திராவிட நாடு' வார இதழில் எழுதி வந்தார்.

"திராவிட நாடு" வினா-விடைப் பகுதியிலே, "தமிழினத் தின் சீர்திருத்த இயக்கம் திராவிடர் கழகம் : அரசியல் இயக் கம் தமிழரசுக் கழகம்" என்று விளக்கந் தந்து; என்னை உற் சாகப்படுத்தினார். தமிழரசுக் கழகத்தின் மாத ஏடாக வெளி வந்து கொண்டிருந்த "தமிழ் முரசி"லே நான் அவ் வப்போது எழுதியவற்றை ஆதரவான போக்கில் அண்ணா விமர்சித்து வந்தார்.

தமிழரசுக் கழகத்தைத் தொடங்கிய பின்னர் தமிழினத் தாரை ஒன்றுபடுத்தும் முயற்சியிலேயே நான் அதிக அக்கறை காட்டினேன். சாதி, மத, கட்சி உணர்ச்சிகளுடன் மோதா மல் 'தமிழர்' என்னும் இன உணர்ச்சியை மக்களிடையே வளர்க்க முயன்றேன். அதற்காக, சில விழாக்களையும் தமி ழினத்தாரிடையில் புகுத்தினேன். குறிப்பாக, பொங்கல் விழாவைத் 'தமிழர் திருநாள்' ஆக்கினேன்.

தமிழ் இன உணர்ச்சிக்கும் இந்திய தேசிய உணர்ச்சிக்கு மிடையே வளர்ந்திருந்த பகையைப் போக்கி அவற்றிடையில் உறவை வளர்ப்பது என் குறிக்கோளாகையால், அதற்காக, இந்திய விடுதலைப் போரைத் தொடங்கிவைத்த வீரபாண்டி யக் கட்டபொம்மன், ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பலோட்டிய வ. உ. சிதம்பரனார் ஆகியோரின் நினைவு நாட்களைத் தமிழ்நாடு முழுவதிலும் கொண்டாடச் செய் தேன். "தமிழன் குரல்" என்னும் பெயரிலே தமிழரசுக் கழ கத்தின் கொள்கைகளை விளக்கும் நூல் ஒன்றையும் வெளி யிட்டேன். அந்நூல், ஆண்டுக்கொரு பதிப்பாக வெளி வந்தது.

தமிழினத்தாரின் ஒற்றுமைக்குப் பயன்படும் ஒரே காப் பியம் சிலப்பதிகாரம்தான் என்பது எனது நம்பிக்கை. அதனால், தமிழகமெங்கும்—பட்டிதொட்டி தோறும்—சிலப் பதிகாரச் செய்திகளைப் பரப்ப முற்பட்டேன். அந்த இன வழிக் காப்பியத்தைத் தந்த இளங்கோவடிகளுக்கு ஆண்டு தோறும் சித்திரா பௌர்ணமி நாளில் விழா எடுக்கும் வழக் கத்தையும் 1955ல் சித்திரா பௌர்ணமி நாளில் தொடங்கி வைத்தேன்.

தமிழரசுக் கழகம் மொழி, கலை, கலாசாரத் துறைகளில் பாடுபட்டு வந்த அதே நேரத்தில் தமிழக எல்லைகளை மீட்க வும், தலைநகரான சென்னையைக் காக்கவும், தமிழ் மாநிலம் அமைய வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்த வும் இடைவிடாது பாடுபட்டு வந்தது.

புதிய தமிழகம் படைப்பதற்காக, தமிழ்நாடு முழுவதிலு மாக—குறிப்பாக, வடக்கு—தெற்கு எல்லைப்பிரதேசங்களிலே பலமுறை போராட்டங்களையும் நடத்தியது. கழகத் தோழர்கள் பல்லாயிரவர் அதிலே ஈடுபட்டு இன்னல்கள் அடைந்தனர். அதாவது, 1965ல் இடைக்காலத்தில் தட்சிணப் பிரதேசத் திட்டம் என்ற பூதம் ஒன்று புறப்பட்டது. அதை மாய்ப்பதிலே தமிழரசுக் கழகம் வெற்றி கண்டது. இதற்கு மேல் இங்கு தமிழரசுக் கழகத்தின் வரலாற்றை விரித் துரைக்க வேண்டிய அவசியமில்லை யென்றே கருதுகிறேன்· பொதுவாக, 10 ஆண்டு காலம் தொடர்ந்து பாடுபட்டு, 1956 நவம்பர் 1ல் தமிழகத்தில் "தமிழ் அரசு" கண்டது தமிழரசுக் கழகம். இது, சரித்திரங் காணாத சாதனையாகும். இதற்கு முன்பே, 1953ல் ஆந்திரப் பிரதேசம் சென்னை ராஜ்யத்தி லிருந்து பிரிந்து சென்றதானது தமிழ் அரசு தோன்றுவதற்கு முன்னோடி நிகழ்ச்சியாக அமைந்தது. தமிழருக்கும் ஆந்திர ருக்கும் பூசல் ஏற்படாமலே, இரு சாராரும் பரஸ்பரம் ஒத் துழைத்தே ஆந்திரத் தனி மாநிலம் தோன்ற வழி வகுத் தனர். அப்போது பிரிவினையாகாத சென்னை ராஜ்யத்தில் ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் ஆட்சி நடந்து வந்தது.

சென்னை ராஜ்யத்தி லிருந்து ஆந்திர மாநிலம் பிரிந்து சென்றபோது, அதிகாரிகளையும் கீழ்த்தர வர்க்க சிப்பந்தி களையும் பிரிக்கும் பிரச்னையைக் கவனிக்க வேண்டி ஏற் பட்டது. இந்தப் பிரிவினைக்கான ஆரம்ப வேலைகளைக் கவ னித்து அரசுக்குப் பரிந்துரை செய்வதற்காக முற்றிலும் அதி காரிகளைக் கொண்ட இருவேறு குழுக்கள் நியமிக்கப்பட்டன. இந்தக் குழுக்களின் பரிந்துரைகள் அநேகமாக பிரிந்து போகும் ஆந்திரப் பிரதேசத்தாலும், எஞ்சிய சென்னை ராஜ் யத்தாலும் எதிர்ப்பின்றி ஏற்கப்பட்டன.

உயர் அதிகாரிகளைக் கொண்ட தனிக் குழுக்கள் இரண்டும் தமிழ் நாட்டிற்குக் கேடு நேரும் வகையிலேயே பரிந்துரைகள் தந்தன. சேவை வர்க்கங்களைப் பிரிப்பதற்கு

சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் விருப்பத்தை அடிப்படையாகக் கொள்வதா, மொழியை அடிப்படையாகக் கொள்வதா?—என்ற பிரச்னை எழுந்தது. அந்தத் தனிக் குழுக்கள் இரண்டும் சேவா வர்க்கத்தின் விருப்பத்தின் அடிப்படையிலேயே பிரிவினை நிகழ வேண்டுமென்று பரிந்துரைத்தன.

சென்னை ராஜ்ய உத்தியோகங்களை இந்திய மயமாக்கும் பணி தொடங்கிய 1909ஆம் ஆண்டு தொட்டு ஆந்திர ராஜ்யம் அமைந்த 1953 வரை சுமார் அரை நூற்றாண்டு காலம் சேவை வர்க்கம் ஆந்திர மயமாகிக் கொண்டு வந்ததை ஏற்கனவே எடுத்துக் காட்டியுள்ளேன். இந்த நிலையில், ஆந்திரம் பிரிந்து சென்ற பின்னரேனும் தமிழ் நாட்டின் உயர் உத்தியோகங்களில் ஆந்திரர் இல்லாதபடி பார்த்துக்கொள்ளத் தமிழர் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆனால், இந்தப் பிரச்னையிலே தமிழகத்தில் பொதுஜன உணர்ச்சி உறங்கிக் கொண்டிருந்தது. உத்தியோகத் துறையில் பிராமணர் ஆதிக்கம் பெறுவதைத் தவிர்ப்பதற்கென்றே தோன்றிய திராவிட இயக்கத்தினர், ஆந்திரம் பிரிந்த பின்னர் தமிழ் நாட்டில் ஆந்திர அதிகாரிகள் நீடிப்பதைத் தவிர்க்க முயற்சி எடுக்கவில்லை. இது, பிராமணரல்லாத ஆந்திரர் பிரச்னையாக இருந்ததாலோ என்னவோ, திராவிடர் இயக்கம் ஆந்திர அதிகாரிகளை ஆந்திர நாட்டுக்கே மூட்டை கட்டி அனுப்ப வேண்டுமென்று கோரிக்கை எழுப்பவோ, அந்தக் கோரிக்கையை எழுப்பிய தமிழரசுக் கழகத்தை ஆதரிக்கவோ முன்வரவில்லை.

ராஜாஜி தலைமையில் இயங்கிய காங்கிரஸ் ஆட்சியும் உத்தியோகத் துறையில் தமிழ் இனத்தின் தனி நலன்களைக் காப்பதிலே அக்கறை காட்டவில்லையென்பதனை இங்கு நான் சொல்லாமல் இருப்பதற்கில்லை. சேவா வர்க்கத்தின் பிரிவினையை அந்த வர்க்கத்தின் விருப்பத்திற்கே விட்டுவிடுவதை எதிர்த்துத் தமிழரசுக் கழகச் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியது. நானும் முதல்வர் ராஜாஜியிடம் எனக்கிருந்த செல்வாக்கைப்

பயன்படுத்தி, சேவா வர்க்கத்திலுள்ள ஆந்திரர் அனைவரையும் ஆந்திர மாநிலத்திற்கே அனுப்பிவிட வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினேன். எனது கோரிக்கைக்கு இணங்க பிடிவாதமாக மறுத்து விட்டார். அவர், மொழி வழி இனவுணர்ச்சி அரசியலில் கலப்பதை விரும்பாதவராதலால் அவரது பிடிவாதம் எனக்கு வியப்பைத் தரவில்லை. ஆனால், தமிழகத்தில் பிராமணர் ஆதிக்கம் பெறுவதை எதிர்ப்பதைத் தலையாய கடமையாகக் கொண்டு கட்சி நடத்தியவர்கள் தமிழ்நாடு தமிழர்களுக்கே என்று குரல் கொடுத்தவர்கள் தமிழரல்லாதாரின் ஆதிக்கத்தை அகற்றப் பொன்னான தருணம் கிடைத்தும், அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறினார்களே, அதுதான் எனக்கு வியப்பைத் தந்தது.

கதையை நீட்டுவானேன்; ஆந்திரப் பிரிவினைக்குப் பிறகும் எஞ்சிய சென்னை ராஜ்யத்தில் அரசாங்கத் துறை தோறும் ஆந்திரர் ஆதிக்கம் நீடித்தது. புதிதாக அமைந்த ஆந்திர ராஜ்யத்தில் துறைதோறும் ஆந்திரரே தலைமைபெற்றனர். அதுபோல, எஞ்சிய சென்னை ராஜ்யத்தில் ஆந்திரரல்லாதாரே துறைதோறும் தலைமை பெறும் நிலைமை ஏற்படவில்லை. ஏராளமான ஆந்திரர் எஞ்சிய சென்னை ராஜ்யத்தில் உத்தியோகங்களில் நீடித்தனர். இது, அப்போது எனக்கு மிகுந்த வேதனையைத் தந்தது.

ஆந்திர உயர் அதிகாரிகளிலே பலர் எஞ்சிய சென்னை ராஜ்யத்தில் தங்கிவிட்டமையால் புதிதாக அமைந்த ஆந்திர ராஜ்யத்திலே பலர் பதவி உயர்வு பெற்றனர். ஓய்வு பெற்றவர்களிலே பலர் திரும்பவும் சேவைக்கு அழைக்கப் பட்டனர். மத்திய சேவையிலிருந்த ஆந்திரரில் பலர் மாநில சேவைக்கு அனுப்பப்பட்டனர். அவர்களும் மகிழ்ச்சியுடன் வந்தனர். தனது தேவை கருதிக்கூட தமிழரான உயர் அதிகாரிகளை எஞ்சிய சென்னை ராஜ்யத்திடமிருந்து கடனாக ஏற்க ஆந்திர அரசு முன் வரவில்லை.

புதிய ஆந்திர ராஜ்யத்தின் கல்வித்துறை அதிகாரியாக தமிழ் நாட்டுத் தெலுங்கரான நாயுடு ஒருவர் அனுப்பப்

பட்டார். அவரை ஆறே திங்களுக்குள் திருப்பி அனுப்பி விட்டது ஆந்திர அரசு. ஆம்: சென்னை மாகாணப் பிரிவினையால், ஆந்திரம் ஆந்திரருக்கே ஆனது. அதுபோல, தமிழ் நாடு தமிழருக்கே ஆகவில்லை. அதிலே, ஆந்திரரும் பங்காளிகளாக இருக்க—உயர் உத்தியோகங்களிலும் கீழ்த்தர சேவையிலும் நீடிக்க ஏமாளிகளான தமிழர் அனுமதித்தனர். எஞ்சிய சென்னை ராஜ்யத்திலே தங்கிவிட்ட ஆந்திர அதிகாரிகளில் பெரும்பாலோர் பிராமணரல்லாதலால், வகுப்பு வாத அரசியல் பாதையிலேயே சென்று பழக்கப்பட்டுவிட்ட பிராமணரல்லாத தமிழர், அவர்களைக் அணைத்துக்கொண்டு விட்டனர்.

ஆந்திரம் பிரிந்துபோன மூன்றாண்டுகள் கழித்து 1956 நவம்பரில் எஞ்சிய சென்னை ராஜ்யத்திலிருந்து தென் கன்னடமும் மலபார் மாவட்டமும் பிரிந்து சென்றன. அப்போதும், சேவா வர்க்கப் பிரிவினை இன அடிப்படையில் ஏற்படவில்லை. ஆந்திரப் பிரிவினையின்போது சேவா வர்க்கத்தைப் பிரிவினை செய்யக் கடைப்பிடிக்கப்பட்ட முறையையே தென்கன்னட, மலபார் மாவட்டப் பிரிவினையிலும் கடைப்பிடிக்க வேண்டுமென்று ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் பரிந்துரை செய்தது. அதன் பரிந்துரை வருமாறு:

“ஆந்திரப் பிரிவினையின்போது கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறை என்னவென்றால், உத்தியோகஸ்தர்களைக்கொண்டவையும், கூட்டு சென்னை ராஜ்யத்தினின்று பிரிவினை செய்யப்படும் பிரதேசங்களுக்குரிய பிரதிநிதிகளைக்கொண்டவையுமான இரண்டு குழுக்கள் முதலில் இதுபற்றிய வேலையில் பெரும்பாலான பாகத்தைச் செய்தன. இந்த நடைமுறையே சிறந்ததாகத் தோன்றுகிறது.

“உத்தியோகஸ்தர்களின் விருப்பத்தை முக்கிய அடிப்படையாகக் கொண்டு உத்தியோகஸ்தர்களைப் பிரித்துக் கொடுக்கலாம். அவர்களுடைய விருப்பத்தைக் கூடுமான வரையில் மதிக்க வேண்டும். ஆனால், அது பொது நலனுக்கு

ஏற்றதாகவும் இருக்க வேண்டும். இந்தப் பொது நலனை முன்னிட்டுச் செய்யப்படும் பிரிவினையானது, ஒரு புறம் சேவா வர்க்கங்களுக்குத் திருப்திகரமாகவும், மற்றொரு புறம் புதிய ராஜ்யங்களுக்கு நியாயமாகவும் இருக்க வேண்டும்''.

[ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் அறிக்கை (தமிழ்மொழி பெயர்ப்பு); பக். 245.5.]

ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனின் பரிந்துரைப்படி 1956ல் தென் கன்னட, மலபார் மாவட்டங்கள் எஞ்சிய சென்னை ராஜ்யத்திலிருந்து பிரிக்கப்பட்டுத் ''தமிழ் அரசு'' அமைந்த போதும், கேரள, கன்னட இனத்தவரான அதிகாரிகள் பலர் தமிழ் நாட்டிலேயே தங்கிவிட விருப்பந் தெரிவித்தனர். அவர்கள் விருப்பம் தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இப்படி, தமிழ் நாட்டில் தங்கிவிட்ட ஆந்திர, கேரள, கன்னட இனத்தினரான அதிகாரிகள் சர்விஸ் விதி முறைப் படி நாளடைவில் பதவி உயர்வுகளையும் பெற்றனர்! அத்துடனன்றி, அவர்கள், அரசில் தங்களுக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தித் தங்கள் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், மருமக்கள், உறவினர் ஆகியோருக்கும் தமிழக அரசிலே உயர் பதவிகள் தேடித் தந்தனர்.

இதன் விளைவாக, தமிழ்நாடு மொழிவழி தனியரசு மாநிலமாக்கப்பட்ட பின்னரும் தமிழரல்லாதார் ஆதிக்கம் பழைய சென்னை ராஜ்யத்திலிருந்த நிலையிலேயே நீடித்தது. ஆந்திரம் பிரிக்கப்பட்டு விட்டால் தமிழ் நாட்டில்—குறிப்பாக, சென்னை நகரில் ஆந்திரரால் நடத்தப்பட்டு வரும் தொழில், வாணிக நிறுவனங்கள் ஆந்திரப் பிரதேசத்துக்கு மாற்றப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அது காரணமாக, சென்னை நகரின் மக்கள் தொகை கணிசமான அளவில் குறைந்து விடுமென்றும் நம்பப்பெற்றது. இந்த மாறுதல்கள் ஏற்படுமானால், தமிழ் நாட்டில்—குறிப்பாக, சென்னை நகரில் தொழில், வாணிபத் துறைகளில் தமி

ழர்க்கே செல்வாக்கு ஏற்படுமென்றும் மதிப்பிடப் பெற்றது. ஆனால், ஆந்திரம் பிரிந்ததையடுத்து அப்படி ஒன்றும் நடக்க வில்லை. சென்னையில் ஆந்திரரால் நடத்தப் பெற்று வந்த தொழில், வாணிக நிறுவனங்களில் ஒன்றுகூட ஆந்திர மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்படவில்லை; தமிழ் நாட்டி லேயே—தலைநகரான சென்னையிலேயே நிலைத்து விட்டன.

ஆந்திரத்தின் தேவையை முன்னிட்டு, சென்னை நகரி லுள்ள தொழில் நிறுவனங்களை ஆந்திர மாநிலத்துக்கு மாற் றிக்கொள்ளுமாறும் அவற்றிற்கு ஆந்திர அரசு எல்லா வகை யிலும் உதவி புரியுமென்றும் ஆந்திர அரசின் சார்பில் அழைப்பு விடப்பட்டது. சான்றாக, சென்னை கோடம்பாக்கத் தில் சுத்த ஆந்திரரான திரு. நாகி ரெட்டியாரால் நடத்தப் படுவதும், ஆசியாவிலேயே சிறந்ததென்று போற்றப்படுவது மான வாகினி ஸ்டுடியோவை ஆந்திர நாட்டுக்கு மாற்றிக் கொள்ளுமாறு அடுத்தடுத்து வந்த ஆந்திர முதல்வர்கள் சென்னைக்கு வந்த போதெல்லாம் வெளிப்படையாகவே அவருக்கு வேண்டுகோள் விட்டனர். ஆனால், அவர்கள் அழைப்பை நாகி ரெட்டியார் ஏற்கவில்லை.

தமிழ் நாட்டில் தொழில், வாணிபத் துறைகளிலே பிற இனத்தார் ஆதிக்கம் பெறுவதால் தமிழர் வாழ்வு கெடு மென்ற உண்மையைத் தமிழர் உணர்ந்திருக்கவில்லை. அந்த உணர்வை மக்களுக்கு ஊட்ட தமிழ் நாட்டு அரசியல் கட்சி களிலே எதுவும் முன்வரவில்லை. தமிழரசுக் கழகம் அவ்வகை யில் முயற்சி எடுத்ததென்றாலும், அது போதுமானதாக இருக்கவில்லை என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆந்திர மாநிலம் அமைந்த பின்னர், அதிலே ஒவ்வொரு துறையிலும் ஆந்திரர் ஆதிக்கம் செலுத்துகின்றனர். அப் படியே கேரள மாநிலம் அமைந்த பின்னர், அதிலே கேரளரே செல்வாக்கு செலுத்துகின்றனர். ஆனால், தமிழ் நாடு தனி யரசு மாநிலமான பின்னர், அதிலே தமிழரல்லாதார் செல்

வாக்கு தேய்பிறையாகி தமிழர் செல்வாக்கு வளர்பிறையாகு மென்று நம்பியது நடக்கவில்லை. இது, இன்றும் வந்தவர் போனவருக்கெல்லாம் வாழ்வு தரும் சத்திரமாகத்தான் இருந்து வருகின்றது.

இருந்தாலும், நிலைமை மாறிக்கொண்டுதான் வருகின்றது. தமிழர் வாழ்வில் எங்கும் எதிலும் தமிழே ஆதிக்கம் பெற்று விடுமானால், தமிழரல்லாதார் ஆதிக்கத்திலிருந்து தமிழகம் விடுபடுவது உறுதி.

''ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின், தீதுண்டோ மன்னும் உயிர்க்கு'' என்பது வள்ளுவர் வாக்கு. இதன்படி, கடந்த அரை நூற்றாண்டு காலத்திலே தமிழர் செய்த தவறுகளும் தமிழகத்தில் பிற மொழியினர் உத்தியோகத் துறையிலும் பிற துறைகளிலும் ஆதிக்கம் பெற்றதற்குக் காரணங்களாகின்றன. அந்தத் தவறுகள் இன்றும் தொடர்கின்றன. அவற்றிலிருந்து தமிழர் மீண்டாலொழிய தமிழ் நாடு தமிழருக்கே ஆவது சாத்தியமில்லை. ''பிராமணரல்லாதார்''—''திராவிடர்'' என்ற பாசறைப் பெயர்களிலே இன்னும் நம்மிலே பலருக்கு மோகமிருக்கின்றது. ஆங்கில மொழியில் தமிழருக்குள்ள மோகமும் தமிழகத்தில் அன்னிய இனத்தார் ஆதிக்கம் பெற்று வந்ததற்கான மற்றொரு காரணமாகும். ஆகவே, இந்த, மோகங்களிலிருந்து தமிழினத்தாரை மீட்காதவரை தமிழ் நாட்டை அன்னிய இனத்தவர் ஆதிக்கத்திலிருந்து மீட்பது சாத்தியமில்லை.

தமிழரிடையே நிலவும் சாதிப் பாகுபாடுகள், சாதிக்குள் சாதியாகவுள்ள உபசாதி உணர்ச்சிகள் உட்பகையை ஏற்படுத்தி, அதனை நாளொரு மேனியாக வளர்த்து வருகின்றன. போதாக்குறைக்குப் புதிதாக அரசியல் கட்சி வேற்றுமைகள் புதிய சாதிவேற்றுமைகளாகி, தமிழினத்தைப் பிளவுபடுத்தி வருகின்றன. தமிழினத்தின் பொது நலன்களைப் பலி கொடுத்து கட்சி நலனை வளர்க்கும் வெறித்தனம் ஜனநாயகமாகி விட்டது, தமிழகத்திலே!

மத, இன சிறுபான்மையினர்!

மதப்பற்றுக்கும் இனப்பற்றுக்குமிடையே உறவு காணத் தமிழரால் முடிவதில்லை. மதமா, இனமா?—என்ற வினு எழுங்கால், இனத்தைப் பலிகொடுத்து மதத்தைப் பாது காக்கவே முயல்கின்றனர். இந்தப் போக்கு சிறுபான்மை மதத்தவரிடையேதான் மிகுதியாகக் காணப்படுகிறது.

இஸ்லாமியத் தமிழர்கள் தங்களுக்குள்ள மதப் பற்று காரணமாக, தமிழரல்லாத இஸ்லாமியரை நேசிக்கின்றனர். மற்றும், தமிழரல்லாதார் ஆதிக்கத்தை முறியடிக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகளை — அவற்றால் தமிழரல்லாத முஸ்லிம்கள் பாதிக்கப்படுவார்களாயின் — "இஸ்லாத்துக்கு ஆபத்து" என்று காரணங்காட்டி எதிர்க்கின்றனர். அந்த நேரத்தில் அன்னியமதத்தார் என்ற ஒரே காரணத்திற்காக, இனத்தால் தம்மவரான இந்து-கிறித்துவத் தமிழரைப் புறக் கணிக்கின்றனர்.

அதுபோல, தமிழகத்திலுள்ள கிறித்துவத் தமிழர்களும் தங்களுக்குள்ள மதப்பற்று காரணமாக, பிறஇனத்தவரான கிறித்துவரைத் தம்மவராகக் கருதுகின்றனர். அவர்களுடன் ஒப்பிடுங்கால், தம் இனத்தவரான இந்து—இஸ்லாமியத் தமிழரை அன்னியராகக் கருதுகின்றனர். தமிழ்க் கிறித்து வரிடமுள்ள இனப்பற்றுக்குப் புறம்பான. மதப் பற்று தான் தமிழகத்தில் கேரளர்கள் எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் பெற்று வரக் காரணமாகும். வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவ மனை, மருத்துவக் கல்லூரி போன்ற

கிறித்துவ மிஷனரி நிறுவனங்களிலே கேரளக் கிறிஸ்துவரே செல்வாக்கு செலுத்தி வருகின்றனர். இதனை, கிறித்துவத் தமிழரும் ஆதரிக்கின்றனர். காரணம், மதப்பற்றுதான்! அப்படியே, இந்துத் தமிழர்களும் தங்களுக்குள்ள மதப் பற்று காரணமாக, புதுவை அரவிந்தர் ஆசிரமம் போன்ற மத நிறுவனங்களிலே வங்காளியர் போன்ற தமிழரல்லாத இந்துக்கள் ஆதிக்கம் பெற அனுமதித்து வருகின்றனர்.

மதப்பற்று தவிர்க்க முடியாதது; தவிர்க்கவுங் கூடாதது என்பதனை நான் அறிவேன். ஆனால், இன நலன்களுக்குக் கேடின்றி மத நலனைக்காக்க தமிழ் நாட்டிலுள்ள மத நிறுவனங்கள் முயல வேண்டும். 'மத நலன்' எனப்படுவது ஆத்மார்த்தமானதுதான்! 'இனநலன்' என்பது அப்படிப் பட்டதல்ல; அது, மனிதனுடைய அன்றாட வாழ்க்கையோடு பிணைந்ததாகும். இனப்பற்றைத் துறந்தால், வாழ்க்கை நலன்கள் பறிபோய்விடும்.

இனம் வேறு; மதம் வேறுதான். ஆனால், அவை ஒன்றுக்கொன்று விரோதமானவையல்ல. இன வேற்றுமைகளிடையே ஒற்றுமை காண மதம் பயன்படுகின்றது. அது போல, மத வேற்றுமைகளிடையே ஒற்றுமை காண இனமும் பயன்படுகின்றது. சான்றாக, மதத்தால் வேறுபடுகின்ற அப்துல் காதர், அந்தோணிசாமி, ஆறுமுகம் ஆகியோர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களானால் இனத்தால் ஒன்றுபட முடிகின்றது. அப்படியே, இனத்தால் வேறுபடுகின்ற தமிழரும் ஆந்திரரும் வங்காளியரும் குஜராத்தியரும் ஒரே மதத்தைப் பின்பற்றுபவர்களானால் மதத்தால் ஒன்றுபட முடிகின்றது. ஆகவே, தமிழ்பேசும் மக்களெல்லாம் மதத்தை வெறுக்காமலே 'தமிழர்' என்ற உணர்வு பெற்று, ஒருமைப்பாடு எய்த முடியும்.

நான் தமிழரிடையே இன ஒருமைப்பாடு வேண்டுமென்று கூறுவது, பிற இனத்தாருடன் மோதுவதற்காக அல்ல; குறுகிய சாதி, உபசாதி உணர்வுகளிலிருந்து விடுபடு

வதற்காகவே! சாதிகளிடையே நிலவும் உயர்வு தாழ்வுக் கொடுமைகளை ஒழிக்க, தமிழகத்திலே சாதிகளற்ற சமுதாயத்தைப் படைக்க 'தமிழர்' என்ற இன உணர்வை வளர்ப்பதால்தான் முடியும்.

தமிழ் பேசும் மக்களெல்லாம் இனத்தால் தமிழராயிருப்பதோடு, சமுதாயத்தால் இந்தியராகவும் இருக்கின்றனர். இந்திய தேசிய ஒருமைப்பாடு என்பது தமிழர் இதய பூர்வமாக ஏற்றுக்கொண்டு விட்ட ஒன்றாகும். ஆகவே, எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழர்—ஆந்திரர்—கேரளர்—கன்னடர்—மகாராஷ்டிரர் ஆகிய பிற இனங்களோடு பூசல் கொள்ள தமிழர் முயல்வதற்கில்லை. இனப் பற்றோடு தேசப் பற்றும் தமிழருக்கு இருப்பதால், அவர்கள் பிற இனத்தை அல்லது இனங்களைப் பகைப்பதற்குச் சந்தர்ப்பமே இல்லை. ஒரு இனத்தவர் பிற இனத்தவரின் தாயகத்திலே குடியேறி, அங்கு ஆதிக்கம் செலுத்த முயலாத வரை இனப் பூசலுக்கோ, மாகாணப் பூசலுக்கோ இடமே இல்லை. தமிழர், கேரளர், ஆந்திரர், மகாராஷ்டிரர் ஆகிய தேசிய இனங்களின் நலன்கள் ஒன்றோடொன்று முரண்படுபவை அல்ல. ஒரு மொழிவழி இனத்தாரை அழித்துத்தான்—அவர்களின் தாயகத்தை அடிமை கொண்டுதான் இன்னொருமொழிவழி இனத்தார் வாழ வேண்டுமென்ற நிலைஇன்று இருக்கவில்லை. அது, மன்னர்கள் காலத்து வாழ்க்கை முறையாக, வரலாறாக இருந்திருக்கலாம். ஆனால், இது, மக்கள் காலம்—அதாவது, ஜனநாயக சகாப்தம்! ஆகவே, ஒரு இனத்தாரை இன்னொரு இனத்தார் அடிமை கொள்ளாமலே, ஒரு மாகாணத்தின் மீது இன்னொரு மாகாணம் ஆதிக்கம் செலுத்தாமலே, இனத்தோடு இனம்—மாகாணத்தோடு மாகாணம் உறவு கொண்டு, எல்லா இனங்களும் ஒருமைப்பாடு எய்தி வாழ முடியும். தமிழர் இன உணர்வு கொள்வதால்—அதாவது, தமிழகம் தமிழருக்கே ஆவதால் பிற இனமோ, பிற மாகாணமோ பாதிக்கப் படுவதற்கில்லை. அப்படியே, ஆத்மிக சம்பந்தமான மத உணர்வும் பாதிக்கப் படமாட்டாது.

ஆந்திரத்திலோ, கேரளத்திலோ, வங்காளத்திலோ இன உணர்வுக்கும் மத உணர்வுக்கும் மோதல் நிகழக் காண்கிறோமில்லை. மதத்திற்கு மதம் மோதல் நிகழத்தான் காண்கின்றோம். உண்மையில் அங்கெல்லாம் இன உணர்வு ஓங்கி நின்ற நேரங்களிலே, மதங்களிடையிலான பகைமை எங்கோ போய் ஒளிந்து கொண்டதைக் கண்டிருக்கிறோம். சான்றாக, 1905 முதல் 1912 வரை வங்காளப் பிரிவினை எதிர்ப்பு இயக்கம் ஓங்கியிருந்த நேரத்திலே, வங்காளியரெலாம் மதப் பாகுபாட்டை மறந்து, பகைமையைத் துறந்து இன உணர்ச்சியால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்டதைக் கண்டோம்.

அண்மையில் கிழக்கு வங்காளத்திலே முஜிபுர் ரகிமான் தலைமையிலே வங்காளியர் சுதந்திரப் போர் நடத்தியபோது, உலகமே வியக்கத் தக்க வகையில் வங்க மொழி பேசுவோரெல்லாம்—இந்து, முஸ்லிம், கிறித்துவர் என்ற வேற்றுமையின்றி—இனவழியில் ஒன்றுபட்டதைக் கண்டோம். ஆம், மொழி வழிப்பட்ட இனவுணர்ச்சி காரணமாக எந்த ஒரு மதமும் பாதிக்கப்பட்டதாக வரலாறு கூறவில்லை. இனவுணர்வு தற்காப்பு ஆயுதந்தான்!

மொழி வழிச் சிறுபான்மையோர் பிரச்னையை நான் மறந்து விடவில்லை. மொழிவழிச் சிறுபான்மையினர் என்போர் தமிழகத்தைப் பொறுத்த வரையில் இரு வகையானவர் எனலாம். ஒரு வகையார், உத்தியோகம் தொழில் வாணிபம் காரணமாக தமிகழத்தில் குடியேறியவர்களாவர். இவர்கள் தங்கள் தாய் மாநிலத்தை மறந்தவர்கள் அல்லர்; அதனுடன் போக்கு வரத்து வைத்துக் கொண்டு இங்கு வாழ்பவர்களே! இவர்கள் பிரச்னையைத் தீர்க்க அரசியல் சட்டத்திலேயே வழிவகை செய்யப்பட்டுள்ளது. மொழி வழிச் சிறுபான்மையினர் கமிஷனின் பரிந்துரைகளும் இந்தப் பிரச்னையைத் தீர்க்க நமக்கு உதவி புரிகின்றன.

இது, ''கொடுத்து வாங்கும்'' வகையில்தான் இருக்கின்றது. தமிழ் நாட்டில், சென்னை—தஞ்சை போன்ற

நகரங்களில் மகாராஷ்டிரர்கள் இருக்கிறார்க ளென்றால், பம்பாய்—புனா—நாகபுரி ஆகிய மகாராஷ்டிர நகரங்களிலே தமிழர் லட்சக்கணக்கில் வாழ்கின்றனர். தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையம்பதியில் குஜராத்தியர் பல்லாயிரக் கணக்கில் வாழ்கின்றனர். "குஜராத்பேட்டை"யையே உருவாக்கி யுள்ளனர். இதுபோல, குஜராத்தின் தலைநகரான ஆமதாபாத்தில் பதினாயிரக்கணக்கில் தமிழர் வாழ்கின்றனர். சென்னையிலுள்ள குஜராத்தியருக்கும் ஆமதாபாத்திலுள்ள தமிழருக்குமுள்ள வேற்றுமை என்னவென்றால், இவர்கள் வணிக முதலாளிகள்; வட்டிக் கடைக்காரர்கள்! அவர்கள் ஆலைகளிலே உழைத்துப் பிழைக்கும் தொழிலாளர்கள்; அலுவலகச் சிப்பந்திகள்! இந்த வேற்றுமைக் கேற்பத்தான் பிரச்னைக்கான பரிகாரங்களும் அமையும். தமிழகத்திலுள்ள பிற மாநிலத்தவர் நிலையும் இதுபோலத்தான்!

தமிழகத்தில் கேரளர் இருத்தல்போலக் கேரளத்தில் தமிழர்வாழ்கிறார்கள். தமிழகத்தில் ஆந்திரர்வாழ்வது போல ஆந்திரத்திலும் தமிழர் வாழ்கின்றனர். ஆகவே, தமிழகத் திலுள்ள மொழிவழிச் சிறுபான்மையினருக்குத் தமிழரசு நீதி வழங்கினால், பிற மாநிலங்களிலுள்ள தமிழ் மொழி பேசும் சிறுபான்மையினருக்கு அங்கெல்லாமுள்ள மொழிவழி அரசுகள் நீதி வழங்கும். இன்னொரு வகையில் சொன்னால், ஆந்திரத்திலுள்ள தமிழருக்கு எந்த அளவுக்கு நீதி கிடைக் கிறதோ, அந்த அளவுக்குத் தமிழகத்திலுள்ள ஆந்திரருக்கும் நீதி கிடைக்கும். ஆகவே, எந்த ஒரு மாநிலமும் அல்லது இனமும் மொழிவழிச் சிறுபான்மையினர் வாழ்க்கை உரிமை களைப் புறக்கணிப்பதற்கில்லை. புறக்கணிப்பது, பிற மாநி லங்களிலுள்ள தங்கள் மக்களுக்குக் கேடு செய்வதாகும்.

இந்தியாவில் இந்தியரிலே யாரும் எந்தப் பிரதேசத்தி லும் குடியேறி, சொத்து வாங்கவும், வாணிபமும் தொழி லும் நடத்தவும், நகரமன்ற—சட்டமன்ற—நாடாளு மன்றத் தேர்தலில் போட்டியிட்டுப் பதவிகள் பெறவும் அரசியல் சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது. தமிழ் மாநிலத்தாருக்கு

மராத்தி மாநிலம் அயல் நாடல்ல; அப்படியே, குஜராத்தி மாநிலத்தாருக்கு தமிழ் மாநிலம் அயல் நாடல்ல! இந்தியக் குடி மகனுகவுள்ள ஒவ்வொருவருக்கும் குமரி முதல் இமயம் வரை பரந்து கிடக்கும் பாரத நாடு முழுவதுமே தாய் நாடாகும்.

''செந்தமிழ் நாடு, எங்கள் தந்தையர் நாடு'' என்றும், ''தமிழ்த் திருநாடு, பெற்ற தாய் நாடு'' என்றும் பாரதியார் பாடியிருப்பது சரித்திர ரீதியில் உண்மைதான். அத்துடன், அரசியல் சட்டப்படித் தமிழர் ஒவ்வொருவருக்கும் பாரதப் பெரு நாடு முழுவதும் தாய் நாடாகும். நடைமுறை யிலுள்ள இந்திய அரசியல் சட்டம் உருவாவதற்கு முன்பே, ''பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள், பாரதநாடு'' என்று பாரதியார் பாடியுள்ளார். எனவே, மொழிவழிப்பட்ட உணர்வால் தமிழருக்குத் தமிழ் நாடு தாய் வீடு என்ருலும், சட்ட ரீதியான உரிமைகளால் தமிழருக்கு பாரதம் முழுவதுமே உரிமைத் திருநாடு ஆக்கியிருக்கிறது அரசியல் அமைப்புச் சட்டம். ஆகவே, தமிழகத்திலுள்ள மொழி வழிச் சிறுபான்மையினரை முற்றிலும் அன்னியராகத் தமி ழர் கருதுவதற்கில்லை. தங்கள் சொந்தச் சகோதரராகக் கருதவும் கடமைப்பட்டிருக்கின்றனர். இது, தமிழருடைய பாண்பாடுமாகும். ஆம்; ''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' என்பது, புறநானூற்றுப் புலவர் கணியன் பூங்குன்றனரின் போதனையாகும்.

தமிழகத்தில் குடியேறி வாழும் மொழிவழிச் சிறுபான் மையினரும் இங்கு தங்கி வாழும் வரையிலேனும் தங்களுக்கு வேறு எங்கோ தாய்நாடு இருப்பதாகக் கருதக் கூடாது. 'இராமனிருக்கும் இடம் அயோத்தி' என்பது பழமொழி. அதுபோல, தாங்கள் வாழும் மாநிலமே தங்கள் தாயகம் என்று அவர்கள் கருதவேண்டும். மொழி, கலை, கலாசாரம், பழக்க வழக்கம் ஆகியவற்றில் தமிழகத்திலுள்ள மொழி வழிச் சிறுபான்மைமையினர் தங்களைத் தனி இனத்தவராகக் கருதிக் கொள்வார்களானுல், அதிலே நியாயமுண்டு. ஆனுல்,

தமிழ் நாட்டுக்கு வெளியே தங்கள் தாய்நாடு இருப்பதாகக் கருதிக்கொள்ளும் மயக்கத்திலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக்கொள்ள வேண்டும். வேற்றுமொழி மாநிலங்களில் வாழும் தமிழ் மக்களுக்கும் இது பொருந்தும். ஆனல், தமிழ் மாநிலத்தில் வாழும் பிறமொழியினர் — குறிப்பாக, ஆந்திரர்—கேரளர்-குஜராத்தியர் ஆகியோர் இப்படி வாழ்வதாகச் சொல்வதற்கில்லை.

தமிழ் நாட்டின் தலைநகரில் வாழும் ஆந்திரர்கள். தங்கள் மொழியின் பெயரால் தெலுங்கு மகாசபை வைத்துக்கொள்வார்களானல், அதிலே தவறில்லை. அப்படியே, தமிழ் நாட்டில் வாழும் கேரளர்கள் தங்கள் மொழியின் பெயரால் மலையாள சமாஜம் வைத்துக்கொள்வார்களானல், அதிலேயும் பிழை காண்பதற்கில்லை. ஆனல், நடைமுறை அப்படி இல்லை. சென்னையிலுள்ள ஆந்திரர்கள், தங்களை ஒன்றுபடுத்திக் கொள்ள ''ஆந்திர மகாசபை'' அமைத்து நடத்தி வருகின்றனர். அதனை, ஆந்திர நாட்டிள்ள ஆந்திர மகாசபையின் கிளையாகவும் பதிப்பித்துக் கொண்டுள்ளனர். இது, தனி நாட்டு மனப்பான்மையாகும்

தமிழ் நாட்டில் வாழும் கேரளரும் கேரள சமாஜம் நிறுவிக்கொண்டு, இங்குள்ள கேரளரை ஒன்றுபடுத்தி வருகின்றனர். இதன் மூலம் தாங்கள் தனி இனத்தார் என்பதை மட்டுமல்லாமல், தனி நாட்டார்—அதாவது, எங்கோவுள்ள கேரள நாட்டார் என்பதையும் தமிழருக்குப் புலப்படுத்துகின்றனர். சென்னை நகரிலும் கோவை நகரிலுமுள்ள கேரள சமாஜங்கள் கேரள நாட்டிலுள்ள கேரள சமாஜத்தின் கிளைகளாகவே இயங்கி வருகின்றன.

கேரளரான சர்தார் பணிக்கரையும் ஒரு உறுப்பினராகக் கொண்ட ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன், ''மொழிவாரித் தாயகக் கொள்கையைத் தீவிர சந்தேக மனப்பான்மையுடன் நாங்கள் கருதுவதோடு, இந்தக் கொள்கையானது இன்னும் அபாயகரமான தீங்குகளை விளைவிக்கக்

கூடும் என்று நாங்கள் கருதுவதாக இங்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறோம்'' என்று கூறியிருக்கிறது. பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள், அங்கு ''தமிழர் சங்கம்'' என்றோ, ''தமிழ் நாட்டார் சங்கம்'' என்றோ சங்கங்கள் அமைத்துக் கொண்டு, தனி நாட்டு மனப்பான்மையை வெளிப்படுத்தவில்லை. டில்லி, பம்பாய் போன்ற பெரு நகரங்களிலே தங்கள் மொழியின் பெயரால் 'தமிழ்ச் சங்கம்' அமைத்துக் கொண்டு, கலை—கலாசாரம்—மொழி ஆகிய பணிகளில் ஈடுபட்டு வருவதைப் பார்க்கிறோம். இது, தனி நாட்டு மனப்பான்மை ஆகாது என்பதை அறிந்துகொள்ள ஆராய்ச்சி தேவைப்படவில்லை. வடபுலத்தில் வாழும் தமிழர் காட்டும் இந்தத் தேசிய ஒருமைப்பாட்டு மனப்பான்மைதான் பம்பாய் நகர ஷெரிபாகத் திரு. டி. வி. இராமாநுஜம் என்ற தமிழர் வருவதற்கு வாய்ப்பளித்தது. மராத்திய இனத்தின் பாதுகாப்பு அமைப்பான சிவசேனையைச் சார்ந்தவர்களும் தமிழர் ஒருவர் மராத்தி நாட்டுத் தலைநகரின் ஷெரிபாக வருவதனை எதிர்க்கவில்லையென்பது நினைவில் கொள்ளத் தக்கதாகும்.

தமிழ் நாட்டில் வாழும் பிற மொழியினர்—குறிப்பாக, மலையாளிகள், கேரளந்தான் தங்கள் தாய் நாடென்பதை தங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழ் நாட்டில் தங்களுக்குக் கிடைக்கும் வருவாயைத் தமிழ் நாட்டிலேயே பயன்படுத்தாமல், கேரள நாட்டுக்கு அனுப்பி வைப்பதிலேயே குறியாக இருக்கின்றனர். இதனைச் சுரண்டல் என்றல்லாமல் வேறு என்னவென்று சொல்வது?

தமிழ் நாட்டில் ஒரு உயர் உத்தியோகம் ஒரு மலையாளிக்குக் கிடைத்துவிட்டால், அவர் தன் செல்வாக்கிலுள்ள வேலைகளுக்கெல்லாம் மலையாளிகளையே நியமிப்பது வழக்கமாகிவிட்டது. சான்ருக, தமிழ் நாடு போக்குவரத்துத் துறை இயக்குநராக ஒரு மலையாளி இருந்தபோது, அந்தத் துறை முழுவதுமே மலையாளி மயமாக்கப்பட்டது. போக்குவரத்துத்

துறைபேருந்துக்களின் டிரைவர்கள், கண்டக்டர்களெல்லாம் பெரும்பாலும் மலையாளிகளாகவே நியமிக்கப்பட்டனர்!

தமிழ் நாட்டிலுள்ள மலையாளிகள், "கேரளம் கேரளருக்கே! தமிழ் நாடும் கேரளருக்கே!" என்று சொல்லாமல் சொல்வதுபோல நடந்து கொள்கின்றனர். தமிழ் நாட்டில் மலையாளிகளால் நடத்தப்படும் அமைப்புக்களிலே பத்துக்கு ஒருவராகக் கூடத் தமிழர் இடம் பெறுவது அரிதாக இருக்கிறது. மத்தியில் பாதுகாப்பு அமைச்சராக மலையாளியான திரு. வி. கே. மேனன் இருந்தபோது, ஆவடியில் யுத்த டாங்குகள் தயாரிக்கும் தொழிற்சாலை மத்திய அரசால் நிறுவப்பட்டது. அதிலே, மலையாளிகளே ஆதிக்கம் பெற வழி வகுத்தார் மேனன்.

சென்னை நகரில் தெலுங்கர் நடத்தும் தொழில்—வணிக நிறுவனங்களிலே உயர் அலுவலரிலிருந்து வாயில் காப்போர் வரை தெலுங்கராகவே இருக்கக் காணலாம். அங்கெல்லாம் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவருக்கு இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

இதுபோல, சென்னை நகரில் கன்னடர் நடத்தும் பெரிய பெரிய ஓட்டல்களிலே தலைமை நிர்வாகியிலிருந்து சாதாரண சிப்பந்திவரை கன்னடர்களாகவே நியமிக்கப்படுகின்றனர். இந்த ஓட்டல்களில் வாயிற்காவலர் வேலைகூடத் தமிழருக்குக் கிடைப்பதில்லை. அதற்குக் கூர்க்காக்கள் நியமிக்கப்படுகின்றனர். இந்த நிலையில் தமிழகத்திலுள்ள மொழிவழிச் சிறுபான்மையினரிடம் பெரும்பான்மையினரான தமிழருக்கு நல்லெண்ணம் ஏற்படுமா? உண்மையென்னவென்றால், தமிழகத்திலே பாதுகாப்புத் தேவைப்படுவது மொழிவழிச் சிறுபான்மையினருக்கல்ல; பெரும்பான்மையினரான தமிழருக்குத்தான்!

தமிழ் நாட்டில் மொழிவழிச் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதிக்கப்படுமோ என்று அஞ்சக்கூடிய வகையில் தமிழரிடையே சிவசேனை போன்ற இனவெறி இயக்கம்

எதுவும் இருக்கவில்லை. இன உணர்ச்சி பற்றித் தமிழரசுக் கழகமோ, வேறு ஏதேனுமொரு அமைப்போ இங்கு பிரசாரம் செய்யலாம். அதனாலேயே சிறுபான்மையினர் அஞ்சுவது கோழைத்தனம். இல்லையேல் வேண்டுமென்றே காட்டப்படும் பூச்சாண்டி! ஆந்திர, கேரளரிடையே இன உணர்ச்சியை வளர்க்க பிரசாரம் தேவைப்படவில்லை. தமிழரிடையேதான் அது தேவைப்படுகிறது. பிராமணர்—பிராமணரல்லாதார், ஆரியர்—திராவிடர் என்ற பாசறைப் பெயர்களை ஏற்றுத் தமிழர் பிளவுபட்டு விட்டதோடு, தமிழ் இன உணர்ச்சியற்றவர்களாகவும் ஆகிவிட்டனர். அதனால், அவர்களுக்கு இன உணர்வு ஊட்டுவதற்காகப் பிரசாரம் தேவைப்படுகிறது. அது, பிறரைத்தாக்கும் பிரசாரம் அல்ல; பிறரிடமிருந்து தற்காத்துக் கொள்ளும் பிரசாரம்! அதைக் கண்டு தமிழரல்லாதார் அஞ்சத் தேவையில்லை.

ஒரு மொழிக்குரிய மாநிலத்தில் குடியேறி வாழும் வேற்று மொழியினரான சிறுபான்மையினர், தங்களை வேற்று நாட்டாராகக் கருதிக் கொண்டு, உரிமைகளுக்காகப் போராடுவதை ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் விரும்பவில்லை. வெறுப்பும் தெரிவித்திருக்கிறது. இதோ, அதன் வெறுப்புரை:

"சிறுபான்மையினரின் உரிமைகளை அளவுக்கு மீறி வற்புறுத்துவதனாலும், அவர்களுக்கு அளவுக்கு மீறி விசேஷப் பாதுகாப்புகள் அளிப்பதனாலும், அவர்கள் என்றென்றுமே சிறுபான்மையினராகவே தங்களை நினைப்பார்களென்றும், அதனால், ஒரு பொதுவான தேசப்பற்று ஏற்படுவது தடைப்படுமென்றும் நாங்கள் அறிவோம். அப்படி ஏற்படுத்தினால், இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு மாறாக, மேலும் சிக்கலாக்கி விடுவோம் என்றும் நாங்கள் கருதுகிறோம்.

"சிறுபான்மையினரின் விவகாரங்களுக்காக சட்டபூர்வமான கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும் என்பது எங்க

ளிடம் தெரிவிக்கப்பட்டுள்ள பிரேரணையாகும். அந்தக் கமிஷன் அரசியல் தொடர்பற்ற, ஓரளவுக்கு நீதித்துறையின் அமைப்புள்ள ஆலோசனை மன்றமாய் இருக்க வேண்டு மென்றும் கூறப்பட்டிருக்கிறது.

"ஒரு நீதி மன்றத்தின் முன்பாக சிறுபான்மையினர் மாநில அரசுகளை ஆட்சேபிக்க முற்படுவதனால், அலைக்கழிக் கத்தக்க கோரிக்கைகளும், எதிர் கோரிக்கைகளும் செய்து கொள்வதற்கு வழி ஏற்படும்.

"அன்றியும், சிறுபான்மையினர் உண்மையாகவோ, கற்பனையாகவோ தங்களுக்குள்ள குறைபாடுகளைப் போக்கிக் கொள்வதற்கு எப்போதுமே தங்கள் ராஜ்யத்திற்கு வெளியி லிருந்து உதவியை நாடும் ஒரு நிலைமை ஏற்படும்.

"பற்பல பரிபாலனத் துறைகளில் சிறுபான்மையினர் பிரதான மொழித் தொகுதியினரின் நல்லெண்ணத்தை நம்பி யிருக்கத்தான் வேண்டும்.

"மொழிவழி சிறுபான்மையினருக்குக் "கண்டிப்பான நியாயம்" வழங்க முயற்சி எடுத்துக் கொண்டால் ராஜ்ய அரசாங்கங்களுக்கும் சிறுபான்மைத் தொகுதியினருக்கு மிடையே உள்ள உறவு மிகவும் மோசமாகிவிடும்."

[ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் பரிந்துரை (தமிழ் மொழிபெயர்ப்பு); பக் 251, 260-]

"மண்ணின் மைந்தர்களுக்கு வேலை" என்ற கொள் கையையும் ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் கொள்கையள வில் ஒப்புக்கொண்டிருக்கிறது. அதன் ஒப்புதல் வருமாறு:

> "ராஜ்ய சேவை வர்க்கங்களை நடத்த முக்கியமாகத் "தங்கள் பிரதேச மக்களையே" அமர்த்திக் கொள்ள வேண்டுமென்று உள்ளூர் வாசிகள் விரும்புவது நியாய மானதேயாகும்."

[ரா. பு. கமி. பரி; பக். 278.]

மண்ணின் மைந்தர் யார் என்று நிர்ணயிப்பதிலே சிக்கல் ஏற்படக் கூடும். ஒவ்வொரு குடிமகனுக்கும் மத்திய அரசே இந்தியா முழுவதற்குமாக குடியுரிமை வழங்குவதால் மாநில அடிப்படையில் மண்ணின் மைந்தரை நிர்ணயிப்ப தில் சிக்கல் ஏற்படுகிறது. இதனைச் சமாளிப்பதற்குரிய சரியான வழி ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தந்த மாநில மொழியையே ஆட்சி மொழியாக உடனடியாகவும் முழு அளவிலும் அமுல்படுத்துவதாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் எங்கும் எதிலும் ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தமிழே பயன்படுத்தப்படுமா னால், தமிழறியாத பிறமொழியினர் உத்தியோகத் துறையில் ஆதிக்கஞ் செலுத்துவது சாத்தியமில்லாமற் போகும். தனியார் நிறுவனங்களிலும் தமிழ் மொழிக்கே முதலிடந் தரும்படிச் செய்வதற்கான சட்டத்தையும் ஆணையையும் அரசு பிறப்பிக்க வேண்டும்.

தமிழ் வாயிலாகக் கல்வி கற்காத எவரும் தமிழ் நாட்டில் அரசு அலுவலகங்களிலோ, தனியார் நிறுவனங் களிலோ வேலை பெறுவது சாத்தியமில்லாதபடிச் செய்ய வேண்டும். உத்தியோகம் பெற்ற பிறகு ஒரு கால கட்டத் திற்குள் தமிழில் தேர்வு எழுதினால் போதும் என்ற நிலை கூடாது. அது, தமிழ் மக்களை ஏமாற்றுவதாகும்—இல்லை யேல், தமிழக அரசு தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வ தாகும். உயர் அதிகாரிகளுக்கு ஆங்கில மொழியிடம் மோக மிருக்கும் வரை எந்த ஒரு மாநிலத்திலும் ''மண்ணின் மைந்தர்களுக்கே வேலை'' என்ற கொள்கை ஏட்டுச் சுரைக் காயாகத்தான் இருக்க முடியும். தமிழகத்தில் இப்போது அப்படித்தான் இருக்கிறது,

தமிழில் கல்வி பயின்று தமிழகத்தில் வேலை பெற வேற்று மொழியினர் முன்வரலாமே யென்றால், அப்படிப் பட்டவர்களை நாம் மகிழ்ச்சியோடு வரவேற்கத்தான் வேண்டும். தமிழகத்தில் வேலை வாய்ப்பு தமிழருக்குத்தான்

என்றால், அந்தக் கொள்கையால் தமிழகத்திற்கு வெளியே வேலை பார்க்கும் தமிழர்கள் பாதிக்கப்படுவார்களே என்று கேட்கப்படுகிறது. இப்பொழுதே வெளி மாநிலங்களில் வேலை பெறும் தமிழர் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு குறைந்து கொண்டுதான் வருகிறது என்பதை இவர்கள் அறியார் போலும்! மற்றும், வெளி மாநிலங்களில் தமிழர் வேலை பார்ப்பது பெரும்பாலும் மத்திய அரசு அலுவலகங்களில் தான், மாநில அரசு அலுவலகங்களில் அல்ல என்பதனை இங்கு நான் நினைவூட்ட வேண்டும்.

''மண்ணின் மைந்தர்களுக்கே வேலை'' என்ற கொள்கையைத் தமிழகம் கடைப்பிடிக்காது போனாலும், மற்ற மாநிலங்கள் கடைப்பிடிக்கத்தான் செய்யும். அங்கெல்லாம் மக்களிலே படித்தவர், படிக்காதவர் ஆகிய எல்லோருமே இன வுணர்ச்சி வுடையவர்களாக இருக்கிறார்கள். அது, வெறியாகவும் வளர்ந்திருக்கிறது. ஆகையால். வேற்று இனத்தார் தங்கள் மாநிலத்தில் ஆதிக்கம் பெறுவதைத் தவிர்த்து வர அவர்களால் முடிகிறது. அங்கெல்லாம் மக்களுக்குப் பயந்து அரசும் இனவுணர்ச்சிப் பாதையிலே தீவிரமாக நடைபோடுகின்றது. ஆகவே, தற்காப்புக்காக வேனும் தமிழக அரசும் தனியார் நிறுவனங்களும் ''மாநிலத் தவர்க்கே வேலை'' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கத் தான் வேண்டும்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அல்லது ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருந்த காலத்தில் ஒரு மொழி பேசுவோர் வேற்று மொழி மாநிலங்களில் பெற்றுவிட்ட சலுகைகளை இனியும் நீடித்து அனுபவிப்பது சாத்தியமில்லை. அதற்கு முற்றுப்புள்ளி விழத்தான் செய்யும். ஆங்கிலத்துக்குப் பதிலாகப் பிரதேச மொழிகள் ஆட்சிபீட மேறும் வேலை ஒவ்வொரு மாநிலத்திலும் ஆரம்பமாகிவிட்டது. அதிகமாக மதிப்பிட்டாலும் இன்னும் கால் நூற்றாண்டு காலத்திற்குள் அது நிறைவு பெறுவது உறுதி. கல்வி மொழிகளில் ஒன்றாகத் தான் ஆங்கிலம் இந்தியாவில் இனி இருக்கப் போகிறது.

அந்த நிலையில் மாநில மொழியின் மூலமாகக் கல்வி கற்றவர்களைத் தவிர மற்றவர்கள் வேலை வாய்ப்பு பெற இயலாது. ஆகவே, தமிழர் இப்போதே விழிப்பு பெற வேண்டும்.

மொழிவழிச் சிறுபான்மையினர் தங்கள் மொழியிலே ஆரம்பக் கல்வியைக் கற்க விரும்புவார்களாயின் அந்த உரிமை அவர்களுக்கு உண்டு. அதற்கான வசதி வாய்ப்புகள் செய்து தருவது மாநில அரசுகளின் கடமையாகும். ஆனால், பிரதேச மொழியைப் புறக்கணிக்காத வகையில் இந்த உரிமையைச் சிறுபான்மையினர் பயன்படுத்திக் கொள்வது தான் புத்திசாலித்தனம்.

போதனா மொழிப் பிரச்னை ஆரம்பக் கல்வியிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். ஒரு மாநிலத்திலுள்ள சிறுபான்மையினர் அந்த மாநிலத்தில் வேலை வாய்ப்புப் பெற வேண்டுமானால், மாநில மொழியைப் போதனா மொழியாக ஏற்றுக் கல்வி பயில்வது அவசியமாகும். ஆங்கிலம் போதனா மொழியாக இல்லாத நிலையில் பிரதேச மொழியைப் புறக் கணித்துத் தங்கள் சொந்த மொழியைப் போதனா மொழி யாகக் கொண்டு கல்வி பயில சிறுபான்மையினர் முயல்வது தற்கொலைப் போக்காகும்.

அடுத்து, பார்லிமெண்டரித் துறைகளில் சிறுபான்மை யினர் பதவி பெறும் பிரச்னையை ஆராய்வோம்.

வேறு மாநிலத்தில் தமிழர் குடியேறி, அங்குள்ள சட்ட மன்றத்திற்கோ, நாடாளு மன்றத்திற்கோ போட்டியிடவும்; அந்த மாநிலத்தில் அமைச்சராகவோ, முதலமைச்சராகவோ பதவி பெறவும் அரசியல் சட்டம் அனுமதிக்கிறது. அது போல, தமிழ் மாநிலத்தில் வந்தேறிகளாக வாழும் பிற மாநிலத்தார் இங்கு சட்ட மன்ற, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவும் அமைச்சராகவோ, முதலமைச்சராகவோ பதவி பெறவும் குடியரசுச் சட்டம் வாய்ப்பு தருகிறது.

சட்டப்படி நிலைமை இதுதான் என்றாலும், நடைமுறை வேறுவிதமாக இருக்கிறது. தமிழை வீட்டு மொழியாகக்

கொள்ளாத பிற மொழியினர் ஒவ்வொரு பொதுத் தேர்தலி லும் தமிழக சட்டமன்றத்திற்குத் தமிழ் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஆளுங் கட்சியின் சார்பில் அமைச்சர்களாகவும் முதலமைச்சர்களாகவும் பதவி பெற் றிருக்கின்றனர். இதுபோல, பிற மாநிலங்களில் தமிழர் எவரும் தமிழரல்லாதாரால் சட்டமன்றத்திற்கோ, நாடாளு மன்றத்திற்கோ தேர்ந்தெடுக்கப்படுவதும், அமைச்சராகவும் முதலமைச்சராகவும் வருவதும் வழக்கமில்லை.

அகில இந்திய காங்கிரஸ் பிளவுபடாதிருந்த நேரத்திலே அதன் தலைவராக இருந்த திரு கு. காமராசர் விருதுநகர் சட்டமன்றத் தொகுதியில் 1967ல் பொதுத் தேர்தலில் தோல்வியுற்றார். அதன்பின், அவ்வளவு பெருந்தலைவர், தமிழகத்தின் தென்கோடியிலுள்ள கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்துதான்—தமிழ் வாக்காளரால்தான்—ஒரு துணைத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டார். வேறு மாநிலமெதுவும் தேசத்தலைவரான அவரைத் தேர்ந்தெடுத்து நாடாளு மன்றத்திற்கு அனுப்ப முன்வரவில்லை. இது, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்த ஒருவருக்கு நேர்ந்த நிலைமை.

நேருஜி, சர்தார் படேல் போன்ற அகில இந்தியப் பெருந் தலைவர்களில் எவரும் தங்கள் சொந்த மாநிலத்திற்கு வெளியே நாடாளு மன்றத் தொகுதியொன்றில் போட்டி யிட்டதில்லை. தேசிய ஒருமைப்பாட்டுணர்வை வளர்ப்பதற் காகவேனும் பெருந் தலைவர்களில் சிலர் தங்கள் மாநிலத் திற்கு வெளியே போட்டியிட முன் வந்திருக்கலாம். ஆனால், அந்த அற்புதம் தேசியத் தலைவர்களைப் பொறுத்தவரையில் இதுவரை நிகழ்ந்ததில்லை. கம்யூனிஸ்டுகளில் ஒன்றிருவர் மாநிலம் விட்டு மாநிலத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற துண்டு. ஆனால், அதனை, விதியாகக் கொள்வதற்கில்லை; விதிக்கு விலக்காகவே கருத வேண்டும். அது, தொழிற்சங்க பலத்தைக் கொண்டு நிகழ்த்தப்பட்ட அற்புதமாகும்.

தமிழக அளவில் தமிழரல்லாத கன்னடரும் மலையாளியும் கட்சி தொடங்க முடிகிறது. மக்களின் ஆதரவும் கிடைக்கின்றது. இப்படியெல்லாம் வேற்றுமொழி மாநிலம் எதிலும் நிகழ்வதில்லை. கேரளத்திலே தமிழர் ஒருவர் கேரளர் நடத்தும் ஆட்சியை அழிக்க எதிர்க்கட்சி ஏற்படுத்தவோ, அதற்குக் கேரள மக்களின் ஆதரவைப் பெறவோ இயலாது. அப்படி ஒரு கட்சி தமிழரால் தொடங்கப்பட்டால், அங்கு வாழும் கேரளருக்கும் தமிழருக்கும் இடையில் இனக்கலகமே மூண்டுவிடும். தமிழ் நாட்டிலோ, தமிழராட்சியைக் கவிழ்க்க தமிழரல்லாத ஒருவர் புதுக்கட்சி தொடங்குவது வெறும் கட்சிப் பிரச்னையாக மட்டுமே கருதப்படுகிறது. இனப் பிரச்னையாகக் கருதப்படவில்லை.

தமிழகத்திலுள்ள வேற்று மொழியார் ஒருவர் தமிழரால் நடத்தப்படும் கட்சியில் சேர்ந்து அதன் சார்பில் அமைச்சர் பதவி பெறுவது விதி விலக்காக எப்போதோ ஒரு முறை நிகழலாம். அதனை முணுமுணுக்காமல் தமிழர் ஏற்கவும் வேண்டும். அந்தத் தாராளத் தன்மை தமிழர் பண்பாட்டிற்கு ஏற்றதே! ஆனால், தமிழரல்லாத ஒருவர் தமிழகத்தின் முதலமைச்சராவது தமிழர் மகிழ்ச்சியுடன் ஏற்க முடியாத ஒரு அரசியல் விபத்தாகும்.

தமிழ் நாட்டில் பூர்வகுடித் தமிழர்தான் முதலமைச்சராக வர முடியும். பிறமாநிலங்களிலும் அதுதானே நிலைமை. தமிழகத்தின் முதல்வர் பீடத்தைக் கைப்பற்ற தமிழரல்லாதார் ஒருவர் புதிதாகக் கட்சி அமைப்பதும், அரசியலுக்கு சம்பந்தமில்லாத வேறு வேறு கவர்ச்சிகளைப் பயன்படுத்தித் தேர்தலில் வெற்றி பெறுவதும் தமிழர் அனுமதிக்க முடியாத அரசியல் கேடுகளாகும். அத்தகைய ஆக்கிரமிப்புக்குத் தமிழர் இடந்தருதல் கூடாது. அதற்கு எதிரான சூழ்நிலையை உருவாக்க இன உணர்ச்சியுடைய தமிழர் பிரசாரம் செய்ய வேண்டும். அது, இனப் பூசலுக்கோ, போராட்டத்திற்கோ வழி வகுத்துவிடுமென்று பயமுறுத்துவோர் இருக்கலாம். அத்தகைய பயமுறுத்தல்களைப் புறக்கணிக்க வேண்டும்.

அமெரிக்கப் பெருநாடு அரசியலில் உலக நாடுகளுக் கெல்லாம் வழி காட்டுமளவுக்கு நாகரிகம் பெற்றுள்ள நாடாகும். அந்த நாட்டிலேகூட, பூர்வ குடி அமெரிக்கர் அல்லாதவரான வந்தேறி ஒருவர் ஜனாதிபதியாக வருவதைத் தடை செய்யும் விதி அரசியல் சட்டத்தில் இருக்கிறது.

அமெரிக்காவில் அயல்நாட்டு அமைச்சராக கிஸிங்கர் என்பவர் இருப்பது அனைவரும் அறிந்ததே. அவர், ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவுக்குக் குடியேறிய குடும்பத்தில் பிறந்தவர். அவர் ஜனாதிபதிக்கு அடுத்த அந்தஸ்தில் அயல் நாட்டு அமைச்சராக இருந்தாலும், அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது.

அமெரிக்காவில் பூர்வகுடி அமெரிக்கர்தான் குடியரசுத் தலைவராக வரமுடியும் என்றால், தமிழ் நாட்டில் தமிழர்தான் முதல்வராக வரவேண்டும் என்று பிரசாரம் செய்வதில் தவறிருக்க முடியாதல்லவா!

பர்மா புத்த நாடு என்று பிரகடனப்படுத்தப்பட்டு விட்டது. அதனால், அந்த நாட்டில் புத்த மதத்தவரல்லாத இந்து அல்லது முஸ்லிம் அல்லது கிறிஸ்துவர் ஒருவர் ஆட்சித் தலைவராக வரமுடியாது. அதுபோல, தமிழகம் மொழிவழி தனியரசு மாநிலம் ஆகிவிட்ட பின்னர் அதிலே தமிழர் அல்லாதாரை முதல்வராக ஏற்பது ஏமாளித்தனம் அல்லவா!

இந்தியாவிலே, வங்கத்தில் வங்காளியும் கேரளத்தில் கேரளருந்தான் முதல்வராக வரமுடியுமென்று அரசியல் சட்டத்தில் விதி இல்லை யென்பது உண்மைதான். ஆனால், சட்டத்திற்கு அப்பாற்பட்ட சம்பிரதாயம் ஒன்று அங்கெல் லாம் நடைமுறையிலிருந்து வருகிறது. அதன்படி, வங்காளத் தில் வங்காளியல்லாத எவரும் முதல்வராகிவிட முடியாது. கேரளத்திலும் ஆந்திரத்திலும் கர்நாடகத்திலும் அப்படித் தான்!

தமிழ் நாட்டிலும் தமிழர்தான் முதல்வராக வர முடியும்—வரவேண்டும் என்று அரசியல் சட்டம் இல்லை தான். ஆனால், தமிழராகிய நாம் அப்படி ஒரு சம்பிரதாயத்தைப் படைக்க வேண்டும். தமிழரிலே. பிராமணரா, பிற சாதியினரா?—என்றோ, இந்துவா, இந்துவல்லாத பிற மதத்தினரா என்றோ நாம் பார்க்கத் தேவையில்லை. தமிழரிலே எந்தச் சாதியாரும் எந்த மதத்தாரும் முதல்வராக வரலாம். இந்த சம்பிரதாயத்தை சட்டத்தால் உருவாக்குவதைவிட இனஉணர்ச்சியால் உருவாக்குவதையே நான் விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் தமிழரல்லாதார் ஒருவர்—எப்போதோ ஒரு முறை—முதல்வராக வருவதனை விதிக்கு விலக்காக ஏற்கலாமென்றாலும், அதன் விளைவுகள் மோசமானவையாக இருக்கும். தமிழக அரசின் ஒரு இலாகாவிலே மலையாளி ஒருவர் தலைமை அதிகாரியாகி விடுவாரானால், அந்த இலாகாவே மலையாளி மயமாகி விடுவதைப் பார்த்து வருகிறோம். இந்த நிலையில், மலையாளி ஒருவர் அனைத்து இலாக்காக்களையும் கொண்ட மாநில அரசுக்கே முதல்வராகி விட்டால், தமிழினத்தின் உத்தியோக நலன்கள் என்ன ஆகும்? விதி விலக்காகவேனும் தமிழரல்லாத ஒருவரைத் தமிழகத்தின் முதல்வராக ஏற்கலாமே என்றால், அந்த நிலைக்குச் செல்ல தமிழரிடையே அறிவாளித் தலைவர்களுக்குப் பஞ்சம் ஏற்பட்டு விடவில்லையே!

தமிழராகிய நாம், பிராமணர் — பிராமணரல்தாதார் என்ற வருணவேற்றுமையை, முதலியார்—நாயகர்—செட்டியார்—நாடார் என்ற சாதி வேற்றுமையை, இந்து—இந்துவல்லாதார் என்ற மதவேற்றுமையை மறந்து பார்ப்போமானால், தமிழகத்திலே அறிவாளிகளுக்குப் பஞ்சமில்லையே! இன்னொரு மொழியினரை இரவல் பெற்று ஆட்சியை நடத்தத் தமிழக வாக்காளர்கள் முடிவெடுப்பார்களானால், அதற்காக, வருங்கால சரித்திராசிரியர்கள் இன்றையத் தலைமுறை வாக்காளர்களைப் பாராட்டமாட்டார்கள்; பழிப்பார்கள்!

தமிழ் நாட்டில் வேலை வாய்ப்புகளில் தமிழருக்கே முதலிடம் தரவேண்டுமென்ற கொள்கையைக் கடைப் பிடிப்பது வெட்கப்பட வேண்டிய அநாகரிகமாகாது. தமிழ் நாட்டில் அரசாங்க அலுவலர் நியமனத்திலே பிராமணரல் லாதாருக்கு சலுகை காட்டப்படுகிறது. பிராமணரல்லா தாரிலிருந்து பிற்பட்ட சாதியாரைப் பிரித்தெடுத்து, அவர் களுக்கும் சலுகை தரப்படுகிறது. பிற்பட்ட சாதியாரிலிருந்து மிகவும் பிற்பட்ட சாதியார் என்பதாக ஒரு புதிய சாதியைப் படைத்து அதைச் சார்ந்தவர்களுக்கும் உத்தியோக நியமனங்களில் சலுகை காட்டப்படுகிறது. மிகவும் பிற் பட்ட சாதியாரிலிருந்து பிரித்தெடுத்துத் தாழ்த்தப்பட்ட சாதியாருக்கும் விசேஷ சலுகைகள் வழங்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்டோரிலிருந்து மலை ஜாதியினரைப் பிரித் தெடுத்து அவர்களுக்கும் சலுகைகள் வழங்கப்படுகின்றன. தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கையுடைய காங்கி ரசும், தமிழின ஒருமைப்பாட்டில் நம்பிக்கையுடைய தி.மு.க. வுங் கூட, உத்தியோக நியமனங்களில் மக்களை வகுப்புவாரிப் பிளவுபடுத்தும் முறையைக் கடைப்பிடிப் பதனைத் தன் தன் கடமையாகக் கருதினவென்றால், தமிழ் நாட்டாரைத் தமிழர், தமிழரல்லாதார் என்று பாகுபாடு செய்து உத்தியோகங்களை வழங்குவது மட்டும் அநாகரிகமாகி விடுமா? ஆகாதன்றோ!

இரு மொழியாளர் பிரச்னை

தமிழ்நாடு தீர்த்து வைக்கவேண்டிய மற்ருெரு பிரச்னையும் உள்ளது. அது, இரு மொழியாளர் பிரச்னையாகும். மொழிவழி சிறுபான்மையினர் வேறு; இரு மொழியாளர் வேறு. இவர்களிடையே சிறிய வேறுபாடு உண்டு. இது புரியாமல் இரு மொழியாளரையும் சிறுபான்மையினருடன் சேர்த்துக் குழப்புவோர் உண்டு—ஏன், இரு மொழியாளரான அரசியல் வாதிகளிலேயே சிலர் இப்படிக் குழப்புகின்றனர், சுயநலத்திற்காக!

மொழிவழிச் சிறுபான்மையினர் என்போர் தமிழ் நாட்டில் வாழ்ந்தாலும், அவர்களுக்கு வேற்று மாநிலத்திலே சொத்து—சுதந்திரம் உண்டு. பெண் கொடுக்கல் வாங்கலும் உண்டு. அவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்தாலும் தமிழின் மூலம் கல்வி பயிலாமல், தங்கள் வீட்டுமொழி—அதாவது, தாய்மொழி மூலமே கல்வி பயில்கின்றனர். இவர்களுக்கு எதிராக "மண்ணின் மைந்தர்களுக்கே வேலை" என்ற திட்டத்தை அமுல்படுத்துவது சரிதான்.

இரு மொழியாளர் நிலை வேறு. அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திற்கு முன்பே தமிழகத்தில் குடியேறியவர்கள். தமிழகத்தில் தெலுங்கு நாயக்கர்கள் ஆட்சி நடைபெற்ற காலத்திலே 'ரெட்டி' 'நாயுடு'—'ராஜுக்கள்' எனப்படும் பல்வேறு தெலுங்கு சாதியினர் நாயக்க அரசர்களைப் பின்பற்றி—அவர்கள் ஆதரவோடு—தமிழ் நாட்டில் குடியமர்ந்தனர். இது நிகழ்ந்தது சில நூற்ருண்டுகளுக்கு முன்னர்.

அவர்களின் சந்ததியார்தான் இன்று நம்மிடையே வாழும் இரு மொழியாளர்கள்.

இவர்களிலே தெலுங்கருமுண்டு; கன்னடருமுண்டு. இவர்கள் காலப்போக்கில் தமிழரோடு தமிழராகக் கலந்து வருகின்றனர் எனலாம். இவர்களில் பெரும்பாலோர் தெலுங்கையோ, கன்னடத்தையோ வெறும் பேச்சளவில்தான்—அதுவும் வீட்டளவில்தான்—பயன்படுத்துகின்றனர். மற்றபடி நாட்டு மொழியான தமிழையே கல்வி மொழியாகக் கொண்டு கல்வி பயில்கின்றனர். ஆம்; வீட்டு மொழியாகத் தெலுங்கையும் நாட்டு மொழியாகத் தமிழையும் கொண்டு இருமொழியாளராகி விட்டனர்.

இரு மொழியாளர்கள் வீட்டு மொழியால் தமிழரிடமிருந்து சிறிது வேறுபட்டாலும், நாட்டால் தமிழ் நாட்டவராகவே தங்களைக் கருதுகின்றனர். ஆந்திர நாட்டிடமோ, கன்னட நாட்டிடமோ அவர்கள் தனி விசுவாசம் காட்டுவோரல்லர். தமிழ் நாட்டிலுள்ள இருமொழியாளருக்குப் பின்னணி வரலாறு உண்டு. அந்த வரலாறு தமிழரோடு தமிழராக அவர்கள் கலந்து வருவதையே காட்டுகின்றது. ஆம்; தமிழ் நாட்டின் நன்மை தீமைகளிலே பூர்வ குடித் தமிழர் போலவே இரு மொழியாளரும் பங்கு கொண்டு வந்துள்ளனர்.

பாஞ்சைப்பதியாண்ட வீர பாண்டியக் கட்டபொம்மன் தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்டவன். ஆனால், அவன் படித்ததும் பேசியதும் ஆட்சி மொழியாகக் கொண்டதும் தமிழ் ஒன்றைத்தான்! அதுமட்டுமன்றி, தமிழகம் முழுவதையும் அடிமைப்படுத்த முயன்ற பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துப் போராடினான், 'தமிழன்' என்ற உணர்வோடு! கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் பாஞ்சைப் பதியானின் அரசுரிமையை நிபந்தனையின்றி அங்கீகரித்துக் கொண்டு, "கம்பெனிக்கு ஆண்டுதோறும் கப்பஞ் செலுத்தினால் போதும்" என்று கூறியபோதும், அதற்கு இணங்க மறுத்து,

தமிழ் நாட்டின் எல்லேயிலிருந்தே வெள்ளே ஏகாதிபத்தியத்தை வெளியேற்ற விரும்பிப் போராடினுன். அந்தப் போரிலே தன்னே அழித்துக் கொண்டதோடு, தன் குடும்பமும், தனது கம்பளத்து சாதியும், பாஞ்சைப்பதியும் அடியோடு அழியக் காரணமாகிவிட்டான். அவனது தியாகத்தை இன்று நினேத்தாலும், மயிர்க்கூச்செறிகிறது!

அந்த வீரபாண்டியன் ஆந்திர பாரம்பர்யத்திலிருந்து வந்தவனுயிருந்தும், கடைசிவரை தெலுங்கை வீட்டு மொழியாகக் கொண்டவனுக இருந்தும், இன்றுவரை ஆந்திர நாட்டார் அவனேக் கொண்டாடுவதில்லே. ஏகாதிபத்தியத்தை எதிர்த்த தேசபக்த இந்தியன் என்ற வகையில்கூட ஆந்திரர் கட்டபொம்மனே மதிப்பதில்லே. காரணம், அவன் தமிழ் நாட்டான் என்பதுதான்!

காந்திய சகாப்தத்திலே டாக்டர் வரதராசுலு நாயுடு, ஓ. பி. இராமசாமி ரெட்டியார், ஈ. வே. இராமசாமி நாயகர் போன்றவர்கள் தெலுங்கு, கன்னடமொழிகளே வீட்டு மொழிகளாகக் கொண்டவர்கள்—பூர்வ குடித் தமிழர்களுடன் தோளோடு .தோள் சேர்த்து தமிழ்நாடு காங்கிரஸ் என்ற ஒரே அமைப்பில் நின்று தேச விடுதலேக்காகத் தொண்டாற்றினர்.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய இருமொழியாளர் ஏராளம், ஏராளம்! தமிழ்த் தாய்க்குக் காவடிச் சிந்து என்ற புதிய அணியைப் பூட்டிய அண்ணுமலே ரெட்டியாரின் தமிழ்த் தொண்டை நன்றியுள்ள தமிழர் மறக்க முடியுமா? இன்றும் கல்லூரிக் கட்டத்திலே தமிழை சிறப்பு மொழியாக ஏற்று, அதிலே எம். ஏ. பட்டம் பெற்று வருவோரில் இருமொழியாளர் ஏராளமாக இருந்து வருகின்றனர்.

விடுதலேப் போராட்ட காலத்திலே தமிழ் நாடு காங்கிரசின் தலேவராக இருந்து, தமிழரைத் தியாகப் பாதையில் அழைத்துச் சென்ற இருமொழியாளரான தலேவர்கள்

பலராவர். நாடு விடுதலை பெற்ற பிறகும் இருமொழியாளரை தமிழர் விலக்கி வைத்ததில்லை; அவர்களும் தமிழரிடமிருந்து விலகிச் சென்றதில்லை. இவ்விருசாராரும் ஓரினத்தவராகவே ஒன்றுபட்டு வாழ்ந்து வரக் காண்கின்றோம். உண்மையென்னவென்றால், பூர்வ குடித் தமிழரை விடவும் இருமொழியாளர் — தங்கள் சத விகிதத்துக்கும் அதிகமாக — அரசாங்க அலுவலர்களாகவும், தொழிலதிபர்களாகவும், வணிகர்களாகவும் இருந்து வருவதாகும்.

ஆந்திரம் சென்னை மாநிலத்திலிருந்து பிரிந்து செல்ல இருந்தபோது, ஆந்திரர்கள் 'மதறாஸ் மனதே' என்று ஆர்ப்பரித்தபோது, தமிழ் நாட்டிலுள்ள இரு மொழியாளரான தெலுங்கர் நிலை சோதனைக்குள்ளானது. அந்தச் சோதனையிலே அவர்களில் சிலர்—குறிப்பாக, சென்னை நகரிலும் தமிழக—ஆந்திர எல்லையோரங்களிலும் உள்ளவர்கள் ஆந்திர மனப்பான்மையை வெளிப்படுத்தியதை நான் நன்கு அறிவேன். குறிப்பாக, தங்கம்—வெள்ளி நகை வணிகர்களாகவுள்ள தெலுங்கர்கள், சென்னை நகர் பிரச்னையிலே ஆந்திரர் பக்கமே இருந்தனர். அந்தரங்கமாக அல்ல; வெளிப்படையாகவே! இதற்குக் காரணம், ஆந்திர மனப்பான்மை மட்டுமல்ல; சென்னை தமிழகத்திற்கே உரியதாகிவிட்டால், தாங்கள் தமிழரால் விரட்டப்பட்டுவிடுவோமென்ற அச்சமுந்தான்! இந்தச் சுயநலமே பெரும்பான்மையினரான தமிழரிடமிருந்து பிரிந்து சிறுபான்மையினரான ஆந்திரர் பக்கம் சேர அவர்களைத் தூண்டியிருக்க வேண்டும். ஆனால் காலம் அவர்கள் கண்களைத் திறந்து விட்டது. ஆம்; தமிழ் மாநிலம் தனியரசு பெற்றபின்னரும் தங்கம்—வெள்ளிக் கடைக்காரர்கள் தமிழகத்தில் தங்கி வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைப் போலவே, தமிழக—ஆந்திர எல்லைப் பகுதிகளிலேயுள்ள இருமொழியாளரும் எல்லைப் பிரச்னையிலே ஆந்திர மாகாணத்தவருடனேயே இருந்தனர். ஆந்திரருக்கும் இருமொழியாளருக்குமுள்ள வேற்றுமையை நான் 14 ஆண்டு

காலம் பொதுக் கூட்டங்களிலே விளக்கிக் கூறியும் அப்போதைய சித்தூர் மாவட்டத்தின் இருமொழியாளரைத் தமிழர் தரப்புக்கு இழுக்க என்னால் முடியவில்லை. முடிந்திருந்தால், வேங்கடத்தையே தமிழகத்தின் வடக்கெல்லையாக்கி யிருப்பேன். ஆயினும், சென்னையிலும், எல்லைப் பிரதேசங்களிலும் வாழும் இரு மொழியாளர்களிடமிருந்து வேறுபட்டனர், தமிழகத்தின் உட்பகுதிகளில் வாழும் இரு மொழியாளர். அவர்களில் சாதாரண மக்களெல்லாம் தங்களைத் தமிழராகவே கருதி, ''சென்னை தமிழருக்கே'' என்ற முழக்கத்திற்கே ஆதரவளித்தனர். ''தமிழகத்தின் வடக்கெல்லை வேங்கடமே'' என்ற கோஷத்திற்கு வெற்றி தேடவும் உதவிபுரிந்தனர். ஏன், தமிழரசுக் கழகத்தோடு இணைந்து சென்னையைக் காப்பதிலும் எல்லைப் பகுதிகளை மீட்பதிலும் இரு மொழியாளரான இளைஞர்களும் பங்கு பெற்றனர் என்பதனை இங்கு நான் நன்றியறிதலோடு குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன்.

எந்த வகையில் பார்த்தாலும் தமிழகத்தில் வாழும் இரு மொழியாளர் தமிழரோடு தமிழராகக் கலந்து வருவது நாம் கண்ணாரக் கண்டு வரும் உண்மையாகும். அவர்கள் தமிழரல்லர் என்று கூறுவதோ, அவர்களும் தமிழரிலிருந்து தங்களை வேறுபடுத்திக் கொள்ள முயல்வதோ புத்திசாலித்தனமான செயல்களாகா. அவர்களைப் பொருத்தவரையில் தமிழானது திணிக்கப்பட்ட மொழியாக அல்லாமல், அவர்களே விரும்பி ஏற்றுக்கொண்ட மொழியாகத்தான் அவர்கள் மீது செல்வாக்குப் பெற்றுள்ளது எனலாம்.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலே தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ் கட்டாய மொழியாக இருக்கவில்லை. விருப்பப் பாடமாகவே இருந்து வந்தது. ஆம்; தமிழரே தமிழை விரும்பாவிடில் வேறொரு இந்திய மொழியை ஏற்றுப் படிக்க வாய்ப்பிருந்தது. அதன்படித்தான் பிராமணத் தமிழரிலே சிலர் சம்ஸ்கிருதத்தையும், இஸ்லாமியத் தமிழரில் பலர் உருதுவையும் தமிழ் மொழிக்குப் பதிலாக ஏற்றுப் படித்தனர். அவர்களைப்போல, தமிழ் நாட்டு இருமொழியாளரும் விரும்பி

யிருந்தால், தமிழைக் கைவிட்டு தெலுங்கையோ, கன்னடத்தையோ எடுத்துப் படித்திருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படிச் செய்யவில்லை. தமிழ் நாட்டையே தங்கள் தாய் நாடாகக் கருதிய காரணத்தால், தமிழ் மொழியை மனமார விரும்பி ஏற்று, அதன் மூலம் கல்வி பயின்றனர். இது, இரு மொழியாளரின் பின்னணி வரலாறு.

ஒருகால், தமிழகத்திலுள்ள இருமொழியாளரில் ஆந்திர அல்லது கன்னட மனப்பான்மையுடையவர்கள் இருப்பார்களானால், அவர்களை மொழிவழிச் சிறுபான்மையினராக ஏற்றுக் கொள்ளலாம். அதன் விளைவுகளை ஏற்றுக் கொள்ள அவர்களும் தயங்கக்கூடாது.

சிறுபான்மையினரும் அரசியலும்

தமிழ்நாட்டு மக்கள் நினைவில்கொண்டு பரிகாரம் காண வேண்டிய மற்றொரு பிரச்சினையும் உண்டு. அது, கேரளம், ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம், குஜராத் ஆகிய வேற்று மொழி மாநிலங்களில் சிறுபான்மையினராக வாழும் தமிழரின் அரசியல் பிரச்சினையாகும். அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை தமிழ் நாட்டிலுள்ள மற்ற மொழி வழிச் சிறுபான்மையினர் பிரச்சினை போன்றதுதான். ஆம்; மொழிவழிச் சிறுபான்மையினர் பிரச்சினை என்பது அனைத்து மாநிலங்களிலும் ஒரே மாதிரியானதுதான். அதிலே, தமிழர் நிலை தனிப்பட்டதல்ல. தமிழ் நாட்டில் வாழும் சிறுபான்மை யினரான குஜராத்தியருக்குள்ள உரிமைகளும், சலுகைகளும் குஜராத் மாநிலத்தில் வாழும் தமிழருக்கும் உண்டு.

நல்ல வேளையாக, தமிழகத்திலே "இருமொழி யாளரா"கத் தெலுங்கரும் கன்னடரும் இருத்தல்போலத் தமிழகத்துக்கு வெளியே வாழும் தமிழரிலே இருமொழி யாளர் என்ற நிலையில் யாரும் இருக்கவில்லை. தமிழகத்தில் ஆந்திர, கர்நாடக, மராத்திய அரசுகள் முன்னொரு காலத் தில் நடைபெற்றனவாதலால், அந்தக் காலத்தில் ஆளுவோ ரால் இங்கு குடியேற்றப்பட்ட கன்னட, ஆந்திர, மகாரஷ்டிர மக்கள் காலப்போக்கில் இந்த மாநிலத்தின் நிரந்தரக் குடிகளாகி விட்டனர். அதனால், அவர்கள் தங்கள் வீட்டு மொழியோடு தமிழையும் நாட்டு மொழியாக—வாழ்க்கை மொழியாக—ஏற்று இருமொழியாள ராகிவிட்டனர்.

தமிழ் வேந்தர்களும் ஆந்திர-கர்நாடக-வங்காள-கலிங்க (ஒரிசா) மாநிலங்களிலே அரசியல் ஆதிக்கம் பெற்றிருந்த தாக வரலாறு கூறுகிற தென்றாலும், அவர்கள் தாங்கள் ஆதிக்கம் பெற்ற அம் மாநிலங்களிலே தமிழை ஆட்சிமொழி யாக்கவில்லை; தமிழ் நாட்டவரைக் குடியேற்றித் "தமிழர் காலனி"களைப் படைக்கவில்லை. அதனால், தமிழகத்துக்கு வெளியே "இருமொழியாளர்" என்ற நிலையில் ஒரு கணிச மான தொகையில் தமிழர் வாழ்வதாகத் தெரியவில்லை.

பிற மாநிலங்களில் வாழும் தமிழரில் பெரும்பாலோர் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உத்தியோகத்திற்காகவும், வாணிபத்திற்காகவும் குடியேறியவர்களே அவர்கள் தமிழ் நாட்டோடு இன்னமும் எல்லா வகையிலும் தொடர்பு கொண்டவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் அங்குள்ள மக்களோடு தொடர்பு கொள்ள ஆங்கிலமே போதுமானதாக இருப்பதால், ஸ்தல மொழியைக் கற்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இதுவரை ஏற்படவில்லை. ஆகவே, பிற மாநிலங்களில் வாழும் தமிழர்கள் ஸ்தல மக்களின் நாக ரிகத்தோடு கலப்புறாமல் எல்லா வகையிலும் சிறுபான்மை யினராகத்தான்—அதாவது, சுத்தத் தமிழராகத்தான் இருக் கின்றனர். ஸ்தல மொழியை ஏற்றுக் கல்வி கற்ற இருமொழி யாளராக இருக்கவில்லை. ஆகவே, தமிழ் நாட்டிலே மொழி வழிச் சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் உரிமைகளும் சலுகைகளும் பிறமொழி மாநிலங்களில் வாழும் தமிழருக்கும் வழங்கப்படுவது உறுதி-வழங்கப்பட்டும் வருகின்றது. ஆகவே, இது ஒரு பிரச்சினையாக இல்லை.

மொழி, கலை, கலாசார ரீதியில் தமிழ் நாட்டிலுள்ள தமிழருக்கும் பிற மாநிலங்களிலுள்ள தமிழருக்கும் தொடர்பு இருப்பது தவிர்க்க இயலாததாகும்—தவிர்க்கக் கூடாதது என்றும் சொல்வேன். இப்போதே அத்தகைய தொடர்பு நல்ல முறையில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே, அதுவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய பிரச்சினையாக இருக்கவில்லை.

நீண்ட நெடுங்காலமாக எனது நெஞ்சை உறுத்திக் கொண்டிருப்பது தமிழ் நாட்டிலுள்ள மாநில அரசியல் கட்சிகள் பிற மாநிலங்களில் வாழும் தமிழர் மத்தியிலே கிளைகள் நிறுவி, அவர்களோடு அரசியல் ரீதியில் தொடர்பு கொள்வதாகும். தமிழ் நாட்டிலுள்ள அகில இந்திய தேசிய காங்கிரசின் கிளையான தமிழ்நாடு காங்கிரசானது பம்பாய் வாழ் தமிழர் மத்தியில் தனியாகக் கிளை நிறுவும் வழக்க மில்லை. அது தேவைப்படவுமில்லை. பம்பாய், கல்கத்தா, ஆமதாபாத் நகரங்களிலுள்ள தமிழர்கள் காங்கிரசோடு இணைந்து அரசியல் பணியாற்ற விரும்பினுல், தமிழ்நாடு காங்கிரசில் சேர வேண்டிய அவசியமில்லை. ஆங்குள்ள ஸ்தல காங்கிரசிலேயே சேர்ந்து கொள்ளலாம். சேர்ந்து கொள்வதையும் பார்க்கிருேம். அப்படிச் சேர்ந்து செய லாற்றுவதன் வாயிலாக ஸ்தலத்திலுள்ள பிற மொழி யினரோடு உறவு கொள்ளவும் அவர்களால் முடிகிறது. இதனுல், அவர்கள் தங்கள் வாழ்க்கை நலன்களை அடையவும் முடிகின்றது. அப்படியே, தமிழ் நாட்டிலுள்ள குஜராத்தி யரோ, ஆந்திர—கன்னட—கேரளரான தென்னிந்தியரோ, ஸ்தல காங்கிரஸ் என்ற வகையில் தமிழ் நாட்டுக் காங்கிரசிலே சேர்ந்து அரசியலில் பணியாற்றி வருவதையும் பார்க்கிருேம். இதிலே சிக்கல் எதுவும் இல்லை. மற்றுள்ள அகில இந்திய அரசியல் கட்சிகள் நிலையும் இதுதான்.

தமிழ் நாட்டிலுள்ள மாநிலக் கட்சிகள் பிற மாநிலங் களிலுள்ள தமிழரோடு அரசியல் ரீதியில் தொடர்பு கொள் வதில்தான் சிக்கல்கள் தோன்றுகின்றன—குறிப்பாக, தமிழ் நாட்டில் மட்டுமே இயங்கும் மாநிலக் கட்சியான திராவிடர் முன்னேற்றக் கழகமானது ஆந்திர, கேரள, கன்னட, மராத்தி, குஜராத்தி, வங்காள மாநிலங்களிலே வாழும் தமிழர் மத்தியில் கிளைகளைத் தோற்றுவிப்பதிலேதான் சிக்கல்கள் தோன்றுகின்றன. இதனுல் விளையும் முதல் கேடு என்னவென்ருல், தமிழ் நாட்டில் அவ்வப்போது தோன்றும் அரசியல் கட்சிப் பூசல்கள் பிற மாநிலங்களில் வாழும்

தமிழரிடையேயும் எதிரொலிக்கின்றன. அதனுல், சிறுபான்மையினரிடம் இருக்கவேண்டிய கட்டுப்பாடும் ஒற்றுமையும் அவர்களிடம் இல்லாமற் போகின்றன. இன்னும் சற்று விளக்கமாகச் சொல்வதானுல், தமிழ் நாட்டிலே தி. மு. க. வில் பிளவு ஏற்பட்டுப் புதிதாக அ. தி. மு. க. முளைக்குமானுல், பம்பாயில் தாராவியில் வாழும் தமிழரிடையேயுள்ள தி.மு.க. விலும் பிளவு ஏற்பட்டு, அங்கும் அ. தி. மு. க. முளைக்கின்றது. தமிழ் நாட்டில் தி.மு.க.—அ.தி.மு.க.வினரிடையே அடிதடி நிகழுமானுல், அதன் எதிரொலி தாராவியிலும் ஏற்படுகின்றது.

இன்னெரு கேடு என்னவென்ருல், தமிழ் நாட்டிலுள்ள தி. மு. க. வடபுலத்தவருக்கு எதிரான கிளர்ச்சியை — கோரிக்கையை எழுப்புமானுல், வடபுலத்திலுள்ள தி. மு. க. வினரும் அதற்கு ஆதரவளிக்க நேருவதாகும். இதனுல், தாராவித் தமிழர்கள் ஸ்தல மக்களான மராத்தியரோடு சகோதர உணர்வுடன் ஒன்றுபட்டுப் போக முடியாத நிலை ஏற்படுகிறது.

வேறு சில ராஜ்யங்களிலும் மாநில ரீதியில் அரசியல் கட்சிகள் இருக்கின்றன. குறிப்பாக, கேரளத்தில் ‘கேரள காங்கிரஸ்’ என்ற பெயரில் தி.மு.க. போன்ற மாநிலக் கட்சி ஒன்று செயல்பட்டு வருகிறது. ஆனுல், அந்தக் கட்சி கேரளத்துக்கு வெளியே வாழும் மலையாளிகள் மத்தியில் கிளைகளை நிறுவ முயல்வதில்லை. அப்படியே, கன்னடத்திலும் திரு. வட்டல் நாகராஜ் என்பவர் தலைமையில் கன்னட சாலுவிகா என்ற தனி மாநிலக் கட்சி உண்டு. அதுவும், தமிழ் நாட்டிலுள்ள கன்னடர் மத்தியில் கிளை நிறுவ முயல்வதில்லை. இதனுல் தமிழ் நாட்டிலுள்ள கேரளரோ, கன்னடரோ, ஆந்திரரோ இங்கு தாங்கள் விரும்புகின்ற அகில இந்திய அரசியல் கட்சியொன்றின் கிளையிலே இணைந்து அரசியல் பணியாற்ற முடிகிறது. அதுதான் வாழ்க்கை முறை—நெறி—நியதி—நீதி!

தமிழ் நாட்டிலுள்ள கேரளரும் சரி; ஆந்திர – கன்னடரும் சரி; இங்குள்ள அகில இந்தியக் கட்சிகளின் கிளைகளிலே தாங்கள் விரும்புகின்ற ஒன்றிலே சேர்ந்து ஸ்தல மக்களான தமிழருக்குத் தொண்டு புரிந்து, அவர்களுடைய ஆதரவைப் பெற்று, சட்டமன்றத்திற்கும் நாடாளு மன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். 1967ல் இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாட்டுக் கிளையின் வேட்பாளராக—தமிழினக் கட்சியான தி.மு.க.வின் ஆதரவோடு—தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு எம்.பி. க்களிலே மூவர் மலையாளிகள். அப்படியே காங்கிரஸ், சுதந்திரா, இடது கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சார்பில் தெலுங்கர், கன்னடர், மலையாளிகள் பலர் சட்டப் பேரவைக்கும், மேலவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இப்படித்தான் தமிழ் நாட்டில் தமிழரல்லாதார் செல்வாக்குப் பெற முடிகிறது.

முன்னொரு காலத்தில் தென்னிந்தியர் அனைவரையும் ஆரியரிலிருந்து— வடவரிலிருந்து—வேறுபட்ட திராவிட இனத்தாராகக் கருதித் திராவிட முன்னேற்றக் கழகம் அரசியல் நடத்தியது. அந்தக் காலத்தில் அண்டையிலுள்ள ஆந்திர, கன்னட, கேரள மாநிலங்களிலே கிளைகளை நிறுவ முயன்றதில் நியாயமிருந்தது. அப்போதும் தமிழரல்லாத திராவிடர் (ஆந்திர, கன்னட, கேரளர்) ஆதரவைப் பெற முடிந்ததில்லை. அந்த திராவிட வாதத்திற்குத் தலைமுழுக்குப் போட்டு, தி.மு.க. தமிழ் இனத்தின் நலனுக்காகவே தன்னை அர்ப்பணித்துக் கொண்டுவிட்ட காலம் இது. இந்த மாறுதலை அந்தக் கழகம் கண்டபோதே தமிழகத்துக்கு வெளியேயுள்ள கிளைகளை அது கலைத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், தமிழினத்திற்கு ஆற்றிய—குறிப்பாக, தமிழகத்திற்கு வெளியேயுள்ள தமிழருக்கு ஆற்றிய ஒரு பெருந் தொண்டாக அது இருந்திருக்கும்.

தி.மு.கழகம் இந்திய தேசிய ஒருமைப்பாட்டை ஏற்றுக் கொள்ளாத—அதற்கு எதிரான திராவிட அல்லது தமிழகத் தனி நாட்டுக்கோரிக்கையைக் கொண்டிருந்த—காலம் ஒன்

றிருந்தது. 1966லே அதைக் கைவிட்டு, இந்திய தேசிய ஒருமைப்பாட்டை அது ஏற்றுக்கொண்டு விட்டது. அதன் பின்னரேனும் தி.மு.க. தன்னை இனவேற்றுமைக்கு அப்பாற் பட்ட ஒரு அகில இந்தியக் கட்சியாக மாற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர் மத்தியில் அரசியல் ரீதியில் தி.மு.க. கிளைகளை நிறுவியிருப்பதால் அங்கெல்லாமுள்ள தமிழர்கள் சிறுபான்மையினருக்குரிய உரிமைகளை அடைவதற்கேற்ற ஒருமைப்பாட்டையும் கட்டுப் பாட்டையும் கடைப்பிடிக்க முடியாம லிருக்கிறது. டில்லி, பம்பாய், ஆமதாபாத் போன்ற பெருநகரங்களில் சிந்திக்கும் திறன் படைத்த படித்த தமிழர்கள் தி.மு.க.வுக்குப்புறம்பான ஒரு பிரிவாகவும், எளிதில் உணர்ச்சிவயப்படக்கூடிய உழைப் பாளி மக்கள்—குறிப்பாக, இளைஞர்கள் தி.மு.க.வை ஆதரிக் கும் ஒரு பிரிவாகவும் தனித்தனிப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். நல்ல வேளையாக, இவர்களிடையே பகைமை யில்லை யென்றாலும், இவர்கள் அரசியலில் பரஸ்பரம் தொடர்பற்றவர்களாக இருக்கின்றனர்.

தோழமைக் கட்சி என்ற வகையில் தி.மு.க.பற்றி உரிமை யோடு விமர்சித்திருக்கிறேன். தமிழினத்தாரின் உரிமையைக் காப்பதிலும், அவர்களிடை ஒருமைப்பாட்டை உருவாக்கு வதிலும் தி.மு.க.வுக்குள்ள அக்கரையில் எனக்கு ஐயப்பாடு கிடையாது. அதனாற்றான், தமிழ் நாட்டிற்கு வெளியே வேற்று மொழி மாநிலங்களில் சிறுபான்மையினராக வாழும் தமிழர் நலன்களைக் காப்பதிலே அதனுடைய ஒத்துழைப்பு எனக்குக் கிடைக்குமென்ற நம்பிக்கையோடு இவ்வளவும் கூறினேன். கட்சி நலனையும் இன நலனையும் இணைத்துச் செயல்படுவதிலே வல்லவர்களான தி.மு.க.தலைவர்கள் இது பற்றிச் சிந்திப்பார்கள் என்றும் நம்புகிறேன்.

ஆந்திர, கேரள, கர்நாடக, மராத்தி, குஜராத்தி மாநி லங்களிலே உள்ள தி.மு.க. கிளைகளிலே தமிழரல்லாத ஸ்தல

மக்களும் சேர்ந்து செயல்படுவார்களானால், அந்த நிலையில் அகில இந்தியக் கட்சிகளில் ஒன்றாக வளர்ச்சியடைய அதற்கு வாய்ப்புகிடைக்கும். அந்த நிலை எனது தோழமைக் கட்சிக்கு ஏற்படுவதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேன். ஆனால், இதுவரை அந்த நிலை அதற்கு ஏற்படவில்லை. இனி ஏற்படுமென்ற நம்பிக்கையும் எனக்கில்லை. திராவிடத் தனி நாடு கோரிய காலத்தில்கூட ஆந்திர, கேரள, கன்னட மாநிலங்களிலுள்ள தி.மு.க. கிளைகளிலே தமிழரல்லாத திராவிடர் எவரும் சேர்ந்து செயலாற்றியதில்லை. அங்கு சிறுபான்மையினராக வுள்ள தமிழர்தான் சேர்ந்து செயலாற்றினர். அவர்களிலே சிலருக்கு ஸ்தல மொழியில் பேச இயலும். அதை ஒருவசதியாகக் கொண்டு தமிழகத்தில் நடைபெறும் தி.மு.க. மாநில மாநாடுகளிலே அடுத்த மாநிலங்களிலிருந்து தமிழர் சிலரைப் பிரதிநிதிகளாக வரவழைத்து, அவர்களை அந்தந்த மாநில மொழிகளிலே பேச வைத்து, தமிழரல்லாதாரும் தி. மு. க.வை ஆதரிப்பது போலக் காட்டுகிறார்கள். இது, தமிழராகிய நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுவதாகும்.

தமிழினமே ஒன்றுபடு!

தமிழினத்தாருடைய எதிர்காலம் இருண்டு விடாமலிருக்க வேண்டுமானுல், அவர்களுக்கு உடனடியாகத் தேவைப்படுவது 'தமிழர்' என்னும் இனவுணர்வோடு கூடிய ஒருமைப்பாடாகும். மற்றவெல்லாம் அடுத்தபடியானதுதான். இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இன ஒருமைப்பாடே அடித்தளமாகும். இனவுணர்ச்சியையும் ஒருமைப்பாட்டையும் கண்டு அஞ்சுவதும், அவற்றை அழிக்க முயல்வதும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டின் அடித்தளத்தையே தகர்ப்பது போலாகும். அதைச் செய்ய வேண்டாமென்று தேசிய ஒருமைப்பாட்டில் உண்மையாகவே நம்பிக்கையுள்ள இந்திய தேசிய வாதிகளை வேண்டிக்கொள்கிறேன்.

சாதி சமயப் பாகுபாடுகளும், அவற்றிடையே அடிக்கடி தலைகாட்டும் பகைமை யுணர்ச்சியும் தேசிய ஒருமைப்பாட்டைப் பயமுறுத்துகின்றன. அந்தக் குறுகிய வகுப்புவாத உணர்ச்சிகளை ஒழிக்கவோ, கட்டுப்படுத்தவோ இனவுணர்ச்சி ஒன்றினுல்தான் முடியும். அதனுற்ருன், தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கையுடைய நான் மொழிவழி இனவுணர்வையும் ஒருமைப்பாட்டையும் உறுதியாக ஆதரித்து நிற்கின்றேன். இது, காந்திய நெறியென்றும் நான் நினைக்கிறேன். உண்மையும் அதுதான்.

மொழிவழி இனவுணர்ச்சிக்குத் தமிழ்நாட்டில்தான் எதிர்ப்பு இருக்கிறது. இதற்குக் காரணம், இங்கு தேசியம் வளர்ந்திருப்பதல்ல; சாதி வெறி வளர்ந்திருப்பதாகும். இன

வுணர்வு காரணமாகத் தமிழர் ஒன்றுபடுவதை விரும்பாதவர்கள் உண்மைத் தேசியவாதிகள் அல்ல; உறுதியான சாதி வெறியர்களே நான்கு கோடி தமிழர்களின் ஒற்றுமைக்கும் அதன்வழி இந்திய தேசிய ஒருமைக்கும் உதவி புரியும் இனவுணர்ச்சியை வெறுப்பவர்கள் இனவுணர்வைக் கடந்த இந்திய தேசிய வாதிகளாக இருந்தால் நான் மகிழ்ச்சியடைவேன். அப்படி இல்லை. இனவுணர்ச்சியினும் குறுகியதான சாதி உணர்ச்சியாளராகத்தான் இருக்கிறார்கள். சுயசாதி நலன் கருதித்தான் அவர்கள் இனவழி ஒருமைப்பாட்டை எதிர்க்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் 'இந்திய தேசியம்' என்பது, இனவுணர்ச்சியாளருக்கு எதிராகப் பயன்படுத்தும் தற்காப்புக் கேடயந்தான். இதனை, உண்மைத் தேசியவாதிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்திய சமுதாயம்—குறிப்பாக, தமிழர் சமுதாயம் என்றென்றும் பல்வேறு சாதிகளை, உப சாதிகளை, குலங்களை, கோத்திரங்களைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்பதே இவர்கள் விருப்பம். அதனால்தான், சாதி சமய குல கோத்திர வேற்றுமைகளை அகற்றி, மக்களை ஒன்றுபடுத்தும் மொழிவழி இனவுணர்ச்சியைத் தமிழ்நாட்டில் படித்தவர்களிலே ஒரு சாரார் கட்டுப்பாடாக எதிர்த்து வருகின்றனர்.

தமிழருக்கெனத் தனிக் கலாசாரம் உண்டு என்று சொன்னாலே, 'அதெல்லாம் பிரிவினைப் போக்கு' என்று பழி சுமத்துகின்றனர். ஒவ்வொரு சாதிக்கும் ஒவ்வொரு கலாசாரத்தைக் கற்பித்தவர்கள்தான்–அவை அழியாதபடி புரோகிதத்தின் மூலம்கட்டிக் காத்து வருபவர்கள்தான் தமிழருக்கெனத் தனிக் கலாசாரம் உண்டு என்பதை ஏற்க மறுக்கிறார்கள். சைவர்களுக்கொரு கலாசாரம்; அவர்களிலே வீர சைவர்—வெறுஞ் சைவர் என்ற ஆசாரப்பிரிவுகள் வேறு. வைணவருக்கொரு கலாசாரம்; அவர்களிலேயும் வடகலை—தென்கலை என்ற ஆசாரப் பிரிவுகள் வேறு. இவ்வளவு கலாசார வேற்றுமைகளைப் படைத்து இந்திய சமுதாயத்தைச் சுக்கு நூறாக உடைத்தவர்கள்தான் இனவழி கலாசாரம் பேசுவோரை

வெறுக்கிறார்கள்; எதிர்க்கிறார்கள். தமிழகத்திற்கு வெளியே இனவழி கலாசார வேற்றுமையை எதிர்ப்பவர்கள் இல்லை. அந்த வேற்றுமையை அழிக்காமல், அவற்றிடையே ஒற்றுமை காணவே அவர்கள் முயல்கிறார்கள். ஆம்; அவர்கள் உண்மைத் தேசபக்தர்கள் — தேசிய வாதிகள்!

தமிழக அரசியல் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக சாதி வெறியோடு—அதிலிருந்து பிரித்தெடுக்க முடியாதபடி—பிணைந்து கிடக்கிறது. இந்த மாநிலத்தில் தலைவர்களாக வரவும் வளரவும் தேவைப்படுவது, ஒன்று சுயசாதி பலம்; மற்றொன்று பிற சாதிப் பகைமை. இந்த இரண்டும் இல்லாத எவரும் "தலைவர்" ஆக முடியாது — ஆனதும் இல்லை. "தேசியத்"தின் பெயரால் "சீர்திருத்தப் புரட்சி"யின் பெயரால் தலைவர்கள் ஆனார்கள் என்று யாரைப்பற்றியெல்லாம் நாம் நம்பிக்கொண்டிருக்கிறோமோ, அவர்களும் சுயசாதி பலத்தை அல்லது பிறசாதிப் பகைமையை ஆசனமாகக் கொண்டுதான் அமர்ந்திருந்தார்கள். சந்திரமதியின் தாலி போல அந்த சாதி ஆசனம் மக்கள் கண்களுக்குத் தெரியாமல் இருந்தது—அவ்வளவுதான்.

சாதி வேறுபாடுகள் இந்தியாவிலே ஒவ்வொரு இனத்தவரிடையேயும் உண்டு. பிராமணர் கொண்டுள்ள உயர்வு மனப்பான்மை காரணமாக அதற்கு எதிரான பிராமணரல்லாத மனப்பான்மை ஆந்திர, கேரள, கர்நாடக, மராத்தி மாநிலங்களிலேயும் ஓரளவு உண்டு. ஆனால், அங்கெல்லாம் மொழி வழி இனவுணர்ச்சியானது மக்களிலே படித்தவர்—பாமரர், ஏழை-பணக்காரர் ஆகிய எல்லோரிடமும் வலுவாக இருப்பதால், சாதி வெறியானது கட்டுப்படுத்தப்பட்டும், கண்காணிக்கப்பட்டும் வருகின்றது. தமிழ் நாட்டிலே இனவுணர்வு வலுவாக இல்லாததால், சாதி வெறியானது இனவுணர்வைக் கட்டுப்படுத்தி வைத்து, அதைக் கண்காணித்தும் வருகிறது. ஆம்; குற்றவாளி, நீதிபதி ஆசனத்தில்; நீதிபதி, குற்றவாளிக் கூண்டில்—என்ற நிலை தமிழகத்திலே!

சாதி வேற்றுமையும் வெறியும் எந்த வடிவத்திலும் இல்லாத தமிழகத்தையே நான் விரும்புகின்றேன். ஆனால், அது அவ்வளவு எளிதில் நடக்கக்கூடியதல்ல என்பது எனக்குத் தெரியும். அது தணிக்கை செய்யப்பட்டாலே போதும். குறைந்த அளவு பிராமணர்—பிராமணர் அல்லாதார் என்ற வருண வழிப்பட்ட வகுப்பு வேற்றுமையேனும் அடியோடு தொலைய வேண்டும். ஒரு காலத்தில் தவிர்க்க முடியாத தீமையாக இப்படியும் ஒரு வகுப்புவாத எழுச்சி தமிழினத் தாரிலே ஒடுக்கப்பட்டோருக்குத் தேவைப்பட்டிருக்கலாம். இனி, அது தேவைப்படவில்லை. அரை நூற்றாண்டுக்கு முன் —அதாவது, ஜஸ்டிஸ் கட்சி தோன்றிய காலத்தில் தமிழ் நாட்டில் 'பிராமணரல்லாதார்' எனப்படுவோர் பிற்பட்டவர்களாக இருந்தனர். இன்று அந்நிலை இல்லை. ஒவ்வொரு துறையிலேயும் பிராமணருடன் போட்டியிட்டு பிராமணரல்லாதார் வளர்ந்து வந்திருப்பதைப் பார்க் கிறோம். இதற்கு பிராமணரல்லாதார் இயக்கம்தான் காரணமென்று சாதிப்பதோ, அது காரணமே அல்ல என்று சத்தியஞ் செய்வதோ உண்மையைச் சொல்வதாகாது. இந்த இரண்டும் அரைகுறை உண்மையேயாகும். அடக்கப்பட்ட ஒரு சாதி எழுச்சி கொள்ளும்போதுதான் அடக்கிய சாதியின் ஆதிக்கம் ஆட்டங் காண்பது சாத்தியமாகிறது. ஆகவே, 1916 தொடங்கி 1936 வரை தமிழ் நாட்டில் ஏற்பட்ட பிராமணரல்லாதாரின் எழுச்சியானது சமூக நீதிக்கு ஓரளவு சந்தர்ப்ப மளித்திருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், அதற்கு முன்னோடியாக—பின்பலமாக—இருந்தது இந்தியா முழுவதிலும் ஏற்பட்ட தேசிய எழுச்சிதான் என்பதை மறந்துவிடக் கூடாது.

1857ல் இந்து-இஸ்லாமிய மதவுணர்ச்சியாளர் நடத்திய சிப்பாய்ப் புரட்சி, அதன்பின் காங்கிரஸ் மகாசபையின் வாயி லாகப் படித்த வர்க்கத்தாரிடம் தோன்றிய தேசிய எழுச்சி, அதனையடுத்து 1907ல் சூரத்தில் விடுதலை ஆவேசமுடைய உண்மைத் தேசியவாதிகள் ஏற்படுத்திய உரிமை உணர்வு,

1917ல் அன்னிபெசன்ட் தோற்றுவித்த ஹோம்ரூல் கிளர்ச்சி—ஆகியவற்ருல் கிடைத்த உரிமைகளேயும் சலுகைகளேயும் அனுபவிக்கப் பிறந்ததுதான் சென்னே மாகாணத்தில் பிராமணரல்லாதாரிலே படித்த வகுப்பாரிடை தோன்றிய பிராமண எதிர்ப்புணர்ச்சி! ஆனுல், தனக்குப் பின்பலமாக இருந்த தேசிய எழுச்சிக்கு எதிராகச் செயல் பட்டது ஜஸ்டிஸ் கட்சி செய்த மிகப்பெரிய தவருகும்.

1857ல் சிப்பாய்ப் புரட்சியும், 1906ல் சூரத் எழுச்சியும், 1916ல் அன்னிபெசன்ட் தோற்றுவித்த ஹோம்ரூல் கிளர்ச்சியும் இல்லேயேல், பிரிட்டிஷார் 1909ல் வழங்கிய மிண்டோ—மார்லி சீர்திருத்தமும், 1919ல் வழங்கிய மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தமும் இந்தியருக்குக்கிடைத்திருக்கா. 1909ல் வழங்கப்பட்ட சீர்திருத்தந்தான் உத்தியோகத் துறையிலே பிராமணர் செல்வாக்கு பெறக் காரணமானது. அதன் எதிரொலியாகத்தான் 1919ல் வந்த மிண்டோ—மார்லி சீர்திருத்தத்தைக் கைப்பற்ற ஜஸ்டிஸ் கட்சி தோன்றியது.

இந்தியாவின்—குறிப்பாக, தென்னுட்டின்—சிறப்பாக, தமிழ் நாட்டின் வரலாற்றிலே ஜஸ்டிஸ் கட்சிக்கும் சுயமரியாதை இயக்கத்திற்கும் உள்ள முக்கியத்துவத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லே. அதுபோல, பிராமணரல்லாதாரின் எழுச்சிக்கும்—தமிழரின் வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அந்த இயக்கங்கள்தான் காரணம் என்று எடுத்துச் சொல்லப் பட்டுவரும் ஒருதலேப்பட்சமான பிரசாரத்தை நான் ஏற்றுக் கொள்ளுவதற்கில்லே.

இந்திய சுதந்திரக் கிளர்ச்சியின் விளேவாக பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே கல்வி பரவலாக்கப்பட்டு வந்தது. ஆரம்பக் கல்வியைப் பெறுவற்கான பருவத்தை அடைந்து விட்ட பிள்ளேகள் அனேவருக்கும்—அவர்கள் சாதி எதுவாயினும்—இலவசமாகவும் கட்டாயமாகவும் ஆரம்பக்கல்வி அளிக்கவேண்டுமென்ற முயற்சியும் கிளர்ச்சியும் தேசம்

முழுவதிலுமாக விடுதலைப் பாசறையிலிருந்துதான் தோன்றின. இதனை, படிப்படியாகவேனும் பிரிட்டிஷார் அமுல் படுத்தி வந்தில்லையேல், பிராமண ரல்லாதார்—குறிப்பாக, தாழ்த்தப்பட்டோர் கல்வித் துறையில் இன்று அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்டிருக்க முடியாது.

அதுபோல, சொத்துரிமையாளர்களே—அவர்களிலும், பெரும் பணக்காரர்களே—வாக்குரிமை பெற்றிருந்தவரை இந்திய சட்டமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும், நகரமன்றங்களிலும் பிராமணருள்ளிட்ட உயர்சாதியினர்—மிட்டா மிராசு போன்ற உயர் வர்க்கத்தினர் ஆதிக்கம் பெற்றிருந்தனர்.

விடுதலை வீரர்கள் கோரியபடி, வாக்குரிமையானது சமுதாயத்தின் அடித்தளத்தை நோக்கிப் பாய்ந்து வர வர, மக்கள் மன்றங்களிலே உயர்சாதி ஆதிக்கம் தேய்ந்தது. 1937ல் எழுதப் படிக்கத் தெரிந்தவரெல்லாம் வாக்குரிமை பெற்றபோது, சட்ட மன்றத்திலே பிற்பட்ட, மிகமிகப் பிற்பட்ட சாதிகளின் பிரதிநிதிகள் அணிஅணியாகப் புகுந்தனர். 1952ல் வயது வந்தோரெல்லாம் வாக்குரிமை பெற்றபோது, பார்லிமெண்டரித்துறையில் மாபெரும் புரட்சியே தோன்றியதெனலாம். அன்று தோன்றிய அந்தப் புரட்சி, 1967ல் "சாமான்யர்கள்" என்று தங்களை வருணித்துக்கொண்ட தி. மு. க.வினர் ஆட்சியைக் கைப்பற்றும் வகையில் வளர்ச்சி கண்டிருக்கிறது. இந்தியாவின் வரலாற்றிலிருந்து தமிழ் நாட்டைப் பிரித்து எடுத்துப் பார்ப்போருக்கு நான் சொல்லுவதிலுள்ள உண்மை விளங்காது.

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் நடைமுறைக்கு வந்த ஐந்தாண்டுத் திட்டங்களால் பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் பெருகின. பட்டப் படிப்புவரை இலவசக் கல்வி என்ற திட்டமும் தோன்றியது. இதெல்லாம் சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ளவர்களுக்குப் புது வாழ்வளித்தன.

இவ்வளவு மாறுதல்களுக்கும் தமிழ் நாட்டில் மட்டுமே இயங்கிய ஒரு வகுப்புவாத இயக்கத்தை மட்டுமே காரண மாக்குவது இந்திய அல்லது தமிழக வரலாற்றை அறிவுக்கண் கொண்டு காண்பதாகாது.

தமிழினத்தார் "அந்தணர்"—"அந்தண ரல்லாதார்" என்று பிரிந்து வாழ்வதற்கோ, பிணக்குற்றுப் பிளவுபடுவ தற்கோ அடிப்படைக் காரணம் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. தமிழகத்தின் வரலாற்றை மட்டுமே பார்த்தாலும் அந்தணரல்லாதாரோடு சேர்த்து அந்தணரையும் அறிந்து கொள்ள முடிகிறது இலக்கிய ஏடுகளிலே! "அந்தணர்" எனப் படுவோர் இல்லாத ஒரு தமிழர் சமுதாயத்தை வரலாற்றுக்கு முற்பட்ட காலமும் நமக்குக்காட்டவில்லை. அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் எனும் வருணப் பாகுபாடு முதலில் தமிழர் சமுதாயத்தி லிருந்துதான் பிறந்திருக்க வேண்டும் என்பதுஎனது நம்பிக்கை. இந்த வருணவேறுபாடு தோன்றிய காலம் தமிழர் வட பாரதத்திலும் வாழ்ந்த காலமாக இருக்க லாம். "ஆரியர்" எனப்படுவோர் பல நூற்றுண்டுக் காலம் நாடோடிகளாக அலைந்து திரிந்து இந்தியாவுக்கு வந்தவர்கள் என்று ஆராய்ச்சியாளர் அறிவிக்கின்றனர். நால்வருணப்பாகு பாடு என்பது விஞ்ஞான முறைப்படி மனித சமுதாயத்தின் வளர்ச்சியைக் குறிப்பதாகும். ஆகவே, நால்வருணப் பிரிவு பதியெழுவறியாப் பழங்குடி மக்களிடைதான் தோன்றி யிருக்க வேண்டும்; அவர்களிடந்தான் தோன்ற முடியும். நாடோடிகளாக வந்து புகுந்தவர்களிட மிருந்து நாகரிகத் தைக் காட்டும் இந்த சமுதாய அமைப்பு முறை தோன்றி யிருக்க முடியாது. தமிழினத்தார் ஒரு காலத்தில் வட பாரதத்திலும் வாழ்ந்திருந்தனர் என்பது ஹரப்பா, மொகஞ் சோதாரோ அகழ்வாராய்ச்சியால் உறுதிப்படுத்தப்பட் டிருக்கிறது.

நம் கைக்குக் கிடைத்திருக்கிற தொல்காப்பியம்-பத்துப் பாட்டு—எட்டுத் தொகை ஆகிய மிகவும் புராதனமான

தமிழ் இலக்கண, இலக்கியங்களிலேயே நால்வருணப் பாகு பாடு காணப்படுகின்றது. ஆனல், அவற்றிடையே உயர்வு, தாழ்வு—அதாவது, ஒரு வருணத்தைச் சிறப்பித்தும், இன்னெரு வருணத்தை இழித்தும் சொல்லும் செய்தியைக் காண முடியவில்லை. ஆகவே, பழந் தமிழரிடையே நிலவிய நால்வருணப் பாகுபாட்டினை வெறுக்கத்தக்க வேறுபாடு களாகத் தமிழர் கொள்வதற்கில்லை.

தமிழ் மொழிக்குப் பெருமை தரும் இலக்கண—இலக்கி யங்களைப் படைத்ததில் அந்தணத் தமிழருக்கும் கணிசமான பங்கு உண்டு. தமிழுக்கு ஆதி இலக்கணத்தைத் தந்த அகத்தி யரையோ, அதற்கு வழிநூல் தந்த தொல்காப்பியரையோ தமிழர் மறக்க முடியுமா? மறப்பது நன்றி கொன்ற செயலா காதா?

தொல்காப்பியத்திற் கிணங்க ஐந்திணை நெறியில் நிலைத்து நின்று இலக்கண—இலக்கிய நூல்கள் படைக்கப் பட்டு வந்தவரை வாழ்க்கை நெறிகள் அந்தணத் தமிழருக் கும் அல்லாத தமிழருக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருந் திருக்கக் காண்கின்றேம். ஆம்; அவர்கள் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றை மட்டுமே வாழ்க்கை நெறிகளாகக் கொண்டிருந்தனர்.

சங்க இலக்கியங்களைப் படைத்தவர்களிலே நால்வருணங் களைச் சார்ந்தவர்களையும் பார்க்கிறேம். நாகரிகத்தில் பின் தங்கி நின்ற குறமகள் எயினியும் சங்க காலப் புலவர் பட்டிய லிலே இடம் பிடித்துக் கொண்டுவிட்டார். ஆகவே, சங்க காலத்தில் அந்தணர் மட்டுமே அறிவில் சிறந்து விளங்கினர் என்றே, ஏனைய மூன்று வருணத்தினரும் தாழ்ந்து விளங் கினர் என்றே சொல்வதற்கில்லை. தமிழினத்து அரச வருணத் தவரின் ஆற்றல்மிக்க சாதனைகள் நால்வருணத்தவருள் முதல் வருணத்தவரான அந்தணராலும் போற்றப் பட்டிருக்கிறது. சிலம்பிலே, சேரன் செங்குட்டுவன் வடபுலத்தில் அடைந்த

பெருவெற்றி கண்டு மாடல மறையோன் பூரிப்படைகிருன். வடவரான கனக—விசயர் தலையில் பத்தினிப் படிமத்திற் கான கல்லைச் சுமத்திக் கொண்டு வந்ததற்காக அவன் மன்னன் செங்குட்டுவனைப் பாராட்டுகின்ருன். காரணம், 'தமிழன்' என்னும் இனவுணர்ச்சிதான்!

சங்க காலம் எனப்படும் ஒரு கால கட்டத்திலே நால் வருணத்தவரில் வணிக வருணத்தவர் திரைகடலோடியும் திரவியம் தேடிக் கொண்டு வந்து தமிழகத்தை வளப்படுத் தினர். அதனுல், முழங்கு கடல் ஞாலம் முழுவதும் வரினும் வழங்கத் தொலையாத வளத்ததாகத் தமிழகம் விளங்கியது. இந்த வணிகர்களை அந்தண வருணத்தையும் அரச வருணத் தையும்விட இழிந்தவர்கள் என்று எவரேனும் சொல்ல முடியுமா?

நான்காம் வருணத்தவரான வேளாளர் எனப்படுவோர் தமிழர் சமுதாயத்தின் அடித்தளமாக இருந்திருக்கின்றனர். இவர்களிலிருந்தும் ஞானியர்களும், கவிஞர்களும், மாவீரர் களும் தோன்றியிருக்கின்றனர். இவ்வளவும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலே தமிழினத்தார் பிறப்பு வழி ஏற்றத் தாழ்வின்றி—எல்லோரும் சமம் என்ற நிலையில்—வாழ்ந்த வரலாறு ஆகும்.

கி. பி. 2-ஆம் நூற்ருண்டுக்குப் பின்னர் தமிழர் சமுதா யத்திலே குழப்பம் தோன்றியது. அந்த நூற்ருண்டு தொட்டு பல நூற்ருண்டுகள் தொடர்ந்து வடபுலத்திலிருந்து தென்புலத்தில் புகுந்த சமணமும் பௌத்தமும் ஆட்சி மதங் களாக இருந்தன. தமிழரல்லாத களப்பிரரும் பல்லவரும் ஆளுவோராயினர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தான் பாலி மொழியும் வடமொழியும் தமிழகத்திலே வாழ்வு பெற்றன. தமிழ் மொழி தாழ்வுற்றது. இதற்கு அந்தணத் தமிழர்களைக் காரணமாக்க முடியாது.

கி. பி. 2–ஆம் நூற்றுண்டு முதல் 7ஆம் நூற்றுண்டின் முற்பகுதிவரை தமிழகத்தில் என்னவெல்லாமோ நடந்து விட்டன. வருணங்களிடையே உயர்வு—தாழ்வு மனப்பான்மை புகுந்ததும், சாதிகளிடையே இழிவு—சிறப்பு கற்பிக்கப்பட்டதும், தமிழ் நாட்டுத் திருக்கோயில்களிலே வடமொழி புகுந்ததும், அறம்–பொருள்-இன்பம் ஆகிய வாழ்க்கை நெறிகளை மட்டுமே போதிக்கும் இலக்கியங்கள் தோன்றி வந்த பழைய மரபு மறைந்து, வீடுபேறு பற்றியே இலக்கியம் படைக்கும் புதிய மரபு தோன்றியதும் களப்பிரர்—பல்லவர் ஆட்சிக் காலத்தில்தான். இவ்வளவுக்கும் தமிழ் நாட்டு அந்தணர்களை—தொல்காப்பியர் வழியில் வந்தவர்களைக் காரணமாக்கிவிட முடியாது. தமிழகம் வேற்றினத்தாருக்கு அடிமைப்பட்டதுதான் காரணம்.

தமிழர் சமுதாயத்தின் மரபுகளையெல்லாம் மரணக் குழிக்கு அனுப்பிய புறச் சமயங்களை—அவற்றின் வழிப்பட்ட அரசியல் ஆதிக்கங்களை எதிர்த்துப் போர் துவக்கியது அந்தணத் தமிழரான ஞானசம்பந்தர்தான் என்பதனை இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவரைப் பற்றிய கற்பனைச் செய்திகளும் உண்டு. ஆயினும், தமிழ் காக்கவும், தமிழர் நெறி காக்கவும், தமிழகத்தைத் திரும்பவும் தமிழருக்கே ஆக்கவும் அவர் பாடுபட்ட வரலாறு கற்பனைக் கதையாக இருக்கமுடியாது. அப்படியே, தமிழை—தமிழினத்தை—தமிழ்நாட்டை அடிமைகொண்ட பல்லவப் பேரரசை வீழ்த்தி வெற்றி கண்டார் சம்பந்தர் காலத்து வேளாளத் தமிழரான திருநாவுக்கரசர். இப்படி, கி. பி. 7ஆம் நூற்றுண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட இனவழி எழுச்சிக்கு அந்தனரான சம்பந்தரும் வேளாளரான அப்பரும்எடுத்துக்கொண்டகூட்டு முயற்சியே காரணம் என்பதை நாம் மறந்துவிட முடிடியாது.

கிறித்துவுக்குப் பிற்பட்ட காலத்திலேயும் தமிழை வளர்ப்பதிலே, தமிழினத்தின் உரிமைக்குப் பாடுபடுவதிலே

அந்தணரும் ஏனைய வருணத்தவரும் பங்கு பெற்றிருக்கின்றனர் என்பதனை வரலாற்றில் படிக்கிறோம். அரச வருணத்தினரான இளங்கோவடிகள் தமிழிலே தலைக்காப்பியம் தந்த பெருமையை மறக்க முடியுமா? வணிக வருணத்தவரான கூலவாணிகன் சாத்தனார் பெண்ணினத்திற்கே பெருமை தரும் மணிமேகலைக் காப்பியம் தந்ததை மறக்க முடியுமா? வேளாள வருணத்தினரான கம்பரும், சேக்கிழாரும் தமிழ் மொழியின் வளத்தைக் காட்டும் மாகாப்பியங்கள் தந்த தனைத்தான் மறக்க முடியுமா?

சைவ—வைணவ சமயங்களின் சார்பிலே பக்தி இலக்கியங்களைப் படைத்தளித்த சுந்தரர், அருணகிரியார், பெரியாழ்வார், ஆண்டாள் போன்ற அந்தண அருளாளர்களை யாரே மறக்க முடியும்? அவர்களைப் போலவே வணிக வருணத்தவரான காரைக்காலம்மையாரும், பட்டினத்தாரும் படைத்துள்ள பக்தி இலக்கியங்களின் மதிப்பைக் குறைத்துக் கூற முடியுமா? தாயுமானவர், குமர குருபரர், வள்ளலார் போன்ற நாலாம் வருணத்துத் தமிழர்கள் பக்திச் சுவைதரும் பாடல்களைப் பல்லாயிரக்கணக்கில் பாடிக் குவித்ததனைத் தான் தமிழர் மறக்க முடியுமா? இதனால், பிரம்மத்தைப் பற்றிய ஞானமானது பிராமணர்களுக்கு மட்டும் சொந்தமல்ல என்பது புலனாகவில்லையா?

விடுதலைப் போராட்டத்தில் நால்வருணத்தவரிலே ஒரு வருணத்தினரேனும் பின்தங்கி நின்றதுண்டா? அரச வருணத்தாரின் சார்பிலே கட்டபொம்மன் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கெதிராக அரசுரிமை போரைத் தொடங்கி வைத்தான். அவனுக்குப் பின்னர் மக்கள் சார்பில் நடந்த மாபெரும் புரட்சியிலேயும் சுப்பிரமணிய பாரதியார் போன்ற அந்தணர் பலரும், வ. உ. சிதம்பரனார் போன்ற வேளாளர் பலரும் முன்னணியில் நின்று நம் செந்தமிழ் நாட்டை நமக்கே சொந்தமாக்கப் பாடுபட்டது நாம் கண்ணாரக் கண்ட காட்சி அல்லவா?

இவ்வளவையும் மறந்து "பிராமணர்"—"பிராமணரல்லாதார்" என்று பிளவு கொண்டு தமிழினத்தை நிரந்தரமாகப் பிளவுபடுத்தி, வந்தேறிகளையெலாம் வாழ வைத்ததற்காக நாம் வருந்தவேண்டாமா? ஒரு முன்னேறிய சமூகத்தாரோடு போட்டியிட்டு பின்தங்கிய சமூகத்தார் முன்னேற முயல்வது தவறு அல்ல. வாழ்க்கையிலே போட்டி தவிர்க்க முடியாததுதான், அந்த வகையில் உத்தியோகத் துறையில் பிராமணருக்கும் பிராமணரல்லாதாருக்குமிடையில் தோன்றியுள்ள போட்டியை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால், இந்தப் போட்டி போராட்டமாகிவிட்டால் தமிழர் சமுதாயம் தலையெடுத்து வாழ முடியாது. படித்தவர்களின் உத்தியோகப் பிரச்னை தமிழர் சமூதாயம் முழுவதற்குமான பிரச்னையல்ல.

கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் நடந்து வந்த பிராமணரல்லாதார் இயக்கமானது நடைமுறையில் தமிழரல்லாதார் இயக்கமாகவே இருந்ததனை அனுபவத்திலே கண்ட பின்னரும், அந்தத் தோல்விப் பாதையிலே தமிழினத்தார் இனியும் நடைபோட வேண்டுமா? அண்டையிலுள்ள ஆந்திர நாட்டாரும் கேரள நாட்டாரும் கன்னட நாட்டாரும் இனவுணர்ச்சியால் ஒன்றுபட்டு முன்னேறுவதைப் பார்த்து வந்தும், அங்கெல்லாம் இனத்தைப் பிளவுபடுத்தும் வகுப்புவாத இயக்கங்கள் இல்லையென்பது தெரிந்தும் தமிழ் நாட்டில் மட்டும் இனவழி ஒற்றுமையைப் புறக்கணிக்க வேண்டுமா? முன் எப்போதோ தொடங்கி விட்டதற்காக தமிழினத்தைப் பிளவுபடுத்தும் வகுப்புவாத வெறியானது தமிழகத்தில் இனியும் நீடிக்க வேண்டுமா? ஆந்திர—கேரள-கர்நாடக நாடுகளைச் சேர்ந்தவர்கள் தத்தம் இனவழி ஒருமைப்பாட்டோடு, இந்திய ஒருமைப்பாட்டையும் இணைத்து முன்னேற்றமடைந்து வருவதைக் கண்டும், தமிழர் மட்டும் இனவழி ஒருமைப்பாட்டுக்கும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டுக்கும் இடையே மோதல் ஏற்படுத்தித் தமிழகத்தைப் பாழ்படுத்த வேண்டுமா?

இனம் வேறு; மதம் வேறு. மதத்தை மறுத்துப் போர் செய்வதற்கு இனத்தைக் கேடயமாக்க வேண்டாம். கடவுள் உண்மையை மறுப்பதும்,மதத்தின் தேவையைப்புறக்கணிப்பதும் அறிவியக்கமாக இருக்கலாம்; இருக்கட்டும். ஆனால், தமிழர் இனவழிப்பட்ட இயக்கமாக அது இருக்க முடியாது- இருக்கவும் கூடாது. தெய்வத்தை நிந்திப்பதைத் தமிழ் இனவழி இயக்கமாக ஏற்பதற்கில்லை; ஏற்பது தமிழினத்துக்கே கேடு செய்வதாகும்.

அந்தணத் தமிழரிலே சிலரோ, பலரோ—ஒருவேளை எல்லோருமோ—தமிழை விடவும் வடமொழியை அதிகமாக நேசிப்போராக இருக்கலாம். அதற்குக் காரணம் இனத்தை விடவும் மதத்தை அதிகமாக நேசிப்பதுதான். மத குருக்கள் வட்டாரத்தைச் சார்ந்தவர்களின் இந்தப் போக்கு பிராமணரல்லாத தமிழர் புரிந்துகொள்ள முடியாததல்ல.

இஸ்லாமியத் தமிழரிலே அரபு அல்லது உருது மொழியிடம் தமிழ் மொழியை விடவும் கூடுதலாக பக்தி செலுத்துவோர் உண்டு என்பது நாம் அறியாததல்ல. பிராமணத் தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வடமொழிச் சார்புடைய பெயர்களையே வைப்பதில் ஆர்வம் காட்டுவது போலத்தான் இஸ்லாமியத் தமிழர்கள் தங்கள் மக்களுக்கு அரபு அல்லது உருது மொழிச் சார்புடைய பெயர்களை வைப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். கிறித்துவத் தமிழர் நிலையும் இதுவாக இருப்பதைப் பார்த்து வருகிறோம். இதற்கெல்லாம் ஒரே காரணம் அவர்களெலாம் 'தமிழர்' என்னும் இனவுணர்வை விடவும் இந்து—இஸ்லாம்—கிறித்துவ சமய உணர்வுகளுக்கே அதிக முக்கியத்துவம் தருவதாகும். ஒருகால், மதத்தில் நம்பிக்கையற்றவர்கள் இதனைப் புரிந்து கொள்ள முடியாம லிருக்கலாம். ஆனால், அவர்கள் இஸ்லாமிய—கிறித்துவத் தமிழர்கள் மீது தூய தமிழைத் திணிக்க முயல்வதில்லை யென்பதோடு, அவர்களுடைய கலப்பு நாகரிகத்தை ஏற்கவும் செய்கின்றனர் என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும்.

தூய தமிழிலே எனக்குப் பற்றுண்டு. ஆயினும் அதை விடவும், தமிழினத்தின் ஒற்றுமையையே நான் முக்கியமாகக் கருதுகிறேன். ஆகவே, இந்து (பிராமணர்)-இஸ்லாம்-கிறித்துவத் தமிழர் தூய தமிழில் ஆர்வம் காட்டாததைச் சகித்துக் கொண்டு, தமிழினத்தாரிடையே ஒற்றுமையைக் கட்டி வளர்க்கவே நான் அவசரப்படுகிறேன்.

அந்தணத் தமிழரும் இனவுணர்ச்சிக்குப் புறம்பாக வாழும் போக்கை விட்டுத் தொலைக்க வேண்டும். இந்தப் போக்கு பிற மாநிலங்களில் வாழும் அந்தணர்களிடம் காணப்பட-வில்லையென்பதையும் அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். மொழிவழி மாகாணக் கிளர்ச்சியிலே பிற மாநிலங்களில் அந்தணத் தலைவர்களே முன் நின்றனர் என்பது அவர்கள் அறியாததல்ல.

பிராமணர்-பிராமணரல்லாதார் என்ற வகுப்பு வெறிப் பாதையிலே இரு தரப்பாருமே நெடுந்தூரம் சென்று விட்டனர். ஆகவே, இரு தரப்பாருமே துணிவுடன் பின் வாங்கி—இனவுணர்ச்சிப் பாதைக்குத் திரும்பி—இணைந்து முன்னேறுவார்களாக!

முடிவுரை

தமிழினத்தாரை ஒன்றுபடுத்த வேண்டுமென்ற ஆர்வத்துடன் நான் இந்த நூலை எழுதியிருக்கிறேன். அதற்காக, தமிழினத்தார் பிளவுபடக் காரணமாக இருந்த ஜஸ்டிஸ், சுயமரியாதை இயக்கங்களை நான் இந்நூலில் சிறிதளவு விமர்ச்சிக்க வேண்டி நேர்ந்தது. மற்றபடி, அந்த இயக்கத்தைச் சார்ந்தவர்களிடம் என் மனத்தில் துளிக்கூட பகைமையில்லை. இதனை அவர்கள் நம்ப வேண்டும்.

தேசிய காங்கிரஸ் வட்டாரத்தினரிடமுள்ள இனவிரோதப் போக்கையும் தயவு தாட்சண்யமின்றி இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளேன். நான் தேசிய பாரம்பர்யத்தைச் சேர்ந்தவன் என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, தேசிய பாரம்பர்யத்தின் மீது காழ்ப்பு கொள்ள எனக்கு சந்தர்ப்பமேயில்லை. ஆயினும், பிற மாநிலங்களில் இனவுணர்வும் தேசிய உணர்வும் இணைந்து செயல்படுவதை எடுத்துக்காட்டவே அவர்களைப்பற்றியும் இந்நூலில் விமர்சித்துள்ளேன்.

தமிழ் நாட்டிலுள்ள மொழிவழிச் சிறுபான்மையினர் ஆதிக்கம் பற்றி இந்நூலில் விருப்பு வெறுப்பின்றி விமர்ச்சித்துள்ளேன். அவர்கள் மீது எனக்குத் துளியளவும் காழ்ப்பில்லை. நான் இந்தியன்; தேசியப் பாரம்பர்யத்தைச் சேர்ந்தவன்; புத்தி தெரிந்த நாள்தொட்டு, பாரத மண்ணை மாதாவாக மதித்து, வந்தேமாதரம் என்ற மந்திரத்தை உச்சரித்து

வந்தவன். மற்றும், நான் காந்தியவாதி; உயிர்க்குலம் முழுவதையும் நேசித்த வள்ளலார் பக்தன். ஆகவே, தமிழல்லாத யாரையும் அந்நியராகக் கருதும் மனப்பான்மை எனக்கு அறவே இல்லை. ஆயினும், ஒரு தேசத்தை இன்னொரு தேசம் ஆக்கிரமிப்பதை எதிர்ப்பது உலக சமாதானத்திற்குச் செய்யும் தொண்டாகக் கருதப்படும் காலமிது. அதுபோல், இந்திய தேசத்திற்குள்ளே ஒரு இனம் இன்னொரு இனத்தின் மீது ஆதிக்கஞ் செலுத்துவதை எதிர்ப்பதையும், அத்தகைய ஆதிக்கத்தை அகற்ற அமைதியான வழியில் பாடுபடுவதையும் உள்நாட்டுச் சமாதானத்திற்குச் செய்யும் தொண்டாக நான் கருதுகிறேன்.

மொத்தத்தில் இந்த நூல் இனவெறியை வளர்க்க எழுதப்பட்டதல்ல; இனவழி உரிமைகளை வலியுறுத்தி, அதன் வழி இந்திய தேசிய இனங்களிடையே ஒருமைப்பாட்டை வளர்க்கும் குறிக்கோளுடன் எழுதப்பட்டதாகும். இதனை உறுதியாகச் சொல்லுகிறேன்.

இந்நூலில் நான் எடுத்துக் காட்டியுள்ள சரித்திரச் சான்றுகளும், புள்ளி விவரங்களும் அரசு ஆவணங்களிலிருந்தும், அறிஞர் பலர் எழுதிய நூல்களிலிருந்தும் எடுக்கப்பட்டனவாகும். அவற்றில் பிழையிருப்பின், வாசகர்கள் எடுத்துக்காட்டினால், அடுத்த பதிப்பில் திருத்தி விடுவேன்.

இந்நூல் நடுநிலைமை உள்ளத்துடன் எழுதப்பட்டது என்பதனை மற்றொரு முறையும் வாசர்களுக்கு உறுதியாகச் சொல்லுகிறேன்.

இந்நூல், தமிழகத்தின் அரை நூற்றாண்டுக் கால அரசியல் வரலாறு. இன அடிப்படையில் தமிழகத்தின் அரசியல் வரலாறாக வெளிவருவது இதுவேமுதல் நூலாகும். இந்நூலில் சாதிவெறி—கட்சிவெறி—இனவெறி—மதவெறி ஆகியவற்றின் தீய விளைவுகளை நான் படம் பிடித்துக் காட்டி

யிருக்கிறேன். அதனால் பாதிக்கப்படுவோர் இருக்கலாம். அவர்களும் தமிழராதலால், தங்கள்தாய் இனத்தின் நன்மையைக் கருதி, என்னைச் சகித்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ் மக்கள் – குறிப்பாக, இளைஞர்கள் இந்நூலை ஒரு முறைக்குப் பலமுறை படித்துப் பார்க்க வேண்டுகின்றேன்.

வாழ்க தமிழினம்!

வாழ்க பாரதம்